Digitization by eGangotri-South Center

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் – பரபக்கம்
இருபா இருபஃது

திருவாவடுதுறை ஆதீன
சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்
திருவிடைமருதூர்- 612 104.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சிமைய வெளியீடு:

உ

சிவமயம்

சிவஞான சித்தியார் – பரபக்கம்
இருபா இருபஃது

உரையாசிரியர்
'சித்தாந்த வித்தியா சாகரம்'
'செந்நெறிச் செல்வர்', 'மெய்ஞ்ஞான வள்ளல்'
திரு. கு. வைத்தியநாதன்,
இயக்குநர்.

திருவாவடுதுறை ஆதீன
சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்
திருவிடைமருதூர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்

சந்தான குரவர் துதி

தேவர்பிரான் வளர்கயிலை காவல்பூண்ட
திருநந்தி அவர்கணத்தோர் செல்வர் 'பாரில்
பாவிய சத்தியஞான தரிசினிகள் அடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியா வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறா
விரவுபுகழ் அருணந்தி விறலார் செல்வத்
தாவில்அருண் மறைஞான சம்பந்தர் இவர்இச்
சந்தானத்து எமைஆளும் தன்மையோரே.

உ
சிவமயம்

மெய்கண்ட சாத்திரம்
பதினான்கு

உந்தி, களிறு, உயர்போதம், சித்தியார்,
பிந்திருபா, உண்மை, பிரகாசம், – வந்தஅருள்,
பண்புவினா, போற்றி, கொடி, பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி, சங்கற்பம், உற்று.

Sri Namasivayamoorthy Offset Press,
Thiruvavaduthurai.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அருள்திரு அருணந்தி சிவாசாரியார்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—தவத்திரு மாதவச் சிவஞான யோகிகள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருவாவடுதுறை ஆதீனம்

குருமுதல்வர்

அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

1. சிவஞான சித்தியார் – பரபக்கம்

	முன்னுரை	
	காப்பு	1
1.	உலகாயுதன் மதம்	9
2.	சௌந்திராந்திகன் மதம்	39
3.	யோகாசாரன் மதம்	86
4.	மாத்தியமிகன் மதம்	88
5.	வைபாடிகன் மதம்	90
6.	நிகண்டவாதி மதம்	91
7.	ஆசீவகன் மதம்	103
8.	பட்டாசாரியன் மதம்	110
9.	பிரபாகரன் மதம்	122
10.	சத்தப் பிரமவாதி மதம்	123
11.	மாயாவாதி மதம்	128
12.	பாற்கரியன் மதம்	148
13.	நிரீச்சுர சாங்கியன் மதம்	152
14.	பாஞ்சராத்திரி மதம்	154
2.	**இருபா இருபஃது**	**173**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

இந்தப் புத்தகத்தில் ''சிவஞான சித்தியார் – பரபக்கம்'' என்னும் நூலும், ''இருபா இருபஃது'' என்னும் நூலும் உள்ளன. இந்த இரண்டு நூல்களையும் அருணந்தி சிவாசாரியாரே அருளிச் செய்துள்ளார். இவரது வரலாறு, பயிற்சி மையத்தின் ''சைவ சமய வரலாறு'' என்னும் நூலில் உள்ளது.

இவ்விரண்டனுள், ''சிவஞான சித்தியார் – பரபக்கம்'' என்னும் நூல் 301 பாடல்களைக் கொண்டது. சைவ சித்தாந்தத் திற்குப் பொருந்தாத பல்வேறு கருத்துக்களை உடைய புறச்சமயக் கொள்கைகளைக் கூறி, அவற்றிற்கு மறுதலைகளையும் இந்நூல் அளவிடுகிறது. இந்நூலுக்குத் தத்துவப் பிரகாசர் எழுதிய பழைய உரை ஒன்றுள்ளது. அதனைத் தழுவி எளிய நடையில் இத் தெளிவுரை எழுதப்பெற்றுள்ளது.

''இருபா இருபஃது'' என்பது, பத்து வெண்பாவும் பத்து நேரிசை ஆசிரியப்பாவும், அந்தாதித் தொடையால் இருபது இணைந்து வருவதாகும். இருபா – இரண்டு பா வகைகள். இருபஃது – இரண்டு பத்து – இருபது. சைவ சித்தாந்தக் கருத்துக்களை, தருக்க நெறி வழுவாமலும், பகுத்தறிவுக்கு ஏற்ற முறையிலும் ஆய்ந்து அறியவேண்டும் என்னும் நோக்கில் ஆசிரியர் இந்நூலைச் செய்துள்ளார்.

இந்நூலுக்குத், திருவாவடுதுறை ஆதீனத்தில் ஐந்தாம் ஞான குருநாதராக எழுந்தருளியிருந்த அருள்திரு வேலப்ப தேசிக மூர்த்திகள்பால் அருளுபதேசம் பெற்ற தவத்திரு நமச்சிவாயத் தம்பிரான் சுவாமிகள் ஓர் உரை எழுதியுள்ளார்கள். சீர்காழித் தத்துவநாதர் எழுதிய உரை ஒன்றுமுள்ளது. இவற்றைத் தழுவி இத் தெளிவுரை செய்யப்பெற்றுள்ளது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்து
எரிவினால் சொன்னா ரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்;
பரிவினால் பெரியோர் ஏத்தும் பெருவேளூர் பற்றினானை
மருவிநான் வாழ்த்தி உய்யும் வகையது நினைக்கின் றேனே''
(4–60–10)

என்னும் அப்பரடிகள் அருள் வாக்குக்கு இணங்க, அடியேனின் ''ஞானத்தந்தை'' ஆகிய திருவாவடுதுறை ஆதீனத்தின் இருபத்து மூன்றாவது பட்டத்தில் எழுந்தருளிச் சிவஞானச் செங்கோல் ஓச்சிவரும் குரு மகாசந்நிதானம் **சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** அடியேனை இவ்வரிய பணியில் ஈடுபடுமாறு செய்தருளிய கருணைத் திறத்தை நினைந்து, அவர்கள் பொன்னார் திருவடி மலர்களைப் போற்றி வழிபடுகிறேன்.

சீர்வளர்சீர் குரு மகாசந்நிதானம் அவர்கள் அருளாசியுடன், மாணவர்கள் இந்நூல்களைக் கற்றுப் பயன் பெறுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

அடியேன்,

திருவிடைமருதூர்

கு. வைத்தியநாதன்,
இயக்குநர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார்

பரபக்கம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்

சிவஞான சித்தியார் – பரபக்கம்

காப்பு

ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாய், ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறை இதழித் தாழ்சடையான்
தரும் ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகோட்டு அன்பொடும் வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகு ஓட்டும்; அவன் திருமால் செல்வமும் ஒன்றோ
என்னச் செய்யும் தேவே. 1

தெளிவுரை:

ஒற்றைக் கொம்பையும், இரண்டு செவியையும், மூன்று மதத்தையும், நான்ற வாயையும், ஐந்து கரத்தையும் உடையவன் விநாயகப் பெருமான். இந்த விநாயகனை, கங்கையாறும், கோணல் பிறையும், கொன்றை மாலையும், தாழ்ந்த சடையினையும் உடைய சிவபெருமான் நமக்குத் தந்தருளினான். இத்தகு யானைமுகக் கடவுளது திருவடிகளை உள்ளம் உருகி, அன்போடு வணங்கி, இரவும் பகலும் ஓயாமல் நினைப்பவரது நெஞ்சில் மயக்கம் வராமல் அவன் காத்தருள்வான். எனவே, பிரம விட்டுணுக்களின் பதவிகளை ஒரு பொருட்டாக மதியாமையால், பேரின்பப் பெருநிலையை அவனே தந்தருள்வான்.

சிவபெருமான்

ஆதி நடு அந்தம் இலா அளவில் சோதி
அருள்ஞான மூர்த்தியாய், அகிலம் ஈன்ற
மாதினையும் ஒரு பாகத்து அடக்கி, வானோர்
மகுட சூளாமணியாய் வையம் போற்றப்
பாதிமதி அணி பவளச் சடைகள் தாழப்
படர் ஒளி அம்பலத்து ஆடும் பரனார் பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம். 2

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

முதல் நடு இறுதி இல்லாத, ஒருவராலும் அறியப்படாத பரம் பொருளாய்ப் பேரொளியை உடைய அருளையே ஞானத் திரு மேனியாகக் கொண்டு இருக்கும் சிவபெருமான், தன்னுடைய கருணையினாலே, உருவத்திருமேனி கொண்டு இவ்வுலகத்தைத் தோற்றுவித்த அம்மையைத் தன் இடப்பாகத்து அடக்கி வைத் துள்ளான்.

பிரமன், மால் முதலிய தேவர்களது மகுடத்தில் உள்ள இரத் தினம் போன்று, சத்தியும் சிவமுமாய் நிற்கும் சிவபெருமான் அருவம், அருவுருவம், உருவமாய் நின்று, உலகத்தில் உள்ளவர்கள் போற்றி வணங்கும்படி, பிறைச் சந்திரனை அணிந்த சிவந்த சடைகளைத் தாழ விட்டு, விரிந்த ஒளியை உடைய திருவம்பலத்தில் நடனம் செய்தருள் கின்ற, பூத அணுக்கள் மிகுந்த அவனது திருவடித் தாமரைகளை, நமது தலைமேல் வைத்து, இடையறாப் பேரன்பு கொண்டு வழிபட்டு நிற்போம்.

சத்தி

ஈசன் அருள் இச்சை அறிவு இயற்றல் இன்பம்
இலயமொடு போகம் அதிகாரம் ஆகித்
தேசு அருவம், அருவுருவம், உருவம் ஆகித்
தேவியுமாய் தேசமொடு செல்வம் ஆகிப்
பேசு அரிய உயிரைஎலாம் பெற்று, நோக்கிப்
பெரும் போகம் அவை அளித்துப் பிறப்பினையும் ஒழித்திட்டு
ஆசு அகலும் அடியார் உளத்து அப்பனுடன் இருக்கும்
அன்னை அருட்பாத மலர் சென்னி வைப்பாம். 3

தெளிவுரை:

சிவபெருமானை விட்டு எக்காலத்தும் நீங்காத திருவருள் ஆகிய அருட்சத்தி, அவனது கருணையினால், பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, திரோதான சத்தி ஆகவும், இலயம், போகம், அதிகாரம் ஆகிய நிலைகளிலும் நிற்பள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒளியே வடிவாக உடைய இறைவனுக்கு அருவம் அருவுருவம், உருவம் எனப்படும் மூன்று வடிவுடையவளாகவும் நிற்கிறாள். இவ்வாறு இறைவனது திருமேனிகளாக நிற்பதோடு, எண்ணற்ற உயிர்களுக்குள்ள உடல்கள், போகப் பொருள்கள் முதலானவற்றைப் படைத்து உயிர்களது வினைப்பயனுக்கு ஏற்ற இன்ப, துன்பங்களைக் கொடுத்து பக்குவம் வந்தபோது, அவ்வுயிர்களுக்கு வீடுபேற்றையும் வழங்குகிறாள். இவ்வளவு பெருமைக் குரியவளாய் அடியார் உள்ளத்தில் இருக்கும் சிவசத்தியின் திருவடித் தாமரைகளை என் தலைமேல் வைத்து வணங்குகிறேன்.

விநாயகக் கடவுள்

இயம்புநூல் இருந்தமிழின் செய்யுள் ஆற்றால்
　　　இடையூறு தீர்ந்து, இனிது முடிய வேண்டித்
தயங்குபேர் ஒளியாகி எங்கும் நின்ற
　　　தலவனார், மலைமாது தன்னோடு ஆடிப்
பயந்த ஐங்கரம் நால்தோள் முக்கண் இருபாதப்
　　　பரியது ஒரு நீள் கோட்டுப் பெரிய பண்டிக்
கயம்தன் அடிக் கமலங்கள் நயந்து போற்றிக்
　　　கருத்தில் உற இருத்தி, மிகக் காதல் செய்வாம். 4

தெளிவுரை:

பெருமைக்குரிய தமிழினால் செய்யப்படும் இந்தச் சிவாகம நூல், செய்யப்படும்பொழுது ஏற்படுகின்ற குற்றங்கள் இல்லாமல், சிறப்பாக நிறைவேறவேண்டும் என்று இறைஞ்சி, விநாயகப் பெருமானைச் சிந்தையில் வைத்துத் துதிக்கின்றேன்.

சிவபெருமான் முழுநிறைவுடையவனாகி எங்கும் விளங்கும் பேரொளியை உடையவன். கயமுகாசுரனைக் கொன்று காத்தருளும் பொருட்டு, அம்மையப்பராய் இருக்கும் சிவபெருமான், ஐந்து கைகளையும், நான்கு தோள்களையும், மூன்று கண்களையும், இரண்டு பாதங்களையும், பெரியதொரு நீண்ட கொம்பினையும், பெரிய வயிற்றினையும் உடைய ஆனைமுகக் கடவுளை நமக்கு அருளிச் செய்துள்ளான். அஃதாவது, ''அவ்விருவரும் தம்முள் வேற்றுமை இன்மை பெற்றாம்'' என்ற சிவஞான சுவாமிகளின்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வாக்குக்கு ஏற்ப, சிவபெருமானே விநாயகனாக வந்துள்ளான். இத்தகு பெருமைகுரிய விநாயகப் பெருமானின் திருவடித் தாமரை களை விரும்பிப் போற்றி என் சிந்தையில் வைத்து, அன்புமீதூறி நிற்கின்றேன்.

குமாரக் கடவுள்

அருமறை ஆகமம் அங்கம் அருங்கலைநூல் தெரிந்த
அகத்தியனுக்கு ஒத்து உரைக்கும் அருட் குருவாம் குருளை
திருமறை மாமுனிவர், முனிதெவர்கள்தம் தேவன்,
சிவன் அருள்சேர் திருமதலை; தவநிலையோர் தெய்வம்;
பொரும் அறையார் கழல்வீரர் வீரன்; கையில்
பூ, நீர் கொண்டு, ஓவாது போற்றும் அடியார்கள்
கருமறையா வகை அருளிக், கதிவழங்கும் கந்தன்
கழல் இணைகள் எம்சிரத்தில் கருத்தில் வைப்பாம்.5

தெளிவுரை:

தெரிதற்கு அரிய நான்மறைகளையும், சிவாகமங்களையும், ஆறு அங்கங்களையும், அரிது ஆகிய கலைஞானங்களையும், ஆராய்ந்தறிந்த அகத்திய மாமுனிவருக்கு, அவற்றின் பொருள் நுட்பத்தை ஒதி உபதேசித்து அருளிச் செய்த ஞானாசிரியன், முருகப் பெருமானே ஆவன். முனிவர்களுக்கு எல்லாம் முனிவன் ஆகவும், தேவர்களின் தலைவனாகவும் உள்ள அவனைச் சிவகுமாரன் என்பர். தவத்தில் சிறந்தவர்கள் வழிபடும் தெய்வம் அவன். ஒலிக்கும் வீரக்கழல்களை அணிந்திருக்கும் வீரர்களுக்கெல்லாம் வீரன்.

அப்பெருமானைக் கையில் பூவும் நீரும் கொண்டு ஓயாமல் போற்றும் அடியார்கள், மீண்டும் பிறப்புட்படாது, அவர்களுக்கு வீடுபேறு வழங்குபவன். சிவபெருமானின் வேறாகாத அவனைக் கந்தன் என்பர். அவன் திருவடிகளை என் தலைமேல் கொண்டு சிந்தித்து வந்திக்கின்றேன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மெய்கண்டதேவ நாயனார்

பண்டை மறை வண்டு அரற்றப், பசுந்தேன் ஞானம்
பரிந்து ஒழுகச் சிவகந்தம் பரந்து நாறக்,
கண்ட இருதய கமல முகைகள் எல்லாம்
கண் திறப்பக், காசினிமேல் வந்த அருட் கதிரோன்,
விண்டமலர்ப் பொழில் புடைசூழ் வெண்ணெய் மேவும்
மெய்கண்டதேவன், மிகு சைவ நாதன்
புண்டரிக மலர் தாழச் சிரத்தே வாழும்
பொற் பாதம் எப்போதும் போற்றல் செய்வாம். 6

தெளிவுரை:

பழம் பெரும் மறைகள் ஆகிய வண்டுகள் ஒலம் இட, புத்தம் புதிய தேன் ஆகச் சிவஞானம் ததும்பி ஒழுக, சிவமணம் விரிந்து எங்கும் மணக்க, ஆன்மாக்களின் இதயத் தாமரை மொட்டுக்கள் எல்லாம் மலரும்படியாக, இப்பூவுலகில் உதித்த அருளே வடிவாகிய செங்கதிரோன் யார்?

அவனே, விரிந்த மலர்களால் சூழப்பட்ட திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியுள்ள மெய்கண்ட தேவன் என்னும் திரு நாமத்தை உடைய சைவசித்தாந்தத் தலைவன் ஆவான். தாமரை மலர்களையும் வென்ற அழகிய அவனது திருவடி மலர்கள் என் தலைமேல் பொருந்தும்படி, எக்காலத்தும் அவனது பொன்னார் திருவடிகளையே நினைந்து வாழ்கின்ற அடியேன், அவனையே போற்றிவழிபடுகின்றேன்.

அவையடக்கம்

மால் அயன் மாமறை அறியா ஆதி மார்க்கம்
வையகத்து ஆகமம் வேதம் மற்றும் உள்ள
நூலை எல்லாம் உணர்ந்து, இறைவன் கழலே நோக்கும்
நோன்மை அருந்தவர் முன், யான் நூவலுமாறு
வேலை உலாவும் திரைகள் வீசி ஏறி
வேறு ஏழும் ஒன்றாகி நின்ற போது
சாலவும் ஆன் குளப்படியில் தங்கி நின்ற
சலம் அதுதான் நேர் எனும் தன்மைத் தாலோ. 7

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

அயன் மால்களாலும் நான்கு வேதங்களாலும் அறிதற்கு அரியது, சிவபெருமானது நெறி. அந்நெறியில் உலகத்தில் ஆகமங் களையும் வேதங்களையும் அவற்றின் வழி வந்த பல நூல்களையும் கற்றுத் தேர்ந்து, இறைவன் திருவடியையே சிந்திக்கும், தவத்தில் சிறந்த பெரியவர்களின் முன்பு, எளியேன் கூறுவது எவ்வாறு உள்ளது எனின்,

உலாவும் திரைகள் மிகுந்த, வெவ்வேறான ஏழு சமுத்திரங் களும் ஒன்றாகி நிற்கும் பொழுது, ஒரு சிறிய பசுங்கன்று, குளத்தின் படியில் தங்கி நிற்கும் தண்ணீருக்குச் சமமாக, அந்த ஏழு கடல் நீரை எண்ணுவதைப் போன்றதாகும்.

நீடுபுகழ் உலகுதனில் மைந்தர் மாதர்,
நேயமொடு தாம் பயந்த புதல்வர், வாயில்
கூடுமொழி மழலையொடு குழறி ஒன்று
குறிப்பு அரிது; ஆயிடினும் மிகக்குலவிப் போற்றி
மாடு நமக்கு இது என்று கொண்டு வாழ்வர்;
அதுபோல மன்னுதமிழ்ப் புலமையோர் என்
பாடு கவிக்குற்றங்கள் பாரார்; இந்நூல்
பாராட்டா நிற்பர் அருட்பரிசினாலே. 8

தெளிவுரை:

நிலைபெற்ற புகழினை உடைய இந்த உலகத்தில், தாயும் தந்தையும், தாம் அன்போடு பெற்றெடுத்த குழந்தையின் சிறிய வாயிலிருந்து வெளிப்படும் மழலைச் சொற்களில் உள்ள உளறுதல் களைக் கேட்டு, அவை புரியாவிடிலும், அச்சொற்களைப் பெரிதும் பாராட்டி மகிழ்வார்கள். அவையே அவர்கள் பெற்ற பெரும் செல்வ மாகக் கொண்டு வாழ்வார்கள்.

அதுபோல, நிலைபெற்ற தமிழ்ப் புலவர்களாக இருப்ப வர்கள் எளியேனிடத்துள்ள பாட்டுக் குற்றத்தைக் கருத்தில் கொள்ள மாட்டார்கள். திருவருளின் தன்மையை எண்ணி, எளியேன் செய்த இந்நூலை அவர்கள் பாராட்டவே செய்வார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நூல் சிறப்பு

சுத்த வடிவு இயல்பாக உடைய சோதி
சொல்லிய ஆகமங்கள் எலாம்சூழப்போயும்
ஒத்து முடியும்கூட ஓர் இடத்தே
ஒருபதிக்குப் பல நெறிகள் உள ஆனாற்போல்
பித்தர் குணம் அதுபோல ஒருகால் உண்டாய்ப்
பின் ஒருகால் அறிவு இன்றிப் பேதையோராய்க்
கத்திடும் ஆன்மாக்கள் உரைக் கட்டில் பட்டோர்
கனக வரை குறித்துப் போய்க் கடற்கே வீழ்வர். 9

தெளிவுரை:

ஞானமே தனக்குச் சுவதந்திர வடிவாய் உடைய இறைவன், சமய பேதங்கள் தோறும், அவன் அருளிச் செய்த ஆகமங்கள் எல்லாம் பல பேதம் ஆயினும், எல்லா ஆகமங்களிலும் ஞானபாதம் தம்முள் ஒத்துச் சென்று, ஒரு பொருளையே நோக்கி முடியும். அஃது எவ்வாறு எனின், ஓர் ஊர்க்கு உள்ள வழிகள் பலவாக இருப்பினும், அவை அவ்வூரையே நோக்கி இருக்கின்றதைப் போன்றதாகும்.

தெளிவற்ற மதியை உடையவர் போல, ஒரு சமயம் தெளிவும் மற்றொரு சமயம் மயக்கமும் உடையவராய், பரசமயக் கொள்கையை உடையவர்கள் வழிதவறி, மேரு மலையை அடைவதற்குப் பதில், கடலில் போய் விழுந்திடுவர்.

நூலுக்கு அதிகாரியும் — நூல் வழியும் — நூல் பெயரும்

போதம் மிகுத்தோர் தொகுத்த பேதமைக்கே
பொருந்தினோர் இவர்க்கு அன்றிக் கதிப்பால் செல்ல
ஏதுநெறி எனும் அவர்கட்கு அறிய முன்னாள்
இறைவன், அருள் நந்தி தனக்கு இயம்ப, நந்தி
கோதில் அருட் சனற் குமாரர்க்குக் கூறக்
குவலயத்தின் அவ்வழி எம் குரு நாதன் கொண்டு
தீது அகல எமக்கு அளித்த ஞான நூலைத்
தேர்ந்து உரைப்பன் சிவஞான சித்தி என்றே. 10

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஞான நூல்களைப் பெரிதும் கற்றவர்கள், அவற்றைக் கல்லா மையால் அறியாமைக்கு உட்பட்டவர்கள் என்னும் இவ்விரு வகை யினர்க்கு மட்டும் அல்லாமல், முத்தியைப் பெறுதற்கு உரிய வழி யாது என்று ஆராயும் சத்தி நிபாதர்க்கு அறிவிக்கும் பொருட்டுச் சிவ பெருமான் ஒரு குருமரபை ஏற்படுத்தினான். அது வருமாறு:– இறை வனிடத்து அன்பு மீதூர்ந்து நின்ற நந்திபெருமானுக்கு இறைவன் சிவாகம ஞானபாதப் பொருளை உபதேசித்தான். அவர், தன்பால் அன்புடைய சனற்குமாரர்க்குக் கூறினார். அவர் வழிவந்த இப் பூவுலகில் அவதாரம் செய்தருளிய, எங்கள் குருநாதர் மெய்கண்ட தேவநாயனார், உலகில் உள்ளவர்களின் அறியாமை நீக்கும் பொருட்டு, எங்களுக்குத் தந்தருளிய ஞானப்பெட்டகம் ஆகிய சிவஞானபோதம் என்னும் இந்நூலை, ஓதி உணர்ந்து, குருமுலமாகக் கேட்டுச் சிவஞானசித்தியார் என்னும் நூலை எளியேன் கூறுகிறேன்.

நூல் கருத்து

இறைவனையும் இறைவனால் இயம்பு நூலும்
ஈண்டு அளவும் பொருள் இயல்பும் வேண்டும் செய்தி
முறைமைகளும் பெத்தமொடு முத்தி எல்லாம்
மூதுலகில் எமக்கு இயன்ற முயற்சியாலே;
சிறை உலவும் புனல் நிலவித் தோன்றும் பேய்த்தேர்ச்
செய்கைபோல் உண்டாய பொய்கொள் மார்க்கத்
துறைபலவும் கடாவிடையால் சொல்லிப் போக்கித்
துகள்தீர இந்நூலில் சொல்ல கிற்பாம். 11

தெளிவுரை:

சிவபெருமானையும், சிவபெருமானால் அருளிச் செய்யப் பெற்ற வேதாகமங்களையும், இவற்றில் உள்ள அளவைகள் ஆகிய பிரமாணத்தையும், அவற்றினால் அறியப்படும் பொருள்களின் தன்மையையும், அந்நூல்களின் வழி நின்றோர் நடக்க வேண்டிய நெறிமுறைகளையும், ஆன்மாக்கள் பிறப்புட்பட்ட காலத்திலும் முத்திப் பெரும்பேற்றினைப் பெறுதற்குரிய நிலையிலும், பழமையாய் உள்ள இப்பூவுலகில் எளியேனுக்கு இயன்ற அளவு முயன்று கூற எண்ணுகிறேன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நெடுங்காலமாகத் தடைப்பட்டு நிற்கும் நீரைப்போலத் தோன்றுகின்ற, கானல் நீரினைக் கண்டவரின் செயல்போல ஏற்பட்டுள்ள பொய்யை மெய் என்று நம்பும் பல்வேறு மதங்கள் ஆகிய உலோகாயதன் முதல் பாஞ்சராத்திரி ஈறாகியவர்களின் நூல்களில் உள்ள செய்திகளை வினாக்கள் வாயிலாக எழுப்பி, அவற்றிற்கு விடைகள் வாயிலாக மறுப்புக் கூறி, குற்றமற்ற முறையில் இந்நூலைச் செய்கிறேன்.

நூல்

1. உலகாயதன் மதம்

இந்திர புரோகிதன் இயம்பும் ஒரு நூலின்
தந்திரம் எனாது, அறிவினோடு அருள் இலாமல்
சந்தணை புயத்து மண மாலைகள் தயங்க
உந்தி உலகத்தில் உலகாயதன் உரைப்பான். 12

தெளிவுரை:

சந்தனம் அணிந்த தோளில் நறுமலர் மாலைகள் விளங்கும்படி, பிறப்பு என்னும் பேதமை நீங்கப் பெறாத உலகாயதன் கொள்கையை உரைத்தவன் தேவகுரு ஆகிய பிரகஸ்பதியே ஆவன். அவன் செய்த நூல் உலோகாயதம் அல்லது சாருவாகம் எனப்படும். தேவர்களுக்கு குரு ஆகலின், அவன் இந்திர புரோகிதன் எனப்படு கிறான். இந்திரன் உலக போகங்களை விரும்பித் தவம் செய்த போது, அவனை மயக்கி, இந்நூலைப் பிரகஸ்பதி செய்தான். அந்நூலைப் பொய்நூல் என்று தெளியும் அளவுக்குப் போதிய அறிவும் இறையருளும் தேவர்களுக்கு இல்லை. எனவே, உலக போகமே உயர்ந்தது என்று அந்நூல் கூறுகிறது.

ஈண்டு அளவை காட்சி, மனம் ஆதி இருமூன்றாய்
வேண்டும்; அனுமானம் முதலான பல வேண்டா,
பூண்ட பொருள் பூதம் அவை, புகழ் கடினசீதம்,
தீண்டரிய வெம்மை, சலனத்தினொடு சேர்வே. 13

தெளிவுரை:

பொருள்களின் உண்மையை அறிவதற்குக் கொள்ளப்படும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அளவைக் கருவிகளில், காட்சி அளவையே கொள்ளப்படும். காட்சி அளவைகள் – ஐயக்காட்சி, வாயிற்காட்சி, விகற்பக் காட்சி, அந்வயக் காட்சி, எதிர் மறைக் காட்சி, திரிவுக் காட்சி என ஆறு வகைப்படும். ஐயக்காட்சி மனக்காட்சி எனவும் படும். பழுதைப் பாம்பு என்று ஐயுறுவது மனம் ஆகலின் ஐயக்காட்சி மனக்காட்சி எனப்படுகிறது.

வாயிற்காட்சி என்பது, இந்திரியங்களின் வாயிலாகக் காண்பது; விகற்பக்காட்சியாவது, பெயர், சாதி, குணம், கன்மம், பொருள் என்னும் ஐந்தினாலும் காண்பது; அந்வயக்காட்சி ஆவது, புகை யைக் கண்டு நெருப்பு உண்டு என அறிதல், எதிர்மறைக்காட்சி யாவது, மணத்தைக் கொண்டு மலர் இருப்பதை அறிதல்; இஃது 'எதிரேகக்காட்சி' என்றும் கூறப்படும். திரிவுக்காட்சியாவது – பழுதைப் பாம்பு என்று கொள்வது.

காட்சி அளவையின் வேறாக உள்ள கருதல் அளவை, உரை அளவைகளை உலகாயதர் ஏற்பதில்லை. காட்சி அளவை கொண்டு அறியக்கூடிய பொருள்கள், நிலம், நீர், தீ, காற்று என்னும் நான்கே ஆகும். நிலம் வலிமை உடையது; நீர் தண்மை உடைய்து; நெருப்பு வெம்மை உடையது. காற்று இயங்கும் தன்மை உடையது. காற்றின் துணை கொண்டு மற்ற மூன்று பூதங்களும் தம்மில் கூடும்.

சாற்று பெயர் ஆனதை, தலம், புனல், கனல் பின்
காற்றும் எனலாம்; இவை கலந்த குணம் ஓதின்
நாற்றம் இரதம் உருவம் நற்பரிசம் ஆகும்;
போற்றும் இவை நித்த இயல்பாம்; இவை புணர்ப்பே. 14

தெளிவுரை:

அந்த நான்கு பூதங்களும் அவ்வாறு கூடியபிறகு, அவை மண், நீர், நெருப்பு, காற்று என்று கூறப்படலாம். அவை கூடுவதால் ஏற்படும் குணங்கள் முறையே நாற்றம், சுவை, ஒளி, ஊறு எனப் பெயர் பெறும். போற்றப்படும் இந்நான்கு பூதங்களும் என்றும் அழியாத இயல்புகளை உடையனவாகும். இவை கூடும்போது, காற்றினைத் துணையாகக் கொண்டு, மற்ற மூன்று பூதங்களும் கூடுகின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒத்து உறு புணர்ச்சியின் உருக்கள் பல ஆகும்;
வைத்துறு கடாதி பல மண்ணின் வருமா போல்
புத்தி குணம் நல்பொறி புலன்கள் இவை எல்லாம்
இத்தில் வரும் நீரினில் எழும் குமிழி ஒத்தே. 15

தெளிவுரை:

இந்த பூதங்களின் வடிவங்களும் தன்மைகளும் தம்மில் ஒத்துக் கூடுகிற சேர்க்கையினாலே பல்வேறு வடிவங்கள் உண்டாகும். இஃது எப்படி எனில், திரிகையில் வைத்த மண்ணிலிருந்து பல வகைப் பாத்திரங்கள் தோன்றுவது போன்றும், நீரில் குமிழி எழுவது போலவும் அவ்வவ் வடிவங்களை ஒத்த குணமும் புத்தியும் ஞானேந்திரியம் ஆகிய பொறிபுலன்களும் தோன்றலாயின.

பூதம் அதில் ஒன்று பிரியப் புலன் இறக்கும்;
நீதியினில் நிற்பன நடப்பனவும் முன்போல்
ஓதும் வகை ஆகி, உறு காரியம் உலந்தால்,
ஆதி அவையாம்; இதனை அறிவது அறிவாமே. 16

தெளிவுரை:

அந்த பூதக் கூட்டத்திலிருந்து, நான்காவது பூதம் ஆகிய காற்று பிரிந்ததும், பொறிபுலன்கள் ஆகிய இந்திரியங்கள் மாண்டு விடும்; புலன் இறக்கவே, குணம், புத்தி முதலியனவும் மாளும். இந் நிலையில், மற்றப் பூதங்களும் விலகி, தாபர சங்கமங்களும் (நிலை பெறுவனவும் அசைவனவும்) அழிந்து விடும். முன் சொன்னபடி, காரியப்பாடுகள் அழிந்தால் காரண நிலையில் பூதங்கள் அழிவில்லாமல் நிற்கும். இந்த பூதங்களின் இயல்பை இந்த முறையில் அறிவதே, அறிவுடைமை ஆகும். அஃதாவது நான்கு பூதங்களும் என்றும் அழிவற்றவை என்றவாறு.

இப்படி அன்றிக் கன்மம், உயிர், இறை வேறு உண்டு என்று
செப்பிடும் அவர்க்கு மண்ணோர் செய்திடும் குற்றம் என்னோ
ஒப்பிலா மலடி பெற்ற மகன் ஒரு முயல் கொம்பு ஏறித்
தப்பில் ஆகாயப் பூவைப் பறித்தமை சாற்றினாரே. 17

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

இந்த பூதங்களுக்கு வேறாக, வினை, உயிர், கடவுள் உண்டு என்று சமயவாதிகள் கூறி மயக்குகிறார்கள். இவர்கள் இவ்வாறு மயக்குவதற்கு உலகத்தில் உள்ள மக்களை மயக்கும் பொருட்டுச் சமய வாதிகள் கூறுவது எப்படி இருக்கிறது என்றால், மலடி பெற்ற ஒரு மகன், ஒரு முயலின் கொம்பில் ஏறி, விண்ணில் பூத்த மலரைப் பறித்தான் என்று கூறுவதுபோல இருக்கிறது.

பூதமே தெய்வம்; பூதக் கூட்டத்தின் மிகுதியும் குறைவுமே கன்மம்; பூதக் கூட்டத்தில் நிகழும் உணர்வே ஆன்மா; இஃது அன்றி வேறு தெய்வமோ, கன்மமோ, ஆன்மாவோ இல்லை என்பது, உலோகாயதன் கருத்து.

செய்திடும் கன்மம் எல்லாம் செய்தவர் தம்மைப் பற்றி
எய்திடும் என்னில், இங்கே மாய்ந்திடும் ஏய்வது எங்ஙன்?
மெய்தரும் தூலம் கெட்டுச் சூக்கமாய் மேவும் என்னில்
ஐயனே தீபம் போனால் அதன் ஒளி ஆவது உண்டோ? 18

தெளிவுரை:

முன் பிறப்பில் ஆன்மாக்கள் செய்த வினைகள் எல்லாம் கெடாமல், ஆன்மாக்களைப் பொருந்தி நின்று, இந்தப் பிறப்பிலே ஊட்டும் என்று கூறினால், இப்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகள் இந்த உடலோடு கெடும் ஆகலின், மறுபிறப்பில் புகுந்து கூடும் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?

ஆன்மாக்களின் பருவுடல் கெட்டு, நுண்ணுடலில் அவ்வினைகள் கூடும் என்று கூறுவீராயின், திரியோடு கூடிநின்ற விளக்கின் ஒளி, அந்தத் திரியைவிட்டுத் தனியே நின்று ஒளிரும் என்று கூறுவது பொருந்துமா? ஐயனே, நீர் கூறுவது இப்படித்தான் இருக்கிறது.

மாய்ந்து பின் வயலில் இட்ட வைதழை பலிக்குமா போல்
ஏய்ந்திடும் கன்மம் என்னில் இட்ட இடத்து இசையும் மேனி
ஓய்ந்து வந்தவரை உண்ணப் பண்ணும் சோறு, உதரத்து ஆற்றால்
வாய்ந்திடும் மலம் வயிற்றில் கொண்டிடும் வழக்கு வைத்தாய். 19

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

வயலில் பயிர்க்கு உரமாக இட்ட வைக்கோலும் தழையும் கெட்டுப் பின்பு உருமாறிப் பயிர்க்கு நன்மையைக் கொடுப்பது போல, உயிர்கள் செய்த நல்வினை திவினைகள் தோன்றாமல் தன்மை கெட்டுப் பின்பு உயிர்க்கு நுகர்ச்சியாய் வந்து பொருந்தும் என்று கூறுவீராயின், அந்த வைக்கோலும் தழையும் இட்ட இடத்திலேயே பயிர்க்கு நன்மையை விளைவிக்கின்றனவே அன்றி, வேறு இடத்திற்குச் சென்று பயனைத் தருவதில்லை.

வினைகள் கெட்டுப் பின்பு பயன் விளைவிக்கும் என்று நீர் கூறுவது, உடல் தளர்ந்து பசித்து வந்தவரை, உண்ணச் செய்த சோறு, அவரது வயிற்றிலிருந்து செரிமானம் ஆன பிறகு, மலமாக ஆயிருக்கும்; அந்த மலம் சத்தாகி உடலுக்கு நன்மை தரும் என்று கூறுவதுபோல் இருக்கிறது.

உருவும் உணர்வும் செய்தி ஒத்து இரா கன்மம் என்னில்,
மருவுகை விரல்கள் தம்மின் வளர்வுடன் குறை உண்டாகி
வருவது இங்கு என்ன கன்மம் செய்து முன் மதி இலாதாய்,
பெருகு பூதங்கள் தம்மின் மிகுகுறை பெற்றியாமே. 20

தெளிவுரை:

உயிர்கள் முற்பிறப்பில் செய்த வினைகளுக்கு ஏற்பவே இப்பிறப்பில் அவற்றின் உடல்களின் அமைப்பும் உணர்வுகளும் ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் வேறுபட்டும் உள்ளன என்று கூறுவாய் ஆயின், அறிவில்லாதவனே, முன்பு என்ன வினையைச் செய்து, கையில் உள்ள விரல்கள் பின்பு ஒன்றுக்கொன்று தம்மில் ஏறியும் குறைந்தும் உள்ளன? எனவே வளரும் பூதங்கள் தம்மில் கூடியும் குறைந்தும் உள்ளமையாலேயே, உயிர்களின் உடல்களும் உணர்வுகளும் வேறுபட்டு அமைந்துள்ளனவே அன்றிக் கன்மத்தினால் அன்று.

இன்பொடு துன்பம் எல்லாம் எய்துவது கன்மம் என்னில்,
நன்புனல் சந்த னாதி நணுகவும் அணுக ஒண்ணு
மின்பொலி அழலினோடு மேவுவ நன்மை தீமை
என் செய்தது இயம்பிடாய் நீ, இவை எலாம் இயல்ப தாமே. 21

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

உயிர்க்கு வரும் இன்ப துன்பங்கள் எல்லாம் அது செய்த வினைப்பயனே என்று கூறினால், தெளிந்த நீரில் சந்தனம் முதலானவை கூடும்போது மணம் ஏற்படுவதற்கும், நெருங்க முடியாத ஒளி மிகுந்த அனலோடு கூடிய நீர், ஆவியாக மாறுவதற்கும், அந்த நீர் என்ன நல்வினை தீவினைகளைச் செய்தது என்று உன்னால் கூற முடியாது. எனவே, இவை, எல்லாம் இயற்கை ஆகலின், பூத குணமே அன்றிக் கன்ம பயன் என்று கூறுவது பொருந்தாது.

தோல், நெருப்பைக் கண்டால் சுருண்டும், நீர் கூடினால் நெகிழ்ந்தும் வருவது, பொருள்களின் இயல்பால் அவ்வாறு நிகழ்கின்றனவே அன்றி, வினை காரணமாக அன்று. எனவே, எல்லாம் பொருளின் இயற்கை என்று அறிவாயாக.

காயத்தின் குணமது அன்றிக் கண்டது ஆன்மா உண்டாயின்
மாயத்தில் சொல்லிடாதே மனம் முதல் ஆறினுக்கும்
நேயத்தது ஆக வேண்டும் அன்றியே நிகழ்த்தும் உண்மை
தேயத்தின் முயற்கொம்பு எல்லை செப்புவோர் செய்தியாமே.22

தெளிவுரை:

பூதச் சேர்க்கையால் உடம்பு உண்டாகியபோது, அதன் குணம் அறிவு என்பது ஆகும். அஃது அன்றி, உடலின் வேறாக உயிர் உண்டு என்பது, அறியாமையால் சொன்னதே ஆகும். அவ்வாறு சொல்வது மனக் காட்சி முதலான ஆறு காட்சிக்கும் பொருத்தமாக இருக்கவேண்டும். அதனை விடுத்துக் கூறுவது, முயலுக்குக் கொம்பு இருப்பதாகக் கூறி, அந்தக் கொம்பின் அளவையும் வடிவத்தையும் பற்றிப் பேசுவது போல்வதாகும்.

பாக்கு, சுண்ணாம்பு, வெற்றிலைகளை விரவியபோது, சிவப்பு ஒன்று உண்டாவது போல, பூதக்கலப்பால் உடம்பு ஏற்படும் போது, அதன் குணம் ஒன்று உண்டாகும். அஃதே உயிர் ஆகும்.

அருவமே இறைவன் ஆகில், அறிவின்று ஆகாயம் ஆகும்
உருவமே என்னில், பூதக் கூட்டத்தில் ஒருவன் ஆகும்;
மருவிய இரண்டும் கூடிநிற்பவன், என்னின், மண்மேல்
இருவிசும்பு ஒருகல் ஏந்தி நிற்குமோ இயம்பிடாயே. 23

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

கடவுள் என்று ஒரு பொருள் அருவமாய் உள்ளது என்றால், அஃது அறிவில்லாத ஆகாயம் போன்று இல் பொருளே ஆகும். கடவுள் உருவம் உடைய பொருள் என்றால், அது பூதக் கூட்டத்தில் உள்ள பொருள்களுள் ஒன்று ஆகும்.

கடவுள் அருவமும் உருவமும் ஆகிய அருவுருவப் பொருள் என்றால், அரு ஆகிய வானில், உரு உடைய கல்லை விட்டால், அந்த வான் எப்படிக் கல்லை ஏந்தி நிற்காதோ, அப்படியே அருவமும் உருவமும் கூடிய ஒரு பொருள் இருக்க முடியாது.

பூதத்தே அன்னம் ஆகி அன்னத்தால் உடம்பு புத்தி
பேதித்தே மனமும் ஆகிப் பிரிந்தமை திருந்த இன்று
வேதத்தே உரைக்க என்னோ மேதினி யோர்கள் எல்லாம்
கேதத்தே வீழ்ந்து வேறு நெறி அல கேட்குமாறே. 24

தெளிவுரை:

பூதக் கலப்பால் உணவு உண்டாகிறது. உணவினால் உடம்பு விருத்தி அடைகிறது. அதனால் புத்தி உண்டாகிறது. புத்தியிலே சஞ்சலமுடைய மனம் உண்டாகிறது. இவ்வாறு உடம்பு, புத்தி, மனம் என வெவ்வேறு பொருள்கள் உள்ளன என்று உலகாயத வேதம் கூறுகிறது. இந்த வேதம் உணர்த்துவதை உணராமல் உலகத்தில் உள்ளவர்கள் அனைவரும் வழித்துறை அறியாமல், பிற நெறிகளில் போய் வீழ்ந்து துன்புறுகிறார்கள். இஃது ஏன்?

போகத்தை மண்ணில் கண்டு விட்டுப் போய் விண்ணில் கொள்ள
மோகத்தர் ஆகி, அல்லல் முயன்று உழல் மூடர் எல்லாம்
தாகத்தில் தண்ணீர் கண்டு விட்டுப்போய்த் தண்ணீர் கேட்டுச்
சோகித்தே உண்ண எண்ணித் துயர் உறுவார்கள் அந்தோ. 25

தெளிவுரை:

இவ்வுலகில் உள்ள மாதர் போகத்தைக் கண்டும், அதனை அனுபவியாமல் கைவிட்டு, விண்ணுலகிற்குச் சென்று, சுவர்க்க

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போகம் உண்டு என்று கேட்டு, அதனை அடைவதற்கு ஆசை உடையவராய்த் தவத்தில் முயன்று தடுமாறும் அறிவில்லாதவர்கள் எத்தகையவர் என்றால்,

தாகம் ஏற்பட்டபோது, அருகில் தண்ணீர் இருப்பதைக் கண்டும், அதனைப் பருகாமல் கைவிட்டு, நெடுந்தூரத்தில் இதை விடச் சிறந்த தண்ணீர் உண்டு என்பதைக் கேட்டுத் துன்பம் உற்று, அந்தத் தண்ணீரை உண்டு தாகம் தீர வேண்டும் என்று கருதி, வழியில் துயரமுறுபவரின் இயல்பைப் போன்றது ஆகும். ஐயோ, இவர்கள் அறியாமையை என்னென்பது!

வாழவே வல்லை வாமி வலக்கைதா, என் உயிர்க்குத்
தோழன் நீ, உன்னை ஒப்பார் சொல்லிடின் இல்லை கண்டாய்;
கோழை மானுடர் தீது என்னும் கொலை களவு ஆதிகொண்டே
சூழும் வார் குழலார் மொய்ப்பச் சுடர் எனத் தோன்றி னாயே.26

தெளிவுரை:

வாம மதம் என்று ஒரு மதம். அதனைத் தோற்றுவித்தவர் வாம தந்திரி என்பவர். அந்த மதத்திலும் உலக போகமே உயர்ந்தது என்று கொள்ளப்படுகிறது. எனவே, அம்மதவாதியை நோக்கி உலகாயதன், ''உன் வலக்கையைத்தா'' என்று உற்சாகமான வார்த்தைகளில் பேசுகிறான். ''என் உயிர்க்கு நீயே தோழன்; சொல்லப் போனால் உனக்குச் சமமாக எவருமே இல்லை. அச்சம் கொண்ட மனிதர்கள், கொலை, களவு முதலியவற்றைத் தீவினைகள் என்கிறார்கள், சுருண்ட நீண்ட கூந்தலை உடைய பெண்களின் நடுவே, ஒளிவிட்டு ஒளிரும் பேரொளி நீ'' என்று உலகாயதன் கூறுகிறான்.

ஈசனார் அயனார் மாலோடு இந்திரன், தெரிவை மார்பால்
பேசஒணா வகைகள் எல்லாம் செய்து அன்றோ, பெரியோர்
ஆனார்?
ஆசையால் அவர்போல் நாமும் ஆகவே வேண்டும் ஆயின்,
வாசமார் குழலா ரோடும் வல்லவா கூடி வாழ்மின். 27

தெளிவுரை:

உருத்திரன், மால், அயன், இந்திரன் ஆகியவர்கள், முறையே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெண்களைத் தலையில் தரித்தும், மார்பில் தரித்தும், நாவில் தரித்தும், அகல்யையை விரும்பி கௌதம முனிவரின் சாபத்திற்கு ஆளாகியும் அல்லவா, பெரியவர்கள் ஆயினார்கள்? நாமும் அவர்களைப் போலப் பெரியவர் ஆகவேண்டுமாயின், மணக்கும் கூந்தலை உடைய பெண்களோடு கலந்து வாழ வேண்டும்.

தையலார் உடல் ஆடத் தாம் அவரோடும் கூடிச்
செய்ய தாமரையை வென்ற சீறடி செம்பஞ்சு ஊட்டி
மெய்யெலாம் பாதம் சூடும் வேடத்தார் மெய்யில் கூடா
மையல் மானுடர் பொய் மார்க்க வேடத்தே மாய்கின்றாரே.
28

தெளிவுரை:

பெண்டிர் ஊடின காலத்து, அவ்வூடலை நீக்கி அவரோடும் கூடி, தாமரையின் செந்நிறத்தை வென்ற அவர்களது பாதத்தைச் செம் பஞ்சுக் குழம்பினால் தடவுதல் வேண்டும். அத்தகைய பெண்களது பாதங்களால் தமது உடல் முழுவதும் பொருந்தும்படி செய்வர் உலகாயதர். அவ்வாறு செய்யாமல், வேடம் போட்டு மயங்கும் மனிதர்கள் பொய் வழியாகிய தவ வேடத்தில் புகுந்து மாய்கிறார்கள்.

வாசமார் குழலினார்கள் மணி அல்குல் தடத்தில் மூழ்கி
நேசமார் குமுதச் செவ்வாய் அமுதினை நிறைய உண்டு
தேசுலா மணிமென் தோள்மேல் சேர்ந்து வீற்று இருந்திடாதே
மாசுலா மனத்தோர் எல்லாம் மறுமை கொண்டு அழிவர்
மன்னோ. 29

தெளிவுரை:

மணம் தங்கிய கூந்தலை உடைய பெண்டிரது அழகிய மேகலை பொருந்திய அல்குல் என்னும் துறையில் முழ்கி, அன்பு மிகுந்த மலர்போலும் சிவந்த வாயில் ஊறும் அமுதத்தை நிறையப் பருகி, ஒளி பொருந்திய மணியினை உடைய மெல்லிய தோள்மீது அணைந்து, வாழ்ந்து இருக்காமல், குற்றம் பொருந்திய மனத்தினை உடையவர் எல்லாம், மறுமைப் பயன் உண்டு என்று கூறிப் பாழாகி றார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மதி நிலா நுதலா ரோடு மணி நிலா முன்றில் ஏறி
முதிர் நிலா எறிப்பச் செவ்வாய் இளநிலா முகிழ்ப்ப மொய்த்த
கதிர்நிலா வடம்கொள் கொங்கைக் கண்கள் மார்பு அகல மூழ்கும்
புதுநிலாவிய நல்போகம் விடுவர் புன்சமயத் தோரே. 30

தெளிவுரை:

சந்திரனைப் போன்ற நெற்றியை உடைய மாதரோடும் கூடி, ஒளியை உடைய நிலா முற்றத்தில் ஏறி நின்று, பூரணச் சந்திரனின் ஒளிமிளிரும் சிவந்த வாயில், பிறைச் சந்திரன் குவிந்தால் போன்று உள்ள முலைக்கண்களில், ஒளிவீசும் முத்துவடம் அணிந்திருப்ப அந்த அகன்ற மார்பில் அழுந்தி புதுமையான அனுபவத்தைப் பெறாமல் கைவிடுபவர், புல்லிய மதத்தைச் சேர்ந்தவரே ஆவர்.

ஊடுவது உணர்வது உற்ற கலவி மங்கையரை உள்கி
வாடுவது அடியில் வீழ்ந்து வருந்துவது அருந்தவம்; பின்
கூடுவது உணர்வு கெட்டுக் குணம் எலாம் வேட்கையே ஆய்
நீடுவது இன்ப முத்தி இத்தில் நின்றார்கள் முத்தர். 31

தெளிவுரை:

புதியவராகக் கூடிய பெண்களை நினைத்து, அவர்கள் ஊடலைத் தீர்க்கும் பொருட்டுத் தளர்வதும், அவர்கள் காலடியில் வீழ்ந்து கிடப்பதுமே அரிதாகச் செய்யும் பெருந்தவம் ஆகும்.

அந்தத் தவத்தில், நின்றபிறகு, அந்தப் பெண்களோடு, தன் அறிவுகெட்டுக் கூடுவது முத்தி ஆகும். இந்திரியங்கள் அனைத்தும் ஒன்றுகூடி அப்பெண்களிடத்து ஆர்வத்துடன் நிலைபெற்று நிற்பதே முத்தி இன்பம் ஆகும். இந்நிலையில் நிற்பவரே முத்தி பெற்றவர் ஆவர்.

வீட்டினை உளது என்றுஓடி மெலிவது இங்கு என்னை? வீடு
காட்டினோர் கண்டோர் கேட்டோர் கரியவை உண்டேல் காட்டீர்;
நாட்டினில் அரசன் ஆணைக்கு இசையவே நடந்து நாளும்
ஈட்டிய பொருள் கொண்டு இங்கே இன்பத்துள் இசைந்தி டீரே. 32

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

பெண் இன்பத்தை அனுபவியாது, வேறு வீட்டு இன்பம் உளது என்று தடுமாறி, உடல் மெலிகின்ற தவத்தை ஏன் செய்ய வேண்டும்? அந்த வீட்டினைக் காட்டியவர்களையும், கண்டவர் களையும், அதனைக் கேட்டவர்களையும், தக்க ஆதாரத்துடன் காட்ட முடியுமா? முடியாது. (கரி – சான்று – ஆதாரம்).

எனவே, இந்த உலகத்திலே உள்ள அரசியல் சட்டத்திற்கு அடங்கி நடந்து, நாள்தோறும் பல்வேறு தொழில்கள் மூலமாகத் தேடிய பொருளைக் கொண்டு, இங்கு நம் கண்முன் இருக்கும் பெண் இன்பம் துய்ப்பதே உண்மை இன்பமாகும். எனவே, இதனை நுகர்வதற்கு ஒருப்பட்டு வாருங்கள்.

இதுவே உலகாயதன் முத்தி.

இதுவரை உலகாயதன் கொள்கையை, அருணந்தி சிவம் விளக்கிக் கூறியுள்ளார். இனி, உலகாயதன் மதக் கொள்கையை மறுத்துக் கூறுகிறார்.

உலகாயதன் மத மறுதலை

உள்ளதாவது கண்டது என்று உரை கொண்டது என்?
உலகத்து நீ
பிள்ளையாய் வளர்கின்ற நாள் உனைப் பெற்ற தாயொடு
தந்தையைக்
கள்ளமே புரி காலன், ஆருயிர் உண்ண, இன்று ஒரு
காளையாய்,
மெள்ளவே உளர் என்று கொண்டு விரும்புமாறு
விளம்பிடே.33

தெளிவுரை:

உலகாயதர், காண்டல், கருதல், உரை என்னும் மூன்று அளவைகளில், 'காண்டல்' அளவை (பிரமாணம்)யினை மட்டும் உண்மை என்று ஒப்புக்கொண்டு, மற்ற இரு அளவைகளையும் நீ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏன் மறுக்கிறாய்? நீ பிறந்து அறியாக் குழந்தையாய் வளர்ந்து வருகின்ற ஒருநாளில், உன்னைப் பெற்ற தாயையும் தந்தையையும் எமன் கொண்டுபோய் விடுகிறான். பிறகு குழந்தைப் பருவம் நீங்கிய இன்றைய நிலையில், வாலிபனாய் இருக்கும் நீ உனக்குத் தாயும் தந்தையும் இருந்தனர் என்பதை நம்புகிறாய்.

உன் கண்ணால் காணாத தாய் தந்தையர் இருந்திருக்க வேண்டும் என்பதை எப்படி நம்புகிறாய்? (காண்டல் அளவையால் மட்டுமன்றிக் கருதல் அளவையாலும் பொருள் உண்மையை நிச்சயிக்க வேண்டுமென்பது இதனால் பெறப்பட்டது).

இடித்து மின்னி, இருண்டுமேகம் எழுந்த போது, இது
பெய்யும் என்று
அடுத்ததும், அகில் சந்தம் உந்தி அலைத்து வார் புனல் ஆறு
கொண்டு
எடுத்து வந்திட, மால் வரைக்கண் இருந்து கொண்டல்
சொரிந்தது என்று
முடித்ததும், இவை காட்சி அன்று, அனுமானம் என்று
மொழிந்திடே. 34

தெளிவுரை:

மேகம் இடித்து முழங்கியும், மின்னியும் இருண்டும் பரந்து எழுந்து நிற்கும் நிலையில், இப்போது மழை கொட்டப் போகிறது என்ற எண்ணம் தோன்றுகிறது. ஆற்றில் வெள்ளம் பெருகி அகில், சந்தனம் முதலிய மரங்களைத் தள்ளிக் கொண்டு வருவதைக் கண்டதும், மலையில் மழை பெய்ததால், ஆறு கரைபுரண்டு ஒடுகிறது என்பதை ஊகித்து அறிகிறாய்.

இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் நீ கூறியபடி காண்டல் அளவையால் அறியப்பட்டன அல்லவே? எனவே, உலகாயதனே, கருதல் அளவை, ஆகிய அனுமானப் பிரமாணம் வாயிலாகவும் சில உண்மைகளை அறியமுடியும் என்பதை அறிவாயாக.

காண்டலோ அனுமானம் ஆவதும், காட்சி முன்னதும்
காட்சியேல்
பூண்ட பூத உடம்பின் உள் எழு போதம் என் கொடு
கண்டனை?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாண்ட வாயின் மனங்கொள் ஞானம் உணர்ந்ததும்
அனுமானம் என்று
ஈண்டு பூதம் இயைந்தது இவ்வுடல் என்பது என்
பிரமாணமே? 35

தெளிவுரை:

"கருதல் அளவையால் காண்கிறோம் என்று கூறுவதும் காண்டல் அளவையே; அதுவே முழுமையாகக் காண்பது (பூர்வக் காட்சி)" என்று உலகாயதனே நீ கூறுவாயாகில்,

இந்த உடம்பு பூதங்களால் உண்டானதைக் கண்டவர் யார்? பூதக் கூட்டுறவினால் உடம்பினுள்ளே ஓர் அறிவு உண்டானதைக் கண்டவர் யார்? இவ்வுண்மையைக் கருதல் அளவையால் அன்றி வேறு எந்த அளவையால் நீ அறிந்தாய்? பொறிகளின் வாயிலாக அறியும் அறிவு காண்டல் அளவையால் அறிவதன்று; அஃது அனுமான அளவையால் அறிவதே ஆகும். மேலும் பூதக் கூட்டத்தால் உண்டானது இவ்வுடம்பு என்று கூறும் நீ அவ்வாறு அஃது உண்டானதைக் காணவில்லை. எனவே, அஃது என்ன பிரமாணத்தால் (அளவை) அறியப்பட்டது என்கிறாய்? அது கருதல் அளவையால் ஏற்பட்ட அறிவே ஆகும்.

பழுது இலா மறை கண்ட நூல், பழுது இன்றி உண்டது
பாரின்மேல்
மொழிவர் சோதிடம் முன்னி இன்னது முடியும் என்பது
முன்னமே
அழிவு இலாதது கண்டனம்; அவை அன்றியும்; சில
ஆகமங்களின்
எழுதி ஓர்படி என்று கொண்டு இரு நிதி எடுப்பதும்
எண்ணிடே. 36

தெளிவுரை:

குற்றம் அற்ற வேதங்கள் முதலிய நூல்கள் எந்தக் குறையும் இல்லாத உண்மைகளையே கூறுகின்றன. அஃது எவ்வாறு எனின், உலகத்தில் சோதிட நூல்களில் உள்ளபடி கூறும் சோதிடர்கள் எதிர் காலத்தில் என்ன நிகழப்போகிறது என்பதை முன்கூட்டியே கூறுகி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

றார்கள்; அவர்கள் கூறியபடி மாறாத வகையில் நடப்பதைக் (அழிவில்லாதது) காண்கிறோம்.

௩

அதுமட்டுமன்று, சில நூல்களில் எழுதி வைத்திருக்கிறபடி, பூமிக்கு அடியில் மறைந்து கிடக்கும் பொருள்களைத் (முன்பே நாம் அறியாமலிருந்தும்) தோண்டி எடுத்து, அஃது உண்மை என்பதை அறிகிறோம். எனவே, உரை அளவை ஆகிய நூற்பிரமாணமும் அறிவு விளக்கத்திற்குக் கொள்ளப்படவேண்டியது ஒன்றே என்பதை எண்ணிப் பார்ப்பாயாக.

பூதம் ஆனவை நித்தம் என்று புகன்றது என்னை?உருக்களாய்
ஆதலோடு அழிவாகும்;ஆதலின் ஆக்குவோர் அவர் வேண்டிடும்
காதலோடு கடாதி மண்கொடு இயற்றுவோர் உளர் கண்டனம்;
சீத நீரில் எழுந்த கொப்புள் நிகழ்ந்த மாருதச் செய்கையே. 37

தெளிவுரை:

பூதங்கள் நான்கும் அழியாத இயல்பு உடையன என்று நீ எவ்வாறு கூறினாய்? இந்த பூதங்கள், வெவ்வேறு வடிவங்களில் தோன்றுவதோடு அழிந்தும் போகின்றன. எனவே, அவை நிலையானவை அல்ல. அவை ஒன்றோடு ஒன்று மாறுபடும் தன்மை உடையன; எனவே, அவை தாமே தம்மில் கூடுவதற்கு இடமில்லை. ஆகவே, அவற்றைத் தோற்றுவிக்கவும் அழிக்கவும் ஒரு கருத்தா வேண்டப்படும் என்பது தெளிவு.

அஃது எதுபோல் எனின், நீ உவமை கூறிய குடங்களை, மண்ணைக்கொண்டு உண்டாக்கும் ஒருவனைக் கண்டோம்; அது போல பூதங்களைத் தோற்றுவிப்பதற்கு ஒருவன் வேண்டும் என்பது தெளிவு.

குளிர்ந்த நீரில் தோன்றும் குமிழி வாயுவினால் தோன்றுவது போல், ஒரு பொருள் உருப்பெறுவதற்குக் கருத்தா ஒருவன் வேண்டப்படும்என்பதை அறிவாயாக.

நீரின் வந்து எழு கொப்புள், நீர் அது வாய் எழும்; நிகழ் பூதமும்
ஓரின் வேறு உணர்வாய் எழா; அவை பூதமாகி உதித்திடும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தேரின், நூறு, அடை; காய் செறித்து அவை சேர, வேறு
சிவப்பு எழும்;
பாரினில் பிரியாது புந்தி பழிப்பு உடம்பு கிடக்கவே. 38

தெளிவுரை:

தண்ணீரில் தோன்றுகின்ற குமிழி, தண்ணீரே ஆகும் அது போல பூதங்களும் வேறாக அறியும் அறிவுடையனவல்ல. ஆய்ந்து நோக்கினால், அவை அறிவற்ற சடமாகவே தோன்றுகின்றன. இன்னும் பார்க்கப்போனால், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகிய மூன்றும் கலக்கும்போது, சிவப்பு என்னும் நிறம் அவற்றின் வேறாகத் தோன்றுவதுபோல, பூதக்கூட்டம் சேரும்போதும் அறிவு தோன்றும் என்று நீ கூறுவது பொருந்தாது. ஏனெனில், பூதங்களால் ஆகிய உடம்பு இந்த பூமியில் கிடக்கும்போது, அதனுடன் இருந்த அறிவு நீங்கிவிடுவதைக் கண்ணால் காண்பதனாலேயே ஆகும். எனவே, சடம் வேறு; அறிவு வேறு.

கூறு சேர்வையின் வந்த போது சிவப் பெனும் குணம்
ஒன்றுமே
வேறு வேறு புலன் குணங்கள் உடற்கண் வந்து
விளைந்ததென்?
நூறு காய் அடை கூடும் வேறுஒரு வன்தனால் என நோக்கி,
நீ
தேறு; பூத செயற்கும் வேண்டும் ஒருத்தன் என்று
தெளிந்திடே. 39

தெளிவுரை:

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்புக் கலவையின்போது, தோன்றும் சிவப்பு ஒரு தன்மையாகவே உள்ளது. ஆனால், உடலில் வெவ்வேறு புலன்களும், குணங்களும் தனித்தனியே வந்து எப்படி உண்டாயின? சிவப்பு நிறம் உண்டாவதற்கு, வெற்றிலை முதலான வற்றைச் சேர்ப்பதற்கு ஒருவன் இன்றியமையாது வேண்டப்படு வதுபோல, பூதங்களையும் கூட்டித் தொழிற்படுத்துவதற்கு ஒருவன் வேண்டும் என்பதைத் தெளிவாயாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன ஐம்பொறி, உண்டி, நித்திரை, அச்சம், மைதுனம் ஆதியா
ஊனில் வந்திடும் முன்பு இலாதவை என்று உரைக்கின், உலூதைபோல்
வானின் வந்திடும் மாதர், ஆண், அலி ஆகி, மானுடர் ஆதியாய்
யோனி பன்மையும் இன்று பூதம் உறும் புணர்ச்சி ஒரு தன்மையே. 40

தெளிவுரை:

சிலந்தியினிடத்து, நூல் தோன்றுவதுபால், முன்பு இல்லாத ஐம்பொறி, உணவு, உறக்கம், பயம், மயக்கம் முதலியன, இப்போது உடலில் உண்டாகின்றன என்று நீ கூறுவாயாயின், பெண், ஆண், அலி ஆகியும் மானுடர் முதலானவர்கள் ஆகாயத்திலிருந்து தோன்றல் வேண்டும்.

பூதக்கூட்டம் ஒரே தன்மை உடையது. எனவே, மிருகம், பட்சி முதலிய பல்வேறு வகைப்பட்ட உடல்கள் எப்படித் தோன்று கின்றன என்பதை உன்னால் கூறமுடியாது. எனவே, நீ கூறுவது பொருந்தாது. (உலூதை – சிலந்திப்பூச்சி).

ஐந்து நான்கு ஒரு மூன்று இரண்டுடன் ஒன்று அதாய் உடலங்களின்
வந்திடா உணர்வு, இந்திரியங்களும் வன்ன பன்மையும் இன்மையாம்;
புந்தி யோடிய வன்ன போக குணங்கள் பூத புணர்ச்சிதான்
தந்திடாது; இவை பேதம் ஆயிட வந்த வா, வினை தந்தவா. 41

தெளிவுரை:

நீ முன்பு இல்லை என்று கூறிய கன்மம் இல்லை ஆயின், உடலின் வேறுபாடும் இல்லையாக இருக்கவேண்டும். உடல்கள் வேறுபட்டுக் காணப்படாமலிருந்து உடல்களில் உள்ள இந்திரியங் களும் பல்வேறு சாதிகளும் ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என்னும் அறிவுகளும் இல்லையாக இருக்க வேண்டும். அப்படி இல்லையே?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேலும், புத்தியினால் அறியக்கூடிய எழுத்துக்கள், அனுபவங்கள், குணங்கள் ஆகியவை பூதங்களின் கலப்பினால் ஏற்படுவதில்லை. இந்த வேறுபாடுகள் வந்த விதம் எப்படி? தாமாக வந்தனவா? வினை காரணமாக வந்தனவா? என்பதைச் சிந்தித்து அறிவாயாக.

(முன்னர் உள்ள 'வன்னம்' சாதியைக் குறிக்கும். பின்னர் உள்ள 'வன்னம்' எழுத்தைக் குறிக்கும்).

அறிவு பூதம்அது என்னில் வேறு புறத்து அறிந்தமை
கண்டிலம்;
செறிவுதான் உடலத்து எனில் சவம் ஆன போது உடல்
தேருமோ?
குறி கொளாத உடல் வாயுவானது கூடிடாமையின்
என்னில், நீ
பிறிதராது உயிர் நிற்க, ஞானம் உறக்கம் என் பிறவாததே?
42

தெளிவுரை:

பூதங்கள் அறிவுடையன என்று நீ கூறுவாய் ஆயின், காணப்படுகின்ற மண், நீர், நெருப்பு, காற்று ஆகியனவும் அறிவுடையனவாக இருக்கவேண்டும்; ஆனால் அவை அறிவுடையனவாக இல்லையே?

பூதங்கள் உடலில் கூடியபோது அறிவைக் காணலாம் என்பாய் ஆயின், உடல் சவம் ஆனபோது, அந்த உடலில் உள்ள பூதங்கள் அறிவு உடையனவாகக் காணப்படவில்லையே.

அந்நிலையில் வாயு என்னும் பூதம் கூடி நிற்காததால், அறிவு காணப்படவில்லை என நீ கூறுவாய் ஆயின், உறங்கும்போது வாயு கூடித்தானே நிற்கிறது. அப்போதும் அவ்வுடலில் அறிவு தென்படவில்லையே?

எனவே பூதங்கள் நான்கும் கூடினால் அறிவு தோன்றும் என்று நீ கூறுவது பொருந்தாது; ஆக, உடலின் வேறாய் அறிவு ஒன்று உண்டு என்பதை அறிவாயாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிவு உடற்குணம் என்னில், ஆணையது
ஆதி அந்தம் எறும்பதாம்;
உறும் உடல் பெரிதான வற்றில்,
உதித்திடும் பெரிதாகவே;
சிறு உடல் செறி ஞானமும்
சிறிதாயிடும்; பரிணாமமும்
பெறும் உடல் சிறிதாவது என்?
பெரிதாவது என்? சில பேசிடே. 43

தெளிவுரை:

அறிவு, உடலின் குணம் என்றால், பெரிய உடலை உடைய யானையைவிடச் சிறிய உடலை உடைய மனிதன் அறிவு மிகுந்து இருப்பதற்கு என்ன காரணம்? நீ கூறுகிறபடி பார்த்தால், பெரிய உடலுக்கு அறிவு பெரியதாகவும் சிறிய உடலுக்கு அறிவு சிறிய தாகவும் இருக்கும்.

அஃது அவ்வாறு இன்றி பரிணாமத்தை உடைய யானை உடலில் இருக்கும் அறிவு, மனித உடலில் இருக்கும் அறிவை விடச் சிறியதாக இருப்பதால், நீ கூறுவது பொருந்துமாறு இல்லை. ஆகவே, உடலின் குணமே அறிவு அன்று என்பது பெறப்படும்.

அறிவு பற்றிப் பேசும்போது சிறிய உடலாய் இருந்தால் என்ன? பெரிய உடலாய் இருந்தால் என்ன? அறிவுக்கும் உடலுக்கும் ஒரு தொடர்பும் இல்லையே? இன்னும் நீ சொல்லவேண்டியது உண்டாயின், சொல்.

போதமும் மெலி வாகியும் மலி
பூதம் ஆனவை கூடலில்
பேதமோடு பெருத்து உடல்கள்
சிறுத்த பெற்றிமை என்றிடின்,
ஓது உடல் பெரிதானவும்
சிறிது ஆயிடா சிறிது ஆனவும்
நீதியில் பெரிது ஆயிடா, முனம்
உள்ள தன்மையின் நீடுமே. 44

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

பூதங்கள் கூடும்போது, அவை பெரிய அளவில் கூடும் போது பெரிய உடம்பும், சிறிய அளவில் கூடும்போது, சிறிய உடம்பும் உண்டாகின்றன என்றும், பெரிய உடலில் அறிவு மிகுந்தும், சிறிய உடலில் அறிவு குறைந்தும் காணப்படுகின்றது என்றும் நீ கூறுவாய் ஆயின்,

நீ கூறிய அந்தப் பெரிய உடல் ஒரு காலத்தில் சிறியதாக மெலியக் கூடாது; சிறியதாக இருந்த உடல் பெரியதாகப் பருக்கவும் கூடாது. தோன்றிய உடல் தோன்றியவாறே இருக்கவேண்டும். ஆனால் உண்மையில்அப்படியில்லையே?

இந்த உடல் ஒரு சமயம் பெரியதாகவும் மற்றொரு சமயம் சிறியதாகவும் ஆவதற்கு என்ன காரணம்? எனவே பூதங்கள் கூடுதல் குறைதல் காரணமாக, அறிவு மிகுந்தும் குறைந்தும் காணப்படுகிறது என்பது பொருந்துமாறு இல்லை. ஆக, உடலுக்கு அறிவு குணம் என்பது பொருந்தாது என்பதை அறிவாயாக.

இயல்பு காண் இவை என்னின், வேறு இசை
பெண்ணொடு ஆண் இரு தன்மை ஆம்
செயல் கொளா இவர் செய்தி காரணம்
ஆக வந்து செனிப்பது என்?
இயல்பதாம் உடல் பூத காரியம்
ஆவதும் இல்லை ஆகுமால்
மயல் அதாம் வினையால், ஒருத்தன்
வகுத்த தன்மையின் வந்ததே. 45

தெளிவுரை:

இவ்வாறு நடைபெறுவதெல்லாம், பூத இயல்பின் காரண மாக இயற்கையாகவே ஏற்படுகின்றன என்று நீ கூறுவாய் ஆயின், இயற்கை ஒரு தன்மைப்பட்டு இருக்குமே அன்றி, பல்வேறு வகைப் படப் பொருந்தி, பெண், ஆண் என்னும் இரண்டு வேறுபட்ட இயல்புகள் தோன்றுவதற்கு என்ன காரணம் என்பதைக் கூற முடியுமா? முடியாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எனவே, உடல் இயற்கையாக உள்ளது என்றால், அவ்வாறு இருப்பது பூதத்தின் இயல்பா அல்லது பூதகாரியத்தின் இயல்பா என்பதை உன்னால் கூறமுடியாது. ஆதலால், நீ, கூறுவது மயக்கத்தை உடையதாக உள்ளது. எனவே, உயிர்கள் செய்யும் கன்மத்துக்கு ஈடாக ஒருத்தனால் உண்டாக்கப்பட்ட தன்மையினாலே இந்த உடல் வருகிறது என்பதை அறிவாயாக.

காரணம் அவை என்றது என்னை?
கடாதிபோல் நிகழ் காரியம்
நேர் அணைந்து சமைந்து நின்றிடும்
என்பதும் அது நேர்கிலோம்;
போர் அணைந்திடும் ஒன்றோடு ஒன்று
பொருந்து மாயின் வருந்தியும்
நீர் அணைந்து ஒரு தீயின்
நின்றது கண்டதாயின் நிகழ்த்திடே. 46

தெளிவுரை:

உடல்களில் ஆண், பெண் என்பன அமைந்த காரணம் என்னவென்று நீ கூறுகிறாய்? மண்ணில் குடம் முதலியன தோன்றுவது போல, பூத காரணத்தில் ஆண், பெண் காரியப்பட்டுக் கூடியபோது உடல்களில் ஆண், பெண் என்பன அமையும் என்று நீ கூறுவதை ஏற்பதற்கு இல்லை.

அவ்வாறாயின், நீ கூறிய நான்கு பூதங்களும் ஒன்றிற்கு ஒன்று மாறுபட்ட இயல்பினை உடையனவாக உள்ளமையால், அவை கூடும்போது ஒன்றோடு ஒன்று தத்தம் தன்மையில் மாறு படாமல் கூடுமோ? கூடாவே. எடுத்துக்காட்டாக, நீரும் தீயும் கூடும் போது அவற்றின் தன்மை மாறுபடுவதைக் காணலாம். இயலுமாயின், இவ்விரண்டும் கூடும்போது, தம் இயல்பில் மாறுபடுவதில்லை என்பதை உன் காட்சி அளவையில் வைத்துக்காட்ட முடியுமா?

பூதம் மேவு புணர்ச்சியே புரி காய காரணம் ஆகுமேல்
காதல் ஆணொடு பெண்ணும் மேவு புணர்ச்சி காரணம்
ஆவது என்?
ஆதியே உலகத்தில் ஆணொடு பெண்ணுமாய் அணை
காரியம்
நாதன் நாயகியோடு கூடி நயந்த காரணம் என்பரே. 47

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

உடல்கள் தோன்றுவதற்குக் காரணம், பூதக்கூட்டமே என்பாய் ஆயின், ஆணும் பெண்ணும் காதல் உணர்வோடு புணரும் புணர்ச்சிக்கு எது காரணமாக உள்ளது?

அஃது எவ்வாறு எனின், அநாதியே இறைவன் தன் அருள் ஆகிய நம் அம்மையுடன் கூடிப் போகத்தை விரும்பியதாலேயே உலகத்தில் ஆணும் பெண்ணும் காரியப்பட்டு அது காரணமாகக் காதல் உணர்வோடு பொருந்தி வாழ்கின்றனர். இறைவன் நமக்கு அம்மையப்பராய் இருப்பதற்குக் காரணம் இஃதே ஆகும். இவ்வுண் மையைப் புரியாமல் ஆண் பெண் புணரும் புணர்ச்சிக்குப் பூதக் கூட்டமே காரணம் என்று நீ கூறுவது எந்த விதத்திலும் பொருந்தாது.

கந்தம் வெம்மை கலந்திடும் புனல் கன்மம் என்செய்தது
என்றனை;
சந்தனம் தழல் சார நீர் இரு தன்மை உற்றிடுமாறு, அது ஓர்
தந்த கன்மம் இரண்டு அணைந்து தரும் சுகத்தொடு துக்கமும்
சிந்தியா எழு சீவன் உற்றிடும் வேறு உடற்கு இலை
தேறிடே. 48

தெளிவுரை:

நீர் சந்தனத்தைக் கூடியபோது குளிர்ந்தும், நெருப்பைக் கூடினபோது வெப்பம் கலந்தும் இருப்பதால், அந்த நீர் என்ன வினை யைச் செய்தது? எனவே கன்மம் என்பது இல்லை என்று நீ கூறு கிறாய்.

நீ உவமை கூறிய நீருக்கு இரண்டு தன்மை வந்த விபரத்தைக் கூறுகிறேன் கேள்.

கன்மம் இரண்டு வகைப்பட்டுப் பொருந்திச் சுக துக்கங் களைக் கொடுக்கும். அந்த சுகதுக்கங்களை உற்று அறிவது, அறிவு டைப்பொருள் ஆகிய உயிரே அன்றி, அறிவற்ற சடப்பொருளுக்கு இன்பதுன்ப அனுபவம் இல்லை. உயிர்க்குத்தான் இன்ப துன்பம் உண்டே அன்றி உடலுக்கு இல்லை. எனவே, அறிவற்ற சடப் பொருள் ஆகிய நீரினை வைத்து, நீ உவமை கூறிய கருத்து பொருந்தாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இன்பம் எய்தி இருந்து, நீ வினை இல்லை, இங்கு இயல்பு என்றிடில்;
துன்பம் எய்திடுவான்; என்? மற்றுஇது சொல்லிடாய்; சொல்ல வல்லையேல்,
முன்பு செய்திடு கன்மம் என்று அறி; கன்மமும், முதல்வன் அறிந்து
அன்பினால் உறுவிக்கும் அப்பயன் ஆங்கு அமைப்பொடு அநாதியே. 49

தெளிவுரை:

நீ பெண்களுடன் கூடிப் போக இன்பத்தை அனுபவித்து இருந்தும், அஃது இயற்கையே, அது வினைப்பயன் இல்லை என்று கூறுவாய் ஆயின், அந்தப் பெண்கள் உன்னை விட்டுப் போனதும், நீ துன்பம் உறுகிறாயே? இஃது ஏன்? இதற்கு விடை கூற இயலுமாயின் கூறுவாயாக. (உன்னால் இத்தடைக்கு விடை கூற முடியாது. நான் கூறுகிறேன்; கேள்.)

நீ முற்பிறப்பில் செய்த நல்வினைக்குப் பயனாக இன்பத்தையும், தீவினைக்குப் பயனாகத் துன்பத்தையும் இப்பிறப்பில் அனுபவிக்கிறாய் என்பதை அறிந்துகொள். அந்த இன்ப துன்பங்கள் ஆகிய வினைப்பயன்கள் சடம் ஆகலின், அவை தாமாக உன்னை வந்து அடைவதில்லை, நீ செய்த கன்மத்திற்கு ஈடாக, இறைவனே உன்பால் கொண்ட கருணை காரணமாக, அவற்றை உனக்கு உறும்படி செய்கிறான்; இது தொன்று தொட்டு நிகழ்கிறது.

அநாதியேல் அமைவு இன்று எனின்; மலம், மாயை, கன்மம்; அணு சிவன்
அநாதி; கன்மம் அணுக்கள் செய்ய அறிந்து, கன்மம் உடல் செயா;
அநாதி காரியமாம் உடல்கள் அசேதனம் அணையா; அறிந்து
அநாதி ஆதி அமைக்க வேண்டும் அமைப்பினோடும் அநாதியே. 50

தெளிவுரை:

இவை எல்லாம் தொன்று தொட்டு (அநாதியே) கடவுளால் நிகழ்கின்றன என்று நாம் கூறுவதை நீ ஏற்காமல், அவ்வாறு அமைவ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தற்குக் கருத்தா ஒருவன் இருந்து கூட்டுவது இல்லை என்று நீ கூறுவாய் ஆயின்; அதற்கு விளக்கம் கூறுகிறோம்; கேள்.

ஆணவமலம், மாயை, கன்மம், உயிர், இறைவன் ஆகிய ஐந்து பொருள்களும் அநாதியே உள்ளவை. உயிர்கள் வினை செய்வதை அறிந்து இறைவன் உயிர்களுக்கு வினைப்பயனை ஊட்டுகிறான்; கன்மம் சடப்பொருள் ஆகலின், அதுவே உயிர்க்கு உடலைத் தரமாட்டாது. உடல்களும் சடம் ஆகலின், அவையும் உயிர்களைத் தாமே சென்று அடைய மாட்டா. எனவே அநாதியே உள்ள இறைவன், ஆன்மாக்களின் தன்மை அறிந்து, அவ்வவற்றிற்குள்ள உடலையும் வினையையும் முதன் முதலாக அமைக்கிறான். ஐந்தும் அநாதியே உள்ளமையால், அவை அனைத்தும் அநாதியே நிகழ்கின்றன.

காண ஒணா கரணங்களுக்கு உயிர் கண்டிடாமையின்
இன்று எனில்,
காணுமோ கடம், கண்ட கண்ணினைக் கண்டு நிற்பதும்
கண்ணதே;
காண ஒணாது உயிர்தானும், இப்படிக் கண்டிடும்
கரணங்களைக்
காண ஒணா கரணங்களுக்கு உயிர் உண்மை ஆவதும்
கண்டிடே. 51

தெளிவுரை:

புறக்கரணங்கள், உயிரைக்காண முடிவதில்லை; காண முடியாமையின், உயிர் என்று ஒரு பொருள் இல்லை என்று நீ கூறுவாய் ஆயின், உடலானது (கடம் – உடல்) அதனைக் கண்ட கண்ணைக் காண முடிகிறதோ? இல்லையே. உடலைக் கண்டு நிற்பது கண்ணுக்குள்ள தொழில். ஆயினும் கண், உயிரைக் காண்பதில்லை; காண முடிவதில்லை. கண்ணால் காண்பதே காட்சி அளவை.

உடலைக் கண்டு நிற்கும் கண், உயிரைக் காண முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? காட்சியளவையால் மட்டும் எல்லாவற்றையும் அறிந்துவிட முடியாது என்பதே ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உயிர் அறிவுடைப் பொருள்; எனவே, (அது கரணங்களைக் கண்டு நிற்கும். கண்களை உடல் அறியாது; அதுபோலக்) கரணங் களும் உயிரை அறியமாட்டா. இதிலிருந்து என்ன தெரிகிறது? காட்சி யளவையால் காணமுடியாத பொருளை இல்லை என்று கூற முடியாது அல்லவா? ஆகவே, உயிர் என்று ஒரு பொருள் உண்டு என்பதை அறிவாயாக.

அங்கியானது தானும் ஒன்றை அணைந்து நின்று
நிகழ்ந்திடும்;
பங்கியாது உயிர்தானும் இப்படிப் பற்றியல்லது நின்றிடாது;
எங்கும் ஆர் தயிலத்தை உண்டு, எழு தீபம் ஆனது
எரிந்திடும்;
அங்கதாம் உடல் நின்று, கன்மம் அருந்தி ஆருயிர் ஆவதே. 52

தெளிவுரை:

நெருப்பு, ஒரு விறகினைப் பற்றி நின்றே தன் வடிவத்தைக் காட்டும்; தனித்து நின்று தன் உருவத்தைக் காட்டும் தன்மை அதற்கு இல்லை. அதுபோல, உயிரும் ஏதேனும் ஒரு பொருளைச் சார்ந்து நின்றால் அன்றி தனித்து நிற்கும் இயல்பு உடையதன்று.

அகல் விளக்கில் நிறைந்த எண்ணெயைப் பருகியே, ஒளி யானது எரியும். அதுபோல உயிர் உடலில் நின்று கன்மத்தைப் புசிக்கும். அஃதாவது அனுபவிக்கும்.

அகல் விளக்கு, உடலுக்கு உவமை; எண்ணெய், கன்மத் திற்கு உவமை; ஒளி ஆன்மாவிற்கு உவமை.

பங்கியாது – அழியாமல். உயிர் என்றும் உள்ள உள் பொருள். எனவே 'பங்கியாதுயிர்' என்றார். தயிலம் – எண்ணெய்.

அறிவுதான் உடல்அதுவின் வேறதுவாய், இறந்து பிறந்திடின்
அறிவுமுன்பு உளது இங்கு வந்தும் அறிந்திடாமையது
இன்று எனின்;
அறிவையோ கனவத்து நீ நனவத்தை அன்று உதரத்து இருந்து
அறியும் அவ்வறிவோ மயக்க அறிவு, ஆதலால் அறியாது
காண்; 53

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

'உடலின் வேறாய் இருக்கும் அறிவு. அஃதாவது உயிர் இறந்தும் பிறந்தும் திரிகிறது. முற்பிறப்பில் இருந்த அறிவு இப்பிறப் பிலும் மாறாமல் இருக்கவேண்டும். அப்படி இல்லையே? என்று நீ கூறுவாய் ஆயின், அதற்கு விளக்கம் வருமாறு.

நீ கனவு காணும்போது, அந்தக் கனவை நனவு என்றுதானே அறிந்தாய்? நாம் கனவு காண்கிறோம் என்று அப்போது நீ அறிய வில்லை அல்லவா? மேலும், உன் தாயின் வயிற்றில் முன்பு நீ இருந்த போது உனக்கு இருந்த அறிவு, மயக்கமான அறிவு என்பதை இப்போதுள்ள தேகத்தில் இருக்கும்போது அறிகிறாய் அல்லவா?

எனவே, முற்பிறப்பில் உனக்கு இருந்த அறிவு, இப்பிறப் பிலும் இருக்கவேண்டும் என்பது இல்லை. அறிவும் அறியாமையும் உயிர்க்குப் பிறப்புத்தோறும் மாறி மாறி வரும் என்பதை நீ அறிவாயாக.

இறந்திடும் அறிவே பிறந்திடும் என்பது இங்கு இசையாது
எனின்;
உறங்கிடும் பொழுது இன்றி; நின்று உணர்வு இங்கு
உதித்திடுமாறு அது ஓர்
பிறந்த இவ்வுடல் போகவேறு உடல் பின்பு வந்தமை பேசிடின்,
மறந்திடும் கனவத்தில் வேறு உடல் வந்தவாறு மதித்திடே. 54

தெளிவுரை:

இறந்த அறிவே பிறக்கும் என்று இங்குக் கூறியது பொருந்தாது என்று நீ கூறுவாய் ஆயின், அதற்கு விளக்கம் வருமாறு.

நீ உறங்கும்போது உன் முகத்தில் பாம்பு ஏறியதை அறியா மல் கிடந்தாய்; பின்பு விழித்து எழுந்து உணர்வோடு இருக்கும் போது, பாம்பைக் கண்டால் அஞ்சுகிறாயே? அஃது எப்படி?

இப்போது உள்ள உடல் அழிந்து, மறுபிறப்பில் மற்றோர் உடல் ஏற்படுவது எப்படி என்றால், கனவு காணும்போது நீ காணும் நுண்ணுடலின் இருப்பை நனவு நிலையில் மறந்து விடுகிறாயே, அதுபோலத்தான் இதுவும் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கரணம் வாயுவிடத்து அடங்க, அடங்கி வந்து எழு காரியம்,
மரணம் ஆன இடத்து மற்று இவை மாய்ந்து பின்பு
வரும்செயல்
கிரணமார் கலைகெட்டு, உதிப்ப இறப்பினோடு பிறப்பையும்
தரணியோர்கள் மதிக்கு உரைப்பர் உயிர்க்கும் இப்படிச்
சாற்றிடே. 55

தெளிவுரை:

ஒருவன் மரணம் அடைந்தபொழுது, அவனது இந்திரியங்கள் அழிந்து, பின்பு அவன் பிறக்கும்போது அவை எவ்வாறு அவனை வந்து கூடும் என்று நீ கேட்பாய் ஆயின், அதற்கு விளக்கம் வருமாறு.

ஒருவன் மூர்ச்சித்தபோது, அவனது கருவி கரணங்கள் வாயுவில் ஒடுங்கி விடுகின்றன. அவன் மூர்ச்சை தெளிந்தபோது அவனது கருவி கரணங்கள் மீண்டும் செயல்படுகின்றன. அவ்வாறே மரணத்தின்போது அழியும் இந்திரியங்கள் மறுபிறப்பில் அவனை வந்து கூடும்.

மேலும் சந்திரனின் கலைகள், கிரகணம் ஏற்படும்போது அழிந்து, அந்த கிரகணம் நீங்கியபோது, அவை சந்திரனை வந்து கூடுவதாக உலகத்தார் கூறுவதுபோல, உயிர்க்கும் இவ்வாறு பிறவிகள் தோறும் கருவி கரணங்கள் மாய்ந்து பின்னர் வரும் என்று கொள்ளவேண்டும்.

பூதம் ஆனவை காரியங்கள் பொலிந்து மன்னி அழிந்திடும்;
ஆதலால், ஒருநாதன் இங்கு உளன் என்று அறிந்து, கொள்,
ஐயனே;
பேதமான கடாதி மண்ணினில் வந்தவாறு பிடித்திடில்
கோதிலாத குலாலனால் வரு செய்கை என்று குறிப்பரே. 56

தெளிவுரை:

(இதுவரை வழக்கிட்டு முறையாகக் கூறியபிறகு, இனி உலகாயதன் அறிய வேண்டியவற்றைக் கூறுகிறார்.)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உலகாயதனே, நீ கூறிய பூதங்கள் காரியப்பட்டு, உயிர்களின் அனுபவத்தின் பொருட்டுப் பொலிவோடு நின்று, அழிந்துவிடும். எனவே, இவற்றை ஆக்கியும் அழித்தும் செய்வதற்குத் தலைவன் ஆகிய கடவுள் ஒருவன் உண்டு என்பதை அறிவாயாக.

மண்ணிலிருந்து விதவிதமான குடங்கள் தோன்றியது போல, பூதங்களின் காரியப்பாடுகளும் தோன்றலாயின. சடப்பொருள் ஆகிய மண்ணிலிருந்து குடத்தைத் தோற்றுவிப்பதற்கு ஒரு குயவன் தேவைப்படுவது போல், மாயை என்னும் சடப்பொருளிலிருந்து இந்த உலகத்தைத் தோற்றுவிப்பதற்கும் ஒரு கடவுள் இன்றியமையாது வேண்டப்படும் என்பதை அறிவாயாக.

வேதன் நாரணன் ஆரணம் அறியா விழுப்பொருள்,
பேதைபால்
தூதனாய் இருகால் நடந்திடு தோழன், வன்மைசெய்
தொண்டனுக்கு
ஆதலால் அடியார்களுக்கு எளியான் அடிக்கமலங்கள் நீ
காதலால் அணை; ஈண்டென் வேண்டின இம்மையே தரும்
கண்டிடே. 57

தெளிவுரை:

அயனும் மாலும் நான்மறைகளும் அறிதற்கு அரிய சிறப்பு மிக்க செம்பொருள், வலிந்து ஆட்கொண்ட சுந்தரர் பெருமானுக்குத் தூதனாய்ப் பரவையார் வீட்டுக்கு, இரவு நேரத்தில, தன் இரு கால்களாலும் நடந்து சென்ற சிறந்த நண்பன், எங்கள் சிவபெருமான்.

எனவே, அயன் மாற்கு அவன் அரியன் ஆயினும், அவனது திருவடியையே நினைந்திருக்கும் அடியவர்க்கு எளியவன் ஆவான். அவனது திருவடி மலர்களை நீயும் பேரன்புடன் வழிபடு. அவ்வாறு வழிபடும்போது, இந்தப் பிறப்பில் என்னென்ன போகங்களை நீ அனுபவிக்க விரும்புகிறாயோ, அவற்றையெல்லாம் உனக்குத் தந்தருள்வான்; இவ்வுண்மையை மெய்யாகவே நீ காண்பாயாக.

பொன் குலாவு மணிக்கலன்கள் மலம் புகில், கை
பொருந்திடா
மின் குலாம் இடையார்கள் தாம், உலகத்தின் வேட்கை
விடும் பொருள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புன் புலால் மலம் மூத்திராதி பொசிந்து நாறு புலைக்கலம்
என்கொலாம் இவர் மேல் விழுந்தது இவற்றின் என்பெற
எண்ணியே, 58

தெளிவுரை:

பொன்னினால் விளங்கும் நவரத்தினக் கற்கள் பதிக்கப்பெற்ற அணிகலன்கள், மலத்தில் விழுந்துவிட்டால், அவற்றைக் கையினால் எடுப்பது தகாது. அஃது அவ்வளவு அருவருப்பாய் இருக்கும். அது போல, மின்னலைப் போன்ற ஒடுங்கிய இடையினை உடைய பெண்கள், செயற்கையான மணத்தை உடையவர்கள். அந்தச் செயற்கை மணம் நீங்கினால் அவர்களிடத்து நீ பெரு விருப்பு கொள்ள மாட்டாய்.

அஃது எது போல எனின், சற்று இரத்தம், மலம், மூத்திரம் முதலியன கசிந்து மிகவும் துர்கந்தம் வீசுகின்ற உடலை உடைய அந்தப் பெண்களின் மீது பெருவிருப்பு ஏற்பட்டது, என் காரணம் பற்றியோ? அந்த உடம்பில் நீ பெறவேண்டிய பேறு என்ன உள்ளது? இவற்றைச் சற்று எண்ணிப் பார்ப்பாயாக.

தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுவேத நீ
ரால் எடுத்த முடைக் குரம்பை அழுக்கினோடு புழுக்குழாம்
நூல் ஒழுக்கிடு கோழை ஈரல் நுரைக்கும் மூத்திர பாத்திரம்
சேல் அடர்ந்த கண்ணார்கள் என்பது தேர் மலத்திரள்
திண்ணமே. 59

தெளிவுரை:

தோல், இரத்தம், மாமிசம், நரம்பு (மேதை) எலும்பு, மறு, சுரோணித நீர் ஆகிய இவற்றினால் உண்டாக்கப்பட்ட துர்நாற்றம் வீசும் உடம்பு; அன்றியும், ஊத்தையுடன் கிருமித்திரள் நூல் ஒழுகும் கோழை ஈரல் இவைகளால் பொங்கி நுரைக்கும் மூத்திரப்பண்டம். இப்படிப்பட்ட உடலை உடைய பெண்கள், கயல் மீண்களை ஒத்த கண்களை உடையவர் என்று பேசப்படுகிறார்கள். ஆயினும், எல்லாம் மலத்தொகுப்பே ஆகும்.

ஆசை உற்று உழல் சூகரங்கள் அசுத்தம் மேவி அளைந்து தின்
றே, சுகித்தன வாயிடும் சுகம் ஏழையோடு உறும் இன்பம் நீ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாசது அற்று ஒளிர் நித்த சத்த வளம்தரும் சுகவாரி காண்,
ஈசனுக்கு அடிமைத் திறத்தின் இயைந்து நாம் பெறும்
இன்பமே. 60

தெளிவுரை:

அறிவற்ற பெண்களோடு நீ உடல் இன்பம் துய்ப்பது, பன்றிகள் மலத்தில் புகுந்து அதனைத் தின்றும், அதில் புரண்டும் பெருஞ் சுகத்தை அனுபவிப்பதற்கு ஒப்பாகும். (சூகரம் – பன்றி)

சிவபெருமானுக்கு அடிமையாக இருக்கும் நாங்கள் பெறுகின்ற இன்பம், குற்றமற்றது; என்றும் அழியாதது; தூய்மையானது; சிறப்பு மிக்க இன்பக் கடல்.

குரோதமே குணமாய் இருந்தவர் சாந்தி நன்மை
குறிக்கொளார்;
அராகமே அணைவார்கள்; ஆசை அறுத்த இன்பம்
அறிந்திடார்;
பராவு தேவர், பராவு தூய பராபரன் அடிபோற்றி, நீ
விராவு மெய்யில் விடாத இன்பம் விளைந்திடும் இது
மெய்ம்மையே. 61

தெளிவுரை:

உட்பகை, விரோதம் முதலியவற்றை இயல்பாக உடையவர், பொறுமையால் ஏற்படும் நன்மையை அறியமாட்டார். பேராசையைத் தமக்குக் குணமாக உடையவர், அந்த ஆசையை அறுத்தவர்க்கு உண்டான இன்பத்தை அறியமாட்டார். அவர்களைப் போலவே, சிற்றின்பம் ஆகிய பெண்போகத்தைக் கைக்கொண்டு நீயும் பேரின்பம் ஆகிய சிவபோகத்தை அறியமாட்டாய். அஃது அறிய விரும்புவாய் ஆயின், தேவர்களால் போற்றிப் பரவப்படும் தூய திருவருளை உடைய சிவபரம்பொருளின் திருவடிகளையே பற்றுக்கோடாகக் கொள்வாயாக. அவ்வாறு கொள்ளும் நிலையில் உனது உடலில் ஒருபோதும் நீங்காத ஒருபேரின்ப சுகம் விளையும், இஃது என்றும் உண்மை ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காமம் ஆதி குணங்களைச் சுகம் என்று கொண்டனை;
காதலால்
தாமம் ஆரழல் அங்கி, சீதம் மலிந்த போது சுகம் தரும்
நாமம் ஆர்தரு சீதம் வெம்மை நலிந்த போது தரும் சுகம்
சேமம் ஆகிய இன்பமாம், மிகு தெய்வ நன்னெறி சேரவே.62

தெளிவுரை:

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, அகங்காரம் என்கின்ற இவற்றைச் சுகம் என்று கொண்டிருந் தாய். இந்தச் சுகத்தின் தன்மை எத்தகையது என்றால், கூறுகிறேன் கேள்.

குளிர் மிகுந்த காலத்தில் புகை பொருந்திய எரிகின்ற நெருப்பை விரும்பினால், அது சுகத்தைத் தரும். வெப்பம் மிகுந்த காலத்தில், புனல் என்னும் பெயரை உடைய நீரின் குளிர்ச்சியை அடைந்தபோது, அது சுகத்தைத் தரும். இவற்றைப் போலவே, என்றும் நலம் பயக்கும் சைவ நன்னெறியைச் சார்ந்து நின்றால், அது என்றும் மாறாத பேரின் பத்தைத் தரும். எனவே சைவ நன்னெறியில் சார்ந்து நிற்பாயாக.

படிக்கும் நூல்கள் சிவாகமம்; பசு பாசமோடு பதித்திறம்
எடுத்து இயம்புவது; ஈசன் வார்கழல் ஏத்திடும் தொழில்,
என்றுமே
விடுத்திடும் பொருள் காமாதிகள் வேண்டிடும் பொருள்
ஈண்டு அருள்
முடித்து மும்மலம் விட்டு நின்மலனோடு நின்றிடல்
முத்தியே. 63

தெளிவுரை:

பேரின்பம் எய்த விரும்புபவர் படிக்கும் நூல்கள் சிவாகமங்கள் ஆகும். அவை கூறும் செய்திகள், பதி, பசு, பாசம் என்னும் முப் பொருள் உண்மையும் இயல்பும் ஆகும். அவர்கள் என்றும் போற்றிப் பரவும் செயல் சிவபெருமானின் திருவடியையே வழிபடுதல் ஆகும். அவர்கள் எப்போதும் கைவிடும் பொருள்கள், காமக் குரோதம் முதலியன. அவர்கள் விரும்புவது திருவருளே ஆகும். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை விட்டு நீங்கி நின்மலன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகிய சிவபெருமானின் திருவடியைக் கூடுவதே முத்தி இன்பம். எனவே, நீயும் இவ்வழியைக் கடைப்பிடிப்பாயாக.

உ. பௌத்தரில் சௌந்தராந்திகள் மதம்

நீதியார் வேத நூலின் நெறியலா அறங்கள் நாளும்
ஓதி ஓர் ஐந்து சீலம் உடையராய் உடலம் மூடிப்
போதி நீள் மரத்தின் மேவு புத்தர் நால்வரினும் வைத்துச்
சாதிதான் இலாத கொள்கைச் சௌந்திராந்திகன் முன்
சாற்றும். 64

தெளிவுரை:

நீதி சாத்திரத்தை தனக்கு உறுப்பாக உடைய வேத நூலில் கூறப்பட்டுள்ள நெறியோடு கூடிய அறங்களை விட்டுத் தமக்கு எனத் தனி அறங்களை வகுத்துள்ள பிடக நூலை நாள்தோறும் ஓதி வருப வர்கள், பௌத்தர் நால்வருள் ஒருவரான சௌந்திராந்திகள் ஆவர். அவர்கள் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் ஐந்து கந்தங்களின் குணத்தை உடையவர். (சீலம் – குணம்). உடலைத் துவர் ஆடையார் போர்த்து, அரசமரத்தைத் தெய்வம் என மதித்து, அதன் கீழ் அமர்ந்து இருப்பர். (துவர் ஆடை – காவி வஸ்திரம், போதிமரம் – அரசமரம்).

நால்வகைப் புத்தர்களில்; ஒருவராக வைத்து எண்ணப்படும் சௌந்திராந்திகள் ஆவர். இவர்கள் வருணபேதம் கொள்ளாதவர்கள். (வருணபேதம் – சாதி வேறுபாடு) இவர்களை முன்னிலைப்படுத்தி இங்குச்சில கூறுகிறோம்.

முழுதும் உணர்ந்து உலகில் கோறல் முதல் செயல்
முனிந்து, மற்றும்
பழுதிலா அருளினாலே பரதுக்க துக்கன் ஆகித்
தொழுது வானவரும் போற்றத் தொல் பிடகங்கள் ஆன
வழுவில் ஆகமங்கள் சொன்ன மாதவன் நாதன் ஆவான். 65

தெளிவுரை:

அனைத்தையும் அறிந்து, உலகத்தில் பொய், கொலை, களவு,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கள், காமங்களை வெறுத்து, குற்றமற்ற அருளினாலே, எந்த உயிர்க்குள்ள துன்பத்தையும், தன் உயிர்க்கு உற்ற துன்பம் போல் கொண்டு, வாழ்பவர்கள் நாங்கள்.

தேவர்களும் தொழுது துதித்து வரும் தொன்மையான "பிடக நூல்" ஆகிய குறைவற்ற ஆகமங்களை அருளிச் செய்த புத்த முனிவனே எங்கள் கருத்தா ஆவன்; அனைவருக்கும் தலைவன் ஆவன்.

குறிப்பு: பிடகம் என்னும் சொல் 'பெட்டி' என்னும் பொருள் உடையது. மூன்று தொகுதிகளாகத் தமது சமய நூலை அமைத்துக் கொண்டமையால், அப்பெயர் எழுந்தது போலும்! சௌந்திராந்திக மதம் தமிழ் நாட்டில் பெருவழக்காய்ப் பரவியதால், அதனை முதற்கண் எடுத்து ஓதுகிறார்.

மருவிய அளவை காட்சி மானம் என்று இரண்டு இவற்றால்
கருதிய பொருள்கள் ஞானம் ஞேயமாய்க் கணத்தில் பங்கம்
வரும் உரு அருவம் வீடு வழக்கு என நான்கு ஆகித்
தரும் அவை ஒன்று இரண்டாய்த் தாம் விரிந்து எட்டின் ஆமே. 66

தெளிவுரை:

பிடக நூலில் கூறப்பட்ட அளவைகள் ஆவன, காட்சியளவை, கருதல் அளவை என்னும் இரண்டு ஆகும். (கருதல் – அனுமானம்). இந்த இரு அளவைகளால் அறியப்படும் பொருள்கள் இரண்டு. அவை, "அறிவு" மற்றும் "அறியப்படும் பொருள்" என்பன. இவை இரண்டும் மிகக் குறுகிய கால எல்லையில் தோன்றி அழிந்து வரும். (கணம் – மிகக் குறுகிய காலம்). இவ்விரண்டினால் உரு, அரு, வீடு, வழக்கு என நான்கு ஆகும்; அந்த நான்கும் ஒன்று இரண்டாக விரிந்து எட்டு ஆகும்.

'கணம்' என்பது தாமரை இதழை அடுக்கி ஊசியிட்டு அடித்தால், எட்டு இதழ் அறுபடும் எல்லை ஆவதைக் குறிக்கும்.

உரு இயல் பூதமோடு அங்கு உபாதாய ரூபம் ஆகும்;
அரு இயல் சித்தம் கன்மம்என்று இரண்டு ஆகும்; வீட்டின்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மருஇயல் குற்றம் கந்தம் என வழங்கிடும்; வழக்கின்
இரு இயல் உள்ளத்தோடு அங்கு இல்லதாம்; இயம்பும்
நூலே. 67

தெளிவுரை:

உருவின் இயல்பு, பூதங்களால் ஆய வடிவம், அதற்குப் பற்றுக் கோடு ஆய வடிவம் என இரு வகைப்படும்; (உபாதாயம் – பற்றப்படுவது) அருவின் இயல்பு, சித்த அரு, கன்ம அரு என இரு வகைப்படும்; வீட்டினோடு பொருந்திய இயல்பு, குற்றவீடு, கந்த வீடு என்று இருவகைப்படும். வழக்கு உள்வழக்கு, இல்வழக்கு என இரு வகை இயல்புகளை உடையது. இவ்வாறு பிடக நூல் கூறுகிறது.

மண் புனல் அனல் கால் பூதம் வலி கந்தம் இரதம் வன்னம்
எண்தரும் உபாதாயம் தான் இவை இரு நான்கும் கூடி
உண்டு ஒரு பொருள், உரூபம் உறுபுலன் உபாங்கம் ஓடக்
கண்டது சித்தம் கன்மம் நன்று தீது என்றல் காணே. 68

தெளிவுரை:

பூத உரு என்பது – மண், நீர், தீ, காற்று என்னும் நான்கு ஆகும். உபாதாய ருபம் என்பது – வலிமை, சுவை, நிறம், நாற்றம் என நான்கு ஆகும். இவை எட்டும் கூடி உண்டாகிற பொருள் எதுவோ, அதுவே உருவம் ஆகும்.

புறத்தில் உள்ள உருவப் பொருள்கள் பொறி வாயிலாக அறிவிலே தமது வடிவை வைத்திட்டு அழியவும், அவ்வடிவைக் காண்பது சித்தம். அப்படிக் கண்ட பொருளை நன்று என்றும் தீது என்றும் காண்பது கன்ம அரு ஆகும்.

குற்றவீடு அராகம் ஆதி குணங்க்ளைக் குறைத்தல் ஆகும்,
மற்றவிடு உருவமாதி ஐந்தையும் மாய்த்தல் ஆகும்;
சொற்றரும் தொகை தொடர்ச்சி மிகுத்துரை என்று மூன்றாய்
உற்றிடும் வழக்கு இரண்டும் ஒன்று மூன்று ஆகி ஆறு ஆம், 69

தெளிவுரை:

குற்றவீடு என்பது குற்றங்களுக்கு ஏது ஆகிய காமம், வெகுளி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மயக்கத்தை விடுதல் ஆகும். கந்தவீடு என்பது உள்ளே காணப்படும் உருவகந்தம், குறிகந்தம், அறிவுகந்தம், வேதனை கந்தம், வாசனை கந்தம் என்னும் ஐந்து கந்தங்களும் அழியப்பெறுதல் ஆகும்.

உள்வழக்கு, இல்வழக்கு என்று கூறப்பட்ட வழக்கு இரண்டும், தொகை உண்மை வழக்கு, தொகை இன்மை வழக்கு, தொடர்ச்சி உண்மை வழக்கு, தொடர்ச்சி இன்மை வழக்கு, மிகுத்து உரை உண்மை வழக்கு, மிகுத்து உரை இன்மை வழக்கு என ஆறு ஆகி விரியும்.

ஒருவன் என்று ஓதப் பட்டான் உருவாதி ஐந்தும் கூடி
வருபவன் என்று உரைத்தல் தொகை உண்மை வழக்கது
ஆகும்,
உருவம் அங்கு ஆதியாய் ஐந்தையும் ஒருவன் இன்று
தருவது தொகையின் இன்மை வழக்கு அதாம் சாற்றும்
காலே. 70

தெளிவுரை:

கருத்தா என்று உரைக்கப்பட்ட ஒருவன், உருவகந்தம் முதலிய ஐந்து கந்தமும் கூடிவருபவன் என்று கூறுதல் 'தொகை யுண்மை'' வழக்கு ஆகும்; உருவம் முதலிய ஐந்தையும் ஒரு கருத்தா அவற்றோடு கூடாமல் நீங்கி நின்று, உண்டாக்குவன் என்பது 'தொகை இன்மை' வழக்கு ஆகும்.

காரண காரியத்தின் தொடர்ச்சியாய்க் காலம் மூன்றின்
சோர்வு அறத் தோன்றும் கெட்டு வழி என்கை தொடர்ச்சி
உண்மை;
ஓர்தரின் ஒருவனே எக்காலத்தும் உள்ளான் என்று
தேர்வது தொடர்ச்சி இன்மை வழக்காம் செப்பும் காலே. 71

தெளிவுரை:

காரண காரியம் என்னும் தொடர்ச்சி உடையனவாய்ப் பொருள்கள் முக்காலத்தும் அழிந்து தோன்றுவன என்று கூறுதல், 'தொடர்ச்சி உண்மை வழக்கு' ஆகும்; ஒரு கர்த்தாவே முக்காலத்தும் உள்ளான் என்று கூறுதல் 'தொடர்ச்சி இன்மை' வழக்கு ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தோற்றிய பொருள்கள் எல்லாம் நாசமாம் என்று சொல்லும்
மாற்றம் முன் உரைத்தல் மற்றை மிகுத்துரை வழக்கின்
உண்மை
போற்றிய பொருள் கண்கட்குப் போனதுபோல் முதிர்ந்து
வேற்றுமைப் பட்டது என்கை மிகுத்துரை இல் வழக்கே. 72

தெளிவுரை:

தோன்றிய பொருள்கள் எல்லாம் அழியும் என்னும் பதிலை முன்னர் சொல்வது, 'மிகுத்துரை உண்மை' வழக்கு ஆகும்; தோன்றிய பொருள்கள் கண்களால் காணப்பட்டது போல, அவற்றின் காரியம் (தோற்றம்) கெட்டுக் காரணமாய் நிற்கும் என்று கூறுவது, 'மிகுத்துரை இன்மை' வழக்கு ஆகும்.

உள்வழக்கு; இல்வழக்கு, உள்ளது சார்ந்தஉள் வழக்கோடு
உள்ளது சார்ந்த இன்மை வழக்குடன் இன்மை சார்ந்த
உள்வழக்கு, இன்மைசார்ந்த இல்வழக்கு என்றுஓர் ஆறாம்;
உள்வழக்கு உளது உண்டு என்கை முயற்கோடு இன்று
இல்வழக்கே, 73

தெளிவுரை:

வழக்கு என்பது உள் வழக்கு, இல் வழக்கு, உள்ளது சார்ந்த உள் வழக்கு, உள்ளது சார்ந்த இல் வழக்கு, இல்லது சார்ந்த உள் வழக்கு, இல்லது சார்ந்த இல் வழக்கு என்று அறுவகைப்படும். அவற்றுள் உள்ளதை உண்டு என்று உரைப்பது உள் வழக்கு; இல்லதை இல்லை என்றல் இல் வழக்கு, யானைக்கு கொம்பு உண்டு என்பது உள் வழக்கு; முயலுக்குக் கொம்பு இல்லை என்பது இல் வழக்கு.

உணர்வு சார்ந்து உணர்வு உதிக்கை உள்ளது சார்ந்த
உண்மை;
உணர்வு பின் இன்றாம் என்கை உள்ளது சார்ந்த இன்மை;
உணர்வு முன்பு இன்றித் தோன்றல் இல்லது சார்ந்த
உண்மை;
உணரின் இல்லது சார் இன்மை உள்ளங்கை உரோமம்
காணே. 74

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

அறிவைச் சார்ந்து அறிவு உண்டாகும் என்பது உள்ளது சார்ந்த உள் வழக்கு; அறிவு கெட்டால் பின் அறிவு உண்டாகாது என்பது, உள்ளது சார்ந்த இல் வழக்கு; அறிவு முன்பு இல்லாததாய்ப் பின்பு உண்டாகும் என்பது, இல்லது சார்ந்த உள் வழக்கு; உள்ளங்கையில் உண்டான மயிரால் கயிறு செய்யப்பட்டது என்பது, இல்லது சார்ந்த இல் வழக்கு. (நாண் – கயிறு).

சொன்ன நால்வகையும் இன்றிச் சொல்லிடும் பொருள்கள் எல்லாம்
என்னையோ அறிகிலோம்; பித்து ஏறியோ வானம் ஆன்மா
மன்னு காலங்கள் திக்கு மனமொடு வாக்கு இறந்திட்டு
உன்னும் ஓர் இறையும் உண்டு என்று உரைப்பது நித்தம் அன்றே. 75

தெளிவுரை:

முன்பு சொன்ன உரு, அரு, வீடு, வழக்கு என்னும் நான்கும், அவற்றின் விரிவும் அன்றி, 'வான்' என்ற ஒரு பூதம், உயிர் நிலையற்ற காலம், திசை, மன வாக்குக்கு எட்டாத நிலையில் உள்ள கடவுள் என்னும் இவை உண்டு என்று கூறுவது, பித்து ஏறிய பேச்சு, வான் முதலிய பொருள்கள் நிலையானவை அல்ல; இவை உண்டு என்று எப்படித்தான் சொல்கிறார்களோ? அறியோம்.

ஈங்கு வான் செயற்கு வாராது இயம்பிய பொருள்கள் எல்லாம்
தாங்குவான் உளதே என்னில், தரித்திடாது அருவம் ஆதல்
ஓங்குவான் ஓசைக்கு ஆதி எனில், அது அங்கு உருவின் கூட்டம்
நீங்குவான் இன்றி எங்கும் நின்றதேல் எங்கும் இன்றே; 76

தெளிவுரை:

மண் முதலிய நான்கு பூதங்களும் செயற்படுவதைக் காண் கிறோம். வான் என்பது தொழிற்படுமாறு இல்லை; அது மற்ற நான்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பூதங்களையும் தாங்கும் பொருட்டு உள்ளது என்று கூறுவது பொருந்தாது, அஃது அருவம் ஆகலின் பொருள்களைத் தாங்க முடியாது.

வான், ஒலி தோன்றுவதற்கு இடம் என்பதும் பொருந்தாது. ஒலி என்பது, உரு எடுத்த பொருள்களின் சேர்க்கையால் தோன்றுவது. ஆகாயம் எங்கும் நீங்குதல் இன்றி நிறைந்து உள்ளது என்றால், அஃது எங்கும் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

போதம் உண்டு உயிர்கட்கு என்னில் வாயில் ஐம்புலனும் நூலும்
ஆய்தலின் தொட்டுத் தீட்டுக் கலப்பினில் அறியும் என்னில்,
ஏதம் உண்டு இரவில் பச்சை சிவப்புடன் ஏய்ந்த போது
கேதம் நின்று என்னோ என்னும் ஐயம் முன் கிடத்தலாலே. 77

தெளிவுரை:

உயிர்களுக்கு அறிவு உண்டு என்றால், ஐம்பொறிகள், ஐம் புலன்கள், நூல்கள் முதலியவற்றின் வாயிலாக அவை அறியவேண்டு வதன் காரணம் யாது?

ஐம்பொறிகளோடு கலந்து நின்றும், புலன்களை உணர்ந்து நின்றும், நூல்களைப் பொருந்தி நின்றும் உயிர் அறியும் என்றால், இருளில் பச்சையும் சிவப்பும் கலந்து நின்றபோது, அவற்றின் வேறு பாட்டைத் துணிந்து அறிய முடியாமல் ஐயம் உற்று வருந்துவதற்கு என்ன காரணம்?

அறிந்திடா வாயில் இன்றேல் அறிவு இன்றாம் ஐந்தும் பற்றி
அறிந்திடும் அறிவு உண்டு என்னில், ஐந்தினும் அறிவு ஒன்று ஆக
அறிந்திட வேண்டும் சார்பின் அறிந்திடும் எனில், உன்னை
அறிந்திலோம் புத்தன் என்று இங்கு அழகு இது சொன்னவாறே. 78

தெளிவுரை:

ஐம்பொறிகள் இல்லை ஆயின், உயிர் ஒன்றையும் அறிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாட்டாது. பொறிகளுக்கு அறிவு இல்லை. எனவே, அந்த இந்திரியங்களைப் பற்றி நின்று அறியும். அறிவு உயிர்க்கு உண்டு என்று கூறுவது பொருந்தாது. அவ்வாறு உயிர் அறியுமாயின், புலன்கள் ஐந்தாலும் அறியும் அறிவை, ஒரு புலனால் அறியவேண்டும். ஒவ்வொரு பொறிக்கும் புலனாகும் அறிவு வேறு ஆகலின், அவற்றைச் சார்ந்து, வெவ்வேறு புலன்களை உயிர் அறியும் என்றால், ஐம்புலனைச் சார்ந்து ஐவகை அறிவு உண்டாகும் என்பது பெறப்படும். அதுதானே புத்தனும் கூறுவது. அறிவு உண்டு என்பது பெறப்படுமே ஒழிய, உயிர் என்பது ஒன்று உண்டு எனக் கொள்வதற்கு இல்லை.

ஞான ஞேயங்கள் அன்றி ஞாதிரு என்று சொல்ல
ஆனது இங்கு அறிவோ அன்றோ? அன்று எனில், அவனி போலும்
தானது இங்கு அறிவே என்னில் சமைத்திடும் நன்பருப்புப்
போனகம் தனக்குத் தானே கறி எனப் புகன்றதாமே; 79

தெளிவுரை:

அறிவும் அறியப்படும் பொருளும் அன்றி, அறியும் பொருள் உண்டு என்று கூறினால், அது தன் இயல்பில் அறிவுள்ளதா? அறிவற்றதா? அறிவற்றது ஆயின், அது மண்போல் சடமே ஆகும். அந்நிலையில், பூதங்களின் வேறாக உயிர் உண்டு என்பதற்கு இடம் இல்லை, அறியும் பொருள்தான், அறிவு என்று கூறின், அறிவுக்கும் உயிருக்கும் உள்ள வேறுபாடு யாது? பருப்பினால் அமைந்த துணை, உணவு என்றாலும், பருப்புக்கறி என்றாலும், பொருள் ஒன்றுதானே? (ஞானம் அறிவாய் இருக்கும்போது, ஞாதிருவும் அறிவு என்பதால், ஞாதிரு (உயிர்) என்று தனித்து ஒரு பொருள் இல்லை என்பது புத்த மதக் கொள்கை).

உயிரினை அரு அதுஎன்னில் உருவுடன் உற்று நில்லாது;
உயிரினை உரு அதுஎன்னில் உடலினில் உடல் அடங்காது;
உயிரினை அணு அதுஎன்னில், உடல் பல துவாரமோடும்;
உயிரினை நித்தம் என்னில் உணர்வு உதயம் அந்தம் இன்றே. 80

தெளிவுரை:

அறிவின் வேறாய் இருப்பதாகக் கூறப்படும் உயிர் என்பது,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அருவப் பொருளா? உருவப் பொருளா? அஃது அருவம் என்றால், உருவம் ஆகிய உடம்போடு அஃது எவ்வாறு பொருந்தி நிற்கும்? உருவம் ஆயின், ஓர் உருவம் மற்றொரு உருவில் அடங்காது.

உயிரினை அணு என்று கூறினால், அஃது எத்தனையோ; துவாரங்கள் உள்ள உடம்பில் நில்லாது. உயிர் நித்தப் பொருள் என்றால் அறிவும் நித்தப்பொருளாக வேண்டும். அவ்வாறாயின், அது தோற்றக்கேடு இல்லாததாக வேண்டும். அறிவு கணந்தோறும் மாறுவதால், அது நித்தம் அன்று; ஆதலால் உயிரும் நித்தப்பொருள் அன்று.

எங்குமாய் நின்றது ஆன்மா என்றிடின், எங்கும் இன்றாம்;
தங்கிடு நிறைவு தத்தம் சரீரங்கள் தோறும் என்னின்,
மங்கிடும் உடலத்தோடே; வடிவினில் ஓர் இடத்தே
அங்கு அது நின்றது என்னில், அடிமுடி அறிவு இன்று
ஆகும். 81

தெளிவுரை:

ஓர் உயிர் எங்கும் நிறைந்து நிற்கிறது என்றால், உடல் தோறும் பல வகையான வேற்றுமை காணப்படுதலால், ஓர் உயிர் எல்லா உடல் களிலும் நிற்பது என்றல் பொருந்தாது.

ஒவ்வொரு உயிரும் தத்தம் உடல்தோறும் நிறைந்து நிற்கும் என்று கூறினால், உடல் கெடும்போது அதுவும் கெட்டு ஒழியும். உடம்பில் ஓரிடத்தில் உயிர் நிற்கும் என்றால், உடம்பில் அடிமுதல் முடிவரை உள்ளதை அஃது அறிய முடியாது. ஆகவே, அறிவு என்பது உண்டு; அறியும் பொருள் ஆகிய உயிர் என்பது உண்டு என்பது பொருந்தாது.

சாற்றிய காலம் இங்குத் தங்கியவாறு இது என்னை?
தோற்றுவித்து அளித்துப் போக்கும் தொழில் இவை காலம்
என்னின்;
போற்றிய பொருளில் புக்குப் பிணங்கிடும் பொருள் பின்
இன்றாழ,
தேற்றிய இவ்வழக்குத் திரவியத்தின் இயல்பின் ஆகும். 82

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

காலம் என்று கூறப்படுவது யாது? பொருள்கள் தோன்றி நின்று அழிவதை வரையறுத்துப் படுத்துவது காலம் என்றால், அது தோன்றும் பொருளோடும், நிற்கும் பொருளோடும், அழியும் பொருளோடும் கலந்து நிற்பது ஆகும். எனவே, பொருள் கெடும்போது காலமும் கெட்டு ஒழியும். பொருள் மூன்று வகைத்து என்று கூறாமல், காலம் மூன்று வகைத்து என்று கூறுவது பொருந்தாது. ஆகவே பொருளின் வேறாகக் காலம் என்பது ஒன்று இல்லை.

எனக்கு நீ கிழக்கு இருந்தாய் ஆயின், மேற்கு என்றாய்; என்பால்
எனக்கு மேற்கு இருந்தான், என்பால் கிழக்கு என இயம்பும்; திக்குத்
தனக்கு நாம் கொள்வது எப்பால்? சாற்றிடாய்; இல் வழக்குத்
தனக்கு உளதாகும் உண்மைதான் இலதாகும் அன்றே. 83

தெளிவுரை:

காலத்தைப் போலவேதான் இடமும். நீ எனக்குக் கிழக்கே இருந்தாய் ஆயின், மேற்கில் நான் இருந்ததாகக் கூறுவாய்; எனக்கு மேற்கே இருப்பவன், நான் இருக்கும் இடத்தைக் கிழக்கு என்பான். நீ கூறிய கிழக்கையோ அவன் கூறிய மேற்கையோ, இன்னதிசை என்று உறுதியாய்க் கூற முடியுமா? முடியாது. எனவே, நீ கூறிய இல்வழக்கிற்கு உளதாம் உள் வழக்கு, இல்லை என்பது ஆகும் அல்லவா? ஆகவே, திசை என்பது ஒன்று தனியாக அறியப்படுதற்கு இல்லை.

உலகினைப் படைத்தான் என்றாய்; ஒருவன் இங்கு உள்ளது ஆயின்,
உலகினைப் படைக்க வேண்டா; இல்லையேல் படைக்க ஒண்ணாது;
உலகினுக்கு உபாதானம் தான் உள்ளதாய்க் காரியத்தாம்;
உலகினைப் படைக்கில் அங்கும் உளது இலது ஆவது உண்டோ? 84

தெளிவுரை:

உலகத்தைப் படைத்தான் ஒருவன் உண்டு என்றால், இவ்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வுலகம் முன்பு இருந்ததோ, இல்லையோ என்பதைக் கூற வேண்டும். இவ்வுலகம் முன்பு இருந்ததாயின், அதனைக் கூறவேண்டியதில்லை. இல்லை ஆயின் படைக்க முடியாது.

உலகம் காரண நிலையில் இருந்தது; அதைக் காரியப்படுத்துவதே படைப்பு ஆகும் என்றால், காரண நிலை என்பது அறிவுக்குப் புலப்படுமாறு இல்லை; எனவே காரணநிலை என்பது ஒன்று இல்லையென்றே கொள்ளவேண்டும்.

ஒரு பொருளுக்கு, காரணம் என்னும் தோன்றாத நிலையும் காரியம் என்கின்ற தோன்றும் நிலையும் உண்டு என்று கூறுதல், அப்பொருள் இலது என்றும் உளது என்றும் கூறுவதாக முடியும். உள்ளதும் இல்லதும் ஆகிய ஒரு பொருள் உலகத்தில் உண்டோ?

உள்ளது கடாதி போல உதிப்பித்தான் என்று உரைக்கின்
மெள்ளவே எங்கு நின்று விதித்தனன்? உலகின் மீது
வள்ளல்தான் நின்றான் என்னில், வந்ததாம் உலகம் முன்னே
தள்ளிடாது எங்கும் நிற்கில் எங்கு முன் தந்த தாமே? 85

தெளிவுரை:

மண்ணில் நின்று குடம் முதலியனவைகளைக் குயவன் உண்டாக்குவது போல, கடவுள் அதன் மூல காரணத்திலிருந்து படைத்தான் என்றால், அவன் எந்த இடத்தில் நின்று இந்த உலகத்தைப் படைத்தான்? உலகத்தில் நின்று அவன் படைத்தான் என்றால், அவன் படைப்பதற்கு முன்பே உலகம் உண்டு என்பது பெறப்படும்.

அவன் இந்த உலகத்தில் நில்லாமல் எங்கும் நிறைந்து நின்று படைத்தான் என்றால், 'எங்கும்' என்ற சொல் இடத்தைக் குறிக்கும்; அந்த இடம் முன்னரே ஏற்பட்டுப், பின்னரே கடவுள் தோன்றினான் என்பது பெறப்படும். அந்த இடம்தானே உண்மை என்றாற்போல, உலகமும் தானே உண்மை எனப்படும்.

இல்லது கருணையாலே இயற்றினன் இறைவன் என்னில்
கொல்லரி உழுவை நாகம் கூற்றமும் கொண்டு தோற்ற

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வல்லவன் கருணை என்னோ? வலியினால் வேண்டிற்று
எல்லாம்
பல்கவே படைத்தான் ஆயின், பித்தரைப் பணிந்திடாயே; 86

தெளிவுரை:

இல்லாத ஒன்றைக் கடவுள், கருணை காரணமாகப் படைத்தான் என்று கூறினால், பிற உயிரைக் கொல்லும் இயல்புடைய சிங்கம், புலி, நல்லபாம்பு, யமன் முதலானவற்றையெல்லாம் தோற்றும் வல்லமையுடையவனைக் கருணை உடையவன் என்று எப்படிக் கூறுவது?

கடவுள் எல்லா வல்லமையும் உடையவன் ஆகலின், எல்லா உயிர்களும் பல்கிப் பெருகி வாழவேண்டும் என்னும் நோக்கத்தில் படைத்தான் என்றால், அவன் அவ்வாறு செய்தது காரண காரியத் தொடர்பு இன்றிச் செய்யும் பித்துப் பிடித்தவன் செயல்போல் அல்லவா உள்ளது? எனவே, அத்தகைய பித்தனையே கடவுள் என்று வணங்குவாயாக.

பெறுவது இங்கு என் படைத்துப் பெற்றது? விளையாட்டு
என்னில்,
சிறுமழவு இறை அது ஆகும்; செய்திடும் கன்மத்து என்னின்,
உறுபெரும் கன்மம் செய்வோர் முன்பு உளர் ஆவர்; உண்மை
அறிவுறின் ஞாலம் எல்லாம் அநாதி என்று அறிந்திடாயே. 87

தெளிவுரை:

எல்லா உயிர்களையும் இந்த உலகத்தில் உன் கடவுள் படைத்துப் பெறும் பேறு என்ன? அஃது அவன் திருவிளையாடல் என்று கூறுவாய் ஆயின், உன் கடவுள் அறிவு குறைந்த சிறு பிள்ளையே ஆகவேண்டும்.

உயிர்கள் செய்த வினைக்கு ஈடாக, அவ்வாறு படைத்தான் என்றால், வினை செய்பவர் எப்போது செய்தார் என்ற தடை எழும். எனவே வினை செய்தவர் உலகம் தோன்றுதற்கு முன்பே உள்ளனர் என்பது போதரும். இந்த உண்மையை அறிவாய் ஆயின், இந்த உலகம் அநாதியே உள்ளது என்பதை அறிவாயாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உருவொடு நின்றான் என்னில், உருவம் முன் படைத்தார் வேண்டும்;
உரு அவன் இச்சை என்னில், உலகெலாம் இச்சை ஆகும்;
உரு உலகத்து உளோர்கட்கு உறுவது கன்மால் என்னில்
உரு உடையோர்கட்கு எல்லாம் உற்றது கன்மத்தாமே. 88

தெளிவுரை:

கடவுள் உரு உடையவர் என்றால், அந்த உருவை முன்பு படைத்தது யார்? அவன் விருப்பப்படி உருவம் கொண்டான் என்றால், உலகத்தில் உள்ளோர் அனைவரும், அவரவர் விருப்பப்படி உருவம் கொண்டனர் என்று ஏன் கூறுதல் கூடாது?

உலகத்தில் உள்ளவர்களுக்கு உருவம் வருவது, அவரவர் வினையே காரணம் என்று கூறினால், எல்லா உருவங்களுக்கும் வினையே காரணம் என் று கூறாமல் கடவுளுக்குக் காரணம் வேறு கூறுவது பொருந்தாது.

அரு எனில், பவத்தின் நின்றும் எடுத்திடான் ஆகாயம் போல்;
மருவினன் நிழல்போல் என்னின், மருவினோர்க்கு ஆகும் மாட்சி;
பெருகிய அறிவு உண்டு என்று பேசிடின், நேசத்தோடும்
கருதிட உருவம் வேண்டும் இல்லையேல் கருதல் இன்றே. 89

தெளிவுரை:

உன் கடவுள் அருவமாய் இருப்பவன் என்று கூறினால், வான் போல அவனுக்கு செயல் ஏதும் இல்லை என்பதாக முடியும். முடியவே, உயிர்களைப் பிறவிக் கடலிலிருந்து அவன் மீட்க மாட்டான்.

அவன் நிழல்போல் பயன்படுபவன் என்றால், நிழல் தன்னை அடைந்தார்க்கு இன்பம் தருவது போல, அவனைச் சென்று அடைந் தார்க்கு இன்பம் கொடுப்பான்; ஆக அவன் வியாபக முடையவ னல்லன் என்பதாக முடியும்.

அவன் பேரறிவு உடையவன் ஆகலின், எல்லாம் அறிபவன் என்றால், உயிர்க்கு உற்றதை அறிய, அவன் உருவம் உடையன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆதல் வேண்டும். அவனுக்கு உருவம் இல்லை ஆயின், அவனால் எதையும் அறியவும் முடியாது.

எங்கள் நூல் அநாதியாக இறைவன் உண்டு என்னும்
என்னின்,
உங்கள் நூல் உரைப்பார் இன்றி ஓதுவது, அழகு இது ஆகும்;
அங்கு அவன்தன்னை நூல்கொண்டு அறிந்தனம்;
அவனைக் கொண்டே
இங்கு நூல் அறிந்தோம் என்னின் ஈது ஓர் ஆச்சரியமாமே.90

தெளிவுரை:

எங்கள் நூல் ஆகிய வேதாகமங்கள் அநாதியே உள்ளன; அவற்றின் வாயிலாகக் கடவுள் உண்டு என்பதை அறிந்தோம் என்று சொல்வீர் ஆயின், உங்கள் நூலை எவரும் சொல்லவில்லை என்று கருதவேண்டிவரும். சொல்பவர் இல்லாமல், நூல் எப்படி உருவாகும்? இஃது அழகாயிருக்கிறது! உங்கள் நூலைச் சொன்னவன், உங்கள் கடவுள் என்றால், கடவுளை அறிந்தபிறகு, அவன் சொன்ன நூல் இஃது என்று அறிந்தீரா? அல்லது, அந்த நூலினைக் கொண்டு கடவுள் உண்டு என்பதை அறிந்தீரா? அவனை அறிந்த பிறகே, அவன் செய்த நூல் இஃது என அறிந்தோம் என்று நீர் கூறுவது, பெரிதும் வியப்பாய் இருக்கிறது. எனவே, கடவுள் உண்மைக்கு நூல் ஆதாரம் ஆகாது என்பது பெறப்படும்.

உற்று எழு மரங்கள் ஆதி உயிர் இன்றிப் பூத ரூபம்
பற்றி இப்பாரின் மீது பாங்கினால் பலவும் ஆகிப்
புற்றொடு மயிர் கொம்பு ஆதி போலவே தோன்றி மாயும்;
மற்றுள யோனிகட்குப் பயன் என வழங்கும் அன்றே. 91

தெளிவுரை:

பூமியில் வளரும் மரங்கள் முதல் புல் ஈறாக உள்ள தாவரங்கள், உயிரினம் அல்ல. மண் முதலான பூத வடிவைப் பெற்றுப் பல்வேறு வகைப்பட்டு, உடம்பில் வளரும் மயிர், நகம், கொம்பு போன்று, தோன்றி அழியும். இவை பூத வடிவங்களே அல்லாமல், உயிர் உள்ளன அல்ல. மற்ற உடல்களில் தோன்றும் பிறப்பு வகைகளுக்கு இவை பயன்படுகின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொன்றிடல் ஆகாது என்றும் கொன்றவை கொண்டு நாளும்
தின்றிடல் ஆகும்; மண்ணோடு ஒத்திடும் செத்த எல்லாம்
ஒன்றிய வாசம் ஊட்டி உண்ணுநீர் வைத்தவர்க்கோ
சென்று நின்று உண்டவர்க்கோ புண்ணியம் செப்பிடாயே; 92

தெளிவுரை:

ஓர் உயிரைத் தான் கொல்வது எப்போதும் கூடாது; அது பாவம். பிறன் ஒருவன் கொன்றதனை ஒருவன் தின்றால், தின்றவனுக்குப் பாவம் இல்லை. செத்தவை எல்லாம் மண்ணோடு ஒத்த இயல்பு உடையன. நறுமணம் உள்ள தண்ணீர்ப் பந்தர் வைத்தவனுக்குப் புண்ணியமா? அந்நீரைப் பருகினவனுக்குப் புண்ணியமா? அதனை வைத்தவனுக்கே புண்ணியம். அதுபோல் உயிரைக் கொன்றவனுக்கே பாவம்; அதனைத் தின்றவனுக்குப் பாவம் இல்லை.

ஓங்கிய உருவமோடும் வேதனை குறிப்பினோடும்
தாங்கு பாவனை விஞ்ஞானம் தாம்இவை ஐந்தும் கூடிப்
பாங்கினால் சந்தானத்தில் கெடுவது பந்த துக்கம்
ஆங்கு அவை பொன்றக் கேடாய் அழிவது முத்தி இன்பம். 93

தெளிவுரை:

உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் ஐந்து கந்தமும், காரியத் தொடர்ச்சியாய்க் கெட்டுத் தோன்றுவன. இவையே பிறப்புக்குக் காரணம் ஆகிய கட்டுக்களாகும். இவற்றால் துன்ப முண்டாகும். இவை ஒருங்கே கெட்டு ஒழிந்து போதலே வீட்டு இன்பம் ஆகும்.

அழித்திடும் அராகம் ஆதி அகற்றி, நல் அறங்கள் பூரித்து
இழித்திடும் புலன்கள் போக்கி இன்பொடு துன்பம் வாட்டிப்
பழித்திடாப் பழுதில் வாழ்க்கை எட்டையும் பாரித்து, எல்லாம்
ஒழித்திடு ஞான சீலம் சமாதியின் உறுதி ஆமே. 94

தெளிவுரை:

நன்மையைக் கெடுக்கும் காமம், வெகுளி முதலிய தீய குணங்களை நீக்கி, நல்வினை ஆகிய அறச் செயல்களை நிறையச் செய்து,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புலன்வழிச் சேறலைக் கைவிட்டு, இன்ப துன்ப உணர்ச்சிகளை ஒழித்து, குற்றமற்ற நல்வாழ்க்கைக்கு உரிய எண்பண்புகளைப் பயிலுதல் வேண்டும்.

எண் பண்புகள் ஆவன; நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல் உளத்தோர் தலைப்பாடு ஆகியன.

இப்பண்புகளுக்கு மாறானவற்றை எல்லாம் ஒழித்திடுகின்ற ஞான நிலையே உறுதியான சமாதி எனப்படும்.

சௌந்திராந்திகன் மத மறுதலை

அனைத்தினையும் உணர்ந்தான் எம் இறைவன் என்று இங்கு
அறியாது, புத்த நீ அறைந்தாய் என்றும்
அனைத்தினையும் அறிந்திடான்; அளவு இலாமை
ஒன்றுஒன்றா அனைத்தினையும் அறிந்தான் என்னின்
அனைத்தினையும் அளவுஇறந்தது என்ன வேண்டா;
அளவிலா ஞானத்தால் அறியின், ஞானம்
அனைத்தினையும் அறியாது, கணத்தில் தோன்றி
அழிதலால், அறிந்தமை இன்றாகும் அன்றே, 95

தெளிவுரை:

புத்தனே, 'எங்கள் கடவுள் எல்லாவற்றையும் அறிந்தவன், என்று நீ அறியாமல் கூறுகிறாய், எக்காலத்தும் உன் கடவுள் எல்லாவற்றையும் அறியமாட்டான். உலகம் அளவிட்டு அறியமுடியாதபடி பல வேறுபாடுகளை உடையதாக உள்ளது; எனவே, முழுவதையும் ஒவ்வொன்றாக அறிந்தான் என்று நீ கூறுவாய் ஆயின், அனைத்தையும் சுட்டறிவால் அறிவான் என்றே கூறவேண்டும்; அந்நிலையில் எல்லாவற்றையும் அளவு இறந்து (சுட்டி அறியாமல்) அறிந்தான் என்று கூறுவது பொருந்தாது.

எல்லை இல்லாத ஞானத்தால் உன் கடவுள் அறிந்தான் என்றால், உன்ஞானம் சுட்டி அறியும் இயல்பு உடையது; எனவே, அஃது எல்லாவற்றையும் ஏக காலத்தில் அறியாது. அஃது எவ்வாறு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்றால், ஒரு மாத்திரையில் அறிவு தோன்றிக் கெடும் என்று நீயே கூறியிருக்கிறாய்; எனவே உனது கடவுள் எல்லாவற்றையும் அறிந் தவன் என்று நீ கூறுவது பொருந்தாது.

சிலபொருளை உணர்ந்து அவற்றின் திறத்தே ஒட்டிச்
சிந்திப்பவன் எப்பொருளும் என்னில், சென்று
பல பொருளாய் ஒன்றுபல பேதம் ஆகிப்
பயின்று வரும்; ஆதலால் பார்க்குமாறு என்?
உலகுதனில் ஒருபொருள் அங்கு உணரும் போதில்
உற்று உணர்தல், ஆராய்தல், தெளிதல் உண்டாய்
நிலவும்; அதனால் உணர்வு பன்மை முன்பின்
நின்றிடாது என்பை எல்லாம் நினைப்பது எங்கே. 96

தெளிவுரை:

உன் தலைவன் உலகில் உள்ள சில பொருள்களை அறிந்து, அவற்றோடு ஒட்டிப் பல பொருள்களை அறிந்தான் என்று கூறினால் அஃது ஏற்குமாறு இல்லை. முரண்பாடுடைய பல்வேறு பொருள்கள் உலகில் காணப்படுவதாலும், அத்தகைய பொருள்கள் எண்ணற்றன வாக இருப்பதனாலும், சிலவற்றை வைத்துப் பலவற்றை அறிவது எப்படி இயலும்?

ஒரு பொருளை அறியும்போதே, அதனை உற்று நோக்கிச் சிந்தித்துத் தெளிய வேண்டியிருக்கிறது. ஆகவே அறிவு பல திறப் படும். பொருளின் ஒரு பகுதி தோன்றும் முன்பு, அதற்கு முந்திய பகுதி அழிந்துபோகும். எனவே, ஒரு பொருளை அறிந்த அறிவைக் கொண்டு, மற்றப் பொருளை அறிந்த அறிவோடு சேர்த்து வைத்து உணர்வதற்கு இடமில்லை.

முத்திநிலம் கண்டு அறங்கள் மொழிந்தான் ஆயின்,
முதல் முழுதும் பொன்றிப்பின் மொழிந்த வண்ணம்
ஒத்திடும்தேன் நெய் கூட்டி உண்டு இறந்தோன் ஒருவன்
உலகினில் வந்து, 'இதுதீது' என்று உரைத்தால்
ஒக்கும்;
செத்துப்பின் என்று உரைக்கின், கதியில் செல்லாத்
தேரன் உரை, நீர் பெருகிச் சென்றவாறு ஆகும்;
அத்தின் அளவு அறியாது, இக்கரையோர் தம்மை
அக்கரைக்கே செல்லவிடும் ஆசையாமே. — 97

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

வீடுபேற்று இயல்பினை அறிந்து, உன் கடவுள் அறநூலினைக் கூறினான் என்றால், அறிவு முழுவதும் கெட்ட பிறகு அல்லவா, முத்தி கைகூடும்? அறிவு கெட்டு முத்தியைப் பெற்றவன், பிறகு வந்து தோன்றி, அறநூலினை இயற்றினான் என்று நீ சொல்வது, தேன், நெய் இரண்டையும் சம அளவில் கூட்டி உண்டு இறந்த ஒருவன், மீண்டும் வந்து, அக்கலவை தீது என்று உரைத்தான் என்று கூறுவதற்கு இணை ஆகும்.

அற நூல்களை ஓதிய பிறகு உன் கடவுள் முத்தி பெற்றான் என்று நீ கூறினால், முத்தியின் இயல்பு இன்னது என்பதை அறியாமல் அந்த அறநூலைச் செய்தவன் ஆவான். அத்தகையவன் முத்திநூல் இயற்றினான் என்பது எப்படி இருக்கிறது தெரியுமா? ஆற்று வெள்ளத்தின் அளவு அறியாதான் ஒருவன், இக்கரையில் உள்ளவர்களை, அக்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பேன் என்று பெரும் ஆர்வத்தோடு கூறுவதைப்போல் இருக்கிறது.

நீர்போல நின்று உயிர்கட்கு அளித்திடாதே
நெருப்பாய் துயர்ப்பிறப்பில் நிகழ்ந்து நின்று,
பாரோர்கட்கு அளித்தபடி வலையில் பட்ட
பலகலைமான் கண்டு, ஒரு நீள் கலை பாய்ந்து ஓடி,
நேரே சென்று அவ்வலைக்கே நேர்ந்தால் ஒக்கும்;
நீள் பாவக் குழியில் விழும் நீர்மை ஆகும்;
ஆரோ இங்கு அவன் ஒப்பார்? அறத்தை ஆக்கப்
பிறந்து அறம் ஆக்கினன் என்னில், அடங்கவாமே. 98

தெளிவுரை:

இறைவன், நீரும் அதன் சுவையும்போல, எல்லா உயிர்களிடத்தும் நீக்கமற நிறைந்து நின்று, அருளைப் பொழிபவன் என்பதைக் கருதாமல், கொடிய வெப்பத்தின் தன்மையை உடைய துன்பப் பிறவியில் தோன்றி நின்று, உலகில் உள்ள உயிர்களுக்கு அருள் செய்வான் என்று கூறுவது எப்படி இருக்கிறது தெரியுமா?

வலையில் அகப்பட்ட பல கலைமான்களைக் கண்ட ஒரு கலைமான், வலையில் சிக்குண்ட மான்களை விடுவிக்க வேண்டி ஓடிச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சென்று, தானும் அந்த வலைக்குள் அகப்பட்டதைப் போன்று இருக்கிறது. கொடிய நரகத்திற்குள் செல்லும் வழி ஆகிய இதனை, உண்மையாகவே மக்களைக் காப்பாற்றும் வழி என்று சொல்கின்ற புத்தனைப் போன்றவர் எவரே உளர்! அறநூலினை உண்டாக்கும் பொருட்டுத் தான் பிறந்து, அதனை உண்டாக்கினான் என்று கூறினால், அனைத்து உயிர்களுமே அறநூலை உண்டாக்கும் பொருட்டுப் பிறந்தவர்களே ஆவர்.

அலகு இறந்த யோனிகளில் புகுந்த எல்லாம்
அறத்தை அளித்திட என்னில், அவற்றின் எல்லாம்
நிலவுவது கன்மத்தால் ஆகும் அன்றி,
நினைந்ததோர் இச்சையினால் நிகழ்ந்தான் ஆகில்,
உலகுதனில் உள்ளோர்க்கும் அதுவே ஆகும்;
ஒருத்தி வயிற்றினில் இருந்து, அங்கு உதரம் தள்ளித்,
தலம் அதில் வந்தான் என்னில், தாயைக் கொன்றான்,
தருமத்தை இன்று எனக்குச் சாற்றிடவே. 99

தெளிவுரை:

உன் கடவுள் பல யோனிகளின் வழியே பிறந்து உழன்றதெல்லாம், அறநூலை உண்டாக்கும் பொருட்டே ஆகும் என்று, புத்த, நீ கூறுவாயாகில் அது பொருந்தாது. எல்லா உயிர்களும் வினை காரணமாகவே, உலகில் பிறக்கின்றன. உன் கடவுள் வினை காரணமாகப் பிறக்கவில்லை. அவன் தான் கருதிய விருப்பு காரணமாகப் பிறந்தான் என்று நீ கூறினால் இந்த உலகத்தில் பிறந்தவர்கள் அனைவரும் அவரவர்கள் கருதியபடி விருப்பம் காரணமாகவே பிறந்திருக்கிறார்கள் என்று கூறவேண்டும். அஃது உண்மை இல்லை என்று எவரும் அறிவர்.

உன் கடவுள், தன் தாயின் வயிற்றிலிருந்து அந்த வயிற்றைப் பிளந்து பூவுலகில் வந்து அறநூலை உண்டாக்கினான் என்று நீ கூறுவாய் ஆயின், அவ்வாறு தன் தாயைக் கொன்று அறத்தை உண்டாக்கினான் என்பது பொருந்தாது. (புத்தர் பிறக்கும் பொழுது, தன் தாயின் வலப் பக்கத்து வயிற்றைப் பிளந்து பிறந்தார் என்று பிம்பசார நூல் கூறுகிறது). தாயைக் கொன்றவன் சொன்ன அறத்தை இது வரை எனக்கு யாரும் கூறியதில்லை. எனவே, அறத்தைக் கூறுவதற்கு உன் கடவுள் பிறந்தான் என்று நீ கூறுவது பொருந்தாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அரியினொடு நரி உழுவை ஆதியாக
ஆனபோது, அறம் திரிந்து கோறல் ஆதி
பரிவினொடும் செய்தனனாம்; இல்லையாகில்,
பசி தனக்குத் தின்பது பழுதையோதான்?
கருதில் அவன் பரதுக்க துக்கன் ஆகில்,
கணவன் இழந்தோர் கட்கும் கண்ணி குத்தித்
திரியும் அவன் துரியனுக்கும் இரங்குவோன்; தன்
செயல் அறத்துக்கு அழகியதாம், செப்பும் காலே. 100

தெளிவுரை:

ஆதி புத்தன் ஆகிய உன் கடவுள், அளவற்ற யோனிகளில் பிறந்தான் என்றும், அப்படிப் பிறந்து கொலை முதலிய பாவங்களை நீங்கி, அறத்தைக் காக்கும் பொருட்டே தோன்றினான் என்றும் கூறினாய். அவ்வாறாயின், சிங்கம், நரி, புலி முதலியன யோனி வழியாகப் பிறந்தபோது, கொலையை விரும்பிப் பல உயிர்களைக் கொன்று தின்றுதானே இருக்கவேண்டும்? உன் கடவுள் அப்படிக் கொன்று தின்றவன் அல்லன் என்று கூறுவாய் ஆயின், அவன் யோனி வழிப் பிறந்து திரிந்த காலத்தில், அவனுக்கு ஏற்பட்ட பசிக்கு அவன் தின்றது, வைக்கோலை என்றா கூறுகிறாய்?

மேலும், உன் கடவுள் பிறர் துன்பத்தைக் கண்டு வருந்துபவன் (பரதுக்க துக்கன்) என்று நீ சொல்வாய் ஆயின், கணவனை இழந்த பெண்கள் தவறான வழியில் நடந்து படும் துயரத்திற்கும், கண்ணி முதலிய கொலைக் கருவி கொண்டு கொலை புரிந்து அதனால் அவர்கள் படும் துன்பத்திற்கும் உன் கடவுள் கருணை காட்டுபவன் என்பதாக முடியும். அது நியதி தவறியதாகும். தீவினை செய்தவன் அதன் பயனாகிய துன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்னும் நியதி அறியாமல், உன் கடவுளின் கருணைச் செயல் மிகவும் அழகாக இருக்கிறது! இத்தகைய கருணையை என்ன என்று சொல்வது!! இஃது எப்படி அறம் ஆகும்?

ஒருபொருளைத் தேடி, அதற்கு உரையும்தேடி
உரைப்பதன்முன் உணர்வு இறக்கும் உனக்கு
நூல்என்!
மருவி வரும் சந்தான வழியில் என்னின்,
வாய் உரைத்ததே உரைத்து வழங்கும் ஆகும்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெருகுவது கெட்டு என்னில், அதுபோலாம், பின்
பித்து உரைத்தது அறியாது பேதை சொல்லும்
தருவது நூல் எப்பரிசு முதல் நடுவோடு இறுதி
தான் விருத்தம் இன்றி, அது சாற்றிடாயே. 101

தெளிவுரை:

ஒரு பொருளை ஆராய்ந்து அறிந்து, அப்பொருள் குறிக்கும் சொல்லைத் தேடித் தெரிந்து, அந்த சொற்பொருளை விளக்கிக் கூறுவதற்கு முன்பு, முன் கணத்தில் இருந்த அறிவு கெட்டுவிடும் ஆதலின், நீ எவ்வாறு ஒரு நூலை இயற்றமுடியும்?

முன்பு அறிந்த அறிவின் தொடர்ச்சியே, பின்பு ஏற்படும் அறிவு என்று கூறுவாயாயின், முன் சொன்ன சொல்லையே பின்பும் சொல்ல வேண்டிவரும். முன்பு அறிந்த அறிவு கெட்டுப் பின்பு தோன்றும் அறிவு சிறந்த அறிவு ஆகும் என்றால், அதுவும் ஒரு கணத்தில் கெட்டு ஒழிதலால் முன் அறிவினும் பின் அறிவு சிறந்தது என்பதற்கு ஆதாரம் யாது?

எனவே, இஃது எப்படி இருக்கிறது என்றால், பித்தர் சொன்னதை அறியாமல் பேதை ஒருவர் சொன்னது ஒன்றை, நூல் என்று கூறியதுபோல் உள்ளது; என்னே உன் நூலின் சிறப்பு? நூல் என்றால், முதல், நடு, இறுதி ஆகிய மூன்று நிலைகளிலும் முரண்படாதவாறு அமையவேண்டும். முதலில் உண்டான அறிவு, நடுவில் ஒன்று கூறுமுன் அழிந்துவிடும்; இறுதிப் பகுதியைக் கூறுவதற்கு முன்பு, நடுவில் உண்டான அறிவு அழிந்துவிடும். ஆக, மாறுபாடு இல்லாத முன்னுக்குப் பின் முரண்படாத நூல், உன் கொள்கைப்படி எப்படி அமைதல் கூடும்? அதைச் சொல் பார்ப்போம்.

முன்னாகப் பல அறங்கள் பூரித்து எம் இறைவன்
முழுதுணர்ந்து இங்கு அருளினால், உயிர்கள் முத்தி அடையப்
பின்னாகப் பிடகநூல் உரைத்தான் என்று
பேசினாய்; இவன் முன்பு பேரறங்கள் புரிநூல்
சொன்னார் ஆர்? இவனைப்போல் முன் ஒருவன் என்னில்,
அவனுக்குச் சொன்னார் ஆர்? எனத் தொடர்ச்சி ஆகி
அன்னாய் பின் அனவத்தைப் படும் ஒருவன் இன்றாம்;
ஆரோ உன்பாழி இருப்பார்? இதனை அறையே. 102

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

உன் கடவுள் முன்பே பல அறங்களைச் செய்து மகிழ்ந்து, முழுதும் உணர்ந்து, உயிர்கள்மீது உள்ள கருணையினாலே அவை வீட்டின்பம் அடைதற்பொருட்டு, பின்பு பிடக நூலைச் செய்தான் என்று நீ சொன்னாய்.

பிடக நூலை உன் கடவுள் இயற்றுவதற்கு முன்பு, மேற்படி அறங்களைச் செய்வதற்கு அவனுக்கு முன்பு நூல் சொன்னவர் யார்? அந்த அறங்களை முன் ஒருவன் கூறினான் என்றால், அவற்றைக் கூறியவனுக்கு அவற்றை ஓதியவன் யார்? இவ்வாறாகக் கேள்வி மேல் கேள்வி வரம்பு இன்றி ஓடிப் பின் கேள்விக்குப் பதில் இல்லாமல் முட்டுப்படும்.

ஆதலின் முடிவு காண முடியாத ஒருவன் உன் மதத்தில் இல்லை என்பது பெறப்படும். மேலும் உன் பள்ளியில் (கோயில்) நீ கடவுள் என்று வழிபடத் தக்கவன் என்று இருப்பவன் யார்? அதனை எமக்குக் கூறுவாயாக. அநவத்தை – முடிவு காண முடியாதது. அன்னாய் – அசை, பாழி – பள்ளி.

இந்நூலைச் சொன்னவன்தான் இங்கு இருந்தான் என்னில்
இவன் இருத்தி ஏத்தும் அவன் எங்கு இருந்தான்;
எவனோ
அந்நூலோ, குருவந்த அடைவும் உனக்கு இல்லை;
அடைவுதரின் முடிவின்கண் அநாதி போதன்
சொன்னானாம்; அவை வேதாகமங்கள் ஆகும்;
சுருக்கி ஊண் தவம் புரியச் சொல்லுவது எல்லோரும்
உன்நூல்கண் கழுவாதே உதிப்பதன்முன் புலாலோடு
உண்பான் ஓர் ஊன்பிரியன் உரைத்தது ஒருநூலே. 103

தெளிவுரை:

இந்தப் பிடகநூலைச் சொன்ன புத்தாசிரியன் இப்பள்ளியில் இருந்தான் என்றால், இவனால் அமர்த்தப்பட்டுப் போற்றப்பட்ட இவனது ஆசிரியன் எங்கே இருந்தான்? அந்த ஆசிரியன் யாவன்? நீ கடவுள் என்று கூறுவது யாரை? உன் புத்தக் கடவுளுக்குக் கடவுள் எவன்? அவனால் செய்யப்பட்ட நூல் எங்கே? இவ் வினாக்களுக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கெல்லாம் விடை உன்னிடம் இல்லை. எனவே, குருமரபு என்பதும் உனக்கு இல்லை.

நூல் வந்த முறையைச் சொல்லப் புகுந்தால், பேருழிக் காலத்திலும் அழிவில்லாத பரமேச்சுவரன் சொன்னதுதான் முதல் நூல் ஆகும். அவை வேதாகமங்கள் எனப்படும். இவ்வேதாகமங்களைக் கற்றவர்கள் அனைவரும் உணவைச் சுருக்கி, தவத்தை மேற்கொள்ளு தலையே கூறுகிறார்கள். ஆனால், உன் பிடகநூல் சூரியன் உதிப்பதற்கு முன்பு, கண்களைக் கூட கழுவாமல் புலால் உணவு உண்ணும் போசனப் பிரியன் ஒருவனால் சொல்லப்பட்ட நூல் ஆகும்.

முன்நூலும் வழிநூலும் சார்பு நூலும்
　　மூன்றுஆகும், உலகத்து மொழிந்த நூல்கள்;
இந்நூலில் உன்நூல் இங்கு எந்நூல் என்னில்,
　　இந்நூல் காண் என்நூல் என்று இயம்பமாட்டாய்;
உன்நூலும் ஒருநூலாய் உரைப்பது என்னே?
　　உலண்டுநூல், பருத்திநூல், சிலம்பிநூல்கள்
அந்நூலும் அல்லாதே, பொய்ந்நூல் கொண்டு இங்கு
　　அறம் நோற்றுத் திரிந்தவாறு, அழகுஇது ஆமே. 104

தெளிவுரை:

இவ்வுலகில் வழங்கும் நூல்கள், முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என்று மூன்று வகைப்படும். இம்மூன்று வகை நூல்களுள், உன் பிடக நூல் எந்த வகையைச் சேர்ந்தது என்று கேட்டால், என்நூல் இந்த வகையைச் சேர்ந்த நூல் என்று நீயும் கூறமாட்டாய். எனவே, உன் பிடக நூலை ஒரு நூல் என்று எப்படிக் கூறமுடியும்?

பட்டு நூல், பருத்தி நூல், சிலந்திப் பூச்சியினால் செய்யப்பட்ட நூல், என்று சொல்லப்பட்ட எந்தவகை நூலிலும் வைத்துப் பேசுவதற்குத் தகுதியற்ற ஒரு பொய்யான நூலைக் கொண்டு, இங்கே வந்து, என் நூல் அறத்தை உண்டாக்கிய நூல் என்று பேசித் திரிகிறாயே. இது மிகவும் அழகாய் இருக்கிறது!

புத்தன் அவன் பொன்றக் கெட்டுப் போனான் என்று
　　போற்றுவது இங்கு ஆரை நீ? பொய்த்தவம் செய்புத்தா,
செத்தவர்க்குச் சில கிரியை செய்ய இங்குச்
　　செய்தவர்க்கும் புண்ணியமாம் என்று செப்பின்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நித்தம் உயிர் ஆதலால் பலிக்கும் செய்தி
நினைந்து தருவானும் உளன்; உனக்கு இவ்வாறு
இல்லை;
வைத்த சுடர்த்தீபம் அற மாய்ந்தக்கால், அதற்கு
மருவுதிரி நெய்கூட்டு மதிகேடுஉன் வழக்கே. 105

தெளிவுரை:

பொய்த் தவத்தைச் செய்யும் புத்தனே, உன் ஆசிரியன் முத்தி அடைந்தபோதே கெட்டு ஒழிந்தான் என்று சொல்கிறாய்; அவ்வாறாயின், இப்பொழுது 'புத்தன் ஆகிய தெய்வம்' என்று நீ கருதி வழிபடுவது யாரை?

இறந்தவர்க்கு நாட்கடன் முதலியன செய்தல், இருந்தவர்க்குப் புண்ணியம் ஆகும் என்று நீ கூறினால், உயிர் நித்தப் பொருள் என்பது பெறப்படும். எனவே, இறந்த உயிரைக் கருதிச் செய்யும் கிரியைக்குப் பயன் கொடுக்கும் கருத்தா ஒருவன் உளன் என்பதும் பெறப்படும்.

இவையெல்லாம் உன் கொள்கை அல்ல ஆகலின், இவை உனக்குப் பொருந்தா, உன் வழக்கே தனி. அஃது எப்படிப்பட்டது என்றால், அணைந்துபோன விளக்கிற்கு நெய்யும் திரியும் இடுவது போன்று, கெட்டுப்போன உன் ஆசிரியனுக்கு நீ செய்யும் வழிபாடும் அப்படிப்பட்டதே ஆகும்.

நூல் உரைத்தான் ஒருவன் உளன் என்று அனுமானத்தால்
நூல் கொண்டு இங்கு அறிந்தால்போல் நூலா,
நூலின்
பால் உரைத்த பொருள்கள் எல்லாம் அனுமானம் என்னில்,
பரலோக பாதாள லோகங்கள் ஒரு சொல்லால்
உரைத்த நூல் இன்றி அறையாய் இன்றேல்,
அவை அறிந்தபடி என்? உனது அனுமானம் அன்றே
மேல் உரைக்கும் பிரமாணம் உனக்கு இல்லை; காட்சி
அனுமானம் விட்டபொருள் விளக்குவது ஆகமமே. 106

தெளிவுரை:

நூலைச் சொன்னவன் ஒருவன் உண்டு என்று, நூலைக் கொண்டு ஊகித்து அறிந்தது போலச், சிறந்த நூலின் பகுதியில் சொன்ன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருள்களையெல்லாம் அறிவது அனுமானம் என்று புத்தனே நீ கூறுகிறாய். அவ்வாறாயின், பூவுலகிற்கு மேலான உலகங்களின் செய்தியும், கீழான உலகங்களின் செய்தியும், நூல்கொண்டு தாமே அறிய வேண்டும்? அவை அனுமானத்தால் அறியக்கூடியனவா? இல்லையே.

எனவே, காட்சி அளவையாலும், கருதல் அளவையாலும் அறியாத பொருளை உரை அளவையாலேயே அறியமுடியும் என்பது தெறிவு. நீயோ நூற் பிரமாணத்தை ஏற்காதவன். இந்நிலையில் நீ முன்பு சொன்ன பிடக நூற்பிரமாணம் மட்டும் எப்படிப் பொருந்தும்? பொருந்தாதன்றோ? எனவே உரை அளவை வேண்டாத உனக்கு, உன் சமய நூலே பிரமாணம் என்று நீ கூறுவதும் உண்மை இல்லை என்பது பெறப்படும்.

எப்பொருளும் அநித்தம் என இயம்பிடுவை; அநித்தம்
இல்லதற்கோ? உள்ளதற்கோ? உளதுஇலது
ஆனதற்கோ?
செப்பிடின் இல்லதற்கு இல்லது என்றும் இல்லை;
சென்று அடைவது உள்ளதற்கேல் உள்ளது என்றும்
உண்டாம்;
அப்படித்தான் உளதுஇலது ஆம் அப்பொருளுக்கு என்னின்,
உளது இலதாகாது; இலதும் உள்ளதாகாது;
இப்பொருளுக்கு அநித்தம்இலை என்று ஒன்றைக் காட்டாய்;
எனில், தோன்றும் பொருள், நின்று இங்கு
இறுதியாமே. 107

தெளிவுரை:

எந்த ஒரு பொருளும் அழிந்துவிடக் கூடியதே என்று புத்தனே நீ கூறினாய். அழியக்கூடிய பொருள் என்று நீ கூறியது இருக்கிற பொருளையா? இல்லாத பொருளையா? அல்லது இருப்பதும் இல்லாததும் ஆகிய பொருளையா?

''அழிவது என்பது இல்லாத பொருளுக்கு'' என்று நீ கூறுவாய் ஆயின், இல்லாத பொருள் என்றும் இல்லையே ஆகும். எனவே இல்லாத பொருள் உண்டாவது இல்லை.

''அழிவது என்பது இருக்கின்ற பொருளுக்கு'' என்று நீ கூறுவா

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

யாயின், இருக்கின்ற பொருள் இல்லை ஆவது இல்லை; எனவே, உள் பொருள் அழிவதில்லை.

''அழிவது என்பது இருப்பதும் இல்லாததும் ஆகிய பொருளுக்கு'' என்று நீ கூறுவாய் ஆயின், அதுவும் பொருந்தாது. உள்ளது என்றும் இல்லையாகாது; இல்லது என்றும் உண்டாகாது. எனவே எப்பொருளும் சூனியமாய் அழிவதன்று.

தோன்றியுள்ள பொருள்களில், இந்தப் பொருள் அநித்தம் இல்லாத நித்தம் என்றும் நிலையானது என்றும் ஒன்றைக் காட்டாய் என்று கூறுவாய் ஆயின், அதற்கான விளக்கத்தைக் கீழ்க்காணுமாறு கூறுகிறோம்:–

தூல உடல் தோன்றி நின்று கெடும் என்பது உண்மையே ஆயினும், சூக்கும உடலுக்கு அநித்தம் இல்லை என்பது பெறப்படும். ('அநித்தம் இல்லை' என்பது முத்திவரை உயிரோடு எப்போதும் இருக்கும் என்பதைக் குறிக்கும். இன்னும் உடல்களுக்கு முதற் காரணமாகிய மாயைக்கு என்றும் அழிவில்லை என்பதும் இங்குச் சிந்திக்கத் தக்கது.)

அங்குரம், வித்தின் கேட்டில் தோன்றும் அதுபோல
அனைத்து உருவும் கெட்டு வழியாகும் என்னின்,
அங்கு அவற்றுக்கு ஆக்கக்கேடு அறைந்தாய்; எல்லாம்
அநித்தம் எனும் உரை மறந்தாய்; அருகனும் ஆனாய் நீ
இங்கு முளை இலை மரமாய் எழுந்து ஈண்டிச் செல்லாது
இறந்ததே எழுந்தபடி நில்லாது என்னின்,
மங்கியிடாதே பால தருண விருத்தையாய்
வரும்வடிவு திரிந்து நின்று மாயும்காணே. 108

தெளிவுரை:

வயலில் விதைத்த வித்து கெட்டு, முளை தோன்றுகிறது. அதுபோல எல்லா வடிவங்களும் கெட்டுப் பின்பு, அவ்வழியே தோன்றும் என்று, புத்தனே நீ கூறுவாய் ஆயின்,

எல்லாப் பொருளும் அழியக்கூடியவை என்று நீ முன்பு சொன்னதை மறந்து, உருவங்களுக்கு ஆக்கக்கேடு கூறுகின்றாய்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒரு பொருளுக்கு ஆக்கக்கேடு கூறுவது சமணமதக் கொள்கை. எனவே புத்தனே நீ, சமண் கொள்கையினைப் பேசு கிறாயே அன்றிப் புத்தமதக் கொள்கையைக் கூறவில்லை.

முளையானது, இலையும் மரமுமாய் வளர்ந்த பிறகு, வளர்ந்த வாறே நில்லாமல், வளர்ச்சி குன்றிக் கெடுவது ஏன் என்று நீ கேட்பாய் ஆயின், தோன்றிய உருவும் கெடாமல் நின்று, பிள்ளைப் பருவம், இளமைப்பருவம், முதுமைப்பருவம் என்னும் பல்வேறு நிலைகளில் நின்று, தேய்ந்து கெடுவது அதன் காரியப்பட்ட பகுதியே ஆகும்; அதன் காரண நிலையில் அது பாழ் ஆவது இல்லை என்பதை அறிவாயாக.

(காரிய நிலையில் ஒரு பொருள் கெட்டு ஒழிந்தாலும் காரண நிலையில் அஃது அழிவதில்லை என்பதே சற்காரிய வாதம் ஆகும்).

உடல் பூதம் எனில், ஒன்றுக்கு ஒன்று பகை; ஒன்றா;
உதிர சுக்கிலம் என்னின், மரத்தின் உளு, கல்லின்
இடமாகத் தவளை உருவந்தவாறு இயம்பாய்;
இருவினை காண் எனில்; வினைகள் இரண்டு
உருவாய் நிற்கும்;
திடமாக வன்னம் உருஎனில், உண்ண உண்ணச்
சென்று வளரும் காயம் தேயும் உணர்வு என்னின்,
மடவோனே, அருஉணர்வு இங்கு அசேதனமாய், உருவாய்
வளராது வரும் இல்லாது எனின், மலர்வான்
வருமே. 109

தெளிவுரை:

புத்தனே, உடலானது பூதக் கூட்டுறவால் ஆகிய உருவம் என்று நீ கூறுவாய் ஆயின், பூதங்கள் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட குணம் உடைமையால், அவை தாமே தம்மில் கூடி உருக்கள் ஆக மாட்டா.

சுக்கிலமும் சுரோணிதமும் கூடிக் கலந்ததால் உடல் உண்டா யிற்று என்று நீ கூறுவாய் ஆயின், மரத்திலிருந்து தோன்றும் புழுவும் (உளு), கல்லின் இடமாகத் தோன்றும் தவளையும், மக்கள் உடம்பு போலத் தோன்றியன என்றா நீ கூறுகிறாய்?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நல்வினை தீவினைகள்தாம் உடலாக வந்தன என்று நீ கூறுவாய் ஆயின், இரண்டு வினைகளும் தாமே கூடி ஓர் உருவாய்த் திரண்டு வரவேண்டும்; அது நடைபெறாது. எனவே, வினைகள் கூடி உடல் உண்டாகவில்லை என்பது பெறப்படும்.

நிச்சயமாக அன்னசாரமே உடலாக வந்தது என்று நீ கூறுவதும் பொருந்தாது. அவ்வாறாயின், வயது காலத்தில் அன்னத்தை உண்டாலும், உடம்பு வளராமல் தேய்ந்து போவதற்கு என்ன காரணம்? எனவே, உடல் உண்டாவதற்கு அன்னசாரமும் காரணமன்று.

அறியாதவனே, அருவமாய் இருக்கும் அறிவு அசேதனம்; எனவே, அறிவும் தானே உடம்பாய் உருப்பெற்றது என்று நீ கருதுவதும் பொருந்தாது, (அசேதனம் – சடம்).

உடம்பு என்பது புதிதாக உண்டாகும் என்று நீ எண்ணினால் அதுவும் பொருந்தாது; இல்லை ஆயது இல்லையே ஆகும்; இல்லாதது ஒன்று உளது ஆகாது. எனவே, நீ கூறிய இஃது ஆகாயப் பூவைப் போல பொய்யே ஆகும்.

என்றும் இலாது ஒன்று இன்றாய் வரும் உருவம் வித்தின்
எழுமரம் போல் எனின், வித்தின் உண்டாய் நின்று
எழும்காண்;
நின்றதேல் வித்தின் மரம் கண்டது இல்லை என்னின்,
நெல் கமுகாய் நீளாது; நெல்லாயே நீளும்
ஒன்றில் ஒன்று அங்கு இலாமையினால் உதியா காரணம்
பெற்று
உதிப்பது காரியம்; அதுவும் உள்ளது ஆகும்;
மன்றமதிக் கலைபோலக் கந்தம் ஐந்தும்
மருவி உளது எனும் உரையும் மறந்தனையோ,
இன்றே. 110

தெளிவுரை:

இல்லாததிலிருந்து உள்ளது எப்படி உண்டாகும் என்று கேட்டால், முன்பு இல்லாத மரம் வித்திலிருந்து வருவது போல் என்று அறிவாயாக, அஃதாவது வித்தில் நுட்பமாக அடங்கி நின்று வெளிப்பட்டுத் தோன்றுகிறதே அன்றி, வித்தில் இல்லாதது புதிதாக உண்டாகவில்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வித்தில் மரம் காணப்படவில்லையே என்று கேட்டால், அதற்கு விளக்கம் வருமாறு: நெல்லின் வித்திலிருந்து நெல் உண்டாவது அன்றி கமுகு உண்டாவது இல்லை. எனவே, நெல்லின் காரண வடிவு, அதன் வித்தில் கிடக்கிறது என்பது தெளிவு. ஒரு மரத்தின் வித்தில் மற்றொரு மரம் உண்டாகாது. ஆகலின், இல்லாதது உண்டாகாது என்பது பெறப்படும். தோன்றுவது காரியம், அடங்கி உள்ளது காரணம்.

மதியும் கலையும்போலக் கந்தம் ஐந்தும் கூடி உருவம் தோன்றும் என்று நீ அன்று சொன்னதை, இன்று மறந்து விட்டாயோ? அதற்கு மாறாக, வெறுமையிலிருந்து உருவம் தோன்றும் என்று நீ கூறுவது எப்படிப் பொருந்தும்?

உருவம் எலாம் பூதஉபாதாய சுத்தஅட்டக
உருவம் என்னின், உலவத்துக்கு
மருவும் அனலோடு, நீர், மண், கந்தம், இரதம்
வன்னம் இலை, வன்னிக்கு வளி, நீர், மண், வாசம்
தரும் இரதம் இலை; நீர்க்குத் தழல், கால், மண், கந்தம்
தான் இல்லை; தலத்தினுக்குச் சலம், அனல், கால்கூடி
வருவது இலை; இந்திரிய விடயமான
மாபூதங்களும் அறியாய், மதிகெட்டாயே. 111

தெளிவுரை:

புத்தனே, உருவங்கள் அனைத்தும் பூதம் நான்கும் உபாதாயம் நான்கும் கூடிய எட்டாக வருவன என்று நீ கூறுவாய் ஆயின், அவை எட்டும் ஒன்றோடு ஒன்று கூடமாட்டா. அஃது எவ்வாறு என்றால், காற்றில் அனல், நீர், மண் என்னும் பூதங்களும், நிறம், சுவை, மணம் என்னும் உபாதாயங்களும் பொருந்துவது இல்லை.

அனலோடு காற்று, நீர், மண் என்னும் பூதங்களும், ஊறு, சுவை, மணம் என்னும் உபாதாயங்களும் கூடமாட்டா. நீரில் நெருப்பு, காற்று, மண் என்பனவும் இவற்றின் குணங்களும் கூடுதல் இல்லை. நிலத்தோடு நீர், தீ, காற்று என்பனவும் அவற்றின் குணங்களும் பொருந்துதல் இல்லை. மேற்கூறிய பூதங்களும் அவற்றின் குணங்களும் இந்திரிய விடயங்கள் என்பதைக்கூட, புத்தி இல்லாதவனே நீ அறியாமல் இருக்கிறாய்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மருந்து எண்ணெய்தனில் மருந்து நின்றாற் போல,
மறைந்து எட்டும் சூக்குமமாய் மருவும் என்னில்,
திருத்தும் அவன் மருந்து எண்ணெய் சேர்ந்தாற் போலச்
சேர்ப்பவன் வேறு உண்டு; எல்லா உருவும் எட்டும்
பொருந்தியதேல், ஒருதன்மையாம் பொருள்கள்; ஒன்றின்
குணம் ஒன்றில் புகாது; அறைகை பொருள்
அறியாய் பூத
உருப்பொருள் வேறு; உபாதாயப்பொருள் வேறு காட்டாய்
உபாதாயம் பூதகுணம் குணகுணியாம் உலகே. 112

தெளிவுரை:

மருந்து எண்ணெயில், மருந்து கரைந்து நுட்பமாய்க் கலந்து இருப்பது போல, மேற்கூறிய எட்டும் மறைந்து நுட்பமாய்க் கலந்து இருக்கும் என்று, புத்தனே நீ கூறுவாய் ஆயின், மருந்தையும் எண்ணெயையும் சேர்க்கின்ற முறையில் சேர்க்கும் மருத்துவன் ஒருவன் வேண்டும்; அதுபோல, நீ கூறிய எட்டினையும் சேர்ப்பதற்கு ஒரு கருத்தா வேண்டும் என்பது தெளிவு.

எல்லா உருவத்தையும் இந்த எட்டுமே உண்டாக்குகின்றன என்று நீ கூறினால், அப்பொருள்கள் அனைத்தும் ஒரு தன்மைப்பட வேண்டும், அவ்வுருக்களின் குணங்களில் ஒன்றின் குணம் மற்றொன்றில் பொருந்தாது. எனவே, பூத உருவையும் உபாதாய உருவையும் தனித்தனியாக உன்னால் காட்ட முடியுமா? முடியாது. உபாதாயம் என்பது பூதத்தின் குணம். குணம் ஆனது குணியோடு பிரிப்பின்றி இருப்பது. அது குணியின் வேறாய்த் தனித்து இருப்பதை எங்கும் கண்டதில்லை.

அழிந்து உணர்வை உணர்வு தரும் எனின், அழிந்தது
ஆக்காது
ஆம்; உணர்வில் பொருள் வினைகள் அணையா
வாகும்
அழிந்திடுவது ஆக்கி எனின், முன் ஒரு காலத்தே
அறிவு இரண்டு நில்லாது அங்கு அறக்கேடு இன்றி
அழிந்து உணர்வை உணர்வு தரும் எனின், நித்தா நித்தம்
அடையும் உணர்வுக்கு அநித்தமாயே செல்லாது;
அழிந்து எருவை ஆக்குவதுபோல், ஆக்கும் என்னில்,
ஆம் பொருள்வேறு, அழிந்து சத்தி கிடந்து ஆக்கும்
அவையே. 113

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

தோன்றி அறிவு கெட்டுப் பின் ஒரு புதிய அறிவைத் தோற்றுவிக்கும் என்று, புத்தனே நீ கூறுவாய் ஆயின், அழிந்துபோன அறிவு இல்பொருள் ஆயினபின் புதியதோர் அறிவை அஃது எவ்வாறு உண்டாக்கும்? எனவே, அழிந்த அறிவு பின்னர் தோன்றாது.

முன்னை அறிவு பின்னை அறிவை உண்டாக்கிக் கெடும் என்று கூறுவாய் ஆயின், அதுவும் பொருந்தாது. ஒரு காலத்து அறிவு அழிந்து போனதும், அவ்வறிவினால் அறிந்த பொருளும் அது கொண்டு செய்த செய்கையும் புதியதாய் வரும் அறிவில் எவ்வாறு கூடும்?

அழியும் அறிவு, பின் அறிவை உண்டாக்கிய பின்பு அழியும் என்று கூறினால், முன் அறிவும் பின் அறிவும் ஒரு கணத்தில் நிலைபெறும் என்பதாக முடியும், இரண்டு அறிவு ஒரு கணத்தில் நிலைபெறமாட்டா. நிலைபெறுவது ஓரறிவே என்பது தெளிவு.

வயலில் உரமாக இட்ட எருவும் வைக்கோலும் கெட்டுப் பயிரை உண்டாக்குவதுபோல, அழியும் அறிவு புதிய அறிவை உண்டாக்கும் என்றால், எருவும் வைக்கோலும் தமது காரிய உருவை இழக்கின்றனவே அன்றித் தமது ஆற்றல் கெடப்பெறவில்லை. எனவே, நீ கூறுமாறு, அவை அழியவில்லை. ஆகவே அநித்தம் ஆகா, (அறவே அழிந்து விடவில்லை). அறிவு கெட்டாலும், அதன் தொடர்ச்சி கெடுதல் இல்லாது இருப்ப, அத்தொடர்ச்சியால் புதிய அறிவு உண்டாகும் என்றால், அத்தொடர்ச்சியே அழிவில்லாததாகும்.

கேடு இலாச் சந்தானத்தே பலிக்கும் என்று
        கிளக்கும் நீ, சந்தானம் நித்தம் ஆகும்
ஓடு நீர் போல் அழிந்தாம் உணர்வு ஒழுக்கம் என்னில்,
        ஒழுகுநீர் இட்டது எல்லாம் உடன் கழிதல் போலத்
தேடுபொருள் சீலம்பாவனை குறி விஞ்ஞானம்
        சென்ற உணர்வோடு ஏகும் நின்றுணர்வின் ஏயா
நீடு நீர் முன் ஒழுகிக் கெடாது நிறைந்து ஓடும்
        நிகழ் உணர்வும் கேடுஇன்றி நிறைந்து செல்லும்
                காணே. 114

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

நிலையான ஞானத்தை உடைய தொடர்ச்சியினாலே உணர்வு தோன்றும் என்று, புத்தனே நீ கூறினாய், அவ்வாறாயின், அப்படிப் பெறப்படும் ஞானமும் நித்தமும் ஆக வேண்டும்.

ஆற்றில் ஓடும் நீர், முன் சென்றது வற்றிப்போக, பின் வரும் நீர், முன் சென்ற நீரைத் தொடரமாட்டாது. அதுபோல முன்னை அறிவு கெடப், பின்னை உண்டான அறிவு, சிறந்த அறிவு, ஆகும் என்று நீ கூறுகிறாய். அவ்வாறாயின், ஓடுகின்ற நீரில் உண்டானவை அனைத்தும் அந்நீரோடு சென்று விடுவதால், பின்னர்ச் செல்லும் நீர் அவற்றைக் கூடமாட்டா.

அதுபோல, முந்தை அறிவால் தேடும் சீலம், பாவனை; குறி, சிறப்புணர்ச்சி முதலியவெல்லாம், முன்னை அறிவோடு கெடும் ஆகலின், பின்னை உண்டாகும் அறிவில் கூடமாட்டா.

இடைவிடாமல் ஓடுகின்ற நீரின் முன் ஒழுகிய தன்மை கெடாமல், நிறைந்து ஓடியவாறு போல, அறிவு இடையறாமல் தோன்றும் என்று நீ கூறுவாய் ஆயின், அப்படி உண்டாகும் அறிவு நித்தியமே ஆகும்; அநித்தியம் அன்று. எனவே, முன் உள்ள அறிவு தொடர்ந்து நிகழ வேண்டும் என்பது பெறப்படும்.

சந்தானம் காரணமோ? காரியமோ? இரண்டின்
தன்மையதோ? காரணமும் காரியமும் நித்தம்;
வந்து ஆரும் சந்தானத் தொடர்ச்சி எனின், அதற்கும்
வருநித்தம் தோற்றக்கேடு அடைதலின் மற்று ஒன்றேல்,
ஐந்தான கந்தங்கள் அன்றாய் நித்தம்
அடைபொருளாம்; அறிவும் அறிவு அடைவும் இன்றிச்
சித்தாமுன், பின்னாகிப் பின்முன் ஆகித்
திரிந்துவரும்; திரிவு அறிந்து தேராதேரே. 115

தெளிவுரை:

நீ கூறும் தொடர்ச்சி என்பது காரணமாய் இருப்பதா? காரியமாய் இருப்பதா? காரணகாரியமாய் இருப்பதா? அது காரணமாயிருப்பது என்றால், என்றும் காரணப்பட்டு வருவதால், நித்தப்பொருளே ஆகும். அது காரியமாயிருப்பது என்றாலும் நித்தப்பொருளே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காரியப் பொருள் எல்லாம், காரியப்படாத நிலையில் காரண மாய் நிற்பனவே ஆகலான், காரண காரியமாயிருப்பது அது என்று நீ கூறினாலும், அது நித்தம் என்பதற்கு இழுக்கு இல்லை.

முன் அறிவையும் பின் அறிவையும் சேர்ப்பதே தொடர்ச்சி என்றால், தோற்றக்கேடு உடைய பிற பொருளுக்கு நாம் கூறியது, அதற்கும் பொருந்தும்; எனவே அதுவும் நித்தம் என்பதாகவே முடியும்.

அத்தொடர்ச்சி நீ கூறும் அறிவு ஆதல் வேண்டும் அல்லது அறியப்படும் ஐந்து கந்தங்களுள் ஒன்று ஆதல் வேண்டும். அஃது இரண்டிலும் சாராததொரு பொருள் ஆயின், அஃது அறிவுகளை ஒழுங்காகச் சேர்க்கமாட்டாது. அந்நிலைகள் அறிவுகள் சிதறிப்போய், முன் உள்ளது பின் ஆகவும், பின் உள்ளது முன் ஆகவும் மாறுபட்டு அழிந்து ஒழியும். இவ்வாறு முறை பிறழ்ந்து வருவதை அறிந்து ஆராய்வாயாக.

ஒரு காலத்து உணர்வு கெட்டாம் எனின், ஒதிப்பு ஈறு
ஒன்றாம்;
ஒரு பொருளின் திரிவு உனக்குக் காலம் ஆனால்,
வருகாலம், நிகழ்காலம் கழிகாலம் என்று
வழங்குவது என்? பொருள்வரவு நிலைகழிவால்
இன்றேல்,
திரிகாலம் செப்பிடாய்; பொருட்செயலும் ஒன்றாம்
செயல் மூன்றும் ஒருகணத்தே சேரும் என்னில்,
தருகாலம் மூன்றாகும்; தாமரை நூறு இதழில்
தன் ஊசியும், காலம் மூன்றினையும் தருமே. 116

தெளிவுரை:

ஒரு கணத்திலே அறிவு கெடுதலும் தோன்றுதலும் நிகழும் என்று நீ சொன்னால், படைப்பும் அழிப்பும் ஒரு தொழிலாக வேண்டும். பொருள்களின் மாறுதல்களே காலம் ஆகும் என்று நீ கூறினால், வருங்காலம், நிகழ்காலம், இறந்தகாலம் என்னும் வழக்கு எதனால் ஏற்பட்டது? பொருள்களின் வரவு, இருப்பு, கழிவு என்னும் மூன்றுமே முக்காலம் எனப்பட்டன என்று நீ கூறினால், காலம் என்பதை வைத்துத்தானே செயல் மூன்றாகப் பேசப்படும்? காலம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்பது ஒன்று இல்லை என்றால் செயல் ஒன்றே எப்பொருளுக்கும் உரியதாகும்.

மூன்று செயல்களும் ஒரு கணத்தே நிகழும் என்று நீ கூறினால், அந்த ஒரு கணத்திலே மூன்று காலமும் இருப்பதை உனக்குக் காட்டு கிறோம். தாமரை இதழ் நூற்றினை ஓர் ஊசி உருவும் காலமே கணம் ஆகும். தாமரை இதழில் செலுத்தப்பட்ட ஊசி, இதழைப் பற்றுதல், உருவுதல், கழிதல் என்னும் மூன்று செயல்களையும் வெவ்வேறாக உடைமையால் காலம் மூன்றும் ஒரு கணத்துள் அமைதலைக் காண்பாயாக.

உணர்வு காரணம் உணர்வுக்கு எனின், நித்தம் உணர்வுக்கு
உண்டாகி நின்று, உணர்வை உதிப்பியாது; இங்கு
உணர்வு சந்தானவிடத்து ஒழிந்தால் பின்னை
உண்டாகாது; உடல்உணர்வுக்கு உபாதானம் என்னின்
உணர்வு உடலின் இடையறாது உதிக்க வேண்டும்
உடல் உணர்வின் வினையினால் உணர்வு
உதிக்கும் என்னின்,
உணர்வு வினை உளது ஒடுங்காது; உணர் தரும் செய்தி
உணர்வை வினைதரின், ஒருவன் செயல் வினை
இன்றாமே. 117

தெளிவுரை:

அறிவு காரணமாக மற்றோர் அறிவு உண்டாகும் என்று நீ கூறினால், அறிவுக்கு நித்தியம் உண்டாகி நிலைபெற்று, மற்றோர் அறிவை அஃது உண்டாக்க மாட்டாது. மேலும் அவ்வறிவு தான் வருகின்ற தொடர்ச்சியில் கெட்டால் பின்னை அறிவு தோன்றாது.

உணர்விற்கு முல காரணமாகி நின்று, உடலை தோற்றுவிக்கும் என்றால், அவ்வறிவு உடலில் உறக்கத்தின் போதும் இடையறாமல் உண்டாகவேண்டும்; உடலுணர்வின் வினையாலே, உணர்வு தோற்றும் என்று கூறினால், இந்திரியங்கள் எப்பொழுதும் கன்மத்தை உடையனவாகலின், அதனால் உண்டாகும் அறிவு அழியப்படாது. அதுவும் அன்றி உணர்வு வினையைத் தரும் என்றும், வினை உணர்வைத் தரும் என்றும், நீ கூறினால், ஒருவருக்குச் செய்யப்பட்ட கன்மம் என்பது இல்லாது போகுமே?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வினை உணர்வு தரும் வினையை உணர்வுதரும் என்றும்
விளம்பின், நீ உணர்வுபோல் வினையினுக்கு
நினைவு வரும் ஒன்றை ஒன்று நிகழ்த்திடா; பின்
நிலை இன்மையால் நிகழ்த்திக் கெடுதல் செய்யா;
கனல் விறகினில் பிறந்து அதனைப் பொடிசெய்தாற்போல்
கருத்து வினையில் தோன்றிக் கழிக்கும் வினை
என்னின்,
முனம் உணர்வு பிறந்த அளவே வினைகெடுக்கும்; முன்பின்
உதியாது முகிழ்நெருப்பின் விறகு உதியாவாறே.118

தெளிவுரை:

வினை அறிவை உண்டாக்கும் என்றும், அறிவு வினையை உண்டாக்கும் என்றும் புத்தனே, நீ கூறினால், அறிவுக்கு நினைவு இருப்பது போல் வினைக்கும் நினைவு இருக்கவேண்டும்; அப்படி இல்லையே. எனவே, ஒன்று மற்றொன்றிற்கு முதற்காரணம் ஆகாது. மேலும் அறிவும் வினையும் அழிவன என்று நீ கூறுவதால், ஒன்று மற்றொன்றை உண்டாக்கிக் கெட மாட்டாது.

விறகில் தோன்றிய நெருப்பு அந்த விறகையே எரித்து விடுதல் போல, வினையில் தோன்றிய அறிவு அந்த வினையை அழித்துவிடும் என்று நீ கூறுகிறாய். அவ்வாறாயின், முன் தோன்றிய அறிவு தோன்றியபோதே கன்மத்தைக் கெடுக்கும்; பிறகு, அக்கன்மம் அறிவை உண்டாக்காது; அறிவும் பின்னர்க் கன்மத்தை உண்டாக்காது.

நெருப்பு விறகை அழிக்கின்றதே அன்றிப் புதிதாக விறகை உண்டாக்காமை போல, அறிவு வினையை அழிப்பதே அன்றிப், புதிய வினையை உண்டாக்க மாட்டாது. ஆகவே, வினை அறிவைத் தரும் என்பதும், அறிவு வினையைத் தரும் என்பதும் ஆகிய உன் கொள்கை பொருந்தாது என்பதை அறிக.

பேயும் நரகரும் சுரரும் பிரமரும் ஆய்உலகில்
பிதா மாதா ஆதாரம் ஒன்றும் இன்றிக்
காயமொடு தாம் வருவர் என்று உரைப்பை காயம்
காரியமாய் வருதலினால் காரணம் உண்டாகும்
ஆயும் உணர்வோ சுத்த அட்டகமோ கன்மம்
வடித்ததோ வடிவுசெய்து வைத்தாரும் உண்டோ?
ஆயும் அறிவு உண்டாகில், அறைந்திடாய் உலகுக்கு
ஆதிதுணை நிமித்த காரணம் அறிவது அறிவே. 119

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

பேய், நரகுலகில் இருப்பவர், தேவர், பிரமா முதலியவர்கள், தாய் தந்தையர் இன்றி உடம்பு எடுத்து வருவர் என்று, புத்தனே, நீ கூறுகிறாய். உடம்பு என்பது காரியப்பொருளாய் இருப்பதனால், அதற்குக் காரணம் இருக்கவேண்டும்; அக்காரண காரியங்களை நீ அறியாய்.

அவற்றை அறிவாயாகில், அத்தகைய காரணம் ஆராயும் அறிவா? பூதமும் உபாதாயமும் ஆக நீ கூறுகிற எண் பொருளா? அல்லது வினையா? உடம்பு என்னும் உருவத்தை உண்டாக்கி வைத்தவர் யார்? இவற்றையெல்லாம் ஆராயும் அறிவு உனக்கு இருக்குமாயின், சொல்வாய்.

இவற்றை உண்மையாக ஆராய்ந்தால், இந்த உலகம் தோன்றுவதற்கு முன்று காரணங்கள் இன்றியமையாதன என்பது புலப்படும். அவை முதற்காரணம் துணைக்காரணம், நிமித்த காரணம் என்னும் முன்று ஆகும். இதனை அறிவதே உண்மை அறிவு ஆகும்.

உருவாதி கந்தங்கள் ஐந்தும் கூடி
ஒருவன், வேறு ஒருவன் இலைஎன்று உரைக்கும் புத்தா,
உருவாதி ஐந்தினையும் உணர்பவன் வேறு என்ன
உணரும் விஞ்ஞானம் என்றாய்; ஞானம் உணர்ந்தவர் யார்?
உருவாதி பொருள் காட்டித் தனைக்காட்டும் சுடர்போல்
உணர்வு பிறிதினை உணர்த்தித் தனை உணர்த்தும் என்னின்,
உருவாதி பொருளினையும் சுடரினையும் காணும்
உலோசனம் போல் உணர்வு பொருள் உணர்பவன் வேறு உண்டே. 120

தெளிவுரை:

புத்தனே, உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ் ஞானம் என்னும் ஐந்து கந்தங்களின் கூட்டமே உயிர் எனப்படும். அன்றித் தனியே உயிர் என்பது ஒன்று இல்லை என்று நீ கூறினாய்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உருவம் முதலிய கந்தங்கள் ஐந்தையும் அறிபவன் ஒருவன் உளன் என்று நாம் கூறவில்லை; அவற்றை அறிவது சித்தம் என்று நீயே கூறினாய். அந்தச் சித்தத்தை அறிந்தவர் யார் என்று உன்னைக் கேட்டால், கீழ்க்காணுமாறு கூறினாய்.

விளக்கு பிறபொருளையும் தன்னையும் உணர்த்துதல் போல, சித்தமும் பிறவற்றையும் தன்னையும் உணர்த்தும் என்று கூறினாய். நீ அவ்வாறு கூறியது பொருந்தாது. அதற்குக் காரணம் வருமாறு:

விளக்கிற்கும் பிற பொருள்களுக்கும் வேறாக அவற்றை அறியும் கண் இருத்தல் போல, சித்தத்திற்கும் பிறவற்றிற்கும் வேறாக, சித்தத்தை உடையான் ஒருவன் உளன் என்பதை அறிக. அறிவும் அறிபவனும் வேறு என முன்பே தெரிவிக்கப்பட்டது.

காயமுடன் இந்திரியம், மனம், நான் என்று
கதறுவாய் காயம் உறக்கத்து அறியா வாகும்
வாயில்களும் அப்படியில் ஒன்றை ஒன்று அங்கு அறியா
மனம் கணத்தில் கெடும்; காலம் மூன்றின் வரவு அறியாது
ஆயும் உணர்வுஆகி உடல், பொறி, மனம் மூன்று அறிந்தாங்கு
அவை நான் அல்லேன் என்றும் அறிந்து, மனத்தாலே
ஏயும் ஒரு பொருள் கருதி இந்திரியப்பாலே
இசைவித்துக் காயத்தால் இயற்றுவது ஆன்மாவே.121

தெளிவுரை:

உடம்பு, பொறி, மனம் முதலியவற்றை நான் என்று கதறுவாய். உடம்பு தூக்கத்தில் ஒன்றையும் அறியாது. பொறிகளுள் ஒன்று அறிந்ததை மற்றொன்று அறியாது. மனம் கணந்தோறும் கெடுவதால், காலம் மூன்றையும் அறியமாட்டாது. ஆகவே, இவை ஆன்மா அல்ல.

எனவே, ஒவ்வொன்றையும் ஆராயும் அறிவு உடையதாய், உடல், பொறி, மனம் என்னும் மூன்றையும் அறிந்து, அவை தான் அல்ல என்பதை உணர்ந்து, மனத்தால் ஒன்றை நினைத்து, பொறியால் கண்டு, உடம்பால் செயலாற்றும் உயிர் இவற்றின் வேறாக உள்ளது என்பதை அறிவாயாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கழிந்த உணர்வே பின்னும் யான் அறிந்தேன் என்று
கருதலின் அவ்வுணர்வு அறிந்தது என்னின்; முன்னே
மொழிந்த மொழி நான் மொழிந்தேன் என்றால், வாய்தான்
மொழிந்ததோ மொழிந்தவன் வேறு ஆனால் போல
எழுந்த உணர்வு எல்லாம் கொண்டு, யான் அறிந்தேன் என்றது
எது அது காண்; உயிர் உணர்வால் வாக்கால் மற்றை
ஒழிந்த காயம் தன்னால் உணர்ந்து உரைத்துச் செய்து அங்கு
உணர்வினுக்கும் ஆதாரமாய் நிற்கும் உயிரே. 122

தெளிவுரை:

முன்பு ஒரு பொருளை அறிந்த அறிவுதானே, பின்பு அதனை யான் அறிந்தேன் என்று கருதுகிறது; எனவே, அறிவுக்கு வேறாக உயிர் என ஒன்று இல்லை என்று, புத்தனே, நீ கூறுவாய் ஆயின், அது பொருந்தாது.

முன்பு ஒன்றைச் சொன்னேன் என்று நீ சொல்லும்போது, அதை அவ்வாறு வாய் சொன்னதா? அல்லது அச்சொல், வாய்க்கு வேறாய் உள்ள ஒருவன் சொன்னதா? அது, வாயை உடைய ஒருவன் சொன்னது என்று தெளிவடைவது போல, மனத்தால் அறிவன எல்லாம் அறிந்து நான் அறிந்தேன் என்றது எதுவோ, அதுவே உயிர் ஆகும்.

மனத்தால் ஒன்றை அறிந்ததும் வாயால் ஒன்றை மொழிந்ததும் காயத்தால் ஒன்றைச் செய்ததும், மனம் வாக்குக் காயம் இவற்றின் வேறு ஆகிய உயிர் என்பதை அறிவாயாக. அனைத்து அறிவுக்கும் ஆதாரமாய் உள்ளதும் அவ்வுயிரே ஆகும்.

இந்திரிய வீதி எழும் சித்தம், நெஞ்சத்து
எழும் சித்தம் என்று இரண்டும் ஒன்று கெட்டே ஒன்று
வந்து எழுவது எனில், கனவில் கண்டபடி நனவின்
வாய் திறவார் நனவு கண்டபடி கனவில் காணார்;
அந்தன் உருவன்னங்கள் அறிந்திடான் இன்றேல்,
அறிகனவும் இறந்து உணர்வும் அழிந்து, உறக்கம் அடைந்தால்
உந்துவதோர் சந்தானம் இல்லை; உணர்வு உதிப்ப
உயிர் கனவு நினைவினையும் உணரும் காணே. 123

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

பொறிகளால் ஏற்படும் அறிவு; மனத்தால் உண்டாகும் அறிவு என்னும் இரண்டினும் ஒன்று கெட்டு மற்றொன்று தோன்றும் என்று, புத்தனே நீ கூறுவது பொருந்தாது. அதற்குக் காரணம் வருமாறு:

மனத்தால் உண்டான அறிவு மட்டும் நிகழ்கின்ற கனவில் கண்டது ஒன்றும் நனவில் புலப்படாது, நனவு நிலையில் பொறிகளால் அறிந்த ஒன்றும் கனவில் புலப்படுவதில்லை. அஃது எவ்வாறு எனில், பிறவிக்குருடன் புறத்தே உள்ள வடிவங்களையும் நிறங்களையும் அறியாமல் இருப்பதைப் போன்றது ஆகும்.

பொறியுணர்வு நிகழ்கின்ற நனவும், மனவுணர்வு நிகழ்கின்ற கனவும் ஆகிய இவ்விரண்டும் அல்லாத உறக்கம் உண்டாகின்ற பொழுது, நனவு, கனவு ஆகிய இரண்டின் தொடர்பு அற்றுப் போகிறது. எனவே, அவை மீண்டும் தோன்றுவதற்கு இயைபு இல்லை. ஆயினும், நமது அனுபவத்தில் உணர்வு மீண்டும் தோன்றுவதைக் காண்கிறோம்; ஆகவே, நனவினையும் கனவினையும் அறியும் அறிவிற்கு ஆதாரமாய் உயிர் உண்டு என்பதைத் தெளிவாக அறிவாயாக.

ஒருகாலத்து ஓர் இடத்தில் ஓர் உணர்வேல்; செவிதான்
ஒன்று உணராது இருசெவியும் உணரும் ஓசை;
ஒருகாலத்து இரு கண்ணும் இரு செவியும் மனமும்
ஒருவனைக் கண்டு, அவன் உரைகேட்டு
உணர்ந்திடும் ஐம்பொறியும்
ஒருகாலும் உணரா; உள் உணர்வு இன்றிப் பொறிகள்
ஒன்று ஒன்றாய் உணர்வது, உள் உணர்வு ஐந்தும்
உணரா;
ஒருகாலும் பொறி விகற்பித்து உணரா உள் உணர்வுக்கு
உள்ளது காண்; விகற்பம் இரண்டும் உணர்வது
உயிரே. 124

தெளிவுரை:

ஒரு சமயத்தில் ஒரு பொறியிடத்திலே ஓர் அறிவு நிகழும் என்று நீ கூறுகிறாய். அவ்வாறாயின், செவிப் பொறி என்பது, இரண்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செவிகளிலும் உள்ளமையால், இரண்டு செவியும் சேர்ந்தே ஓர் ஓசையைக் கேட்க முடியும் என்பதாகிறது. ஒரு செவியாலேயே ஓசையைக் கேட்கமுடியும் ஆகலின், உன் கருத்துப் பொருந்தாது.

ஒரே சமயத்தில், இரண்டு கண்ணும் இரண்டு காதும் மனமும் கூடி, ஒருவனைக் கண்டு அவனது வார்த்தை கேட்டு அதனை அறியும் ஐம்பொறிகளும், மனம் கூடாமல் தனித்து ஒருகாலும் அறியமாட்டா.

பொறிகள் ஒவ்வொன்றாகத் தாம் அறியும் விடயத்தை அறியும்; அதன்னயே அம்மனம் ஏக காலத்தும் ஐம்பொறியின் விடய அறிவுகள் ஐந்தும் கூடி அறியமாட்டாது. அதுவும் அன்றி, பொறிகள் ஒருபோதும், தாம் அறியும் அறிவு அன்றி வேறுபடுத்தி அறியமாட்டா. அந்தப் பொறிகளுடன் கூடி நின்று, வேறுபடுத்தி அறிவது, மனத்திற்கு உள்ள இயல்பு என்பதை அறிவாயாக. இந்தப் பொறிகளையும் மனத்தையும் கொண்டு அறிவது உயிரே ஆகும்.

அரு உணர்வுமாய் ஆறும் மாறி மாறி
அங்கங்கே தோன்றியிடின் அகத்து நிலைஇன்றி,
உருவினொடு பாலதருண விருத்த அவத்தை
உண்டாகாது உறக்கத்தின் உடல் தட்ட அழைப்ப
வருவது உணர்வு எங்கிருந்து? நெஞ்சில் இருந்து என்னில்
வாயில் வினை அறிந்து எழுப்ப ஆயு அறியாதாம்;
திரி ஒழிய இடிஞ்சில் தொடத் தீபம் எழாது அடக்கம்
சென்ற பொழுதால் உணர்வு நின்ற நிலை செப்பே.
125

தெளிவுரை:

மனமும் பொறிகள் ஐந்தும், கணந்தோறும் ஆறு விதமாய் மாறி மாறித் தோன்றுவன என்று நீ கூறுவாய் ஆயின், அவை உடம்பின் உள்ளே நிலவுமே அன்றி, அவை தங்கும் உருவமும், வயதுக்கு ஏற்ற மாறுதல்களும் ஏற்படுவதற்குக் காரணம் இல்லை. எனவே நீ கூறுவது பொருந்தாது.

உறங்குகின்ற ஒருவனை எழுப்பினால், அதனையறிந்து, எழுந்து வருவதற்கு ஏதுவாகிய உணர்வு எந்த இடத்தில் இருந்தது என்று சொல்ல முடியுமா? அஃது அவனது நெஞ்சில் இருந்தது என்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நீ கூறினால், பொறிகளில் நிகழ்கின்ற செயலை அறிந்து எழுவதற்கு, நெஞ்சில் மனம் இருக்க வேண்டும்.

மனம் அழிந்துபோனால், அஃது எப்படி நிகழும்? எனவே, மனம் இன்றியமையாதது. இஃது எப்படி என்றால், அகல் விளக்கில் உள்ள திரியைப் பற்றி நின்ற ஒளி, திரி மாய்ந்தவுடன், ஒளியும் மாய்ந்துவிடுமே அன்றி, அகல் விளக்கைப் பற்றி அது நிற்பதில்லை. எனவே உறங்கும் போது பொறிகளில் பற்றிய அறிவு அடங்கிய நிலையில், பிறகு அது நிற்கும் நிலை யாது? என்று கூறுவாயாக.

இச்சை, வெறுப்பு, இயற்றல், இன்பம், துன்பம், ஞானம்
இவை அணுவின் குறியாகும்; இவற்றில் இச்சை
நச்சி நுகர்ந்து ஒரு பழத்தை இனம் கண்டு, முன்பு
நான் நுகர்ந்த கனியின் இனம் என்று நச்சல் பின்பும்
மெச்ச வெறுப்பு ஆதிகளும் இப்படியே ஆகும்;
இவை முன்பும் பின்பும் உணர்ந்திடுத லாலே
நிச்சய கர்த்தா ஒருவன் உளன் என்று நல்லோர்
நிறுத்திடுவர்; வெறுத்திடுவர் நின்னுடைய பொருளே
126

தெளிவுரை:

விருப்பு, வெறுப்பு, தொழில் செய்தல், இன்பம், துன்பம், அறிவு ஆகியன உயிரின் இயல்பாகும்; இவை அறிவிற்கு இல்லை. இவை உயிரின் குணம் என்று கூறுவதற்குக் காரணம் வருமாறு:

இவற்றுள் இச்சை என்பது, முன்பு ஒருபழத்தை விரும்பி உண்ட ஒருவன், பின்பு அதனை ஒத்த ஒரு கனியைக் கண்டதும், தான் முன்பு நுகர்ந்த கனியின் இனம் இஃது என்று எண்ணி விரும்புவதே ஆகும்.

வெறுப்பு, தொழில் செய்தல் முதலியனவும் இதுபோன்ற தன்மை உடையனவே ஆகும். அத்தகைய இச்சா ஞானக் கிரியை களை, உயிர் முன்பும் பின்பும் அறிவதனால், நிச்சயமாக, 'ஆன்மா' ஒருவன் உளன் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். ஆன்மா என ஒன்று இல்லை என்று, புத்தனே, நீ கூறுவதைப் பெரியவர்கள் ஏற்கமாட்டார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எப்பொருட்கும் இரந்தரமாய் இடம் கொடுத்து நீங்காது
இருள் ஒளிதான் அன்றி, இரண்டினுக்கும் இட வகையாய்
ஒப்பில் குணம் சத்தமதாய், வாயு ஆதி
உதித்து ஒடுங்க நிற்கும் வான் உயிர் முன்னே சொன்னோம்
செப்பிடும் காலம், பொழுது, நாள் ஆதியாகித்
திரிவிதமாய்த் தீமை நன்மை செய்யும் திக்குத்
தப்பில் குணக்குக் குடக்குத் தெற்கு வடக்கு ஆதி
தானாகித் திரியாதே நின்று பலம் தருமே. 127

தெளிவுரை:

முன்பு, வானமும் ஆன்மாவும் காலமும் திக்கும் இல்லை என்று சொன்ன, புத்தனே, இவைபற்றி இப்போது கூறுகிறேன் கேள்.

எல்லாப் பொருள்களும் செல்வதற்கு வழியாய் இடம் கொடுத்து நீக்கமின்றி, இருளும் ஒளியும் அல்லாததாய் இரண்டும் நிற்கத்தக்க இடமாய் இருப்பது வானம். அதன் குணம் சத்தம். வாயு, நெருப்பு, நீர், மண் ஆகிய பூதங்கள் நான்கும் தோன்றி ஒடுங்குவதற்குத் தாரகமாய் (ஆதாரம்) நிற்பது வானம்.

'ஆன்மா' என்பது ஒன்று உண்டு என்பதை முன்னே சொன்னோம். 'காலம்' என்பது காலை, உச்சி, மாலை என்னும் பொழுது ஆகி நேற்று, இன்று, நாளை என்னும் நாள் ஆகி, மற்றும் உள்ளனவாகி இம்முறையிலேயே மூன்றுவிதமாய் வேற்றுமைப்பட நன்மை தீமைகளைச் செய்யும்.

'திக்கு' என்பது, கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்று அநாதியிலும் ஆதியிலும் உள்ளதாய், அத்திசைகளை நோக்கிப் பிறழாமல் கன்மம் செய்தவர்க்குக் கன்ம பலனைக் கொடுக்கும்.

காரியமாய் உலகம் எலாம் இருத்தலாலே
கடாதிகள் போல், காரிய கர்த்தா ஒருவன் வேண்டும்,
ஆரியமாய் அறம் பொருளோடு இன்பம் வீடு எல்லாம்
அறைந்து, உயிர்கட்கு அறிவு செயல் அளிப்பது நூல்; அந்நூல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூரியராய் உள்ளவர்கள் ஓத ஓதிக்
கொண்டு வரலால், முன்னே குற்றம் இன்றிச்
சீரிய பேர் அறிவுடையோன் செப்ப வேண்டும்;
செயலினுக்கும் கரி வேண்டும்; சிவன் உளன்
என்று அறியே. 128

தெளிவுரை:

கடவுளும் நூலும் இல்லை என்று கூறிய புத்தனே, இதனைக் கேள்.

உலகம் அனைத்தும் காரியப் பொருளாய் உள்ளன. எனவே, குடம் முதலிய கலன்களை வனைவதற்குக் குயவன் வேண்டுவது போல, உலகத்தைக் காரியப்படுத்தும் கர்த்தா ஒருவன் வேண்டும்.

குரு வழியாய் (ஆரியமாய்) அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றைக் கூறி, உயிர்கட்கு நல்லறிவையும் நற்செயலையும் அளிப்பது முதல் நூல். அந்நூலினைக் கூர்ந்த அறிவுடைய பெரியோர் மரபுவழியாக ஓதக் கேட்டு ஓதிக் கொண்டு வருவதால், அதனை முதற்கண் குற்றமற்ற முறையில் சொன்ன முற்றறிவுடைய ஒருவன் கூறியிருக்கவேண்டும்.

அந்நூலில் கூறியவாறு நடப்பதை அறிந்து, பயன் அளிக்கும் சான்று ஆவான் ஒருவன் வேண்டும். எனவே, உலகுக்கு முதல்வனாகவும், மெய்யறிவு நல்கியவனாகவும், அனைத்து உயிர்களின் செயலுக்குத் தக்கவாறு பயனளிப்பவனாயும் உள்ளவன் எவனோ, அவனே சிவபெருமான் என்பதைத் தெளிவாக அறிவாயாக.

மரங்கள் உயிர் அல்ல என்று மறுத்துச் சொன்னாய்
வாடுதல் பூரித்தலான் மரங்கள் உயிர் ஆகும்;
திரங்கு நீர் பெறாது ஒழியின் பெறில், சிரத்தை சேரும்
சீவன் அலஎனின், உலகில் சீவன் எல்லாம்
உரம் கொள்வது ஊண் பெறில் சோரும் ஊண் பெறாவேல்;
உலர்ந்த மரம் நீர் பெற்றால் உய்யாது; உள்ளுயிர்கள்
கரந்த சினை முட்டைகட்கு வாயில் இன்று; வாயில்
கண்டிலதேல், பூத்துக் காய்த்து எழல் மரங்கள்
உயிரே.129

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மரங்கள் முதலிய தாவரங்கள் உயிருள்ளன அல்ல என்று, புத்தனே நீ கூறினாய். அது பொருந்தாது. அவை மெலிதலாலும், பருத்தலாலும் உயிர் உள்ளனவே ஆகும். உயிருள்ளன உணவு பெற்றால் வளர்தலும், உணவு பெறாவிடில் வாடுதலும் செய்யும். இஃது அவற்றின் இயல்பு.

பட்ட மரம் உயிரற்றது; அதற்கு நீர் விட்டாலும் அது, தளிர்த்து வளராது. மரத்திற்குப் பொறிகள் இல்லாததால், அஃது உயிரன்று என்று கூறினால், அதுவும் பொருந்தாது. அதற்குக் காரணம் வருமாறு:

உயிர் உள்ளவற்றை உள் அடக்கி நிற்கும் முட்டை, கருப்பை முதலியவற்றிற்குப் பொறிகள் வெளிப்படாமல் இருப்பதுபோல், மரம் முதலியவற்றிற்கும் அவை தோன்றவில்லை. முட்டை, கருப்பை முதலியவற்றில் உள்ள உயிர்கள் முதிர்ச்சி அடைந்து வெளிப்படும் போது அவற்றிற்குள்ள பொறிகள் இருப்பதைக் காண்கிறோம். அவ்வாறே மரம் முதலியவற்றின் பொறிகள் கண்ணால் காணமுடியாவிட்டாலும், அவை பூத்துக் காய்த்து, வளர்வதைக் காண்கிறோம். எனவே மரம் முதலியவற்றிற்கும் பொறிகள் உள்ளன என்பது தெளிவாகிறது. ஆகவே, மரம் முதலிய தாவரங்கள் உயிர் உள்ளவை என்பது பெறப்படும்.

ஒரு மரத்தின் உயிர் ஒன்றேல், கொம்பு ஒசித்து நட்டால்,
உய்யும் உயிர் ஒன்று பலவாமோ என்னில்,
கருமரத்தின் வித்து வேர் கொம்பு கொடி கிழங்கு
கண்கலந்து கொள்ளும் உயிர்; அண்டம், வேர்ப்புத்
தருபிறப்புச் சாராயுசங்கள் சனனமும் பெற்றாற்போல்,
தான் அடையும் உற்பீசம் தலம் நடவாது என்னில்,
பெருநிலத்தின் கால் இலார் நடப்பரோ? பேதாய்,
பிறப்பின் விதம் அநேகம் காண்; பேசுங்காலே. 130

தெளிவுரை:

மரத்திற்கு உயிர் உண்டு என்றால், ஒரு மரத்தின் கொம்பை முரித்து நட்டபோது, அதுவும் மற்றொரு மரமாய் வளர்கிறது; எனவே, ஓர் உயிர் பல உயிர்கள் ஆயிற்றோ என்று, புத்தனே, நீ கேட்கிறாய், அதற்குப் பதில் வருமாறு:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மரத்தில் உண்டான வித்து, வேர், கொம்பு இவற்றையும் பிற வற்றில் கொடி, கிழங்கு, கணுக்கள் இவற்றையும் கருப்பமாகக் கொண்டு உயிர்கள் பிறக்கும். முட்டையிலும் வியர்வையிலும் உயிர்கள் தோன்றுவதைக் காண்கிறோம் அல்லவா?

முட்டை முதலியவற்றில் தோன்றும் உயிர்கள்போல, வித்து முதலியவற்றில் தோன்றிய உயிர்கள், நிலத்தில் நடக்காமல், ஓரிடத் திலேயே நிற்பதால் அவை உயிரல்ல என்ற நீ கூறுவாய் ஆயின், மக்கள் இனத்திலும் கால் இல்லாதவர்கள் நடக்கமாட்டாமல் இருப் பதை, அறிவிலியே, நீ கண்டதில்லையா? அதுபோல, படைப்புப் பலவிதம் என்பதை நீ அறிவாயாக.

தின்னும் அது குற்றம் இலை செத்தது எனும் புத்தா,
தின்பை எனக் கொன்று உனக்குத் தீற்றினர்க்குப் பாவம்
மன்னுவது உன் காரணத்தால் தின்னாதார்க்கு
வதைத்து ஒன்றே இடமாயினால் வதைப்பவர்க்கே பாவம்
என்னில் உனை ஊட்டினர்க்குப் பாவம் சேர
என்ன தவம் புரிகின்றாய் புலால் கடவுட்கு இடாயோ
உன் உடலம் அசுசி என நாணி, வேறு ஓர்
உடல் உண்ணின் அசுசி என உணர்ந்து இலை, காண். 131

தெளிவுரை:

ஓர் உயிரைத் தான் கொல்வதுதான் குற்றம்; பிறர் கொன்று தந்த செத்ததைத் தின்பது குற்றமில்லை என்று கூறும் புத்தனே,

புலால் உணவை நீ தின்பாய் என்று கருதித்தானே ஓர் உயிரைக் கொன்று, உனக்கு ஒருவன் ஊட்டினான்; எனவே உன்னால்தானே அவனுக்குப் பாவம் உண்டாயிற்று.

மேலும், புலால் தின்னாதவர்க்கு எவரும் உயிரைக் கொன்று கொடுப்பதில்லை; ஆகவே, கொன்றவர்க்கே பாவம் என்று நீ கூறுவது பொருந்தாது. உன் விருப்பப்படி உனக்குப் புலால் உணவு தந்த வர்க்குப் பாவம் உண்டாகும்படி நீ, செய்யும் தவந்தான் எத்த கையதோ?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நீ புலால் நுகரும்போது, உன் கடவுளுக்கும் புலாலை ஊட்டு வாய். மேலும் உனது உடம்பு சுத்தம் இல்லை என்று வெட்கப்படும் நீ, பிறிதோர் உயிரின் ஊனைத் தின்னுவது மட்டும் சுத்தம் இல்லை என்பதை அறியவில்லையே.

குடை நிழலும் கண்ணாடிச் சாயையும் போல், பிறப்புக்
கொள்ளும் உணர்வு என்னில் காரணம் அழிய
அழியும்
அடை நிழல்போல், கந்தம் ஐந்தும் அழியும்; உனக்கு இங்கே
அவை அழிந்தால் அரும்கதியின் அணையும்
உணர்வு இன்றாம்;
இடைகனவின் எழும் உணர்வு, நனவுணர்வு ஆனாற்போல்
எழும் உணர்வு கன்மத்தால் நினைந்தகதி என்னின்,
மிடைசினையும் அந்தனு முட்டையும் உயிர் விட்டக்கால்
மேவுவது என்? பிறப்பின் உடல் விடாது கன்ம
உணர்வே. 132

தெளிவுரை:

குடையின்கீழ்க் குடைபோல, நிழல் தோன்றும் தன்மையும், கண்ணாடியின் முன் காட்டிய வடிவம்போல், உருத்தோன்றும் தன்மையும் ஆகிய இந்த உவமைகளைப் போலவே, இந்த உடல் விட்டால் மற்றொரு உடலை எடுத்துக்கொள்ளும் என்று புத்தனே, நீ கூறுவது பொருந்தாது.

குடையும் கண்ணாடியும் ஆகிய காரணம் கெட்டதும், அவற்றில் பொருந்திய நிழல் ஆகிய காரியமும் கெட்டுவிடும்; அது போல, கந்தங்கள் ஐந்தும் உனக்கு இங்கே கெடும். அவை கெடவே, இந்திரியங்கள் காரணமாகக் காரியப்படும் அறிவும் இங்கே அழியும். ஆகையால், அரிய கதியை அடையும் அறிவும் இல்லை ஆகும். (அரியகதி – நற்பிறவி)

கனவின் இடையே எழும் அறிவு, மெய்யறிவு (கன உணர்வு) ஆயினாற்போல, கன்மங்களுக்கு ஈடாக நினைந்து உண்டாகும் உணர்வு, நற்பிறப்பில் சேர்க்கும் என்று நீ கூறுவாய் ஆயின், அது பொருந்தாது.

இந்திரிய அறிவு கெட்டால், தம்மின் நெருங்கிய கர்ப்பமும், பிறவிக் குருடனும், முட்டையும், உயிர் போனால் பெறும் கதி யாது?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எனவே, கன்ம உணர்வு பிறந்த உடலை விடாது என்பதை அறிவாயாக.

ஐந்து கந்தம் சந்தானத்து அழிதல், பந்த துக்கம்
அறக்கெடுகை, முத்தி இன்பம் என்று அறைந்தாய்; கந்தம்
ஐந்தும் அழிந்தால், முத்தி அணைபவர் யார் என்ன,
அணைபவர் வேறுஇல்லை என்றாய்; ஆர்க்கு முத்தி இன்பம்?
ஐந்தின் உணர்வினுக்கு என்னில், அழியாத அவ்வுணர்வு உண்டு;
ஆகவே, எவ்விடத்தும் உருவாதி கந்தம்
ஐந்தும் உளவாம்; அதுவும் பந்தம் ஆகி
அரந்தை தரும் முத்தி இன்பம் அறிந்திலை; காண் நீயே. 133

தெளிவுரை:

கந்தங்கள் ஐந்தும் தொடர்ந்து செல்வது கெட்டுத் தொழிற் படாமல் போனால், அது கட்டுக்கு ஏதுவாகிய துயரம் என்றும், அவை முற்றும் அழிந்து ஒழிதல் முத்தி இன்பம் என்றும் புத்தனே நீ கூறினாய். கந்தங்கள் ஐந்தும் கெட்டால், முத்தியில் செல்வார் யார் என்று உன்னைக் கேட்டபோது, முத்தியில் செல்வார் ஒருவரும் இல்லை என்று கூறினாய்.

முத்தி பெறுவார் இல்லை என்றால்; நீ கூறும் முத்தி இன்பம் யாருக்கு? கந்தங்கள் ஐந்தில் தோன்றும் அறிவிற்கே முத்தி என்று நீ கூறினால், அதுவும் பொருந்துமாறு இல்லை. மனத்தினால் அறியும் அறிவு கெடாது இருக்குமானால், அந்த இடத்திலும், உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் கந்தங்கள் ஐந்தும் உண்டாதல் வேண்டும். அவை உண்டாகவே, முத்தியின் போதும் கட்டுக்கு ஏதுவாகிய துயரம் ஏற்படும். எனவே, நீ முத்தி இன்பத்தை அறிந்தவன் இல்லை. அதனைக் கூறுகிறேன்; கேள்.

அநாதி முத்தனாய்ப்; பரனாய், அசலனாய், எல்லா
அறிவு தொழில் அனுக்கிரகம் உடைய அரன் கன்மம்
நுனாதிகம் அற்று, ஒத்த இடத்தே, சத்திநிபாதம்
நுழைவித்து, மலங்கள் எலாம் நுங்க நோக்கி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மனாதி கரணங்கள் எலாம் அடக்கித்; தன்னை
வழிபடு நல்அறிவு அருளி, மாக்கருணைக் கையால்
இனாத பிறப்பினில் நின்றும் எடுத்து, மாறா
இன்ப முத்திக்கே வைப்பன்; எங்கள் முத்தி இதுவே. 134

தெளிவுரை:

தொடக்கமில்காலந்தொட்டு, இயல்பாகவே பாசங்களின் நீங்கினவனாய், எப்பொருளுக்கும் மேலானவனாய், நிலை பேறுடையவனாய், பேரறிவும், பேராற்றலும், பேரருளும் உடையவனாய் விளங்கும் சிவபெருமான், உயிர்கள் செய்த நல்வினை, தீவினைகளின் பயன்கள் குறைவு அறத் துலை ஒத்து இருவினை ஒப்பு ஏற்படும் நிலையில், அந்த ஆன்மாக்களிடத்து அருட்சத்தியைப் பதியும்படி செய்விக்கிறான்.

அந்நிலையில் அவனே குருமூர்த்தியாய் எழுந்தருளி வந்து, மலங்களின் ஆற்றல் அந்த ஆன்மாவினிடத்துச் செல்லுபடியாகாதவாறு, திருக்கண் சாத்தியருள்கிறான்; மனம் முதலிய அகக் கருவிகளையும், இந்திரியம் முதலிய புறக் கருவிகளையும் கொடுத்துத் தன்னை வழிபடுதற்கான நல் அறிவு ஆகிய நால்வகை நெறிகளை வகுத்தருள்கிறான். பெருங்கருணையுடைய தன் திருக்கரத்தினாலே, பொல்லாப் பிறவிக்கடலில் ஆன்மாக்கள் மீண்டும் விழாமல் எடுத்து, என்றும் மாறாத பேரின்பப் பெருங்கரையில் வைத்து அருள்கிறான்.

இதுவே எங்கள் சைவசித்தாந்த முத்தி ஆகும்; நீயும் இந்த வழியில் நின்று, முத்தியின்பத்தை அனுபவிப்பாயாக. (நூனாதிகம், நுனாதிகம் எனப்பட்டது. நூனாதிகம் – அருமை பெருமை).

３. யோகாசாரன் மதம்

போதமே பொருளாய்த் தோன்றும்; பொருளதாய் எழலால், போதம்
வாதனை அதனால் கூடி வருதலால் வடிவு இலாமை
ஆதலால் கனவே போலும் சகம் உளது அறிவே யாம்என்று
ஓதினான் ஓதானாயே உணர்வினால் யோகாசாரன். 135

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

அறிவே உள்ள பொருள். அதுவே காணும் பொருளாய்த் தோன்றுவது. அறிவு பொறிகளின் உணர்ச்சியால் திரண்டு எழுவது. அது வடிவு இல்லாதது. (அருவமானது). எனவே, வடிவொடு தோன்றும் புற உலகம் கனவு போல்வது.

யோகாசாரன் நூலை உணராததாலேயே, சௌந்திராந்திகன் வேறுபட்டு, இந்திரிய வாதனையால் அறிவு உண்டு என்றும், உலகம் கனவே போலும் என்றும் கூறினான். அவன் கூறியது பொருந்தாது. எனவே, அறிவு ஒன்றே நிலையாக உள்ளது.

யோகாசாரன் மதம் மறுதலை

போதமும் தவிர வேறு ஓர் வாதனை புகன்றாய்; போதம்;
வாதனை இரண்டும் உண்டு என்னாய் போதம் வாதனையும் என்னில்
காதலால் பொருளினோடு கலந்து பின் எழும் கருத்தாம்
வாதனை கனவு கண்ட பொருளின்மேல் வரும்கருத்தே. 136

தெளிவுரை:

யோகாசார, நீ அறிவு அன்றி, வாசனை என்று ஒரு பொருள் உண்டு என்று கூறினாய். அவ்வாறாயின், அறிவு என்றும், வாசனை என்றும் இரண்டு பொருள் உண்டு என்று கூற மறுக்கிறாய்.

வாசனை என்பது, விருப்பத்தோடு ஒரு பொருளில் அறிவு பற்ற, அப்பற்றுக் காரணமாக, எழும் கருத்து; எனவே, புறப்பொருள் இன்றி வாசனை இல்லை; வாசனை அறிவன்று.

கனவு என்பது நனவில் கண்ட பொருளில் பற்றிய கருத்தால் நிகழ்வது. எனவே, நனவைக் கனவு என்றால், அந்த நனவுக்கு வேறாக, இன்றும் ஒரு நனவு உண்டு என்பதாக முடியும். முடியவே, அறிவுக்கு வேறாகப் புறவுலகம் உண்டு என்பது பெறப்படும். எனவே, உலகம் கனவும் அன்று. ஆதலினால், கூறியது பொருந்து மாறு இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிவதே பொருள்அது ஆயின், அகம் சடம் என்ன வேண்டும்;
பிறிபொருள் ஆகும்; பேதித்து இதம் பிரபஞ்சம் என்னில்,
உறுபொருள் உருவம் தோய்ந்தால், உணர்வும் அவ்வுரு
வாய் நிற்கும்;
செறிபொருள் அதுவாய் நிற்கும், தெளிபளிங்கு அதுவே
போல, 137

தெளிவுரை:

யோகாசார, அறிவே காணப்படும் பொருள் என்று நீ கூறு கிறாய். அவ்வாறாயின், நான் என்பது, உடல் என்று சொல்லவேண்டி வரும். உடம்பின் வேறாய் அறிவு இல்லை என்று நீ சொன்னால், உடம்பே உள்பொருள்; அறிவு என்பது இல்லை என்று கூற வேண்டும். உருவப் பொருளின் வேறாய், அறிவு அருவமாய் உள்ளது என்பது உனது கொள்கை.

அறிவில் உருத் தோன்றுதற்குக் காரணம், அறிவு பற்றிய பொருள் உருவம் உடையதாய் இருப்பதாய், தானும் அவ்வுருவின் மயமாய் நிற்பதே ஆகும். அஃது எதுபோல எனின், தன்னைச் சார்ந்த உருவின் தன்மையைப் பளிங்கு அடைவதைப் போல் ஆகும். உண்மையை ஆராயப் புகுந்தால், அறிவும் அறியப்படும் பொருளும் வெவ்வேறு பொருள்கள் ஆகும். இதனைத் தெளிவாக அறிவாயாக.

4. மாத்தியமிகன் மதம்

அவயவம் பொருளாய்த் தோன்றும்; அவயவம் அழிந்தால்
பின்னை
இவைபொருள் என்ன வேறு ஒன்று இலாமையால்
பொருள்கள் இன்றாம்;
அவைபொருள் இலாமையாலே, அறிவும் இன்றாகும் என்று
நவைதரு மொழியினாலே நவிலும் மாத்தியமிகன்தான். 138

தெளிவுரை:

பொறிகள் பத்துமே பொருளாகத் தோன்றுகின்றன. பத்துப் பொறிகளும் கெட்டு ஒழிந்துவிட்டால், பிறகு இவைதாம் பொருள்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்று அறிவதற்கு ஒன்றும் இல்லை. எனவே, பொருள் என்பதே இல் லையாகும். அவை வெறும் தோற்றங்களே அன்றி, உள்ளனவல்ல.

பொருள்களை அறியவல்லது அறிவே ஆகும். பொருள்கள் இல்லாதபோது, அவற்றை அறியும் அறிவும் இல்லையாகும். ஆகவே, உண்மையில் எல்லாம் பாழே (சூனியம்) ஆகும். இவ்வாறு, அறிவுக் குப் பொருத்தம் இல்லாத குற்றத்தைத் தரும் சொற்களாலே மாத்திய மிகன் சொல்கிறான்.

மாத்தியமிகன் மதம் மறுதலை

கடத்தினில் அவயவங்கள் படத்தினில் புகாமல் காத்தும்,
படத்தினில் அவயவங்கள் கடத்தினில் புகாமல் கொண்டும்,
இடத்தினில் நிற்கும் ஆகும்; அவயவி இரண்டும் கூடி
உடைத்து ஒரு பொருள் உண்டாகப் பொருளும் உண்டு;
உணர்வும் உண்டே. 139

தெளிவுரை:

மாத்தியமிக, நீ அவயவமே பொருள் ஆகும்; அவை யவி என்பது இல்லை என்கிறாய். (கடம் – குடம்; படம் – ஆடை; கடாதி களுக்கு அவயவி – மண்; படாதிகளுக்கு அவயவி – நூல்).

மண்ணினால் ஆகும் பொருள் குடம்; நூலினால் ஆகும் பொருள் ஆடை; குடத்தில் ஆடையின் உறுப்பு ஆகிய நூல் இல்லை; ஆடையில் குடத்தின் உறுப்புஆகிய மண் இல்லை; இரண்டும் வேறு வேறு பொருள்கள் என்பது பெறப்படும். அந்தந்தப் பொருளின் உறுப்பைக் கொண்டே அந்தந்தப் பொருள் உண்டாகிறது.

அதுபோல பொருள்ாகிய சரீரம் வேறு; உணர்வு ஆகிய ஆன்மா வேறு; மண்ணும் குடமும் சேர்ந்தே பொருளாகிறது; அவ் வாறே உயிரும் உடலும் சேர்ந்து பொருள் ஆகும். ஆக, பொருளும் உண்டு; உயிரும் உண்டு.

கருவியும் ஒளியும் வேறு கருதிடும் கருத்தும் நிற்கப்
பொருள் புணராமையாலே; போதம் வந்து எழுவது இன்றாம்;
மருவிடும் பொருள் உண்டாக வந்து எழும் புந்தி ஆனால்
பொருள் உளது ஆகும்; ஆகப் போதமும் உள்ளதாமே. 140

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

அவயவம் ஆகிய குடமும், அவயவி ஆகிய மண்ணும் சேர்ந்தே பொருள் ஆகிறது என்பதை முன்பு கண்டோம். ''பொருள் உண்மை'' பெறப்படவே, பொருளை அறிகின்ற ''அறிவு உண்மை'' இப்போது காண்போம்.

புறப்பொருள்களும், அவற்றை அறிதற்குக் கருவியாய் உள்ள பொறிகளும், அவற்றை ஆராயும் மனமும் சேர்ந்து இருந்தாலும், உயிர் ஆகிய பொருள், அவற்றோடு கூடி நிற்காவிட்டால், அறிவு நிகழ்வது இல்லை. அவற்றோடு உயிர் உள்ளபோது அறிவு நிகழும்; ஆகவே, அறிவும் அறிவுடைய பொருள் ஆகிய உயிரும் உண்டு என்பதை அறிவாயாக. (இந்தப் பாடலில் ''பொருள்'' என்றது உயிரைக் குறிக்கும்).

5. வைபாடிகன் மதம்

அரிசனம் நூறு கூட அருணம்வந்து எழுந்தாற் போல,
விரிசகம் பொருள்கள் ஞானம் விரவிட மேவித் தோன்றும்
தெரிசனம் இதுவே என்று தெளிந்திடும் தேரர் வீடு
பரிவொடும் அடைவீர் என்று பகரும் வைபாடிகன் தான். 141

தெளிவுரை:

மஞ்சளும் சுண்ணாம்பும் கூடியபோது, சிவப்பு நிறம் உண் டாவதுபோல, புறப்பொருளும் அறிவும் கூடியபோது உலகம் தோன்றும்.

(அரிசனம் – மஞ்சள்; அருணம் – சிவப்பு,

விரி சகம் – விரிசகம் – உலகம்).

இதுவே ஞான தரிசனம் என்பதைத் தெளிவீராக. இந்த ஞானமே வீடுபேறு பயக்கும். இக்கொள்கையை உடையவரே தேரர் (வைபாடிகர்) என்பர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வைபாடிகன் மதம் மறுதலை

பொருளது புறம்பது ஆகும்; போதம் அந்தரமது ஆகும்;
தெருளிடின், இரண்டும் சென்று சேர்ந்திடுமாறு அது
இன்றாம்;
அருவு உணர்வு; உருவம் ஞேயம்; ஆதலினாலும் கூடா;
உருஅரு உடைய வைபாடிகற்கு இனி மாற்றம் இன்றே. 142

தெளிவுரை:

புறப்பொருளும் அறிவும் ஓர் இனத்தனவல்ல. பொருள் புறத்தே உள்ளது. அறிவு அகத்தே உள்ளது. அறிவு அருவம்; அறியப்படுகின்ற பொருள் உருவம். எனவே இவை தம்முள் கூடா. எனவே வைபாடிகன் கொள்கை நிலைக்காது.

குறிப்பு: இதுவரை சௌந்திராந்திகன், யோகாசாரன், மாத்தி யமிகன், வைபாடிகன் என்னும் நால்வகைப் புத்தமதக் கொள்கைகள் கூறப்பெற்று மறுக்கப்பட்டன. இனி, அருகமதம் என்னும் சமண மதத்தருள், நிகண்டவாதி, ஆசீவகன் என்னும் இரு கொள்கையினர் (மதவாதிகள்) உளர். அவர்கள் மதங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன.

6. நிகண்டவாதி மதம்

வாச மாமலர் அசோகு பேணிமறை நீதியோடு மலையும்
தவத்து
ஆசையால் உடை அகன்று, மாசினை அடைந்து,
இல்வாழ்தரும் அறத்தினில்
பாசமானது தவிர்ந்து, பண்டிபட உண்டு, பாயினொடு
பீலிமேல்
நேசமாய் அவை தரித்துளோர்களில் நிகண்டவாதியை
நிகழ்த்துவாம். 143

தெளிவுரை:

மணமும் வண்டும் பொருந்திய மலர்களை உடைய அசோக மரத்தைத் தெய்வம் எனப் பேணுதல், வேதமார்க்கத்தோடு மறுதலைப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பட்டு உரைக்கும் தவத்தை விரும்புதல், உடை உடுத்துதலைக் கைவிடுதல், குளிக்கும் பழக்கம் இல்லாமையால் அழுக்குடன் கூடிய மேனியோடு இருத்தல், இல்வாழ்க்கையை வெறுத்து விடுதல், வயிறு புடைக்க உண்ணுவது, பாயை உடலில் உடுத்துவது, மயிற்பீலியைக் கையில் பிடித்தல் ஆகிய இவ்வகையான பழக்க வழக்கங்களைக் கொண்டு வாழும் நிகண்டவாதி மதத்தை இங்குக் கூறுகிறோம்.

(கண்டம் – உடை; நிகண்டம் – உடையின்மை. ஆசீவகர்க்கு உடை உண்டு. ''மறை நீதியோடு மலையும் தவம்'' என்பது யாகம் முதலிய கர்மம், கர்த்திருவாதம் (சகலத்தையும் நடத்துவது தாமே என்னும் வாதம்), திருநீறு, உருத்திராக்கம் முதலியவைகளை நீக்கிய கன்மம் முதலியவற்றைக் குறிக்கும்).

ஈறு இலாதன அநந்த ஞானம் முதல் எண்குணங்கள் எனும் ஒண்குணம்,
மாறு இலாத மதி மேவுசீதம் என மன்னி வானவர் வணங்கவே
வேறு உலாவு குண ஞான ஆவரணி ஆதி எட்டினையும் விட்ட சீர்
ஏறு பான்மையுடை நீடுவாழ் அருகன் எங்களுக்கு இறைவன் என்றனன். 144

தெளிவுரை:

கேடு இல்லாதன ஆகிய நற்குணங்கள் எட்டினையும் உடையவன்; பூரணச் சந்திரனிடத்து உள்ள குளிர்ச்சியைத் தன்னிடத்திலே கொண்டிருப்பவன்; இந்திராதி தேவர்கள் போற்றி வணங்கத் தக்கவன்; ஞானவரணியம் முதலிய தீய குணங்கள் எட்டையும் விட்டவன்; இவனே, நெடிது வாழ்கின்ற அருகக் கடவுள் என்று போற்றப்படும் எங்கள் இறைவன் என்று அருகன் கூறினான்.

நற்குணங்கள் எட்டு வருமாறு: கடையிலா ஞானம், கடையிலா காட்சி, கடையிலா வீரம், கடையிலா இன்பம், பெயரின்மை, குடிவழியின்மை, வயது இன்மை, அழியாத் தன்மை என்பன ஆகும்.

சீரேறு பான்மை – நின்மலத்துவம் முதலியன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கருவி கண்படு தொடக்கு ஒழிந்துவரு காலம் மூன்றில் நிகழ்
காரியம்
பெருக நின்று ஒரு கணத்திலே உணர் பெரும் தவக்
கடவுள் பீடினால்
மருவி நின்று வழிபட்டவர்க்கும் மலைவு உற்றவர்க்கும்
மனம் ஒத்திடும்
குருசில் எங்கள் இறை என்று பின்னும் நிகழ் குற்றம்
இன்மையது கூறுவான். 145

தெளிவுரை:

எங்கள் இறைவன், பொறிகளின் உதவியால் பொருள்களை அறியும் கட்டுப்பாடு இல்லாதவன்; முக்காலத்திலும் நிகழ்வனவற்றை ஒரு கணத்திலே அறியும் பெரும் தவத்தை உடையவன்; தன்னை வழிபாடு செய்தவர்க்கும், தன்னோடு மாறுபட்டவர்க்கும் ஒரே தன்மையை உடைய பெருந்தகை. அவனுக்குள்ள குற்றமற்ற தன்மையைப் பின்னும் கூறுவான்.

பசித்தல், தாகம், பயம், செற்றமொடு உவகை,
மோகம், சிந்தனை, பழித்தல், நோய்,
நசித்தல், வேர்வினொடு, கேதமொடு மதம்,
வேண்டல், ஈண்டு அதிசயித்தலும்
புசிப்பு, வந்திடு பிறப்பு, உறக்கம் இவை
விட்டோர் அட்டகுண பூதனாய்
வசித்தவன்; உலகின்மேல் இருந்து ஒருசொல்
இகலனுக்கு அருளும் என்றனன். 146

தெளிவுரை:

பசித்தல், தாகம், அச்சம், மாற்சரியம் ஆகிய இவற்றுடன் ஒன்றின்மேல் பிரியப்படுதல், மயக்கம், ஒன்றைச் சிந்தித்தல், வாத பித்த சிலேட்டுமம், சாதல், வியர்வையோடும் கிலேசப்படுதலோடும், கர்வத்தை விரும்புதல், அதிசயப்படுதல், உணவு, பிறப்புட்படுதல், உறக்கம் ஆகிய இவற்றை முற்றிலும் கைவிட்டு, முன்பு சொல்லப் பட்ட எட்டுக் குணங்களை உடையவனாய், உலகத்துக்கு மேல் ஆகிய பொன் எயில் வட்டத்து இருந்து சித்த பரமேட்டிகள் கேட்டதொரு சொல்லுக்கு பதில் அருளும் என்று கூறினான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''பொன் எயில் வட்டத்து இருந்து சித்தபரமேட்டிகள் கேட்டதொரு சொல்லுக்கு உத்தரம்'' என்பது அமணர்களின் சொல்லாட்சி. இதனை 'முரசு தாக்கச் சத்தம் கிளம்பினாற் போல'' என்றும் கூறுவர்.

அந்த வாய் மொழியினால் அவன் சரணம் ஆதி யோகம்
முதலான நூல்
இந்த மாநிலம் மயங்கிடாத வகை இங்கு இயம்பினன்;
இதன் பொருள்
வந்த காலம், உயிர், தன்மம், அதன்மம், அறம் மற்றும்
விண்மருவு புற்கலம்
பந்தம் வீட்டினோடு அநாதியாய் இவை படைப்பது இன்றி
உள பத்துமே. 147

தெளிவுரை:

அந்த மெய்மையான மொழியை அடிப்படையாகக் கொண்டு, சித்தபரமேட்டி, சரணம் முதலியன பொருந்திய யோக முதல் நூலை, உலகில் உள்ளோர் மயங்காத வகையில் இந்த உலகத்தில் இயற்றினான்.

அதன்படி காலம், உயிர், அறம், மறம், அறப்பயன், மறப் பயன், வான், உடல், கட்டு, வீடு என்னும் பத்தும் என்றும் உள்ள பொருள்கள் ஆகும்; அவை எவராலும் படைக்கப்பட்டனவல்ல.

நிற்றலோடு தலைபோதல், அன்னுவயம் நிகழ்த்து நீடு
எதிரேகமும்
உற்றதாம் இவை கணத்திலே மருவி உள்ளவா
புரியுமாறுதான்;
கற்ற காலம் அளவு எய்தி, வாழும் உயிர் காயம் மேவி,
நிறைவு ஆனதே;
பெற்று வேறு வருதன்மை நேர் அறிவு பெற்றதாகி உள
பேசிலே. 148

தெளிவுரை:

அநாதிப் பொருள் பத்தினுள், காலம் என்பது, நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் என மூவகைப்பட்டு நிற்கும். இந்த மூன்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காலச்செயலும் ஒரு கணப் பொழுதிலே நிகழும் தன்மையது. அக்கால எல்லையுட்பட்டு வாழும் உயிர்கள், எடுத்த உடம்பு முழுவதிலும் அந்த உடம்பிற்குரிய அவத்தைகளைப் பெற்று, அவற்றிற்கு ஏற்ற அறிவு பெற்று விளங்கும் தன்மையை உடையன.

பரந்து மீது தருமாத்தி காயம் அழிவித்த நித்தம் அது
பண்ணிடும்;
நிரந்து கீழ் அதருமாத்தி காயம் அது நித்தமாய் மிக
நிறுத்திடும்;
புரந்த புண்ணியம் இதற்கு நன்மை; புகல் பாவம் ஆன அது
தீமையே;
தரும் பொருட்டு இடம் அது ஆகும் வானம்; மிகு
புற்கலன்கள் அவை சாற்றுவாம். 149

தெளிவுரை:

விரிந்து மேலாகிய நல்வினையால் எடுக்கும் உடல், மேலுமு பூத உடலை எடாதபடி, அழிவித்து, பிறப்புஅறுக்கத் துணை செய்யும். தீவினையால் எடுத்த உடம்பு பூத உடலை நிலைபெறச் செய்து, மறுபிறப்பிற்கு ஏது ஆகும்.

மனம் வாக்குக் காயங்களால் செய்யப்படும் நல்வினை பிறப்பு அறுக்கும் உடலுக்கு ஏது ஆகும். தீவினை மறுபிறப்புக்கு ஏது ஆகும். எல்லாப் பொருள்களுக்கும் இடம் கொடுத்து நிற்பது வானம். இதில் தோன்றும் உயிர்கள் குறித்து இனிக் கூறுகிறேன்.

ஏணும் ஒன்றுடையவாகி எங்கும் அணுவாய்
இரும்பு, கல், மரங்களும்
பூணும் அங்கு உரு எலாமும் ஆகும்; இவை
புற்கலப் பொருள்கள் என்னலாம்;
காணும் அங்கு அறுவகைத் தொழில்கள் அவை
கட்டுவிட்ட நெறி கன்மம் மேல்
மாண நின்று வரும் மாறி மாறி முன்
வகைந்தது உண்டுவிட மாட்சியே. 150

தெளிவுரை:

வன்மைமிக்க அணுக்கள் பல திரண்டு இரும்பு, கல், மரம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதலிய வடிவங்களைக் கொள்கின்றன. இவை புற்கலப் பொருள் என்னும் பெயரை உடைய உயிர்கள் என்று சொல்லலாம்.

காமம், வெகுளி, மயக்கம், உலோபம், செருக்கு, பொறாமை என்னும் அறுவகைத் தொழில்களே உயிர்க்குப் பந்தம் ஆகின்றன. இந்த அறுவகைப் பகையையும் நீத்துத் தவநெறியில் நின்றால், இரு வினைப் பயனிடத்து உவர்ப்பு ஏற்பட்டு, உயிர் வீடு பெறும்.

'புற்கலம்' என்பது உயிர் இல்லாதனவும் உயிர்போல்வனவும் ஆகிய பொருள்களைக் குறிக்கும்.

நிகண்டவாதி மதம் மறுதலை

அருகனுக்கு அனந்த ஞானம் ஆதியாதி யாகவே,
பெருக நிற்றல் சீதமா மதிக்கு அடைந்த பெற்றியேல்,
ஒருவும் இட்ட ஒப்பவன் உயிர்த் திறத்தின் உள்ளபின்
மருவு மிக்க குற்றமேல் அறத்தின் மன்னினான் எனில். 151

தெளிவுரை:

அருகனே, உன் கடவுளுக்கு நற்குணங்கள் எட்டும், சந்திர னுக்குக் குளிர்ச்சி வந்ததுபோல, இடையே வந்தவை என்று நீ கூறு கிறாய். அவ்வாறாயின், முன்பு இருந்த தீய குணங்கள் நீங்கிய பிறகே நற்குணங்கள் ஏற்படமுடியும். அவ்வாறு ஏற்படுவது உயிர்க்கு மட்டுமே ஆகும். அது கடவுளுக்கு இயல்பு அன்று. உன் கடவுள் நற் குணங்களை உடைய அறத்தைச் சார்ந்தவன் ஆயின், (அடுத்த பாடலில் முடியும்).

அறத்தின் மன்னு வித்தவன் ஒருத்தனாய் அவன் அறத்
திறத்தில் நிற்றல் மற்றொருத்தனால் விளைந்த செய்தியாம்;
மறத்தினால் அற்றவர்க்கு எலாம் வணக்கம் உன் இறைக்குமேல்
பிறர்க்கும் இங்கு அவத்தை கொண்டது ஆரை இன்று? பேசிடே. 152

தெளிவுரை:

அவனை நல் அறத்தில் இருத்தியவன் ஒருவன் இருக்க

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேண்டும். உன் கடவுள் நல்லறத்தில் நிற்பதற்குக் காரணம், அவனை அவ்வாறு செய்வித்த ஒருவன் உளதாலேயே ஆகும். தீவினைகளை நீங்கினவர்கள் எல்லாம் வணங்கத்தக்கவனாய் உன்கடவுள் இருக்கிறான் என்றால், அவனுக்கு மேல் ஒருவபன் உளன் என்பது பெறப் படும். எனவே, கடவுள் என்று நீ யாரைக் கருதுகிறாய்? கூறுவாயாக.

கருவிதன் தொடக்கு ஒழிந்து கண்டு வாழும் என்றியேல்
உருவு கொண்டு நின்றது என்னில் உண்டு தான் மணாதிகள்
ஒருவி நின்றது என்னில் அத்தம் ஒன்றையும் உணர்ந்திடான்
பொருள் தெரிந்து போகை காலம் ஒன்றிலே புணர்ந்திடான்.
153

தெளிவுரை:

உன் கடவுள் கருவிகளின் உதவி இன்றி எல்லாவற்றையும் அறியக் கூடியவன் ஆயின், அவன் உடல் எடுத்ததன் காரணம் யாது? உடல் எடுத்தால், மனம் முதலிய கருவிகளின் உதவியால் கட்டுப்பட்டுத்தான் எதனையும் அறிய முடியும், எந்த ஒரு பொருளையும் அறிவதற்கு முக்கிய கருவியாகிய மூன்று காலத்தையும், ஒரே சமயத்தில் அறியும் தன்மை உன் கடவுளுக்கு இல்லை.

ஆர்வ கோபம் ஆனவை அடைந்து, ஒறுப்பவர்க்கு எலாம்
சேர்வது இன்மை செப்பில் இன்று சீவன் மேவு காயமால்
ஒரும் மன்னர் போலவே உயிர்க்கு அளித்தல் இன்றியே
ஏர்கொள் பொன் எயிலிடத்து இருத்தல் பெற்றது
என்கொலோ? 154

தெளிவுரை:

காமக் குரோதம் முதலியவற்றோடு கூடி அவற்றை நீங்கின வர் எல்லாம், அருகக் கடவுள்ள அடைய முடியாது என்று கூறுவாய் ஆயின், உன் அருக பரமன் உயிர்க்குள்ள உடம்பினை உடையவன் ஆகலின், அவன் கட்டுப்பட்டு நிற்பவன் ஆவன்.

அரசனைப்போல, உயிர்கட்கு நன்மை செய்தல் பொருட்டு, உன் கடவுள் உடல் எடுத்தான் என்பாய் ஆயின், அரசனைப் போன்று அவன் உலகிலே நீதி செலுத்த வேண்டும். கெட்டவர்களைத் தண்டித்து நல்லவர்களை ஆதரிக்க வேண்டும். ஆனால் உன் அருக

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பரமன், ''பொன் எயில் வட்டம்'' ஆகிய உயிர் நிலையில் போய்த் தங்கி இருப்பதற்கு என்ன காரணம்? நல்லவரையும் தீயவரையும் ஒன்றாகக் கருதுபவன், எவ்வாறு அரசன் ஆக முடியும்?

சொல்லது ஒன்று கொண்டு இகலின், ஆத்தன் நாடவே
சொலின்,
இல்லையாம் மனாதிதான் இயம்புமாறு அது எங்ஙனே?
நல்லவாம் மனாதிதான் அவர்க்கு நாடவே இலை;
ஒல்லை ஊமர் ஊமருக்கு உரைத்தவாறு அது ஒக்குமே. 155

தெளிவுரை:

சகல ஆத்தன் ஆகிய அருகன் சொன்ன ஒரு சொல்லைக் கொண்டு, ஆதி அருக பரமன் ஆகிய இகலாத்தன் 'சித்த பரமேட்டி' என்னும் நூலைச் செய்தான் என்று கூறினாய்.

(சகலாத்தன்– அநாதி பரமன்; இகலாத்தன் – ஆதிபரமன்) உன் ஆதி பரமன் ஆகிய அருகனுக்கு, மனம் முதலிய கருவிகள் இல்லை என்று கூறிவிட்ட பிறகு, அவன் எப்படி அநாதி பரமன் சொன்னதைக் கேட்டு நூல் செய்தான்? அஃது ஓர் ஊமை சொன்னதை, மற்றோர் ஊமைக்குக் கூறியது போன்றதாகும்.

இன்ப பூமி சேர் இகலில் நாதன் இவ்விரு நிலத்
துன்பம் அங்கு உணர்ந்திடாமை இங்கு அறிந்து
சொல்லிடான்,
இன்ப பூமியில் இருந்து இருந்தி யாவும் எய்திடில்
துன்ப பூமியாம் உணர்ந்து சொல்ல வல்லது இல்லையே. 156

தெளிவுரை:

உன் தலைவன் மாறுபாடு இல்லாதவன் என்றும் இன்ப உலகில் இருப்பவன் என்றும் கூறுகிறாய். அவ்வாறாயின், இந்த உலகில் உள்ள துன்பத்தை அவன் அறியமாட்டான். அவன் மனம் முதலிய கருவிகள் இல்லாதவன் ஆகலின், இவ்வுலகில் உள்ளவற்றை இப்படிச் சொல் என்று சொல்ல வல்லானல்லன்.

'பொன் எயில் வட்டம்' எனப்படும் இன்ப உலகில் இருந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்டே, அவன் உலகத் துன்பம் அனைத்தையும் உணர வல்லான் என்று கூறுவாய் ஆயின், அவன் இருக்கும் இடம் இன்ப உலகம் என்று எப்படிக் கூறுகிறாய்?

நிறைந்து காயமோடு சீவன் நின்றது ஆகில், இவ்வுடல்
குறைந்த போது, தானும் இத்தோடு ஒக்கவே குறைந்திடும்;
இறந்து போகும் இக்கடம் இறந்தபோது, நீர்க்குடத்து
உறைந்து உடைந்திடக் குடம் உலர்ந்தவாறு அது ஒக்குமே.157

தெளிவுரை:

இந்த உடம்போடு உயிர் நிறைந்து நிற்கும் என்று கூறினாய்; உடம்பில், உயிர் நீர் போல நிறைந்து நின்றதாயின், உடல் தேய்வுறும்போது உயிரும் தேய்ந்து, அறிவு குறையவேண்டும்.

குடம் உடையும்போது, அதில் உள்ள நீர் சிந்திக் கெடுவது போல, உடம்பு இறக்கும்போது, உயிரும் சிந்திய நீர் போலக் கெட வேண்டும். ஆகையால், உயிர் உடல் முழுவதும் நிறைந்து நிற்கும் என்று நீ கூறுவது பொருந்தாது.

கண்ட நூல்தரும் தன்மாத்தி காயமோடு அதன்மமும்
உண்டு மீது கீழ் உலாவி உற்று நின்றிடப், பொருள்
கொண்டது என்னில், அந்தமில் இரண்டு தன்மை கூடிடா,
வண்டு புட்கள் போல் எனின், வழங்கிடா கணத்திலே. 158

தெளிவுரை:

தன்மாத்திகாயம் – புண்ணியம் செய்த உடல். தான் செய்த நல்வினையின் பயனாகப் புண்ணிய உடம்பினை எடுத்துக்கொண்டு, உயிர் மேலே செல்லும் என்றும், தீவினைப் பயன் காரணமாகப் பாவ உடம்பினை எடுத்துக்கொண்டு, அது கீழே செல்லும் என்றும், இவ்வாறு இரண்டு உடலையும் ஒரே சமயத்தில் மாறி மாறி இந்த உயிர் கைக்கொள்ளும் என்றும், அருக பரமன் அருளிய நூலில் கூறியவாறு என்பாய் ஆயின், அது பொருந்தாது.

ஒரே காலத்தில் உயிர் இரண்டு உடம்பு எடுத்துக்கொள்வது இல்லை; எனவே இருவகை மாற்றம் அடைவது எப்படிப் பொருந்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தும்? மயிர்க்குட்டிப் புழு, வண்டு ஆயினாற் போலவும், மற்றொரு புழு, குளவி ஆயினாற் போலவும், உயிர் ஒரே சமயத்தில் இரண்டு உடம்பு எடுக்கும் என்று நீ கூறுவாய் ஆயின், அதுவும் பொருந்தாது. அந்தப் புழுக்கள் ஒரே சமயத்தில் மாற்றங்களை அடையவில்லை என்பது போதரும். 'பொருள்' என்பது இந்தச் செய்யுளில் ஆன்மா வைக் குறிக்கும். கணத்திலே – ஒரே சமயத்தில்.

நீடு பாவ புண்ணியங்களால் நிரய வானகம்
கூடுவோர்கள் இன்று நின்று கூட்டுவார்கள் இன்மையின்,
ஓடும் மாகனைத் திறத்தின் உற்றவாறு உரைத்தியேல்,
வீடு மாகணைக்கு நாடும் வில்லி போல் வேண்டுமே. 159

தெளிவுரை:

உயிர்கள் செய்த நல்வினை தீவினைகளை அறிந்து, அவற்றை சுவர்க்க நரக உலகங்களுக்குச் செலுத்துவிப்பவன் ஒருவன் இல்லை என்று நீ கூறுகிறாய். அவ்வாறாயின், சுவர்க்க நரகங்களுக்குச் செல்ப வர் எவரும் இல்லை என்பதாகும்.

பெரிய அம்பு விரைந்து சென்று குறிப்பிட்ட இடத்தைத் தானே அடையும் என்று நீ கூறுவாய் ஆயின், அது பொருந்தாது. அந்த அம்பைக் குறிபார்த்து எய்வதற்கு, அதனைச் செலுத்துபவன் ஒருவன் வேண்டும். அதுபோல, உயிர்களின் வினைப் பயன்களை அறிந்து செலுத்துவதற்கு ஒரு கர்த்தா வேண்டும் என்பது பெறப்படும். (வில்லி – வில்லில் அம்பைப் பொருத்திச் செலுத்துபவன்).

ஏணது ஒன்று புற்கலத்தின் எய்தும் என்னின், நாசமே
காணல் ஆகும்; அக்கடம், கழிந்த தன்மை இல்லவை
பூண வேண்டும்; மேலுறும் பொருத்தம் இன்மை ஒன்றினின்,
மாணவே அணுப் பொருள் நிகண்டவாதி வைத்ததே. 160

தெளிவுரை:

நீ கூறிய புற்கலப் பொருள் ஆகிய கல், இரும்பு, மரம் முத லியன ஓரறிவை உடையன என்று நீ கூறினால், ஓரறிவை உடைய எல்லாப் பொருள்களும் தாமே கெடுவதைக் காணவேண்டும். அவை அவ்வாறு கெடுதலைக் காணமுடியவில்லை. மேலும், ஓரறிவு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உடைய கல் இரும்பு முதலியன சுவர்க்க நரக உலகம் செல்ல வேண்டும். அஃது அவ்வாறு நடைபெறுவதையும் காண முடிய வில்லை.

நிகண்டவாதி ஆகிய நீ மட்டுமே, அத்தகைய சடசத்தியை பற்றிப் பேசி, அனுவாதம் கூறுகிறாய்; வேறு யாரும் இதைப்பற்றிச் சொல்பவர் இல்லை.

ஆறு காரியங்கள் மாற வேத அங்கங்கள் ஆம் எனின்
மாறி வாணிகம் செயாது இருக்க, வந்திடா தனம்;
மீறிலாத ஊழ் அது என்னின், எங்கும் உள்ளது ஊழ் அதே;
பேறு காரியம் விடப் பிறப்பது இல்லை பேசிலே. 161

தெளிவுரை:

உழவு, கைத்தொழில், வரைவு வணிகம், கற்றல், சிற்பம் என்னும் அறுவகைத் தொழில்களும் நீங்கினால், அதுவே தவம் என்று நீ கூறுகிறாய் ஆயின், அது பொருந்தாது. பொருள்களைப் பண்ட மாற்றுச் செய்து வணிகம் செய்யாது இருந்தால் ஊதியத்திற்கு இடம் இல்லை.

முன்வினைப் பயன் காரணமாகத் தவம் வரும் என்று கூறினால், அதுவும் பொருந்தாது. அவ்வாறாயின், மேற்சொன்ன அறு வகைத் தொழில் நீக்கமும் ஊழ்வினை காரணமாக வரும் என்று கூற வேண்டிவரும். சொல்லப்போனால், அறுவகைத் தொழில் நீக்கத்திற்கு முயற்சியே தேவை இல்லை என்பதாக முடியும். எனவே, தவமுயற்சி இல்லையேல், பிறப்பு அறுப்பதும் இல்லை என்பதை அறிவாயாக.

உடல் வருந்தல் மாதவங்கள் உறுதி என்று உரைத்திடில்
படவருந்து நோயினோர்கள் படர்வர் பொன் எயில் எனாய்;
திடம் வருந்தல் இன்பம் இச்சை செய்தல்; செய்தல் செய்தியேல்
கெட அரிந்திடாய்; உன்நாசி கேடில் இன்பம் முன்னியே. 162

தெளிவுரை:

உடலை வருத்துவதே பெருந்தவத்திற்கு உறுதி தரும் என்று நீ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூறினால், உடலில் நோய் ஏற்பட்டு, அதனால் வருந்துபவர்கள் அனைவரும் இன்ப உலகம் (பொன்எயில்) எய்தினவர்கள் என்று கூறவேண்டி வரும். அதனை நீ ஏற்கமாட்டாய்.

எனவே, உடலை வருந்தச் செய்வதே முத்தியின்பத்திற்கு வழி என்று கூறுவாய் ஆயின், அந்த முத்தி இன்பத்தைக் கருதி, உன் மூக்கை அறுத்திடுவாயாக.

பூர்வ கன்மம் அற்றிடப் புசித்த பின்பு பொன்னெயில்
நேர்வது என்னின், அக்கன்மத்து நிச்சயம் இலாமையில்
தீர்வது இன்மை தீரின்வாயில் சேர்வது இன்மை தெண்கடல்
நீர் வறந்தபோது, பூஞை மீன் அருந்த நின்றதே. 163

தெளிவுரை:

முன்பிறப்புக்கள் பலவற்றில் செய்த வினைகள் முழுவதும் இந்தப் பிறப்பிலே அனுபவித்துத் தீர்த்த பிறகே, இன்ப உலகம் எய்தலாம் என்று நீ கூறுவாய் ஆயின், அது பொருந்தாது. வினைகளுக்கு அளவு இல்லை ஆகலின், அவை அனைத்தையும் அனுபவித்துத் தொலைக்க முடியாது.

வினைப்பயன்கள் முழுவதும் புசித்துத் தொலைந்துவிட்டால், பின்பு பொறிகள் புலன்களைக் கூடா. ஆகலின் மோட்சத்திற்கு உபாயம் ஆகிய தவம் செய்ய இயலாமற் போகும். எனவே, வினைப் பயனை முற்றிலும் புசித்துத் தொலைத்த பின்னரே முத்தியின்பம் கிட்டும் என்று நீ கூறுவது எப்படி இருக்கிறது என்றால், தெளிந்த கடல் நீர் வற்றியவுடனே மீன்களைத் தின்னலாம் என்று. அது வற்றும் வரைக்கும் அலைவாய்க்கரையில் காத்து இருக்கும் பூனையின் நினைப்பைப் போல் இருக்கிறது.

கூறு கூவல் மன்னும் அக்குடம் குறித்து நீள் கரை
ஏறல் உற்ற தன்மை, நீ ஒருத்தர் இன்றி ஏறுதல்,
வேறு ஒருத்தன், அக்குடத்தை மீது நின்று எடுக்கவே,
ஏறல் உற்ற தன்மையில், சிவன் திறத்தில் நின்றிடே. 164

தெளிவுரை:

இறைவன் உதவி இன்றி, நீ இன்ப உலகம் அடைவாய் என்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூறுவது, கிணற்றினுள் கிடக்கும் குடம் கரையை நோக்கித் தானே ஏறி வந்தது என்று கூறுவதுபோல் உள்ளது.

கிணற்றில் கிடக்கும் குடத்தை, மேலே நின்று ஒருவன் எடுத்தால்தான், அக்குடம் கரையை ஏறி வந்து அடையும். அதுபோல, உன் வினையைத் தொலைவித்து, உனக்கு முத்தி இன்பத்தைத் தருபவன் இறைவனே என்பதை நீ அறியவேண்டும். அறிந்து சிவபெருமானையே தெய்வமாகக் கொண்டு, அவனருளிய வேதாகமங்களில் சொல்லப்பட்ட சரியா, கிரியா, யோக, ஞானங்களில் நீயும் கடைத்தேறுவாயாக.

7. ஆசீவகன் மதம் (அமணர்)

என் உயிர் அதற்குப் போல எவர்க்கும் ஒத்து இருப்பன் என்று,
தன்உயிர் வருந்தத் தானும் தலையினைப் பறித்துப் பார்மேல்
மன்உயிர் எவற்றினுக்கும் வருந்தவே அறங்கள் சொல்லும்
அன்னதோர் வாய்மை ஆசீவகன் அமணர்களில் கூறும். 165

தெளிவுரை:

என் உயிர்க்கு நான் இரக்கப்படுவதுபோல, எல்லா உயிர்களுக்கும் நான் இரக்கப்படுபவன் என்று சொல்பவன், அமணர் இரு வகையில் ஆசீவகன் என்பவன் ஆவன்.

தன் உயிர் வருந்தும்படி, தன் தலை மயிரைப் பறித்து வருவதே அறம் ஆகும். அவ்வாறே உலகில் உள்ள நிலை பெற்ற உயிர்கள் அனைத்தும் தம் தலை மயிரைப் பறித்து வருத்தம் உறுவதே அறம் என்று ஆசீவக மதம் கூறுகிறது.

வரம்பு இலா அறிவன் ஆதி வைத்தநூற் பொருள்கள் தாமும்
நிரம்பவே அணுக்கள் ஐந்து நிலம், புனல், அனல், கால் சீவன்
பரந்து இவை நின்ற பான்மை பாரது கடிமை; சீதம்
தரும் புனல்; சுடும் தீ; வாயுச் சலித்திடும்; உயிர் போதத்தாம். 166

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

எல்லையற்ற அறிவு உடையவன் ஆகிய அருகபரமன், ஆதியிலே இயற்றிய நூலில் கூறிய பொருள்கள் ஐந்து வகைப்படும். அவை, நிலம், நீர், நெருப்பு, காற்று, உயிர் என்பன ஆகும். அவற்றுள் நிலம் வன்மை உடையது; நெருப்பு சூடு உடையது; நீர் தண்மை உடையது; காற்று இயங்கும் தன்மையது; உயிர் அறிவுடையது.

பார் புனல் பரக்கும்; கீழ்மேல் படர்ந்திடும் தேயு; வாயுச்
சேர்வது; விலங்கின் உள்ளம் அவற்றொடு சேரும்; வேறு
சார்வது பெற்ற போது சார்ந்த அப்பொருளின் தன்மை
நேர்வதும் ஆகி நிற்கும் இது பொருள் நிகழ்த்தும் ஆறே. 167

தெளிவுரை:

நிலமும் நீரும் கீழே விரிந்து நிற்கும்; நெருப்பும் காற்றும் மேலே பரந்து செல்லும். உயிர் உடம்போடு சேர்ந்து இருக்கும்; அஃது உடம்பை விட்டு நீங்கினால், பிற நால்வகைப் பொருள்களோடு சேரும். அந்நிலையில் அவற்றின் தன்மையைப் பெற்று உயிர் நிற்கும். இதுவே ஐந்து பொருள்களைப் பற்றிய செய்தியாகும்.

உணர்தரா அணுக்கள் நான்கும் ஒன்று கெட்டு ஒன்றது ஆகா;
புணர்தரா ஒன்றில் புக்கு, ஒன்று ஆயினும், பொருந்தி வாழும்;
அணைதரா புதிய வந்து இங்கு அழிதரா; பழைய வான
இணைதரா ஒன்று, ஒன்று ஆகி மாறுதல் ஒன்றும் இன்றே.168

தெளிவுரை:

உயிரை நீங்கலாக உள்ள மற்ற நான்கு பொருள்களும், ஒன்றை ஒன்று அறியும் தன்மை உடையன அல்ல; அவை ஒன்று கெட்டு, மற்றொன்றாக மாறமாட்டா; ஒன்று மற்றொன்றில் புகுதலும் அன்று. ஆயினும், அவை உடம்பிலே பொருந்தி வாழும். இவை தமக்குள்ளே கூடுவனவே அன்றிப் புதியனவாக இவற்றோடு கூடும் பொருள் ஏதும் இல்லை. இவை ஒன்றாகக் கூடுமே அன்றித் தனித் தனியாகக் கூடுவதில்லை. பழமையாகவே கூடின இப்பொருள்கள் ஒரு காலத்தும் மாறுவது இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்டு முன் விரித்தல் நீட்டல், குறுக்குதல், குவித்தல்,
ஊன்றல்,
உண்டு தின்று உலர்த்தல், மீட்டல், உடைத்திடல், ஒன்றும்
ஒண்ணா
விண்டுபின் புறம்பும் போகும்; வேறு நின்று உள்ளும் மேவும்;
பண்டும் இன்று என்றும் எங்கும் பரந்து ஒரு தன்மைப்
பாலே. 169

தெளிவுரை:

முன்பு கூறிய உயிர்களைப் பரப்புதலோ, நீட்டுதலோ, ஒடுக்குதலோ, ஒன்றினுள் செறிந்தலோ, அமுக்குதலோ, உண்டுதின்று ஒழித்தலோ, மீண்டும் தோற்றுவித்தலோ சின்னப்படுத்தலோ செய்ய முடியாது. உயிர்களை மேற்குறிப்பிட்டபடி ஒன்றும் செய்ய முடியாது.

அவை உடம்புக்குப் புறத்தும் உள்ளும் நிலவுவன. உயிர்கள் முற்காலத்தும் இக்காலத்தும் எக்காலத்தும் எவ்விடத்தும் நிறைந்து ஒரு தன்மையனவாய் உள்ளன.

கண்ணினில் காண ஒண்ணாச் சனித்து, அந்தக் கன்மத்தாலே
நண்ணிடும் உருக்கள் ஆகி நின்றபின் நரரோ காண்பார்?
விண்ணினில் தேவர் காண்பர் ஓர் அணுமிக்க நான்காய்
எண்ணிய பொருள்கள் எல்லாம் இசைவது என்று
இயம்பும் இன்னே. 170

தெளிவுரை:

உயிர் எனப்படும் அணு, கண்ணினால் காண முடியாதது. வினை காரணமாகப் பிறந்து விரும்பும் உருவங்கள் பல எய்தி நிற்கும். அதனை மனிதர்களால் அறிய முடியாது; விண் ஆகிய பொன் எயில் வட்டத்தில் உள்ள தேவர்களே அவ்வுயிரை அறிவர். உயிர் பிற நான்கு அணுக்களால் ஆகிய பொருள்களில் எல்லாம் பொருந்தும் என்று நூல் சொல்லும்.

ஒன்றினை ஒருவி மூன்று அங்கு உற்றிடா; இரண்டு விட்டு
நின்றிடா; இரண்டு கூடும்; நெறிநிலம் நான்கு; நீர் மூன்று;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இன்று இரண்டு அழல்; கால் ஒன்றாய் இசைந்திடும்; பூமி
இவ்வாறு
என்று, நீர் தீ கால் ஆதி ஈண்டுவது என்று இயம்பும். 171

தெளிவுரை:

உயிர் அணு நீங்கலாக உள்ள நான்கு அணுக்களும் ஒன்றாகக் கலந்து இருக்குமே அன்றி மும்மூன்றாகவும் ஈரிரண்டாகவும் கூடுவதில்லை. நிலம் நான்கு உடையது; நீர் மூன்று குணம் உடையது; நெருப்பு இரண்டு குணம் உடையது. காற்று ஒரு குணம் உடையது; இந்த முறையிலே மண் நீர் நெருப்பு காற்று எனப்படும் அணுக்களின் குணங்கள் கூடி நிற்கும் என்று நூல்கள் கூறும்.

வெண்மை நன்பொன்மை செம்மை கழி வெண்மை நீலம்
பச்சை
உண்மை இவ்வாறின் உள்ளும் கழி வெண்மை ஓங்கு
வீட்டின்
வண்மையதாகச் சேரும்; மற்று இவை உருவம் பற்றி
உண்மை இவ்வொட்டுத் தீட்டுக் கலப்பினில் உணரும்
என்றான். 172

தெளிவுரை:

வெண்மை, பொன்மை, செம்மை, நீலம், பச்சை, மிக்க வெண்மை ஆகிய ஆறு நிறங்களுள், மிக்க வெண்மை என்பது பெரிய பொன்னெயில் வட்டத்தின் நிறம் ஆகும். எஞ்சியுள்ள ஐந்து நிறங்களும் மற்றை நான்கு அணுக்களால் ஆகிய வருவங்களைப் பற்றி நிற்கும். உயிரணு. இந்த உருக்களைப் பற்றுதல், ஒட்டுதல், கூடுதல் என்பனவற்றால் அறியும் என்று கூறினான்.

பேறு, இழவு, இடையூறு, இன்பம், பிரிவிலாது இருக்கை
மற்றும்
வேறொரு நாட்டில் சேறல், விளைந்திடும் மூப்புச் சாதல்
கூறிய எட்டும் முன்னே கருவின் உட்கொண்டது ஆகும்;
தேறிய ஊழில் பட்டுச் செல்வது இவ்வுலகம் என்றான். 173

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

செல்வம் முதலியன கூடுதலும், அவை நீங்குதலும், இன்பம் பெறுதலும் துன்பம் உறுதலும், உடல் நிலை பெறுதலும் மரணம் நிகழ்தலும் வெளிநாட்டுக்குச் செல்தலும், முப்புநிலை அடைதலும் ஆகிய எட்டும் முற்பிறப்பின் வினையில் உள்ளதாய்க் கருவில் அமைந்து கிடப்பன. எனவே, தெளிவாக முற்பிறப்பில் செய்த வினையில் அகப்பட்டு, இந்த முறையிலே இவ்வுலகம் நடைபெறும் என்றான்.

புண்ணிய பாவம் என்னும் இரண்டு அணுப்பொருந்த
வைத்தே
எண்ணிய இவற்றினோடும் ஏழ்என எங்களோடே
நண்ணிய ஒருவன் கூறும் ஞானம் இவ்வாறது என்று
கண்ணிய கருத்தினோர்கள் கதியினைக் காண்பர்
என்றான். 174

தெளிவுரை:

புண்ணியம், பாவம் என்னும் இரண்டினோடு, அணுக்கள் ஐந்தையும் கூட்டிப் பொருள்கள் ஏழு என்று, எங்கள் அருகபரமன் கூறுகிறான். அவன் கூறியவாறு இதுவே ஞானம் என்று கருதுபவர்களே நற்கதி ஆகிய விடுபேற்றினைக் காண்பர் என்றான்.

ஆசீவகன் மதம் மறுதலை

வாராநெறி வீடு ஆனபின் மண்மேல் அவன் வந்து
தாராமையின் நூலானது தானோ உளது இன்றாம்?
சேராமையில் அணுவானவை ஐந்தும் ஒரு தேயத்து
ஓரான் ஒரு காலத்தில் ஒன்றாம் உணர்வு இன்றாம். 175

தெளிவுரை:

வீடு என்பது, மீண்டும் உடல் எடுத்து வாராத வழி ஆகலின், வீட்டுலகத்து இருந்த அருகபரமன், மண்ணுலகத்திற்கு வந்து நூல் தந்தான் என்பது பொருந்துமாறு இல்லை. நூல் தானே உண்டாகாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒப்பற்ற இடம் ஆகிய பொன் எயில்வட்டத்தில், அணு ஐந்தும் ஒருங்கு சேரமாட்டா. எனவே, அருகனுக்கு உடம்பு எடுத்தல் இய லாது எல்லா அணுக்களையும் ஒருங்கு திரட்டி அறிய இயலாமையால் அருகன் உலகப் பொருள் ஒன்றையும் அறிய முடியாது.

இருபான்மையர் இவர் மண்டலர் செம்போதகர் என்றே
வருபான்மையர் இவர் மண்டலர் மண்மேல் வருநூலும்
தரு பான்மையர் எனின் நீ தலம் அதில் வாழ்பவர் தம்போல்
ஒருபான்மையின் உளர் ஆகுவர் உணராது உரை செய்தாய்.176

தெளிவுரை:

அருகபரமர் இருவகையினராய் இருப்பர். அவர்களுள் ஒருவர் மிக்க அறிவுடைய செம்போதகர், மற்றொருவர் மண்டலர். இவ்விரு வருள் மண்டலர் நிலவுலகில் வந்து, அணுக்கள் ஐந்தின் செய்தி அறிந்து, நூல் இயற்றுவர் என்று நீ கூறினால், அவர் மக்களுள் ஒருவர் ஆவர். மேலும், ஒரே சமயத்தில் ஒருவர் மக்களுடம்பும் தேவருடம்பும் உடையவர் ஆகார். எனவே, நூல் இயற்றுவது மக்களுள் சிறந்தவர் செயல் என்பதாக முடியும். ஆக அருகபரமர் நூல் தந்தார் என்று நீ கூறுவது பொருந்தாது.

உயிர் ஆனவை உடல் தீண்டிடல் ஒட்டுக் கலப்பு எய்தும்
பயில்வால் உணர்வு எய்தும் எனும் மொழியானவை
பழுதாம்;
துயிலார் தரும் அவர் பாலகர் தொடரார் அறிவினை நீ
செயிரார் தரும் உரையே தரும் இதுவோ உன் செயலே. 177

தெளிவுரை:

உயிர்கள் எனப்படுவன, உடலைப் பற்றியும் உற்றும் கலந்தும் செய்யும் தொழிலால் அறிவைப் பொருந்தும் என்று நீ சொல்வது பொருந்தாது. அது குற்றம்.

அஃது எவ்வாறு எனின், ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பவரும், குழந்தைப் பருவத்தில் இருப்பவரும், பற்றியும் உற்றும் கலந்தும் அறிவினை அறிவதில்லை. நீ கூறுவது பெரும் பிழையாக உள்ளது. உன் செயலும் அப்படித்தான் இருக்குமோ?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அணு ஆனவை கீழ்மேல் உள ஆனால் அவயவமும்
நணுகா எனலாமே வரின் நாசம் அவை எய்தும்
அணுகா எனில் இவை தொள்ளை கொள் ஆகம் உளவாகும்
துணிவால் இவை கலவா பல தொகையாம் வகை
இலவாம். 178

தெளிவுரை:

அணுக்கள் ஐந்தனுள், உயிர் நீங்கலாக உள்ள நான்கனுள், கீழ் நோக்கி இரண்டும், மேல் நோக்கி இரண்டும் இருக்கும் என்று நீ கூறினாய். அவ்வாறாயின், அவை தம்முள் ஒருங்கு இயைந்து, உறுப்புக்களாய் உடம்பில் பொருந்தமாட்டா என்பதாக முடியும்.

மேலும், அந்த அணுக்கள் நான்கும் உடம்பின் உறுக்களாய்க் கூடி உரு எடுத்தால் உடலின் உறுப்புக்கள் அழிவது உண்மை என்பதால், அணுக்கள் நான்கும் நித்தியப் பொருள் என்று நீ கூறுவது பொய் ஆகும்.

அணுக்கள் நான்கும் உடலின் உறுப்புக்கள் ஆகா என்பாயாயின், அவற்றின் குணங்கள் ஆகிய குருதி தசை முதலியன கலந்து இரா; அவை பலபல பகுதியாய்ப் பிரிவுற்று நிற்கும். அந்நிலையில், உடம்பு என்ற ஒன்று இல்லையாய் முடியும்.

மிகையாம் அணு உளவாகையின் அவையாம் மிக என்னில்
தொகை நாவிடை அறலால், அவை தொகும் ஆறில ஆகும்;
பகையாகையின் மிசை தாழ்மையின் நிலையாவகை
பண்ணும்;
நகையாம் உரை கழி ஆயிரம் அவை தூண் என நண்ணா. 179

தெளிவுரை:

உயிர் என்னும் அணு, உண்மையில் பலவேறு யோனி பேதங்கள் ஆகிய உருக்கள் ஆகும் என்று நீ கூறுவாய் ஆயின், அந்த அணு அறியும் தன்மை உடையதே அன்றி, அணுக்கள் நான்குடன் தானே கூடும் இயல்பு உடையதன்று. மேலும் அந்த அணுக்கள் நான்கும் மேலும் கீழுமாய் நிற்கையால், ஆன்மா ஓர் இடத்துக் கூடா இயல்பினை உடையது. ஆயிரம் கோல்களை ஒன்று சேர்த்தாலும் அவை, ஒரு தூண் ஆகா.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூடா அணு அறியாமையின் வளி கூட்டுதல் கூறின்
நாடாவளி அணுவானவை நணுகச்செயும் அவரை
நீடாவினை தன்னால் என்னின் நினைவின்றது இன்றாம்
தேடாய் ஒருவனை நீ இவை செய்வான் உளன் என்றே. 180

தெளிவுரை:

நீ கூறிய அணுக்கள் ஐந்தும் தமக்கென அறிவற்றவை. எனவே, அவை தாமே கூடுவனவல்ல. வாயு அணுவும் அறிவற்றது; எனவே அது பிற பூதங்களைக் கூட்டும் என்பதும் பொருந்தாது.

பழைய கன்மத்தினாலே வாயு கூட்டும் என்றால், வினையும் அறிவற்றது; அது வினை செய்யும் உயிரை அறியமாட்டாது. எனவே, வினைக்கு ஏற்ற உடம்பை உயிர்க்குக் கூட்டுவிக்கும் கர்த்தா ஒருவன் உளன் என்பதை அறிவாயாக.

8. பட்டாசாரியன் மதம்

வேதமே ஓதி நாதன் இலைஎன்று விண்ணில் ஏறச்
சேதமாம் கன்மம் செய்யச் செயிமினி செப்பும் நூலின்
நீதியே கொண்டு பட்டா சாரியன் நிகழ்த்தும் நீர்மை
ஓதநீர் ஞாலத்துள்ளே உள்ளவாறு உரைக்கல் உற்றாம்; 181

தெளிவுரை:

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதத்தையே பெரிதாகப் பேசிக் கடவுள் இல்லை என்று கூறி, விண்ணுலகம் எய்துவதற்குப் பொருள் நாசம் செய்யும் சோமயாகம் முதலான கன்மங்களைச் சொல்பவன் சைமினி முனிவன், அவன் கூறிய மீமாஞ்சை நூலின் கருத்தைத் த்ழுவி பட்டாசாரியான் சொல்லும் முறையைக் கடலால் சூழப்பட்ட இப்பூவுலகில் உள்ளபடியே கூறுகிறோம்.

உற்றிடும் காமம் ஆதி குணங்கள் தாம் உயிர்கட்கு உண்டாம்;
மற்றுஇவை தருமே ஆயின், மறைமொழி வாய்மை இன்றாம்
கற்றிடு நூலால் போதம் கலப்பது கல்வி இன்றேல்
பெற்றிடு மழவும் மூங்கை என்னவே பேசலாமே. 182

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

உயிர்களுக்குக் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், அகங்காரம், இடும்பை ஆகிய குணங்கள் கூடி நிற்கும். இக்குணங்களே ஆன்மாவுக்கு அறிவைத் தரும் ஆகில், வேதவாக்கு களால் ஒரு நன்மையும் இல்லை ஆகும்.

எனவே, உயிர்கள் கற்ற நூல் எவ்வளவோ, அவ்வளவே அவற்றிற்கு அறிவு உண்டாகும். ஆக, கல்வியறிவு இல்லாத உயிர் களைப் பாலர் என்றும், ஊமை என்றும் கூறலாம்.

உண்டு ஒருகடவுள் வேதம் உரைத்திட உயிரின் தன்மை
கொண்டவன் அல்லன் என்றும் கூறிடின், உருவம் கூடில்
பண்டைய உயிரே ஆகும்; படித்தநூல் அளவு ஞானம்
கண்டிடும்; உருவம் இன்றேல் கருதுவது இல்லை என்றான்.
183

தெளிவுரை:

வேதத்தைச் சொன்ன கடவுள் ஒருவன் உண்டு என்றும் அக் கடவுள் உயிர்க்குள்ள இயல்புடையனல்லன் என்றும் கூறினால், உருவம் இல்லாமல் அவன் நூல் இயற்ற முடியாது. எனவே அந்தக் கடவுள் உருவம் உடையவன் ஆயின், அவன் உயிரின் இயல்பை உடையவனாவான். உயிர் தான் கற்ற நூல் அளவே, அறிவை உடையது. அந்தக் கடவுள் இயற்றிய நூல் வேதம் ஆகாது. எனவே வேதம் தானாக உண்டானதே ஆகும்.

தேவரும் முனிவர் தாமும் சித்தரும் நரரும் மற்றும்
யாவரும் உரைப்பர் வேதம் இயம்பினர் இன்னர் என்னப்
போவது அன்று என்று நாலும் பரம்பரை புகல்வது ஆகும்;
கூவல்நீர் என்னில் கொள்ளேன் மறுமையைக் குறித்த
தலாலே. 184

தெளிவுரை:

தேவர், முனிவர், சித்தர் முதலியவர்களும் பிற மனிதர்களும், வேதம் இயற்றியவர் இன்னார் என்று அறியமுடியவில்லை என்றே,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சொல்கிறார்கள். வேதநூல் பரம்பரையாக ஓதப்பட்டும் வருகிறது. கிணற்று நீர்போல் சுரப்பது என்று அதனைக் கூறுவதும் பொருந்தாது. கிணறு ஒருவனால் தோண்டப்பட்டது. வேதம் சுயம்பாக உள்ளது. வேதம், மறுமையைக் குறித்துப் பேசுவதால் இம்மையில் அஃது ஒருவனால் செய்யப்பட்டதன்று.

உன்னிய அங்கம் ஆறும், மூன்று உபவேதம் தானும்,
தன்னுளே அடக்கி வேறு தங்கிடா வகையைச் சார்ந்து
முன்னம் ஓர் தோற்றம் இன்றி முடிவின்றி நித்தம் ஆகி
மன்னி ஓர்இயல்பே ஆகி வழங்கிடும் மறை அது என்றான், 185

தெளிவுரை:

வேதம், ஆறு அங்கங்களையும் மூன்று உபவேதங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது. ஆறு அங்கங்கள் ஆவன, சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சோதிடம், சந்தோ விசிதி என்பனவாகும். மூன்று உபவேதங்கள் ஆவன, ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வ வேதம் என்பன வாகும்.

வேதம் எப்பொருளும் தன்னகத்தே அடங்கப்பெற்றுள்ளது. தோற்றக்கேடு இன்றி, நித்தமாய், ஓர் இயல்பு உடையதாய் இருப்பது.

செய்தியும் நெறியும் மேவும் தேவரும் பொருளும் எல்லாம்
எய்திய பன்மையாலே ஓர் இயல்பு இயம்பாது ஆகும்;
ஐயமில் காலம் மூன்றும் அறிந்தபின் நெஞ்சகத்தாய்
மெய்யதாய் வந்து தோன்றி விளங்கிடும் வேத நூலே. 186

தெளிவுரை:

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் பல செய்திகளும், அச் செய்திகளின் வழியில் வரும் தேவர்களும், அவர்களால் கொடுக்கப் பட்ட இகலோக பரலோகப் பொருள்களும் ஆகிய இவற்றையெல்லாம் வேதம் பலவாறாகச் சொல்கிறது. எனவே வேதம் ஒருநெறிப்பட்ட செய்தியைச் சொல்வதன்று.

படைத்தல் முதலிய முத்தொழில்களின் அடிப்படையில், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று அனைவராலும் அறியப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

படும் முக்காலத்தையும் வேதம் கூறுகிறது. எனவே காலம் என்பது தோன்றுவதற்கு முன்பு வேதம் அனாதியே உள்ளது என்பது பெறப் படும்.

தப்பு இலாவாகும் தாதுப் பிரத்தியம் தன்னினோடே
ஒப்பு இலாதாம் பிராதி பதிகமாம் உறுப்பும் கொண்டு
செப்புமாம் வேதம் சொன்ன விதிப்படி செய்யச் சேம
வைப்பு அதாம் வீடு பாசம் மருவலாம் ஒருவலமே. 187

தெளிவுரை:

முக்காலத்தையும் கூறும் வேதம், பகுதி, விகுதி முதலிய பகு பதங்களையும், உவமை இல்லாதது ஆகிய பெயர்ப் பகாப்பதம் என்னும் உறுப்புக்களையும் தன்னகத்து அடக்கிக் கொண்டு சொல்வது ஆகும். வேதம் சொன்ன விதிப்படி ஒழுகினால், பாசக்கட்டு விட்டு, பாதுகாப்புப் பெருஞ்செல்வம் ஆகிய வீட்டின்பத்தைப் பெறுதல் கூடும்.

போக்கோடு வரவு காலம் ஒன்றினில் புணர்வது இன்றி
ஆக்கவேறு ஒருவர் இன்றி அநாதியாய் அணுக்கள் ஆகி
நீக்கிடா விடையில் கூடி நிலம் முதலாக நீடி
ஊக்கமார் உலகம் என்றும் உள்ளது என்று உரைக்கலாமே. 188

தெளிவுரை:

வலிமை பெற்ற இந்த உலகம் எந்த ஒரு காலத்திலும் தோன்ற வும் இல்லை; அழியப்போவதும் இல்லை. இதனைக் காப்பதற்கு ஒரு கடவுளும் தேவை இல்லை. இஃது அநாதி உள்ளது.

இவ்வுலகம் உயிரோடு தொடர்பு உடையது என்றும் நீங்காத நல்வினை தீவினைகளோடு கூடி, நிலம் முதலாகிய தத்துவங்களாக நிலைபெற்று என்றும் உள்ளது இவ்வுலகம் என்று கூறலாகும்.

நித்தமாய் எங்கும் உண்டாய் நீடுஉயிர் அறிவு தானாய்ப்
புத்திதான் ஆதி யாய கருவியின் புறத்தது ஆகிச்
சுத்தமாய் அருவம் ஆகித் தொல்லை வல்வினையின் தன்மைக்கு
ஒத்ததோர் உருவம் பற்றிப் புலன்வழி உணர்ந்து நிற்கும். 189

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

உயிர் என்பது என்றும் உள்ளது; அழிவற்றது; நிறைவை உடையது. அறிவையே தனக்கு வடிவாய் உள்ளது; புத்தி முதலிய தத்துவங்களிடத்துக் கலவாமல் நிற்பது; தத்துவங்கள் நீங்கியபோது, அழுக்கு அற்று இருப்பது. அருவமாய்ப் பழையதாய் வரும் நலவினை தீவினைகளுக்கு ஏற்ற உடலோடு கூடி, பொறிகள் வாயிலாகக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் தன்மையது.

செயல்தரும் வினைகள் மாய்ந்து சிந்தையில் சேர்ந்து நின்று
பயனொடு பலியா நிற்கும் பலாலமும் தழையும் எல்லாம்
வயல்தனில் மருவி நாசம் வந்தபின் பலத்தை வந்து இங்கு
இயல்பொடும் தந்தாற் போல என்றும் பின் இயம்பு
கின்றான். 190

தெளிவுரை:

முற்பிறப்பில் மனம் வாக்குக் காயங்களினால் செய்யப்பட்ட நல்வினை திவினைகளின் தூலத்தன்மை அப்பிறப்பிலேயே கெட்டு விடும். அவற்றின் சூக்குமத் தன்மை இந்தப் பிறப்பில் உயிரோடும் பொருந்தி பயனாக வரும். அஃது எதுபோல எனின், வைக்கோல் தழை முதலானவைகள் எல்லாம், வயலில் இடும்போது அவற்றின் உருவம் கெட்டுப், பின்பு பயிர்க்கு நன்மையைச் செய்தல் போல் ஆகும். இவ்வாறு கூறி மேலும் சொல்வான்.

நீதியால் நீத்த கன்மம் நிகழ்ந்திடச் சுபத்தை நீங்கார்;
தீதுஇலா இச்சா கன்மம் செந்தழல் ஓம்பிச் செய்ய
ஏதுதான் வேண்டிற்று எல்லாம் எய்தலாம்; சோம யாகம்
ஆதிதான் ஆசை வீசி அமைத்திட வீடு அது ஆமே. 191

தெளிவுரை:

நித்திய கருமங்களை முறையாகச் செய்தால், இன்பம் நீங்காது இருக்கும். குற்றமற்ற காமியப் பயன் கருதிச் செய்யும் கருமங்களைத் தீமூட்டிச் சிறப்பாகச் செய்தால், விரும்பிய எல்லாவற்றையும் அடைய லாம். பயன் கருதாமல் பேராசை அற்றுச் சோம யாகம் முதலியவை களைச் செய்தால், அதற்குப் பயன் வீடுபேறு பெறுதலே ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கருதிய கன்மம் ஞானம் இரண்டும் காலாகக் கொண்டு
மருவிடல் ஆகும் வீடு; மதிதனை மதித்துச் செய்து
ஒருவிடில் பதிதன் ஆகும்; பதிதனைக் கதியில் உய்க்கத்
தருவதோர் நெறிதான் இல்லை; என்னவும் சாற்றினானே. 192

தெளிவுரை:

வேதம் சுயம்பு என்னும் அறிவையும், அது விதிக்கும் கருமத்தையும் இரண்டு இடமாகக் கொண்டு வீட்டின்பத்தைப் பெறல் ஆகும். ஞானமே போதும், கருமம் வேண்டாம் என்பவன் வேதத்திற்குப் புறம்பாவன்; அவன் கன்ம சண்டாளன் ஆவன்; அவனை நற்கதியில் உய்க்கும் வழி வேதத்திலும் இல்லை என்று சொன்னான்.

பசுப்படுத்து இயாகம் பண்ணப் புண்ணியம் ஆவது என்று
வசிப்பில் நான்மறைகள் சொன்ன வழக்கினால் வாய்மையாக
நசிப்பிலா மந்திரங்கள் நவிற்றலின் இன்பம் ஆகும்;
பசிப்புளான் ஒருவன் உண்ணப் பசியது தீர்ந்த பண்பே. 193

தெளிவுரை:

எப்போதும் பசுவைக் கட்டி, யாகங்களைச் செய்வது புண்ணியம் என்று நான்கு வேதங்களும் சொல்கின்றன. அவற்றில் சொன்ன படி, கெடுதல் இல்லாத மந்திரங்களைச் சொல்லுதலால், போக மோட்சம் ஆகிய இன்பம் உண்டாகும். அஃது எதுபோல எனில், மிகவும் பசியுள்ளவன் ஒருவன் உண்டால், பசி தீர்ந்து இன்புறுதல் போல ஆகும்.

பட்டாசாரியன் மதம் மறுதலை

வேதம் சுயம்பு எனவே தந்த வாய்மொழியில்
வேறும் பிரமாணம் உளதேல்,
நீதந்து காண் இங்கு மாதுங்க பாரதமும்
நேர்கண்டது ஆகும்; அதுபோல்
ஓதும் சொலாய் வருதலானும் கடாதிபட
மோ வந்திடா ஒருவரா
லேதந்ததாம் மறைகளாய் வந்த வாய்மொழியும்
வெறு இந்து சேகரனதே. 194

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

பட்டாசாரிய, வேதம் சுயம்பு என்றனை நீ அவ்வாறு கூறுகிறாயே அன்றி, வேதம் தன்னைச் சுயம்பு என்று கூறவில்லையே. அல்லது வேதம் சுயம்பு என்பதற்கு வேறு பிரமாணம் உள்ளதாயின், அதனை நீ இங்கே காட்டு. ஐந்தாவது வேதம் என்று சொல்லப்படுகின்ற மகாபாரதம் வியாசரால் சொல்லப்பட்டது. அதுபோல இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் சொல் வடிவில் உள்ளமையால், ஒருவரால் சொல்லப்பட்டதாகவே இருக்க வேண்டும். குடம், உடை முதலியன செய்வார் இன்றி, உண்டாகாமை போல, வேதமும் அதனைச் சொன்னான் ஒருவன் இன்றி உளது ஆகாது. மேலும், மறை பொருளாய் மரபு வழியில் வந்துள்ள வேறு பல உண்மைகளும் இறைவனால் அருளிச் செய்யப்பட்டனவே ஆகும்.

உரை தந்திடான் ஒருவன் எனில், இந்த வானினிடை
ஒலி கொண்டு மேவி உளதாம்;
புரை தந்தவாம் மறைகள் அபிவெஞ்சமா ஒளிர்கை,
பொருள்தந்த தீபம் அதுவேல்,
வரை தந்ததால், இவ்வுரை கபிலன் சொல் ஆகும்அது
மறைகின்றவாறும் வரவும்
விரைவின் சொலாய் இதனை எதுகொண்டு மேவுவது
விடைகொண்டதால் உன் உரையே. 195

தெளிவுரை:

'வேதம் தானே உண்டானது; அதனை ஒருவன் சொல்லவில்லை' என்று கூறுகிறாய். அவ்வாறாயின் வானில் தோன்றிய ஓசையினால் வேதம் உண்டானதாக வேண்டும். அந்நிலையில், வேதங்கள் சொல்லும் பொருளும் விளங்காத கீழ்ப்பட்ட ஒலிக்கூட்டம் ஆதல் வேண்டும்.

வேதம் பிற பொருளை விளக்கித் தன்னையும் விளக்கும் தன்மையது என்றால் வானில் உதித்த வேதம், வானிற்கு உட்பட்டவற்றையே விளக்கும்; அதற்கு மேல் உள்ளவற்றை விளக்காது; எனவே தேம் ஓர் எல்லைக்கு உட்பட்டது ஆகும். இக்கருத்து நிரீச்சுர சாங்கிய நூல் இயற்றிய கபில முனிவர் சொன்னதாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேதம் அருவமா உருவமா என்பதை எப்படி அறிய முடியும்? எதனைக் கொண்டு வேதம் அத்தகையது என்பதை நீ அறிந்தாய்? உனக்குத் தோன்றியவாறு எல்லாம் நீ சொல்வது பிரமாணம் ஆகாது.

உருவின்கணே மருவிவரில், இன்று தேரர்உரை
உளது; உங்கள் நூலின் மறையும்
தருகின்ற நாதர் அவர் இவர் என்று நாமம் அது
தடவந்திடாமை அதனால்
வரும் என்று நேடிஎனில், வளர்கின்ற தீவு அதனில்
வருகின்ற ஆடை பலவால்
ஒருதந்து வாயன் அவன் இவன் என்ற போதில் இவை
உள என்று நீடி அவையே. 196

தெளிவுரை:

வேதம், யாதாவது ஓர் ஒலிவடிவை எடுத்து வரும் என்றால், தேரையினிடத்து உண்டாகும் சத்தத்திலும், உங்கள் நூலாகிய வேதம் உண்டாகலாம். வேதத்தைச் சொன்னவன் இன்னான் என்று, பேர் குறித்துச் சொல்லாததால், வேதம் தானே வேண்டிய வடிவத்தைத் தேடி வரும் என்று கூறவேண்டும். அவ்வாறு நீ கூறினால், வளங்கள் பல உள்ள தீவு ஒன்றில் பல வண்ணங்களை உடைய ஆடைகள் இருந்தன என்றும் அவற்றை எவரும் நெய்தாரில்லை என்று கூறுவது போல் ஆகும். அவ்வாறே உன் வேதமும் உண்டாயிற்று என்று நீ கூறுவது ஆகும். எனவே, வேதம் ஒலிப்பொருளை உடைத்தாகையால், ஒருவனால் செய்யப்பட்டது என்பதை நீ அறிவாயாக.

மறைநின்று நாலுதிசையவர் ஒன்றதாக வரும்
உரைதந்த வாய்மை அதனால்
நிறைவென்று நீடும் எனில், வனையும் கடாதிபல
சொலவொன்றி நீடி உளதாம்;
குறைவு இன்றி நாடும் மொழி, அவை சென்று கூடுவதோர்
குணமுண்டது ஆகும் மலர்தான்
உறைகின்ற மாலைதனில் உளதுஎன்றது ஆகும் எனில்,
உணர்வு இன்றது ஆழி ஒலியே. 197

தெளிவுரை:

நான்கு திசையில் உள்ளவர்களும், ஒரே தன்மையாக

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேதத்தை ஓதி வருவதால், அஃது என்றும் அநாதியாய் நிறைவு உடையதாய் நிலைபெற்று நிற்பது என்று நீ கூறுகிறாய். அவ்வாறாயின், குயவனால் செய்யப்படும் குடங்கள் பலவாக இருப்பதைக் கொண்டு, அவை தாமே உண்டாயின என்று கருதலாமா? கருதக் கூடாதல்லவா? "ஒருவனால் கட்டப்பட்ட மாலையில் பூவும் மணமும் அந்த மாலையிலே, முன்பே உள்ளன, பின்பு அது மாலையாகக் கட்டப்பட்டது; அதுபோல, ஒலியும் பொருளும் முன்பே வேதத்தில் உள்ளன; பின்பு அது வேதமாகச் செய்யப்பட்டது'' என்று நீ கூறுவாய் ஆயின் வேதத்தை செய்த மூர்த்திகள், அந்த வேதத்தில் உள்ள ஒலியை அறிந்து செய்தாரில்லை என்று பொருள்படும். அவ்வாறாயின், உன் வேதம் கடலின் இரைச்சலைப் போன்றதே ஆகும்.

உடல் நின்று நாம் உணரும் அது கண்டவாறு ஒருவன்
உலகங்களே உருவமாய்;
இடைநின்று மாமறைகள் அவை அன்று வாய்மொழிய
இவை கொண்டு உலக நெறியின்
கடன் நின்று வாழும்அது கருதும் பின் ஆணைவழி
கருமம் செய காசினியுளோர்
திடம் என்று சீர் அரசன் உரைதங்கும் ஓலைதிரு
முகம் என்று சூடு செயலே. 198

தெளிவுரை:

இந்த உடலில் நின்று உயிர்கள் ஆகிய நாம் உணர்வது போல, இந்த உலகங்களை எல்லாம் திருமேனியாக உடைய இறைவன் சொன்ன வாய்மொழி ஆகிய வேதத்தைத் துணையாகக் கொண்டு உலகில் உள்ளவர்கள் தங்கள் கடமைகளைச் செய்வார்கள்.

இறைவன் அநாதி ஆதலினாலும், சுயம்பு ஆதலினாலும் அவனால் சொல்லப்பட்ட வேதமும் அநாதி என்று சொல்லப்படுகிறது. இஃது எதுபோல எனின், ஓர் அரசனை மதிக்கும் குடிமக்கள், அந்த அரசன் வரைந்து அனுப்பிய கட்டளை ஓலையைத் திருமுகம் என்று கூறுவதைப் போலாகும்.

முடிவு இன்றி வேதியர்கள் முதல் வந்த மூவர்களும்
மொழியும் சொல் ஆரியம் எனில்,
கடிவு இன்றியே கணிதர் அவர் கண்டவாறு அதுஎன்?
வடகண்ட சாதி கடியா

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒடிவு இன்றி ஓதுவது என்? உரைதங்கு வேதமொழி
உளது என்று கூறும் அவர்தாம்
அடிஇன்று தான் எனும்அது அறிவுஇன்றி ஈனும் அவர்
இலை என்ற ஆதரவு அதே. 199

தெளிவுரை:

ஆரிய வேதம், வேதியர், சத்திரியர், வைசியர் என்னும் முதல் மூன்று வருணத்தாரால் மட்டும் ஓதப்படுவது என்று கூறினால், சோதிடம் முதலிய வேதாங்க நூல்களை ஏனைய வருணத்தார் ஓதாமல் அவற்றை எப்படி அறிய முடியும்? மேலும், வடநாட்டில் சாதி வேற்றுமை கருதப்படாமல், எல்லோராலும் வேதம் ஓதப்படுகிறதே! அஃது எப்படி? எனவே வேதம் பொது என்பது பெறப்படும். வேதத்திற்கு மூல ஆசிரியன் இல்லை என்று கூறுவது, பிறந்த பிள்ளைக்குப் பெற்றோர் இல்லை என்று அறிவில்லாமல் வேண்டுமென்றே கூறுவதைப் போன்றதாகும்.

கடிவு இன்றி – நீக்கம் இன்றி; ஒடிவு இன்றி – தவிர்தல் இன்றி; முடிவு இன்றி – அளவு இறந்து.

அறிகின்ற பான்மை அவயவம் நின்றதாகில், அணு
அழியும்; கடாதி எனவே
செறிகின்றவாறு அதுஇலை எனின், வந்துசேரும் அது
திடம் அன்று கூட ஒருவன்
குறிகொண்டு காரின்முளை வருகின்ற பீசம் அவை
குலை ஒன்றி, வேனில் அழியும்;
உறுகின்ற காலம் அவை உடன் நின்றுபோய் அழியும்;
உலகு என்றும் நீடி இலதே. 200

தெளிவுரை:

உடம்பில் உள்ள உறுப்புகளுக்கு அறியும் தன்மை இருக்குமாயின், அவ்வுறுப்புக்கள் அழியும்போது, அவற்றோடு சார்புடைய உயிர்களும் அழிந்துபோகும். உயிர் வந்து உடம்பைப் பொருந்துவது இல்லை என்பது உனது கொள்கை ஆயின், உடம்பு சடம் ஆனதால், அஃது உயிரைத்தானே வந்து பொருந்தாது. எனவே, உடம்பையும் உயிரையும் பொருத்துபவன் ஒருவன் வேண்டும் என்பது பெறப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மழைக்காலத்தில் வித்திலிருந்து முளைப்பனவெல்லாம், வேனில் காலத்தில் ஒருங்கே அழிந்துவிடுகின்றன; அதுபோல, காலத்தால் தோன்றி, நின்று அழியும் என்னும் முத்தொழிற்படுகின்ற இவ்வுலகம் தோன்றி ஒடுங்கும் தன்மைய்ய உடையது; அஃது என்றும் ஒரு தன்மையதாய் நிலைப்பதன்று.

நிறைவு எங்கும் ஆகில், உயிர் நெறி நின்று போய் வருதல்
அணைவு இன்றதாம் உடலிலே
குறைவு இன்று எலாமும்உள குடகந்தம் ஆகில், அவை
விடநின்றவாறு குறியா;
உறைகின்ற மாதவர்கள் உடல்நின்று போய் வறிதொர்
உடல் கொண்டு மீள்வது உணராய்;
மறைதந்த வாய்மை அதில் நிறைவு இன்றியே உலகின்
கலைகின்றதால் உன் உரையே. 201

தெளிவுரை:

உயிர், உலகம் முழுவதும் நிறைந்து நிற்கும் என்றால், நித்திய கன்ம நெறியில் நின்று, சுவர்க்கம் முதலிய இடங்களுக்குச் சென்று மீண்டும் பூவுலகிற்கு வரவேண்டும் என்பது இல்லை.

பூவின் மணம் போல, உடலில் உயிர் நிறைந்து இருக்கும் என்றால், உடல் அழியும் போது உயிரும் அழியும் என்று கூற வேண்டும். மேலும் மணம் தனித்து நில்லாது; நீ சொன்ன உவமை பொருந்தும் என்று கூறினால், உடம்பை விட்டுப் பிரியும் உயிர் தனித்து எப்படி நிற்க முடியும்? யோகிகள் கூடுவிட்டுக் கூடு பாய்வதை நீ அறிந்தாய் இல்லை. ஆகவே, நீ சொல்வது உலகத்தில் உள்ளவர்களுக்கு மலைப்பை உண்டாக்குகிறது.

அழிகின்றதால் வினைகள் ஆகின்றவாறு என்? எரு
அது, மங்கியான பரிசேல்
ஒழிவின்றி ஓதனமும் அறவுண்ட நாம் வினைகள்
உறுகின்றவாறு அது எனலாம்;
கழிகின்றதால் அறிவு வினைதந்திடா, வினைஞர்
கருமங்கள் நாடி உறுவோர்
பழுதுஇன்றியே உதவும் அது பண்பதாக அருள்
பரமன்கண் ஆகும் வினையே. 202

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

உடல் அழியும்போது, உயிர் உடலோடு இருக்கும்போது செய்கின்ற வினையும் அழிந்து ஒழியும் ஆயின், அது மேல் பிறவிக்கு வித்து ஆவது எப்படி? வயலில் இட்ட உரம் கெட்டு, அதன் ஆற்றல் நுட்பமாய்ப் பயிரில் பொருந்திப் பயன் தருதல் போல, வினையும் தூல மாய் உடலோடு கெடினும் நுட்பமாய் உயிருடன் பொருந்தி நிற்கும் என்று நீ கூறுவாய்; அவ்வாறாயின் அஃது உண்ட உணவே தூல மாய்க் கெட்டு, உயிருடன் நுட்பமாய்ப் பொருந்தி, மீண்டும் உணவாய் வரும் என்பது போல் இருக்கிறது. வினை உடம்போது கழிவதால், உயிரை அறிந்து சேரமாட்டாது. வேலை செய்பவர்களுக்கு கூலி கொடுக்கும் தலைவன் போன்று, உயிர்கள் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப அவற்றை அறிந்து அவற்றின் பயன்களைக் கொடுப்பது இறைவனின் தொழில் ஆகும்.

கருமங்கள் ஞானமது உடன் நின்றலால் மருவ
கதிதங்கல் ஆவது எனின், நீ
தரும் அங்கராக முதல் அவை தங்க மேல் அறிவு
தவிரும்பின், வீடும் அணையா
பொருள்நின்று தேடிவரு பயன் உண்டு போகவினை
புரிகின்றவாறு அது எனவே,
திருநின்ற போகம் வளர் அவிசென்று மேவியது
செலவுண்டு சூழ்வ செயலே. 203

தெளிவுரை:

ஞானம், கருமத்தோடு கூடியே வீடு எய்துவிக்கும் என்று கூறுகிறாய். கருமம் செய்யும்போது, பொருளின் உதவி இன்றிச் செய்ய முடியாது; பொருள் விருப்பு வெறுப்புக்களை விளைவிக்கும்; எனவே கருமம் செய்வதால் ஞானம் நிலை பெறாது; வீட்டு இன்பமும் கிட்டாது.

பொருளைக் கொண்டு போகத்தை துய்த்தவன், பொருள் அற்றவுடனே மீண்டும் பொருளை நாடி அலைவதைப்போல, செய்யும் நல்வினையின் பயனாகப் போகத்தை அனுபவித்துத் தொலைந்ததும், மீண்டும் மீண்டும் போகத்தையே விரும்பி வினை செய்யத் தூண்டுவதே உன் வினைக் கொள்கையின் தன்மையாக உள்ளது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

9. பிரபாகரன் மதம்

அரும்தவனாம் சைமினி பண்டு ஆரணநூல் ஆய்ந்தானாய்த்
திருந்தும் உலகினில் கொண்டு செப்பியநூல் திறம் அதனைப்
புரிந்து பிரபாகரன் பட்டாசானில் வேறாகிப்
புரிந்து உரைசெய் நெறியதனைப் புவனி மிசைப் புகன்றிடு
வாம். 204

தெளிவுரை:

அரிய தவத்தை உடைய சைமினி முனிவன் முன்புவேதத்தை ஆராய்ந்து, இவ்வுலகிற்குப் பொருத்தமானவற்றை எடுத்துக் கூறினான். அந்தப் பட்டாசாரியனின் நெறியில் சிறிது வேறுபடச் சொன்ன பிரபாகரன் என்பவன், சைமினியின் மீமாஞ்சை நூலுக்கு விளக்கம் கூறினான். அதுவே பிரபாகரன் மதம் எனப்படுவதாகும்.

அருஞ்செயலின் அபாவத்தே அபூர்வம் எனும்அது தோன்றித்
தரும்செயல் நின்று அழியில் பின் பலிப்பிப்பது ஆகும் அது
வரும் செயல் ஒன்று இன்றியே மண்சிலை போலாம் முத்தித்
தரும் செயல் ஈது என உணர்ந்து தாரணிமேல் அவன்
சாற்றும். 205

தெளிவுரை:

அரிதாகச் செய்யும் வினை செய்து முடிந்த பிறகு, அபூர்வம் என்பது ஒன்று உண்டாகும். வினையில் அறிவு கூடி நின்று, தொழிற் பட்டுக் கன்மம் முடியும்போது, அந்த வினைக்குரிய பயனை, அந்த அபூர்வம் தரும். மேற்சொன்ன அறிவும் செயலும் அற்று, மண் போன்றும் கல் போன்றும் கிடத்தலே முத்தி. இதுவே பிரபாகரன் மதம் கூறுவது.

பிரபாகரன் மதம் மறுதலை

வேறுபலன் தருவதுதான் வினை என்று வேதங்கள்
கூற, ஓர் அபூர்வம்தான் கொடுக்கும் எனக் கொண்ட உரை
மாறுதரும் மறையோடு முன்பு இன்றி வந்ததால்,
தேற்றிய விண் பூ முடிமேல் சேர்ந்து மணந்து இகழ்ந்ததுவாம்.
206

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

வினைகளுக்குத் தக்க பயன், வினைகளாலேயே விளைவது என்று உன் வேதங்கள் சொல்கின்றன; ஆனால், இந்தப் பிறப்பிலே, அபூர்வம் என்பது ஒன்று பயன் தரும் என்று நீ சொல்வது, உன் வேதத்தின் கருத்துக்கு மாறானதாக உள்ளதே? இஃது எப்படி இருக்கிறதென்றால், ஆகாயப் பூவிற்கு இயற்கையில் இல்லாத மணம், தலையில் வைத்த பிறகு ஏற்பட்டது என்று கூறுவதைப்போல் இருக்கிறது!

ஆனந்தம் கதி என்ன, அறிவு அழிகை வீடு என்கை;
ஊனம்பின் உணர்வு அழிந்தோர்க்கு உளதாகும் உயர்முத்தி;
தான் இங்குச் சிவப்பு ஒழியத் தழல் நிற்குமாறு இல்லை;
ஞானம் கெட்டு உயிர் நிற்கும் எனும் உரைதான்
நண்ணாதால். 207

தெளிவுரை:

பரம ஆனந்த நுகர்ச்சியே வீடு என்று வேதம் சொல்கின்றது; நீயோ, அறிவு கெட்டுக் கிடப்பதே முத்தி என்கிறாய். அவ்வாறாயின், மூர்ச்சை வந்து உணர்வு இழந்தவர்களுக்கு, உயர்வான முத்தி கிடைக்கவேண்டும்.

மேலும், நெருப்பின் இயல்பு ஆகிய சிவப்பு நிறம் கெட்டால், நெருப்பு நிலைபெறுவதில்லை. அதுபோல, அறிவு கெட்டுவிட்டபோது, உயிரும் நிலைபெறுவதில்லை; அறிவு, உயிரின் இயல்பு ஆகும். எனவே, நீ கூறுவதுபோல், உயிர் கல்போன்று, மண்போன்று முத்தி அடையும் என்பது பொருந்தாது.

10. சத்தப் பிரமவாதி மதம்

உரையானது உமையலினால் உலகாம்;
புரையோர் உணரும் பொருள் பொய்; இதனை
விரையாது உணரும் அது வீடு எனவே
வரையாது உரைவாதி வகுத்தனனே. 208

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சத்தம் ஆனது மயக்கத்தினாலே உலகு ஆகும். சத்தத்திற்குப் பொருள் உண்டு என்பது அறியாதார் கூற்று ஆகும். சத்தமே பிரமம்; பொருள் பிரமம் அன்று; இதனை அறிவதே வீட்டின்பம் ஆகும். இவ்வாறு சத்தப்பிரமவாதி, பிரபஞ்ச பேதத்தின் எல்லையை அறியாமல், சத்தமே பிரமம் என்று வகுத்துக் கூறினான்.

பரிணாமம் விவர்த்தனம் மாயம் அதில்
தருமாம்; உலகு உள்ளது சத்தம் அதே
பொருளாவது சொல்நலம் அல்ல எனின்,
மருவாது பொருள் திறம் மற்று இல்லையே. 209

தெளிவுரை:

சத்தத்தினால் பரிணமித்து உண்டாவதே மயக்கம். அந்த மயக்கத்திலே, உலகு உண்டாகிறது. எனவே உலகில் உள்ளது என்பது சத்தம் ஒன்றே ஆகும். அர்த்தம் என்பது, சத்தத்தின் நன்மையே ஆகும்; எனவே, சத்தம் இல்லாமல் ஒருபொருள் உண்டாவது இல்லை. ஆக சத்தத்தின் நன்மையே பொருள் ஆகும்.

பூமா எனவே உரையும் பொருளே
ஆமாம் பொருள் ஒன்றில் அணைந்து இலதால்
நாம் ஆதரவு எய்து சொல் நல்கருவாய்த்
தாம் ஆம் பொருள் நெற்பொரிதான் எனவே. 210

தெளிவுரை:

''பூ'' என்றும் ''மா'' என்றும் இரண்டு சொற்கள் உள்ளன; இவற்றிற்குப் பொருள் முறையே, ''மலர்'' என்றும் ''திருமகள்'' என்றும் கூறப்படும். அவ்வாறு கூறப்படும் பொருள் ஒன்றிலே சத்தம் அடங்காமல் ''பூமி'' எனவும், ''விலங்கு'' எனவும் பொருள் கொள்ளலாம். எனவே நமது விருப்பத்திற்கு ஏற்ப, சொல்லும் சொல்லை நல்ல கருவாகக் கொண்டு, பல பொருள்கள் உண்டாகும். அஃது எது போல எனின், நெல்லில் தோன்றும் பொரிக்கு நெல்லே கரு ஆயினாற்போல, பொருளுக்கு ஒலியே கரு ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சொல் வந்து எழலும் பொருள் தோன்றுதலால்
சொல்லே பொருள் என்று துணிந்திடும் நீ
சொல்லும் பொருளும் உடன் நின்றது எனின்
சொல்லும் பொருள் இன்று, சொல் நின்றதுவே. 211

தெளிவுரை:

எந்த ஒரு சொல் உண்டானாலும், அந்தச் சொல்லில் பொருளும் உண்டாகும்; எனவே, சொல்லே முதன்மையானது என்று நீ தெளிந்திடுவாயாக. மேலும், சொல்லும் பொருளும் உடன் நிற்ப தால், பொருள் ஒரு தனி முதலன்று; பொருளைத் தனி ஒரு முதல் என்று கூறினால், ஒருசொல்லுக்குப் பொருள் கூறும்போது, பொருளும் சொல்லாக இருப்பதால் சொல் இல்லாமல் பொருள் என்று ஒன்று உண்டாவது இல்லை. எனவே சத்தமே பிரமம் என்று கொள்வாயாக.

சத்தப் பிரமவாதி மதம் மறுதலை

உரையானது உமையலினால் உலகேல்
உரையாய் ஒருமையலும் உள்ளது என.
வரையாது உணரும் அதுவண் கதியேல்
வரையா மறையாடு மலைந்தனையே, 212

தெளிவுரை:

சத்தம், பரிணாம வளர்ச்சி ஆகிய மயக்கத்தினாலே, உலகம் ஆகும் என்று கூறினாய்; அவ்வாறாயின், சத்தமே சர்வமும் ஆகும் என்பதன்றிச் சத்தத்திலே இருந்து மயக்கம் என்பது எப்படித் தோன்றி யது? மேலும், பொருளை வரையாமல் சத்தத்தைப் பிரமம் என்று குறித்து உணர்தலே முத்தி என்று கூறினாய். அப்படியானால், வேதத்தில் விதிக்கப்பட்ட கன்மத்தைச் செய்யாமலும், ஞானத்தை உணராமலும், முத்தி அடையலாம் என்று பொருளாகிறது. எனவே, நீ கூறுவது வேதத்திற்கு மறுதலையாக உள்ளது.

அருவம் உரை ஆதலின், அவ்வுருவாய்
மருவும் பரிணாமம் மறந்திடுமாம்;
பருகும் ததியானது பாலது எனில்,
உருவம் அதுவாய் அழியும் உரையே. 213

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

நீ கூறும் சத்தம் உருவமற்றது; எனவே உலக வடிவாய் அஃது எப்படிப் பரிணமிக்க முடியும்? மேலும் குடிக்கும் பால், தயிராய் உருப் பெற்றது போல், அருவமாய் இருக்கும் சத்தம், உருவம் ஆகிய உலகாய் உருப்பெறும் என்று நீ கூறுவாய் ஆயின், அது பொருந்தாது. ஏனெனில், தயிர் மீண்டும் பால் ஆகும் தன்மையைப் பெறாமல் தயி ராகவே நின்று அழியும்; அதுபோல, சத்தமும் உலகாய் உருப் பெற்றால், மீண்டும் சத்தம் ஆகும் தன்மை இன்றி, உலகாய் நின்றே அழியும்.

ஆயம் உடன் அந்த விவர்த்தனமும்
மாயவ்வுளது என்று சொல் எவ்விடமும்
ஆய் நின்றமையின் உரையின் நலமும்
ஆயும் பொருளுக்கு அறி நாமம் அதே. 214

தெளிவுரை:

சத்தம் வருவதாலேயே, உலகமும் உலகின் பல்வேறு வடிவங் களும் வருகின்றன; எனவே சத்தத்துக்கு அழிவு உண்டாதல் வேண்டும் என்று இப்போது சொல்லாய்; மேலும் சத்தத்திற்குப் பொருள் இருப்பதாலேயே, சத்தத்திற்கு நன்மை விளைகிறது. அந்தப் பொருளை ஆராயும்போது சத்தம் என்பது, பொருளுக்குப் பெயர்ச் சொல்லாக இருப்பது ஒன்றே பெறப்படும்.

உரைபோல் பொருளுக்கு உரு இன்மையின், அவ்
உரையே பொருள் என்றனை; இன்று அரி என்
உரையே கவி மால் அவனுக்கு உளதாம்;
உரையாய் கவியாக ஓர் மா வினையே. 215

தெளிவுரை:

சத்தத்தைப்போல பொருளுக்கும் உருவம் இல்லாமையினால், அச்சத்தமே பொருள் என்று கூறினாய்; இன்று 'அரி' என்று சொல்லப் படும் சத்தம், திருமாலுக்கும் குரங்குக்கும் மற்றும் பல பொருட்கும் பெயராகச் சொல்லலாம்; அவ்வாறு கூறுவதை, பொருளின் தன்மை யில் நின்று சத்தம் கொள்ளாமல் தன்மையில் நின்று பொருள் கொள்ள

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

லாம் என்றால், திருமாலைக் குரங்காகச் சொல்லவேண்டி வரும். எனவே, சொல்வேறு; பொருள் வேறு என்பதை அறிவாயாக.

நெல்லில் பொரி ஆவது, நீடு அழலில்;
சொல்லில் பொருள் ஒன்றொடு தொக்கிடலால்
கல்வித் திறமாம் உரை காட்சியினால்
மல்லல் பொருள் சால வளம் தருமே. 216

தெளிவுரை:

நெல், நெருப்பைச் சேர்ந்தால் பொரி ஆகிறது; ஆதலால், பொருளுக்குச் சொல்லே கரு என்று நீ கூறுவது பொருந்தாது. பூ, மா முதலிய ஒரு சொல்லில் பல பொருள் கூடி நிற்றலால், அப்பொருளை அறியும் பொருட்டுக் கற்பதே சத்தம் ஆகும். சொல்லிலிருந்து பொருளை பிரித்துப் பார்த்தால், பொருளே நன்மை பயப்பதை அறிவாய்; எனவே, சொல்லை விடப் பொருளே சிறப்பு உடையது.

முன்கண்ட பொருள் பெயர் ஆதலினால்
பின்கண்ட பிழம்பு உணரும் பெயரால்
நன்கண்ட பொருட்கு ஒருநாசம் அதின்று,
என்கண்டனை காரணம் இன்று அழியவே. 217

தெளிவுரை:

முன்பு அறிவினால் அறிந்த பொருளே, சத்தம் ஆகிய பெயராய் நிற்பதாலும், பின்பு காணப்படும் வடிவங்களைச் சத்தம் ஆகிய பெயரைக் கொண்டு அறிவதனாலும், நன்றாகக் காணப்படும் பொருளுக்கு அழிவு இல்லை ஆகும். எனவே, சத்தத்துக்குக் கேடு உண்டு என்பது பெறப்படும். காரியம் ஆகிய சத்தம் அழிதலே அன்றிக் காரணம் ஆகிய பொருள் அழியும் என்று எப்படிக் கூறுகிறாய்? ஆகவே, சொல்லினைக் காட்டிலும் பொருளே முதன்மை உடையது.

பொருள் இந்திரியம் உணர்வோடு புமான்
இருள் இன்றியிடும் ஒளி இத்தனையும்
மருவும் பொழுதில் வருஞானம் அதின்
ஒருவும் பெயர் அர்த்தம் உதித்திடுமே. 218

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

உயிர் ஒரு விடயத்தை அறியும்போது, அறியப்படும் பொருள், அதனைக் காட்டும் இந்திரியம், அதனோடு கூடி உணரும் அந்தக் கரணங்கள், அவற்றிற்கு மூல காரணம் ஆகிய பிரகிருதி, அவற்றைத் தோற்றுவிக்கின்ற திரோதான சத்தி ஆகிய இத்தனையும் கூடி நிற்கவேண்டும். அந்நிலையில் இத்தனைச் சொற்களும் தோன்றாமல், அவற்றின் பொருளே உயிர்க்குப் புலப்படும்; எனவே சொல்லினும் பொருளே சிறப்புடையது ஆகும்.

அர்த்தம் தெள்ளிதற்கு ஒளி ஆனதுபோல்
சத்தம் பொருள்தான் அறிதற்கு உளதாம்
நித்தம் அதுவன்று உரை நின்று அழியும்
சித்தன் ஒருவன் உரை செய்தனனே. 219

தெளிவுரை:

இருளில் கிடக்கும் பல பொருள்களைத் தெரிவதற்குக் கை விளக்கு பயன்படுதல் போல, பல வேறுபட்ட பொருள்களை அறிவதற்கு சொல் ஏற்பட்டது ஆகும். அந்தச் சொல்லும், பொருள் ஆகிய காரணம் இல்லை ஆயின், அதுவும் காரியப்படாது ஒழியும்; எனவே, இந்தச் சொல் சித்தன் ஆகிய சிவபெருமானாலே தோற்றுவிக்கப்பட்டது ஆகலின், அதனைப் பிரமம் என்று சொல்வது பொருந்தாது.

11. மாயாவாதி மதம்

நானே பிரமம் என்று உரைத்து, ஞாலம் பேய்த்தேர் என எண்ணி,
ஊனே புகுந்து நின்று, உயிர்கட்கு உபதேசங்கள் உரைத்து வரும்
மானா மதிகேடனும் ஆய மாயாவாதி பேயாகித்
தானே உரைக்கும் அந்நூலின் உண்மைதன்னைச் சாற்றுவாம். 220

தெளிவுரை:

உயிர் வேறு, இறை வேறு என்பதை அறியாமல், 'நானே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கடவுள்' என்று சொல்லி, உலகம் எல்லாம் கானல் நீர் போலப் பொய் எனக் கருதிப் பிறப்பு இறப்புகட்கு உட்படும் தான். பிற உயிர்களுக்கு உபதேசங்கள் சொல்லித் திரிகின்ற நாணம் இல்லாத அறிவீனன் ஆகிய மாயாவாதி, பித்துப் பிடித்து அலைகிறான்; வேதாகமங்களுக்குப் பொருந்தாதவற்றைப் பேசுகிறான்; தனக்குத் தானே ஏதேதோ சொல் கிறான். அவன் சொல்லும் நூலின் உண்மையை இப்போது கூறுகிறேன்.

அறிவாய், அகில காரணமாய், ஆனந்த ஆனந்தமாய்
அருவாய்ச்
செறிவாய், எங்கும் நித்தமாய்த் திகழ்ந்த சத்தாய்ச்,
சுத்தமதாய்க்
குறிதான் குணங்கள் ஒன்று இன்றிக் கூறும் வேதம் தனக்கு
அளவாய்ப்
பிறியா அனுபூதிகம் தனக்காய் நின்றது, அந்தப்
பிரமம்தான். 221

தெளிவுரை:

ஞானமே சொருபமாய் உலகுக்குக் காரணமாய், எல்லை இல்லாத இன்பம் உடையதாய், உருவம் இன்றி அருவமாய், எங்கும் நிறைந்து நிற்பதாய்க், கேடு இலதாய், என்றும் நிலைபேறு உடைய தாய், தூய்மை உடையதாய், ஓர் அடையாளமும் ஒரு குணமும் இல்லையாய்ச், சொல்லத்தக்க வேதங்களுக்கு வரம்பாய், நீக்கமில்லாத அனுபவம் தனக்கே உடைத்தாய் நிற்பது எதுவோ, அதுவே உயர்ந்த பிரமம் ஆகும்.

ஒன்றாம் இரவி பல பாண்டத்து உண்டாம் உதகத்து
அங்கங்கே
நின்றால்போல, உடல்தோறும் நிகழ்ந்து நிற்கும் பொருள்
மேற்கண்
சென்றால் போலப் புலன்களுக்கும் சிந்தை தனக்கும்
தெரிவரிதாம்
என்றால் காட்சி முதலாய இருமூன்று அளவைக்கு
எட்டாதால். 222

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சூரியன் வானில் நிற்கும்போது பாத்திரங்கள் பலவற்றிலும் உள்ள தண்ணீர்களிலே, தனித்தனியே தோன்றுவதுபோல, ''ஏகம்'' ஆகிய பிரமம், உடல்கள்தோறும் தனித்தனியே தோன்றி நிற்கும். அந்தச் சூரியன், பாத்திரத்தில் உள்ள நீர்களில் அகப்படாமல், மேல்நின்று இயங்குவதுபோல், அந்தப் பிரமம், உடலில் அகப் படாமல் மேல்நின்று, கருவி கரணங்களால் அறியப்படாமல் நிற்கும். இப்படிச் சொல்வதால், காண்டல், கருதல், உரை, உவமை, அருத்தா பத்தி, இன்மை (அபாவம்) ஆகிய ஆறு அளவைகளாலும் அளந்து அறிய முடியாதது பிரமம் ஆகும். (உதகம் – நீர்)

இருளில் பழுதை அரவு எனவே இசைந்து நிற்கும்
இருங்கதிர்கள்
அருளப் பழுதை மெய்ஆகி அரவும் பொய் ஆம்;
அதுவேபோல்
மருளில் சகமும் சத்து ஆகிமருவித் தோன்றும்; மாசிலாத்
தெருளில் தித்தே சத்து ஆகும் பித்தாம் சகத்தின் செயல்
எல்லாம். 223

தெளிவுரை:

இருட்டில் புதரின் அருகே, ஒரு கயிறு கிடப்பதைக் கண்டவர், அதனைப் பாம்பு எனவே கருதுவர். (பழுது – கயிறு) அந்நிலையில், சூரிய ஒளி தோன்றியதும், அது பாம்பு அன்று – கயிறுதான் என்று உண்மையை அறிவர். அதுபோல, பொய் ஆகிய இந்த உலகத்தின் செயல், அறியாமை காரணமாக உண்மையாகத் தோன்றும்; அறி யாமை நீங்கிய பிரமஞானம் விளங்கும்போது, பிரமம் ஒன்றே உள் பொருள் – உலகத்தின் செயல்கள் அனைத்தும் பொய் என்பது புரியும்.

உலகம் தானும் நிருவசனத்து உண்டாம்; இன்றேல் உதியாது;
நிலவி உண்டேல், அழியாது நிற்பது ஆகும் மித்தையால்
இலகு சுத்தி கனல்சேர இன்றாம் வெள்ளி நின்றதாம்
குலவு சகமும் அவிகாரம் பரமார்த்தத்தில் கொள்ளாதால். 224

தெளிவுரை:

இந்த உலகம், சொல்தற்கு அரியது ஆகிய பிரமத்திலே நின்றும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தோன்றும். (நிருவசனம் – வசந ரகிதம் – சொல்வதற்கு அரியது), அந்தப் பிரமத்திலிருந்து உலகம் தோன்றவில்லை என்றால், அது தோன்றுவதற்கு வேறு முதற்காரணம் இல்லை.

உலகத்தை ஒருவர் தோற்றுவிக்காமல், தானே இவ்வுலகம் உண்டாயிற்று என்று கூறினால், அதுவும் ஒரு முதல் ஆகி, அழியாது நிற்கத்தக்கது ஆகும். இந்த உலகம் உண்மைபோலத் தோன்றினாலும், நிச்சயமாய இது வெறும் தோற்றமே ஆகும்.

இவ்வுலகம் ஒளியுடையது போல் தோன்றுவது எப்படி எனில், வெள்ளி போல ஒளிரும் இப்பியையும் உண்மையான வெள்ளியையும் நெருப்பில் இட்டால், இப்பி கெட்டுவிடும்; உண்மையான வெள்ளி அப்படியே இருக்கும். அதுபோல, உள்ளதுபோலத் தோன்றும் இந்த உலகமும், மாறுதல் இல்லாத (அவிகாரம்) பிரமமும், பரமார்த்தத்தில் ஆராய்ந்து பார்த்தால், பிரமம் ஒன்றே என்றும் உள்பொருள் என்பது புலப்படும்; எனவே, உலகம் பொய்யாகக் கொள்ளப்படும். (பரமார்த்தம் – மேலான நிலையில்; சுத்தி – இப்பி – கிளிஞ்சல்).

தாங்கும் உலகுக்கு உபாதானம் சத்தாம்; சிலம்பிநூல் தன்பால்
வாங்கி வைத்துக் காப்பதுபோல் வையம் எல்லாம் தன் பக்கல்
ஓங்க உதிப்பித்து உளது ஆக்கி நிறுத்தி ஒடுக்கத்து இலது
ஆக்கும்;
ஆங்கு வந்தவாறு அதனால் சத்தாம் சகத்தின் அமைவு
எல்லாம். 225

தெளிவுரை:

ஆதாரம் ஆகிய இந்த உலகுக்கு முதற்காரணம் சத்து ஆகிய பிரமமே ஆகும். (உபாதானம் – முதற்காரணம்). சிலந்திப்பூச்சி, நூலான்புடையில் உள்ள நூலைத் தன்னிடத்திலிருந்து தோற்றுவித்து, அந்த நூலை ஓர் இடத்திலே பாதுகாத்துவைத்துப் பின்பு, அந்த நூல் அழியும்படி, தான் நீங்கும் தன்மைபோல் பிரமமும் உலகபேதம் அனைத்தையும், தன்னிடத்திலிருந்து தோற்றுவித்து, அவற்றைக் காத்துப் பின்பு இல்லை ஆகும்படி அழித்துவிடும். அவ்வாறு பிரமத்திலே தோன்றி நின்று கெடுவதால் உலகின் செயல் அனைத்தும் பிரமத்தின் நியமமே ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மன்னும் பிரமம்தனில் வானாய், வானின் வளியாய்
அந்தவளி
தன்னில் அழலாய், அழலின்பால் சமமாய்ச், சலத்தில்
தாரணியாய்ச்
சொன்ன இதனின் மருந்து ஆகித், தோற்றும் மருந்தில்
அன்னமாய்,
அன்னம் அதனில் துவக்கு ஆதி ஆறு தாது ஆயினவால். 226

தெளிவுரை:

கேடு இல்லாத பிரமத்திலே விண் தோன்றுகிறது; அந்த விண்ணில் வாயு தோன்றுகிறது; அந்த வாயுவிலே நெருப்பு தோன்றுகிறது; அந்த நெருப்பிலே நீர் தோன்றுகிறது; அந்த நீரிலே மண் தோன்றுகிறது. இந்த மண்ணில் இவை மருந்தாய்த் தோன்றி, மருந்திலே உணவாய்த் தோன்றி, அந்த உணவிலே உடலின் பகுதிகள் ஆகிய தோல், எலும்பு, நரம்பு, மூளை, இரத்தம், சுக்கிலம் அல்லது சுரோணிதம் என்னும் தாதுக்கள் ஆறும் உண்டாயின.

ஆறு தாதுக்களும் கூடி வந்த கோசம் அன்னமயம்;
மாறில் பிராண கோசமயம்; மன்னும் அதனின்
மனோமயந்தான்
வேறு வரும் விஞ்ஞான மயம் மேவும் அதனின்
அதுதன்னில்
கூறி வரும் ஆனந்த மயம் கோச மயம் பின் கூடியதால். 227

தெளிவுரை:

மேற்சொன்ன ஆறு தாதுக்களும் கூடி உண்டாயது அன்னமய கோசம்; அன்னம் – சோறு; மயம் – அழகு; கோசம் – உறை – கவசம்; 'அன்னமய கோசம்' என்பது இந்த உடல் சோற்றால் அமைந்த அழகான பிண்டம் (உறை) அந்த அன்னமய கோசத்தில், மாறுபாடில்லாத வாயுத்துடிப்பாக உண்டானது பிராணமய கோசம்; அந்தப் பிராணமய கோசத்திலே மயக்கம் நீங்கிக் கூடுவது மனோமய கோசம்; மனோமய கோசத்திலே மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஞானேந்திரியங்கள் கூடி அறிவாய் இருப்பது விஞ்ஞானமய கோசம்; அந்த விஞ்ஞானமய கோசத்திலே கை, கால், வாய், கருவாய், எருவாய் ஆகிய கன்மேந்திரியங்கள் கூடி ஆனந்தமாய் இருப்பது, ஆனந்த மய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கோசம். மயம் என்ற சொல்லுக்குப் பின்பு கோசம் என்னும் சொல் சேர்த்துக் கொள்க.

> கோச உருவில் பிரம்ன்தான் கூடித் தோன்றும்; நீடும் ஒரு
> காசம் மருவும் கடந்தோறும் நின்றாற்போலக் கதிரவன்தன்
> வீசுகிரணம் உருவின்கண் வெளிப்பட்டிடுவது அதில் பற்றும்
> பாசம் அதனுக்கு இன்றாகும் என்றால், பரத்தில்
> பற்றுண்டோ? 228

தெளிவுரை:

மேற்சொன்ன ஐந்து கோசம் ஆகிய வடிவில், பிரமம் கூடிப் பிரகாசிக்கும். அஃது எவ்வாறு எனில், விண்ணில் பொருந்தி நிற்கும் சூரியனது கதிர், பூமியில் வைத்துள்ள ஒவ்வொரு குடத்திலும் தனித் தனியே தோன்றுவது போன்றது ஆகும். பிரமம் அப்படிப் பாசத்தோடு கூடி நிற்பது ஆயினும், பிரமத்தைப் பாசம் சென்று பற்றுவதில்லை; பிரமத்தைப் பாசம் பற்றாது ஆகலின், பிரமத்திற்குப் பாசத்தோடு பற்று இல்லை.

> அலகின் மணிகள் அவை கோவை அடைந்த பொழுதின்
> அங்கங்கே
> நிலவும் ஒருநூல் பல நிறமாய் நின்றால் போல, நீடு உருவம்
> பலவும் மருவும் பேதத்தால் பன்மை ஆகும்; பிரமம்தான்
> குலவு போக போக்கியங்கள் கொள்ளும் போன்று
> கொள்ளாதால். 229

தெளிவுரை:

எண்ணற்ற பல நிறங்களை உடைய மணிகளைக் கோவை யாகக் கோத்தபோது, ஒரு நிறத்தை உடைய நூல், அம்மணிகளால் பல நிறமாய்க் காட்சி அளிக்கிறது. அதுபோல, உலகத்தில் தோன்றிய யோனிகள் பலவாக வேறுபடுவதால், அவற்றோடு கூடிய பிரமமும் பல்வேறு வகையாக அங்கங்கே தோன்றும்.

மணிகளில் பொருந்திய நூல், எவ்வாறு தன் தன்மை கெடாது நிற்கிறதோ, அவ்வாறே பிரமமும் போக போக்கியங்கள் கொள்வாரைப் போன்று கொள்ளாமல், தன் தன்மை கெடாமல் நிற்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போற்றும் செயலால் பலநாமம் புனைந்து, போக
போக்கியத்தில்
தோற்றும்; நனவு கனவினுடன் சுழுத்தி துரியம் எய்தும் இதற்கு
ஏற்ற காரணம் நிரைநிரையே ஈரேழ் நூல் ஒன்று எல்லாமும்
மாற்றி நிற்கும் கேடு இன்றி வந்த போகம் மாய்ந்திடவே. 230

தெளிவுரை:

உலகத்தவர் போற்றித் துதிக்கும் செயலால் பரமான்மா என்றும், சீவான்மா என்றும், அந்தரான்மா என்றும், நரகான்மா என்றும், திரியக்கான்மா என்றும் பல பெயர்களை உடையனவாகி, போகத் திலும், போக்கியத்திலும் கூடி அனுபவிப்பாரைப் போல, பிரமம் தோன்றும். சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் என்னும் நாலு அவத்தையும் பொருந்தும்.

நான்கு அவத்தைகளில் நிற்கும்போது, ஒவ்வொரு அவத்தை யிலும் உள்ள கருவிகள் வருமாறு.

சாக்கிரத்திற்குப் பதினான்கு கருவிகள்; அவை ஞானேந்திரியம் ஐந்து. கன்மேந்திரியம் ஐந்து. அந்தக் கரணம் நான்கு. ஆகப் பதி னான்கு. சொப்பனத்தில் அந்தக் கரணம் நான்கு மட்டுமே கருவிகள். சுழுத்தியில் உள்ளம் ஒன்று மட்டுமே கருவி; இதனைச் சித்தம் எனக் கூறுவர்; துரியம் என்பது, எல்லாக் கருவிகளும் நீங்கி பிரமம் மட்டும் நின்ற நிலை ஆகும். (அவத்தை என்பது, பிரமம் உபாதிகளோடும் கூடினால் பேதிக்கும் அவதரம் ஆகும். உபாதி – வாதை – துன்பம் உறுதல். பேதிக்கும் அவதரம் – வேறுபடும் நிலை)

கருவி உல்லாம் நான் எனவே கருதல் பந்தம்; அக்கருத்தை
ஒருவ முத்தி உண்டாகும்; உள்ளம் வித்தாம் செய்தியினால்
மருவும் மாயா காரியங்கள் அவித்தை மாயவே, மாயை
பிரியும்; பிரிய ஞானமது பிறக்கும்; பிறவாபேதமே. 231

தெளிவுரை:

மேற்சொன்ன கருவிகள் பதினாலோடும் கூடி, அவற்றை நான் என்று கருதி நிற்பது பந்தம் ஆகும். அக்கருவிகளை விட்டு நீங்கித் துரியத்து நிற்கவே, தற்சொருபம் ஆகிய சிவோகம்பாவம் பிறந்து முத்தி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உண்டாகும். மூலப் பிரகிருதியே பந்தத்துக்கு வித்து ஆகும். அதனால் வரும் மாயா காரியங்கள் ஆகிய இன்ப துன்பங்கள் பொருந்தும். அவித்தை ஆகிய மூலப் பிரகிருதியின் செயல் கெடவே, மாயை நீங்கும்; அது நீங்கவே ஞானம் உண்டாகும். அந்நிலையில், பந்தம் தோன்றாமல், சிவோகம் பாவம் பிறக்கும். (அவித்தை ஆ– அறியாமை).

ஆன கன்ம அனுட்டயங்கள் அந்தக்கரண சுத்தி தரும்;
ஊனம் இன்றி, அச்சுத்தி ஞானமதனை உண்டாக்கும்;
ஞானம் அதுதான் பிரமத்தை நான் என்று உணர்த்தும்;
நான் பிறந்தால்,
வானமதி நீர்த் துளக்கம் எனக் காணும் தன்மை
மாயையிலே. 232

தெளிவுரை:

விதிக்கப்பட்ட கன்ம அனுட்டானங்களால், அந்தக் கரணங் களுக்குத் தூய்மை உண்டாகும். (கன்ம அனுட்டானம் – கடமைகளை முறைப்படி செய்தல்) அந்தத் தூய்மையானது, எந்தக் குறைவும் இன்றி, ஞானத்தை உண்டாக்கும். அந்த ஞானமே, ''அகம்பிரமம்'' என்பதை அறிவிக்கும். இவ்வாறு 'நான்' ஆன தன்மையில் கருத்து முற்றுப் பெறுமானால், விண்ணில் உள்ள சந்திரன், நீரில் நின்று விளங்கித் தோன்றும் உருவம் போன்று, மாயையிலே தற்சொருபம் தெரியும். (தற்சொருபம் – தன் உண்மை நிலை).

தானே தானாய் அனுபோகம் தன்னில் தன்னை
அனுபவித்திட்டு
ஊனே உயிரே உணர்வே என்று ஒன்றும் இன்றி உரை இறந்து
வானே முதலாம் பூதங்கள் மாய மாயாதே மன்னி
''நானே பிரமம்'' எனத் தெளியும் ஞானம் பிரம ஞானமே. 233

தெளிவுரை:

அகம் பிரமமாய் அனுபூதியும் தன்னிலே தன்னை அனுப வித்து, காயம் என்றும், கரணம் என்றும், வாயு என்றும் ஒரு பேதமும் இன்றி, இன்னபடி என்று சொல்வதற்கு ஒரு சொல்லும் இன்றி, ஆகாயம் முதலிய பூதங்கள் கெட்டுப் போகவும், தான் ஒருகாலும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கெடாமல் நிலைபெற்று, 'அகம் பிரமம்', எனத் தெளியும் ஞானமே பிரம ஞானம் ஆகும்.

சாற்றும் மறை ''தத்துவமசி'' மா வாக்கியங்கள் தமை
உணர்ந்தால்,
போற்றி, அது நீ ஆனாய் என்று அறைவது அல்லால்
பொருள் இன்றே
தேற்றும் இதனைத் தெளியாதார் தெளிய பஞ்ச ஆதன மேல்
ஏற்ற இயம நியமாதி யோகம் இருநான்கு இயற்றுவரால். 234

தெளிவுரை:

சொல்லப்படுகின்ற வேதத்தின் முடிவு ஆகிய ''தத்துவமசி'' முதலான மகாவாக்கியங்கள் கூறுவனவற்றைத் தெளிவாக உணர்ந்தால், ''அது நீ ஆனாய்'' என்பது அல்லாமல், வேறு ஒரு பொருள் சொல்வதற்கு இல்லை ஆகும். ஆகவே, இவ்வாறு தெளிவாகச் சொல்லும் மகாவாக்கியங்களின் உண்மையைக் கொண்டு, ''சோகம பாவகம்'' ஆக அறியாதவர். தெளிவற்றவர் ஆவர். அவர்கள், இவ்வுண்மையைத் தெளியும் பொருட்டுக், கூர்மாசனம், அனந்தாசனம், சிங்காசனம், பத்மாசனம், யோகாசனம், ஆகிய ஐந்து இருக்கைகளைத் தேடியும், இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய அட்டாங்க யோகங்களைச் செய்தும் திரிவார்கள்.

மாயாவாதி மதம் மறுதலை

ஏகம் நான் என இயம்பி இப்படி அறிந்து முத்தி அடைமின்
என,
மோகமாக உரை சோகம் இன்பொடு முடிந்திடாது மலடு
ஆகிய
காகமானது கருங்கலின் தசை பறித்து அழும் கரிய
குஞ்சியின்
தாகமார் பசி தவிர்க்க, வாயிடை கொடுத்தது என்று
உரைசெய் தன்மையே. 235

தெளிவுரை:

மாயாவதி, ''நான் ஏகப்பிரமம்'' என்று சொல்லிப் பின்பு, கருவி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

களை நீங்கி இவ்வாறு முத்தி பெறுங்கள் என்று நீ சொல்வது, உன்னால் எடுத்துக் காட்டப்பட்ட "சோகம் பாவனை" யாக இருக்குமாயின், அது பொருந்தாது. ஏனெனில், அந்த வாக்கியம் "அது நான் ஆனேன்" என்று இருப்பதால், பெறுவானும் பேறும் ஆகி இரண்டுபட்டு நின்று, ஒன்றுபடுமாறு நிற்பதனாலேயே ஆகும்.

மேலும், பிரமம் விகாரம் அற்றது என்று கூறிவிட்டு, அது மீண்டும் மயங்கி, சீவான்மாவாகவும் பேதித்தது என்றும் கூறுகிறாய், பிரமம் அவ்வாறு சீவான்மாவாக மாறுவதற்குக் காரணம் கன்மத்தோடு கூடியதனாலேயே என்கிறாய். விகாரம் அற்ற பிரமத்திற்குக் கன்மம் எப்படி ஏற்பட்டது? எனவே நீ இவ்வாறு கூறுவது பொருந்தாது.

இஃது எப்படி இருக்கிறது என்றால், ஒரு மலட்டுக் காகம் அழுகின்ற தனது கரிய குஞ்சுக்கு உற்ற பசியைத் தணிக்கும் பொருட்டு, கருங்கல்லிலிருந்து உண்டான இறைச்சியை வாங்கிக், குஞ்சின் வாயிலே கொண்டுவந்து கொடுத்தது என்று கூறுவதைப் போல் இருக்கிறது. காகம் பிரமத்திற்கு உவமை; குஞ்சு சீவான்மாவுக்கு உவமை; கல்லின் மாமிசம், கன்மாதிகளுக்கு உவமை.

நீடு வேதம் அளவாக "ஏகம்" எனும் நீதிதான் நிகழ்வதும்
ஆகும் மேல்
நாடி ஞாதிருவும் ஞானம் ஞேயமுடன் நாளும் நான்மறை
யும் ஓதலால்
ஓடும் ஆகும் உனது ஏகம் ஓதும் இவை ஊனம் ஆகி உரை
மாறுகோள்
கூடுமாகும் அனுபூதிதானும் அது கூடிடாது அறிவிலா
மையால். 236

தெளிவுரை:

அநாதியே உள்ள வேதம், "பிரம்மம் ஒன்றே" என்று வரையறுத்துச் சொல்வதாக நீ கூறினாய். அவ்வாறாயின், அந்த வேதத்தில் ஞாதுரு, ஞானம், ஞேயம் என்னும் மூன்று முதலும் உண்டு என்று இன்றும் சொல்வதால், "ஒன்று" என்று நீ சொல்லும் சொல், அந்த வேத வாக்கியத்தைக் கொண்டே மாறுபடுகிறது. இன்னும் "பிரமம் ஒன்றே" என்றும், "அகம் பிரமம்" என்றும் நீ கூறுவது, முரண்படுவதாகும். உனக்கு ஆன்மா இல்லை என்பதால் பிரமாணங்களைக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்டு அறியும் அறிவும் (அனுபூதி) உனக்கு உண்டாகாது. (ஞாதிரு – ஆன்மா; ஞானம் – ஆன்மாவுக்கு உதவும் திருவருள். ஞேயம் – அத்திருவருளால் அறியப்படும் சிவம்.)

நீதியால் ஒளிகொள் பானுவானது அகல் நீரிலே நிகழு
மாறு போல்
ஆதிதான் உருவம் ஆய காயம் அதில் மெவி ஆவது
இலையாகுமாம்;
தீதிலா அருவம் ஆதலால், நிழல்கள் சேர வேறு இடம்
இலாமையால்,
ஓதில் ஓர் அகலின் நீரிலே ஒருவர் காணலால், இலது உன்
ஏகமே. 237

தெளிவுரை:

கதிர்களை உடைய சூரியனது நிழல், பாத்திரத்தின் நீரில் விளங்குவது போல, பிரமம் அருவம் ஆகலின், துன்பங்களுக்குக் காரணமாகிய உடலோடு கூடி உருவம் கொள்வதில்லை. மேலும், பாத்திரத்தில் உள்ள நீர், நிழலில் இருந்தால், சூரியகிரணம் அதில் விழாது. அது போல பிரம்மம் கூடாத உடல் உண்டாக வேண்டும். எனவே-பாத்திரத்தின் நீரிலே சூரியனைக் காண்பவனைப் போல, உடலில் பிரமத்தைக் காண்கிற ஓர் ஆன்மா உண்டு என்று நீ சொல்லும் ''அகம் பிரமம்'' பொருந்தாது.

''நிழல்கள் சேர வேறு இடம் இலாமை'' என்பது, பிரமம் அருவம் ஆதலால், அதன் நிழல் சேர்வதற்கு இடம் இல்லை என்பது ஆகும்.

வேறு வாயில் புலனோடு மேல் மனமும் மேவிடாத
பிரமாணமும்
கூறிடாது அறிவுதான் எனா உணர்தல் கோடு நீ முயலின்
நாடினாய்;
ஈறிலாத பரம் ஏகமே என இயம்பும் நீ, இசையும்
ஞானமும்
பேறது ஆவதிலை பேதமான இது பேணவே உளது
பேசிலே. 238

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஒன்றோடு ஒன்று கூடாமல் உணரும் பொறிகளும் புலன் களும், அவற்றின்மேல் உள்ள மனமும் கூடாமல், உடலில் ஓர் அறிவு தனித்து நிற்காது. அத்தகையதோர் அறிவு உண்டு என்பதற்குச் சாத்திரப் பிரமாணங்களும் இல்லை. அந்நிலையில, பிரமம் உடலோடு கூடித் தானே தானாய் நின்று அறியும் என்று நீ சொல்வது, கொம்பு இல்லாத முயலுக்குக் கொம்பு உண்டு என்று கூறுவதைப்போல் உள்ளது.

பிரமம் ஏகமாயே நிற்கும் என்று சொல்கிறாய்; அதனால் உனக்குப் பொருந்தும் ஞானப் பயன் ஏதும் ஆகப்போவதில்லை. ஏனெனில், பரப்பிரமமே சீவான்மா என்று நீ சொல்வதால், ''பிரமம் வேறு; ஆன்மா வேறு'' என்று நீயே இரண்டு முதல்கள் உள்ளனவாகக் கூறுவதுபோல் உள்ளது.

இலகு சோதிமணி எனவும் ஏகம் எனின் இதனின்
ஏகம்அது விலகினாய்;
குலவு காசும் ஒளி அதுவும் நீடிவளர் குணமும் நாடுவதொர்
குணியுமாம்;
பலவுமான குணம் ஒருவும் ஏகம்அது எனவும் நீ பகரின்,
நிகரிலா
உலகமானதனை உதவுமாறு அதுஇலை; உணர்வு தானும்
இலை, உணரிலே. 239

தெளிவுரை:

பிரமம், ஒளியும் மணியும் போல ஒன்றாய் இருக்கும் என்று கூறினால், இந்த உவமை வாயிலாகப் பிரமம் ஒன்று என்பதை மறுத்துக் கூறினாய். குணி வேறு; குணம் வேறு; மணி குணி, ஒளி குணம்; எனவே இரண்டு உள்ளமை தெளிவு.

மேலும், ஒன்றாய் உள்ள பிரமம், இச்சை ஞானம் கிரியை ஆகிய குணங்களை நீங்கி நிற்கும் என்று நீ கூறினால், அந்தப் பிரமத்துக்கு அந்தக் குணங்கள் இல்லை என்பதாகும். ஆகவே, இந்த நிகரில்லாத உலகத்தை உண்டாக்கும் தொழிலும் அந்தப் பிரமத்திற்கு இல்லை ஆய், இந்த உலகத்தைக் காக்கவேண்டும் என்னும் அறிவும் இல்லை என்பதாக முடியும். இந்த உண்மையை உணர்ந்து பேசு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புற்றின் நேர் பழுதை தொக்க போதுமயிர் புளகமாக அர
இரவிலே
உற்றதாம் அதனை ஒக்கவே உலகு உதிக்குமாறும் ஒரு
சத்திலே
பெற்றதாகும் எனின், அப்பிராந்தி உடையோரும், அப்பிரம
பேதமாய்
நிற்பர்; நீ பகரின் முற்றும் ஐயநிலை பெற்றும் இன்பமது
இலாததாம். 240

தெளிவுரை:

பாம்புப் புற்றில் கிடக்கும் கயிற்றை இரவு நேரத்தில் கண்டவன் அஞ்சி நடுங்கி மயிர்க்கூச்சுற்று, அதனைப் பாம்பு என்றே நினைப்பான். இந்த உலகம் பிரமத்தில் தோன்றியது என்றும், உலகம் இயங்குவதைக் கொண்டு அஃது உண்மை போல் தோன்றுகிறது என்றும் நீ கூறுவாய் ஆயின், கயிற்றைப் பாம்பு என்று நினைத்தவனைப் போன்று நீயும் மயங்கிய அறிவினை உடையவனே.

இத்தகைய மயங்கின அறிவை உடைய ஆன்மாக்கள் இச்சை ஞானம் கிரியை ஆகியன ஏற்பட்டு, உலகத்தைத் தோற்றுவித்து அழிக்கும் செயலைச் செய்வதில்லை என்று நீ கூறும் பிரமத்தின் வேறாய் நிற்பர் என்று நீ சொல்கிறாய். அவ்வாறாயின், உனக்கும் மயக்கமே ஏற்பட்டுள்ளது; உன் அறிவில் தெளிவு இல்லை. எனவே, உனக்குப் பிரமம் ஆகும் இன்பம் உண்டாகாது.

ஓதியே உலகம் அதனை நீயும் நிரு
வசனமாக உரை செய்வது என்?
பேதையோய், உளதும் இலதும் அல்ல பொருள்
பேசுவாரும் உளரோ? சொலாய்;
ஆதியே உளது வருதலால், இலது இல்
ஆவது இன்மை அது அழிந்துபோம்;
நீதியால் உளது இலாமை நேர்வது எனின்,
நேர்மை ஆகியது நின்றதே. 241

தெளிவுரை:

நீ வேதத்தை ஓதி இருந்தும், இந்த உலகம் முன்பு இருந்தது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இல்லை என்றும், பின்பு நிருவசனம் ஆகிய பிரமத்தில் தோன்றியது என்றும் எப்படிக் கூறுகிறாய்? ஒரு பொருள் இல்லதும் அன்று, உள்ளதும் அன்று என்று யாரேனும் சொல்வார்களா? எனவே அறியாதவனே, சொல்.

முன்பு தோன்றிய இவ்வுலகம் என்றும் உள்ளமையால், இல்லாதது இல்லாததே; இல்லது தோன்றாது; உள்ளதே தோன்றும்; இல்லாத ஒன்று தோன்றி இருக்குமாயின், அது நிலைக்காது; அழிந்துபோம். எனவே, உலகம் உள்ளதும் இல்லதும் ஆயுள்ளது என்று நீ கூறினால், அது பொருந்தாது. உலகம் மீண்டும் பிரமத்தில் உண்டாகும்போது, முன்பு போன்று தோன்றுவதால், அதற்கு மூலகாரணம் கிடந்து, அழியாமல் நிற்கும்.

வேறு அதுவாகி, அதுபோல் இருந்தமையில்
வெள்ளி சுத்தி எனில் ஐயமே
கூறலாம் ஒரு பரத்தோடு ஒத்தபொருள்
கொண்டு விண்ட நிலை கண்டனம்;
மாறிடாது நிலம் நீரது ஆகி, அனல்
வாயுவாகி, அவை மாறியும்
சேறிலாது விவகாரம் அன்று, பரமார்த்த
மாய் அது செறிந்ததே. 242

தெளிவுரை:

மித்தை ஆகிய உலகம், பிரமம்போல் மெய்யாகத் தோன்றின மையால், இப்பி வெள்ளியைப்போல ஒளிர்கிறது என்று நீ கூறினால், இந்த இப்பியை வெள்ளி என்று ஐயப்பட்டதுபோல், உலகத்தையும் பிரமமோ மித்தையோ என்று ஐயப்படவேண்டும்.

முன்பு இந்த உலகம், ஒப்பற்ற பிரமத்தோடு ஒத்த பொருள் எனக் கொள்ளப்பட்டு, இப்பொழுது மித்தையாகக் கொள்வாய் ஆயின், நிலம் நீர் ஆகியும், அனல் வாயு ஆகியும் மாறி நில்லாமல், நீர் நிலமாகியும், வாயு அனலாகியும் மாறாது. ஆகவே, இந்த உலகம் விவகாரத்தில் மட்டும் அன்றி, பரமார்த்தத்திலும் மெய்யாகவே உள்ளது. (மித்தை – பொய்; விவகாரம் – உலக வழக்கு; பரமார்த்தம் – மேலான பொருளாக வைத்துப் பேசுதல்).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாய நூலது சிலம்பி வாயினிடை வந்தவாறு அதனை
மானவே
ஆயதே உலகம் ஆனதும் பிரமம் அதனிலே எனில் அடங்கி
நின்று
ஏயும் ஆகும் ஒரு சித்தும் அத்துடன் நிலாதது என்று பின்
இயம்பின், நீ
பேயனே, கடம் மிருத்தில் வந்தது பிறப்பது ஆவதுஇலை
பேச்சிலே. 243

தெளிவுரை:

சிலந்திப் பூச்சியின் வாயிலிருந்து தோன்றிய பொய் நூல் கெட்டபோது மீண்டும் அதிலிருந்தே இந்த நூலாகத் தோன்றி வந்தது போல, இந்த உலகமும் பிரமத்திலே தோன்றி நின்று, கெட்ட பின்பு மீண்டும் பிரமத்திலே முன்புபோல் தோன்றி வரும் என்று நீ கூறுகிறாய். அவ்வாறாயின், அருபமாய விகாரம் ஆகிய பிரமமும், உலகில் அகப் பட்டு மயங்கும்; எனவே நீ கூறுவது பொருந்தாது.

அந்த நூல் சடம். அந்தச் சடப்பொருள் ஆகிய நூலுக்குள், அந்தச் சிலம்பி அகப்படாமல் நிற்பதுபோல, சடப்பொருளாகிய உலகத்துள்ளும் பிரமம் கூடி நில்லாமல், அதற்குக் காரணமாய் நிற்கும் என்று நீ கூறுகிறாய். அப்படியானால், குடத்துக்கு மண் காரணமாய் இருப்பதால், காரணம் ஆகிய மண்ணில் குடம் தானே தோன்றாது; குடம் தோன்றும்போது, அதற்கு முதல் காரணம் ஆகிய மண்ணும், துணைக் காரணம் ஆகிய திரிகையும், நிமித்த காரணம் ஆகிய குய வனும் கூடித் தொழில் செய்யவேண்டும். அதுபோல, உலகத்துக்கும் முதல் காரணம் உண்டாய்த் தோன்றவேண்டும். (மிருத்து – மண்; மாயநூல் இல்லாதது ஒன்று தோன்றுவது).

வேறது ஆகும் உருவத்திலே, பரம் வெளிப்படும் என
விளம்பில், நீ
ஊறிலா உரு அசத்திலே பிரமம் உண்டு தான் உணர்வு
இலாதது ஏன்?
மாறி வாயுவும் அனாதியானவையும் வந்திடாமையினில்,
இன்று எனில்
ஈறுதான் உடையது ஆயதோ, பிரமம்? என்கொலோ இவை
இறப்பதே? 244

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

வேறுபட்ட உருவத்திலே, பிரமம் வெளிப்பட்டு நிற்கும் என்று நீ கூறினால், குற்றமற்ற சடத்தில் பிரமம் உண்டாயிருக்கும்போது, அந்தச் சடநிலையில் அறிவு இன்றிக் கிடப்பானேன்? வாயுவும் அந்தக் கரணங்களும் அந்நிலையில் வந்து கூடாமையினால், அஃது அறிவற் றதாயிற்று என்று கூறினால், பிரமத்தின் அறிவு, கெடத்தக்கதுதானோ? அதுவுமன்றி, பிரமம் நிற்கையில், வாயுவும் அந்தக்கரணங்களும், பிரமத்தை விட்டு நீங்கிவிட்டனவோ? எனவே, பிரமம் அறிவும் அறியாமையும் ஆகிய உருக்களில் நில்லாது என்பது பெறப்பட்டது.

பற்றது இன்றி உடல் நின்றிடும் பரம்
    எனப் பகர்ந்தனை; பரிந்துடன்
உற்று உடம்பு நரை திரைகள், நோய், சிறை,
    உறுப்பு அழிந்து இவையும் உள்ளபின்
குற்றம் என்று இதனை விட்டிடாதுவிட
    என்றலும் குலைவு கொண்டிடும்
பெற்றி கண்டும் ஒருபற்று அறும் பரிசு
    பேசவே உளது உன் ஆசையே. 245

தெளிவுரை:

பிரமம் உடலில் நின்றது ஆயினும், அந்த உடலோடு பற்று இன்றி நிற்கும் என்று கூறினாய். அவ்வாறாயின், பிரமம் ஆர்வத்துடன் கூடி நின்ற உடம்பு, நரை, திரை, நோய் இவற்றினால் உறுப்பு அழிவு உண்டானபின்பும், இவ்வுடம்பு நிலையற்றது என்று அதனை விட்டு விடுவதில்லை; உடல் அழியும் என்றதும் குலை நடுங்குகின்றது. எனவே இப்படி உடம்போடு பற்றி நிற்கும் பிரமத்திற்குப் பற்று இல்லை என்று நீ எப்படிக் கூறுகிறாய்?

சோதி மாமணிகள் ஊடு போனதொரு நூலும் ஆனநிலை
    சொல்லிடும்
நீதியால் மணிகள் பேதம் ஆகி, ஒரு நூலில் நின்றமை
    நிகழ்த்தினாய்;
ஆதிதான் ஒருவன் ஆகியே பல அனந்த யோனியில்
    அமர்ந்தவன்;
பேதியாத நிலை பேசினாய்; உலகு பேதமே இலது
    அபேதமே. 246

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஒளியினை உடைய பல மணிகளுக்கு உள்ளே, உருவி ஒன்றாய் நின்ற நூலும், கோத்த மணிகள் பல நிறமாக வேறுபட்டு, ஒரு நூலிலே நின்றதையும் போலப் பிரமத்திற்கும் உலகுக்கும் உவமை கூறினாய். அதனால், கடவுள் ஒருவனாய்ப் பல பேதப்பட்டு, எண்ணிறந்த யோனிகள் தோறும் நின்றவன் ஆகிறான். ஆயினும் அவன் வேறுபடவில்லை என்று நீ கூறுவதால், மணிகள் வேறு படுவன போல் உலகம் பேதமாக உள்ளது; பிரம்மத்திற்குப் பேதம் இல்லை என்பது பெறப்படும்.

ஒத்து நின்று உடலின் இன்பதுன்பம் அவை
உற்று, உற்றிடுவது இன்று எனும்
பித்த, உன் உரையில் உற்றதே இலது;
பெற்றது இன்றிலது; பெற்றதேல்
துய்த்தல் என் உறுதல் சீவபாவமது
சொல்லி ஒன்றினும் தோய்வு இலாமை நீ
வைத்து நித்த மனவாக்கு இறந்த பரம்
என்ன மானம் இலை இன்னமே. 247

தெளிவுரை:

அறிவற்ற சடம் ஆகிய உடலோடு கூடிப் பிரமமும் அஞ்ஞானமாய்ச் சுகதுக்கங்களை அனுபவிக்கும் நிலையில், பிரமம் உடலோடு கூடுவதில்லை என்று கூறும் பேயனே, நீ அவ்வாறு கூறுவது, உன் சாத்திரத்திற்காவது பொருந்துமா? சாத்திரத்தில் மட்டுமன்றி, அனுபவத்திலும் அன்றி அவ்வாறு நீ கூறியிருக்க முடியாது. இல்லையேல், நீ நடைமுறையிலேயே அத்தகைய அனுபவத்தைப் பெற்றது எப்படி? பரமான்மா அனுபவிப்பதில்லை, அது சீவான்மாவின் பாவனை என்று நீ கூறினால், இப்படி அனுபவிக்கின்ற சீவான்மாவை, ஒன்றிலும் தோய்வு இல்லாத பரமான்மாவாகக் கொண்டு, அது என்றும் மனவாக்கு இறந்தது என்றும், ''அகம் பிரமம்'' என்றும் சொல்வதற்கு இன்னமும் உனக்கு நாணமாய் இல்லையா?

எங்கும் நின்றிடில் அவத்தை இன்றிடும்;
இசைந்திடும் கரணம் என்னில், நீ
அங்கு நின்ற பரம் எங்கு ஒளித்தது? அது
நின்றதேல், அவை அடங்கிடா;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இங்கு நின்றதொரு காந்தமான கல்
இரும்பு சந்நிதி இயங்குநேர்
தங்கி நின்றது எனில், நீங்கி மீளும் வகை
தங்கிடாது; உன் உரை தப்பதே. 248

தெளிவுரை:

பிரமம், சீவான்மாவாய் உடல்தோறும் நிறைந்து நிற்கும் என்று கூறினால், நீ கூறிய அவத்தையில் அகப்பட்டு அடங்காது. அப்படி அவத்தைப்படுவது சீவான்மா அன்று; அந்தக் கரணங்களின் சம்பந்தம் என்று நீ கூறினால், கரணங்கள் அவத்தைப்படும்பொழுது, சீவான்மா எங்கே மறைந்து நின்றது? அந்தக் கரணங்களின் தலைவன் ஆகிய சீவான்மா, அங்கு நின்றதாயின் அவன் வழிப்பட்ட கரணங்களும் அடங்கமாட்டா.

மேலும், ஒரு காந்தக்கல்லின் முன்னால் இருக்கும் இரும்பு, அசைந்து அடங்கும் தன்மை உடையது போல் சீவான்மாவின் முன்னுள்ள அந்தக் கரணங்களும் அவ்வாறு அவத்தைப்பட்டன என்று நீ கூறினால், இரும்பு காந்தத்தோடு கூடினால், காந்தத்தைவிட்டு அது நீங்காதது போல, அந்தக் கரணங்களும் சீவான்மாவை விட்டு நீங்கா. எனவே நீ கூறிய உவமை பொருத்தம் அற்றது.

இருள் பொதிந்ததொரு பரிதி இவ்வுலகில்
இசையில், இன்று உடலம் நான்எனும்
மருள் பொதிந்த்தொரு பிரமம் இங்கு உளது;
மருவி நின்ற உரு ஒருவியே
தெருள் பொதிந்து பரன் நான் எனும் தெளிவு
சென்ற போது கதி என்றிடும்
பொருள் பொதிந்தது எனில், அமலனுக்கு மலம்
வருதலால், உளது புன்மையே. 249

தெளிவுரை:

இருளால் மூடப்பட்டதோர் சூரியன், இந்த உலகத்தில் தோன்றியிருப்பதைப்போல, உடல்கள்தோறும் 'நான்' என்று மயக்கத்தினால் மூடப்பட்ட பிரமம் இங்குத் தோன்றியுள்ளது. அப்படி மயங்கி நின்ற உடலைவிட்டு நீங்கி, அறிவு சூழப்பட்டுப் ''பரப்பிரமம் நானே''

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்னும் நீ தெளிவு உண்டான பொழுது, முத்தியாய் நிற்பவனும் நீ தானே என்று கூறுவாய் ஆயின், நின்மலன் ஆகிய பிரமத்துக்கு மலம் கூடுதலும் நீங்குதலும் உண்டாவதாலேயே ஆகும் என்று நீ கூறுவது, எந்த வகையிலும் பொருந்துமாறில்லை.

சுத்தம் ஆனது, பரத்தினுக்கு அணைவது
இன்று சுத்தமது அநாதி, நீ
வைத்த மாயம்உறு சித்து, அசுத்தம்உற
மற்று அதற்கு மலம் வைத்தனை;
ஒத்த சீவன், மலம் கன்மம் மாயை உறு
கின்ற காரணம் உணர்ந்திடாய்;
பித்தனே, விறகினில் பிறப்பது எரி
என்னில், வேறு பொருள் பெற்றதே. 250

தெளிவுரை:

சுத்தம் என்பது பரபிரமத்திற்குப் புதிதாக உண்டானதன்று; அஃது அநாதியே உள்ளது. சீவான்மாவாகிய நீ, உனக்குள்ள அறிவு மயங்கி அசுத்தத்தைப் பொருந்தி நிற்கையில், உன்னின் வேறு ஆகிய பரப்பிரமத்திற்கு மலம் உண்டு என்று கருதுகின்றாய்.

உடலோடு கூடியுள்ள நிலையில், சீவான்மாவுக்கு மலம், கன்மம், மாயை ஆகியன எப்படி ஏற்பட்டன என்னும் காரணத்தை நீ அறியாததால் நீ ஒரு பேயனே. விறகில் அக்கினி மறைந்து நின்று ஒளிர்கின்றது. அதுபோல, உடலில் மறைந்து நிற்கும்பொழுது சீவான்மா என நின்று, ஒளிரும் பொழுது பரப்பிரமமாக நின்று இந்த ஆன்மா பிரகாசிக்கும் என்று நீ கூறுவது பொருந்தாது. ஓர் அக்கினி இரண்டாகப் பிரிந்து விறிகில் நிற்பதன்றி, வேறு ஒரு பொருளாய்த் தோன்றுகிறது. அதுபோல, சீவான்மாவும், பரப்பிரமத்தின் வேறு ஆகிய ஒரு பொருள் என்பதை நீ அறிவாயாக.

உன்னில் நீயும் அனுபோகம் என்றபொழுது
உற்றிடும் துவிதம் மற்று அது இங்கு
என்னில் இல்லை எனில் இல்லை; நீயும் அறி
வின்மை கண்ட இடம் உண்மையேல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மன்னும் ஓர் உணர்வு வந்திடும் உணர்வு
எலாமும் மாயை எனில் மாயையே
சொன்னது ஓர் பிரமம் ஆயிடும் பிரமம்
மாயையாய் அறிவு சோருமே. 251

தெளிவுரை:

நானே நானாய் அனுபவிப்பன் என்று சொல்லும்பொழுது பெறுபவனும் அனுபவிப்பதும் உண்டாகி, இரண்டு பொருள்கள் உள்ளனவாகும். பெறுபவனாக என்னிடத்தில் நான் கண்டதில்லை என்று கூறுவாய் ஆயின், பேறு ஆகிய நீயும் இல்லை என்பதாகும்.

அஞ்ஞானம் கெட்ட இடமே உண்மை என்று நீ கூறினால், அந்த மயக்க அறிவு, கெட்டு கூடும் இடத்தில், ஆன்ம அறிவு சிறிது உண்டாயிருக்கும். அப்படியில்லை, அப்படி அறியும் அறிவெல்லாம் மாயை அறிவாகும் என்று நீ கூறினால், மாயை நீங்கியபொழுது தோன்றும் அறிவும், மாயை – யறிவு என்றால், அந்தப் பிரமம் மாயை ஆக வேண்டும். ஆகவே, பிரமமும் மாயையாகி, அம்மாயையாலே அறிவும் கெடும் என்றே கூறவேண்டும்.

ஆரணங்கள் தரு ''தத்துவமசி''
பதங்களின் பொருள் அறிந்திடாய்;
காரணம் அதுவும் நீயும் என்றும் இருமை
கண்டு, வேறது இன்மை கருதிடாய்;
நாரணன் பிரமனாலும் நாடரிய
நாயகன் கழல்கள் நண்ணி, நீ
ஏர்அணைந்து பொலி சாதனங்கள் கொடு
யோக ஞானமும் இயற்றிடே. 252

தெளிவுரை:

வேத முடிவிலே சொல்லப்பட்ட ''தத்துவமசி'' என்னும் மகா வாக்கியத்தையும் அதனால் பெறப்பட்ட சொற்பொருள்களையும் நீ அறியமாட்டாய். காரணம் ஆகிய கடவுளும் காரியம் ஆகிய ஆன் மாவும் இரண்டுபட்டு நிற்பதையும் கண்டு, கூடிநிற்கும் அதுவும் நீ அறிந்திடாய்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆதலால், பிரமவிட்டுணுக்களாலும் பெறுதற்கு அரிய கடவுளின் திருவடிகளைச் சென்று அடைவதற்கு, அழகு மிகுந்த பொலிவினை உடைய சிவ சாதனங்களைக் கடைப்பிடித்து, யோகங்களையும் ஞானங்களையும் அறிந்து செய்வாயாக.

12. பாற்கரியன் மதம்

மன்னும் மறையின் முடிவு என்று மாயாவாதி உடன்
மலைந்து,
பின்னம் ஆகிப் பிரம்மத்தைப் பேதா பேதம் சாதித்துப்
பன்னும் ஒருநூல் அதுவாகப் பாரின்மீது பாற்கரியன்
சொன்ன இதனை இந்நூலின் அகத்தே தோன்றச்
சொல்லிடுவாம். 253

தெளிவுரை:

நிலைபெற்ற வேதம் இன்ன தன்மையது என்று மாயாவாதி அறியான்; எனவே அவனோடு மாறுபட்டு நீங்கி நிற்பவன் பாற் கரியன். மாயாவாதி கூறிய பிரமத்தைப் பேதம் ஆகவும், அபேதமாக நிலை நிறுத்தி ஓதும் நூலும் வேதமும் ஆயிருக்க, அதன் உண்மையை அறியாது, இப்பூமியில் பாற்கரியான் சொன்ன மதத்தை, இந்தச் சிவஞான சித்தியாரில் தெளிவாகச் சொல்கிறோம். (பாற்கரியம் என்பது, பரிணாம மாயாவாதம் ஆகும்).

சித்தே உலகாய்ப் பரிணமித்துச் சீவன் ஆகித்
திகழ்ந்தமையால்
சத்தே எல்லாம் முத்தியினைச் சாரக் கண்ட ஞானங்கள்
வைத்தே மொழியும் மாமறைகள் சொன்ன மரபே
வந்தக்கால்
ஒத்தே கெட்டுப் பிரம்மத்தோடு ஒன்றாய்ப்போம் என்று
உரைத்தனனே. 254

தெளிவுரை:

அறிவாகிய பிரமமே பிரபஞ்ச பேதமாய்த் தோன்றி வளர்ந்து, ஆன்மாக்களுமாய் விளங்கும் தன்மையது ஆகலின், சர்வமும் அந்தப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிரமமே ஆகும். வீட்டு இன்பத்தை பெறுதற்கு அறிகின்ற ஞானங்களை வேத வாக்கியங்கள் சொல்லும். அந்த வாக்கியங்களைச் சொன்னபடியே வைத்து "தத்துவமசி" சொற்பொருள் காணவேண்டும். அவ்வாறு கண்டால், அந்தப் பிரமத்துடன் கூடி ஆன்மத் தன்மை கெட்டு, ஒன்றிப் பிரமமாயே போகும் என்று பாற்கரியன் கூறினான். நிலைபெற்றிருப்பது பிரமம் ஒன்றே என்பது பாற்கரியன் மதம்.

பாற்கரியன் மதம் மறுதலை

இயம்புகின்றது உலகு ஆயிடாது; சடம்
இன்றி நின்று சடமாகியே
முயங்குகின்றமையில் இலவணத்து இரதம்
முழுதுமே கனதை முயல்கைபோல்
பயந்தது என்னில் அறியப்படும் பொருளும்
அறிவும் என்று பல ஆகுமோ?
தியங்குகின்றது என் உரைத்திடாய் கடினம்
ஆதியாகி வரு சித்தனே. 255

தெளிவுரை:

நீ சொல்கின்ற பிரமம், உலகாக மாறியிடமாட்டாது. எனவே, பிரமம் சடத்தை நீங்கி நின்றது. சடமும் தானாகவே கூடி நிற்கும் தன்மை உடையதன்று. உப்பு நீரோடு கூடி, ஒரு தன்மைப்பட்டால் போல, பொருளும் ஒன்றாய் நின்றது என்று கூறுவாய் ஆயின் அது பொருந்தாது.

நீரோடு கூடிய உப்பு வேறுபடாது, ஒன்றாய் நின்றால் போல, பிரமமும் ஒன்றாய் நில்லாமல், அறியப்படும் பொருளாகிய சடமும், அறிவாகிய ஞானமுமாக வேறுபட்டு நிற்குமோ? ஏன் இப்படி மயங்குகிறாய்? பூதங்கள் முதலியனவும் நானே ஆவேன் என்று கூறும் அறிஞனே! சொல்.

உன்னுகின்ற பிரமத்திலே சிறிது, இவ்
உலகம் ஆனது என ஓதின், நீ
மன்னுகின்ற சில காலமொடு அழியும்
அழிய வந்து உதவு மாயையால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தன்னில் ஒன்றும் எனில், வருதலோடு இறுதி
தருதலால் அது சடத்ததாம்;
உன்னோடு அச்சகமும் உண்மை அன்று; சடம்
என்னவே உறுதி மன்னுமே. 256

தெளிவுரை:

யாவராலும் நினைக்கப்படுகின்ற பிரமம், சற்று வேறுபட்டு உலகம் ஆயிற்று என்று நீ கூறுவாய் ஆயின், உலகம் சிலகாலம் நிலை பெற்று நின்று அழியும். அப்படி அழிந்து மீண்டும் மாயையில் தோன்றி வரும். எனவே, மாயையில் ஒடுங்கி மாயையில் தோன்றும்.

மேலும் ஒடுங்கும் காலத்தில் பிரமத்திலே ஒடுங்கித், தோன்றும் காலத்தில் பிரம்மத்திலேயே தோன்றும் என்றால், இப்படித் தோன்றி ஒடுங்கும் உலகம், பிரமத்தின்வேறு ஆயின் பிரமமும் அசேதனம் ஆக வேண்டும்; ஆகையால் 'அகம்பிரமம்' என்னும் உன்னுடன், உலகமும் தோன்றுதலும் ஒடுங்குதலும் செய்வதால், அது மெய் அன்று; சடமே. ஆக, உலகம் சடம் என்பது உறுதிப்படலாயிற்று.

வித்து எழுந்து மரமாய் விளைந்தமை
விளம்பினாய் உவமை; வேறு நீ
நித்தம் என்ற உரை பொய்த்து நீடுசட
மாய் எழுந்து அழியும் நின் பரம்
ஒத்து எழும்பொழுது வித்தினுக்கு அவனி
உண்டு தாரகம் உனக்கு எனா
பித்தன் என்று உலகு உரைத்திடும்; பிரமம்
ஆயினாய் இவை பிதற்றியே. 257

தெளிவுரை:

மரம் கெட்டபொழுது, வித்திலிருந்து மரம் தோன்றுவது போல, உலகம் அழிந்தபொழுது, பிரமத்திலிருந்து உலகம் தோன்றும் என்று உவமை கூறினாய். அவ்வாறாயின், பிரமம் உலகுக்கு வேறாய், என்றும் உள்ளது என்னும் சொல் பொய் ஆயிற்று; மேலும் பிரமம் உலகத்தைத் தோற்றுவிக்கவும், உலகம் பிரமத்தைத் தோற்றுவிக்கவும் ஆக, உன் பிரமம் சடமாகித் தோன்றிக் கெடும் என்கிறாய்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வித்து மரம் ஆகும்போது, பூமி அதற்கு ஆதாரமாகி அதைத் தாங்கும்; அதுபோல, உன் பிரமம் உலகம் ஆகும்போது, அதற்கு ஆதாரம் ஆகி அதனைத் தாங்குவது யாது?

பிரமம் ஆனவன் ஆகிய நீ இப்படி மயங்கிக் கூறுவாய் ஆயின், இந்த உலகம் உன்னைப் பித்தன் என்றே பேசும்.

சூடகம், கடகம், மோதிரம், சவடி,
　　தொடரொடு, ஆரம், முடி, தோடு, நாண்
ஆடகம் தருவதாகும்; இப்படி
　　அனைத்தும் அப்பிரமம் ஆகுமேல்
நீடும் அப்பணிகள் செய்துளோர், அவை
　　புனைந்துளோர்களை நிகழ்த்திடும்;
நாடிடும் சகம் இயற்றுவோர் கொடு
　　நடத்துவோர் உளர் நவிற்றிலே. 258

தெளிவுரை:

கைவளை, வளையல், மோதிரம், காசுமாலை, முத்துமாலை, தலைச்சூடி, தோடு, கழுத்துமாலை ஆகிய அணிகலன்கள், பொன்னி லிருந்து பலவாறாகச் செய்யப்படுகின்றன. அதுபோல பிரமமும் பிரபஞ்சபேதம் எல்லாமாகப் பேதித்துத் தன்னிலை கெடாமல் நிற்கும் என்று நீ கூறுவாய் ஆயின், அது பொருந்தாது. இப்படி அந்த அணி கலன்களைப் போல வேறுபட்டு, எல்லாம் பிரமமாய் நிற்குமானால், அஃது எப்படிப் பொருந்தும்?

அந்த அணிகலன்களைச் செய்தவர்களையும் அவற்றை அணிந்தவர்களையும் யார் செய்தார்? அதுபோல, இந்த உலகத்தை உண்டாக்குவோரையும் அதனை நடத்துவோரையும் ஒடுக்குவோ ரையும் செய்வது யார் என்பதை நன்றாக யோசித்துக் கூறுவாயாக.

அறிவினோடு செயல் மாறில், வீடு அதனை
　　அணுக ஒணாது; அவை இரண்டினால்
உறுதியான பிரமத்தினோடு அழிய
　　ஒன்றலாம் என உரைத்தி காண்;
இறுதியேல் அதனொடு இசைவது இன்று; இசைவது
　　உள்ளதாயிடின், அவ்இன்பமே
பெறுதி நீ உடலொடு உயிர்களாய், அறிவு
　　பிரியுமாறு செயல் பெறுவது என்? 259

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஞானமும் கிரியையும் மாறிவிட்டால், வீடுபேறு பெறுதற்கு இயலாது. எனவே, ஞானம், கிரியை ஆகிய இரண்டிலும் உறுதியாக நின்று, அவற்றிற்கு ஆதாரம் ஆகிய பிரமத்திலே அழியக் கூடலாம் என்று கூறினாய். ஞானக் கிரியைகள் நிற்கப், பிரமத்தைச் சென்று கூடுதலும் இல்லை. அந்த ஞானக் கிரியைகள் கெட்டால், பிரமத்தோடு கூடுவதற்கு ஒரு முதலும் இல்லை.

ஞானக் கிரியைகள் கெடாமல், சீவான்மா பரமான்மாவை ஒன்றி நிற்குமாயின், சீவான்மா எப்பொழுதும் அந்த சுகத்தை அனுபவித்து நிற்கும்; அது மட்டும் அன்றி, மீண்டும் இந்த உலகத்தில் உடலோடு வந்து பிறப்பதும் இல்லை. இதிலிருந்து ஆன்மா என்பது ஒன்று உண்டு என்பதை நீ அறிவாயாக.

13. நிரீச்சுர சாங்கியன் மதம்

மூலம் புரியட்டகம் விகிர்தி ஆகி, மூன்றாய்ப் பிரகிருதி,
தூலம் சூக்கம் பரமாய், அச்சுத்த புருடன் சந்நிதியில்
பாலன் சேட்டை புரிந்து உலகம் யோனி பலவாய்ப் பரந்து ஒடுங்கும்
சால என்று நிரீச்சுவர சாங்கியன் தான் சாற்றிடுமே. 260

தெளிவுரை:

பிரகிருதி, புமான் என்னும் இரண்டில் பிரகிருதியானது, மூலம், புரியட்டகம், விகிர்தி என்று மூன்று பெயரை உடையது; அது தூலம், சூக்குமம், பரம் என்னும் மூன்று விதமாய் நிற்கும்.

புமான் ஆகிய சுத்தபுருடன் பிரகிருதியின் சந்நிதியிலே, ஒரு குழந்தையைப் போல, அறியாமை காரணமாக, உலகமும் யோனி பேதங்களும் 'நான்' என்ற உணர்வுடன் நிற்கிறான்; சுத்த புருடனுக்கு விவேக ஞானம் வந்து, எல்லாம் பிரகிருதிக்கு உள்ளது, தனக்கு இல்லை என்று அறிந்ததும், உலக பந்தம் நீங்கும். இவ்வாறு நிரீச்சுவர சாங்கியன் கூறுகிறான்.

(பிரகிருதி – சடம்; புமான் – புருடத்தத்துவன்; விகிர்தி – தூல தேகமும் பிரபஞ்சமும்).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிரீச்சுர சாங்கியன் மதம் மறுதலை

சுத்தன் அறிவன் புருடன் எனில் சூழாதாகும் பிரகிருதி
பெத்தம் நீங்கினாலும், பின் பெத்தன் ஆவன் பேரறிவால்
சுத்தம் மேவும் பிரகிருதி கண்டு கழிக்க மாட்டானேல்
முத்தன் ஆகான் சுத்தனுக்கு மூலப் பிரகிருதி இலையாம். 261

தெளிவுரை:

ஆன்ம புருடன் தூய அறிவை உடையனாகில், அவனை அசுத்தம் ஆகிய பிரகிருதி தனக்கு உட்படுத்தாது; பெத்தம் நீங்கின போதும், அவன் அறியாமல் நிற்பான் ஆகலின், பெத்தத்தோடு இருப் பவனே ஆவான். பேரறிவு ஆகிய சத்தியோடு கூடி நின்றாலும், கொடிய பிரகிருதியின் செயலைக் கண்டு நீங்காவிட்டால், பிரகிருதியே அஞ்ஞானத்தைச் செய்கிறது என்பதை அறியாதவன் ஆவன்; எனவே முத்தியைப் பெறும் தகுதியையும் உடையனல்லன். சுத்தனாய் இருக்கும் பிரமத்துக்கு மூலப்பிரகிருதி உண்டாகாது. மூலப்பிரகிருதி கூடுவதும், நீங்குவதும் ஆன்மாவுக்கே என்பதைஅறிவாயாக.

புருடன் பிரகிருதி பெற்றால் போதம் சிறிது அங்கு
உண்டாகிக்
குருடன் முதுகில் முடவன் இருந்து ஊர்ந்தாற் போலப்
பிரகிருதி
இருள்தன் இடத்தே இருந்து இயங்கும் கன்மால் இறையன்று,
இரண்டினையும்
மருள்தன் உருவாய்ச் சேட்டிப்பித்து அறியும் அமலன்
அரனேயாம். 262

தெளிவுரை:

ஆன்மபுருடன், பிரகிருதியைக் கூடினால், அதனால் சற்று அஞ்ஞான அறிவு ஏற்படும். அதன் பயனாக, அந்தப் பிரகிருதி அவனிடத்தே இருந்து கன்மத்துக்கு ஈடான தொழிலை நடத்தும். இஃது எதுபோல எனின், குருடன் முதுகின்மேல் முடவன் இருந்து, அந்தக் குருடனை வழிநடத்தியது போலாகும்.

எனவே பிரகிருதியுடன் கூடி நிற்பவன் ஆன்மாவே ஆகும்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கர்த்தா அன்று. அந்த ஆன்ம புருடனையும், அவனைக் கூடி நின்ற பிரகிருதியையும் கூட்டி, அஞ்ஞானத்தை தன் வடிவமாகக் கொண்டு ஆன்ம புருடனை நடத்துவித்து, செய்த கன்மத்தை அறிந்து, அதற்குத் தக்க பயனையும் கொடுப்பவன், நின்மலன் ஆகிய அரனே ஆவன்.

அறியான் புருடன்; பிரகிருதி அசேதனம்; காரியத்தினுக்குக்
குறியாய் நாதன் உளன் என்று கூறும்; முத்தி விவேகம்
எனில்,
செறிவாம் தளை போகாது; அறியில் சேர்த்தோன் வேண்டும்;
செயலில் போம்
நெறியால் பணி செய்து உடல் பாசம் நீக்கிக் கொள் நீ,
நின்மலனால். 263

தெளிவுரை:

ஆன்ம புருடன் தானாக ஒன்றையும் அறியமாட்டான். பிரகிருதி சடம். எனவே, இவ்விரண்டையும் காரியப்படுத்துவதற்குக் காரணன் ஆகிய கர்த்தா ஒருவன் உளன் என்பதை அறிவாயாக. முத்தி என்பது விவேக ஞானம் என்று நீ கூறுவாய் ஆயின், எல்லா வற்றையும் அறியும்போது பாச ஞானமும் பசுஞானமும் கொண்டு அறியவேண்டும் ஆகலின் பாசபந்தம் நீங்குவதில்லை. எனவே, நீ கூறும் விவேக ஞானம் முத்தி ஆகாது.

பாசத்தைக் கூட்டிய கருத்தாவின் கருணையினாலேயே பாசம் நீங்கும்; பாச நீக்கம் பெறுவதற்கு, சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய வழிகளிலே நின்று, நீ தொண்டு செய்ய வேண்டும். அந் நிலையில், கர்த்தாவின் கருணையினால் உன் பாசபந்தத்தை நீ நீக்கிக் கொள்வாயாக.

14. பாஞ்சராத்திரி மதம்

ஆதியாய் அவரும் ஆகி அகண்ட பூரணமாய் ஞானச்
சோதியாய் நின்ற மாயன் சுவேச்சையால் உருவு கொண்டு
நீதியார் கருணை யாலே நீள்கடல் துயின்று நூலுள்
ஓதினால் என்று பாஞ்சராத்திரி உரைப்பன் உற்றே. 264

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

எல்லாவற்றிற்கும் முதற் பொருளாய், அருவம் ஆகி, அளவு இறந்த முழுமுதற் பொருளாய், ஞான சொருபியாய் நிற்கின்ற திருமால், உயிர்களைக் காத்தல் கருதி, தன் விருப்பப்படியே, மீன் முதலிய திரு மேனிகளை எடுத்தும், உயிர்கள் மீதுள்ள கருணை காரணமாகத் திருப் பாற்கடலில் பள்ளிகொண்டது மட்டுமன்றி, வேதத்தையும் அருளிச் செய்தான் என்று பாஞ்சராத்திரி சொல்கிறான்.

உந்தியில் அயனை ஈன்றும் அவனைக் கொண்டு உலகு
உண்டாக்கி,
அந்தநல் உலகு அழிக்க அரனையும் ஆக்குவித்துத்
தந்திடும் சகத்தினுக்குத் திதி கர்த்தா தானே ஆகி
வந்திடும் தோற்றம் ஈறு நிலைமையும் பண்ணும் மாயன். 265

தெளிவுரை:

காத்தற் கடவுள் ஆகிய திருமால், தனது உந்திக் கமலத்தி லிருந்து அயனைப் பெற்று, அந்த அயனாலே உலகங்களைப் படைப் பித்து, படைத்த உலகத்தை அழிப்பதற்கு அரனையும் படைத்துத் தன்னால் உண்டாக்கப்பட்ட உலகத்தைக் காக்கும் கடவுளும் தானே ஆகி, இப்படிப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழி லையும் செய்பவனாக விளங்குகிறான்.

மீன், ஆமை, கேழல், நார சிங்கம், வாமனனாய், வென்றி
ஆனாத இராமர் மூவர் ஆயனாய் அளித்தான்; கல்கி
தானாயும் வருவன்; இன்னம் என்று அவன்சாற்றித் தேவர்
கோனாயும் நிற்பன் என்று கூறுவன் குறிப்பினோடே. 266

தெளிவுரை:

உலகத்தைக் காக்கும் பொருட்டு, திருமால், மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனன், பரசுராமன், தசரதராமன், பலராமன், கண்ணன் என்னும் பல பிறவிகளை எடுத்தான். இனிக் கலியுகத்திலே குதிரையாகவும் பிறப்பன். இவ்வாறு தசாவதாரம் எடுக்கும் காலத் திலும் அவனே தேவர் தேவனாய் திகழ்பவன் என்கிறான் பாஞ்சராத்திரி மதத்தவன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏழ்கடல் செலுவில் ஏற்றும்; இருங்கிரி முதுகில் ஏற்றும்,
தாழ்தலம் முழுதும் கண்டும், தபனியன் உடல் பிளந்தும்,
வாழ்உலகு அளந்தும், மன்னனாய் மன்னர்க்கு மன்னராயும்
பாழ்பட உழறிப்பாரும் நோக்கும் பின் புரியும்; ஆயே. 267

தெளிவுரை:

மீன் வடிவம் கொண்டபொழுது, ஏழு கடல்களையும் ஒரு மீன் செதிளில் அடக்கினான்; ஆமை வடிவு கொண்டபோது, மாமேருவை முதுகில் தாங்கினான்; பிரளயத்திலே தாழ்ந்துபோன பூவுலகை வராக வடிவாய்ச் சென்று மேலே எடுத்தான்; நரசிங்க வடிவில் இரணியன் உடலைப் பிளந்தான்; வாமன வடிவில் உலகை அளந்தான்; அரசர்க்கு அரசர் ஆகிய இராமர் முவராய்த் திகழ்ந்து, அசுரர் மாயைகளைச் சிதறி ஒழித்து உலகைப் பாதுகாத்தான் திருமால்.

பொய்கைவாய் முதலை வாயில் போதகம் போத மாட்டாது,
ஐயனே, நாதா, ஆதிமூலமே என்று அழைப்ப
உய்ய யாம் பணிமால் ஓலம் ஓலம் என்று ஓடிச் சென்று
வெய்யவாய் முதலை வீட்டிக் கரிக்கும் வீடு அருளினானே. 268

தெளிவுரை:

ஒரு பொய்கையில், முதலையின் வாயில் அகப்பட்ட யானை, கரை ஏற முடியாமல், ஐயனே, நாதனே, ஆதிமுலமே என்று அழைத்தது; அப்போது திருமால்அபயம் அளித்து முதலையின் வாயிலிருந்து, அந்த யானையை மீட்பித்து, அதற்கும் வீடு அளித்தான்.

அலைகடல் கடைந்தும், வானோர்க்கு அமுதினை அளித்தும் தீய
கொலைபுரி அசுரர் தம்மைக் கொன்று உலகங்கள் காத்தும்,
கலைமலி பொருள் அன்பர்க்குக் கருணையால் உரைத்தும் மிக்க
தலைமையில் நிற்பன் மாயன் என்றும் பின்சாற்றினனே. 269

தெளிவுரை:

தேவர்களுக்கு நிலையான தன்மையை ஏற்படுத்தும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருட்டு, மாமேரு மத்தாகவும், வாசுகி நாணாகவும், சமுத்திரத்திலே கடைந்தபோது, தேவர்களுக்கு அமுதம் கொடுத்தான்; கொடிய கொலைத் தொழிலைச் செய்த அசுரர்களைக் கொன்று, உலகில் உள்ள ஆன்மாக்களைக் காத்தருளினான்; அனைத்துக் கலைகளும் பொருந் திய நூற் பொருளை, அன்பர்களுக்கு அருளிச் செய்தான்; இப்படி, மிகுந்த கருத்திருத்துவம் (தலைமை) குன்றாமல் நிற்பவன் திருமால் என்று மேலும் சொன்னான் பாஞ்சராத்திரி.

மாயையாய், உயிராய், மாயா காரியம் ஆகி, மன்னி
மாயையால் பந்தம் செய்து வாங்கிடும்; அவனால் அன்றி
மாயை போகாது என்று எண்ணி, மாயனை வணங்கப் பின்னை
மாயைபோம்; போனால் மாயன் வைகுண்டம் வைப்பன் அன்றே. 270

தெளிவுரை:

படைப்புக் காலத்தில் மாயை ஆகியும், அதன்வழி மயங்கும் உயிர்களாகியும், மாயா காரியம் ஆகிய உலகம் ஆகியும் வடிவுற்று நிலை பெற்று, மாயையினால் உயிர்களுக்குக் கட்டு உண்டாக்கி, அதனைப் பின்பு நீக்குபவன் திருமால். திருமாலின் அருள் இன்றி உலக மாயையினை வெல்ல முடியாது என்பதை அறிந்து, அவனது திருவடி யைத் தொழுதால், மாயா பந்தம் நீங்கும்; அது நீங்கவே, திருமால் நம்மை வைகுண்டத்து இறுத்துவான்.

பாஞ்சராத்திரி மதம் மறுதலை

ஆதிதான் ஆகில் ஆதிக்கு அந்தம் உண்டாகும்; அந்தக்
கோதிலான் இறைவன் என்று கூறிடும் வேதம்; ஞானச்
சோதியாய் நின்றான் ஆகில் தோய்ந்திடான் மாயை, ஞானத்
தீதிலா உவரும் என்னில் சேர்ந்திடான் தூதுச் சென்றே. 271

தெளிவுரை:

பாஞ்சராத்திரி, உன் கர்த்தாவை நீ ஆதி என்று கூறினாய். ஆதி ஆயின், அதற்கு முடிவு உண்டாகி, அவன் கர்த்தாவும் அல்லன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேதங்கள், ஆதியும் அந்தமும் இல்லாதவனே முதல்வன் என்று கூறு கின்றன. உன் இறைவன், அறிவு வடிவினனாய், அருவனாய் முழு முதல் தன்மை உடையவனாய் நிற்பானாகில், மாயையில் அகப்பட்டு மாயா வடிவம் ஆகான். அவன் எடுத்துக் கொண்ட திருமேனிகள், ஞான வடிவமே என்றால், அந்த ஞான வடிவத்திற்கு எழுவகைத் தாதுக்கள் கிடையாதே; எனவே அவன் முதல்வனல்லன்.

தாதுவானது ஏது என்னில் சங்கரன் பலிக்குச் செல்லத்
தீதிலாக் கோதண்டத்தைத் திறந்து அவன் விட்டபோது
போவது உதிரம் அன்றோ போந்து மூர்ச்சித்து வீழ்ந்தான்
நாதனார் எழுப்பப் பின்னே நடந்தனன் கிடந்தவன்தான். 272

தெளிவுரை:

உன் கர்த்தாவுக்குத் தாது உண்டு என்பதற்கு ஆதாரம் வருமாறு: - பரமேச்சுரன், விட்டுணுவின் அகந்தையைப் போக்கும் பொருட்டு, பிச்சா பாத்திரம் ஏந்தி விட்டுணுவிடம் சென்றபோது, அநேக பலிகள் இட்டும் பாத்திரம் நிறையவில்லை. அந்நிலையில், விட்டுணு அந்தப் பிச்சப்பாத்திரத்தை நிறைப்பேன் என்று, தனது நெற்றி நரம்பைத் திறந்துவிட, உதிரம் பெருகியது; அப்போதும் பாத்திரம் நிறையாததால், விட்டுணு மூர்ச்சிந்து விழுந்தான். மூர்ச்சித்த விட்டுணுவைக் காத்தருளுமாறு, பரமேச்சுவரனிடம் தேவர்கள் வேண்டினர். அப்போது, இறைவன் விட்டுணுவை எழுப்பினன்; பின்பு அவ்விடம் விட்டுச் சென்றான். இவ்வாறு வரலாற்றில் உள்ள மையால் விட்டுணுவின் திருமேனியில் உதிரம் என்னும் தாது உள்ள மையை அறிவாயாக.

இச்சையால் உருவம் கொள்வன் அரிஎனில், இகழ்
வேள்விக்கண்,
எச்சனாய் உண்ணப் புக்கு, அங்கு இருந்த அன்று, ஈசனாலே
அச்சமார் தலைஅறுப்பு உண்டுஆன்தலை ஆக்கிக் கொள்ளான்
நச்சினார் போற்ற நாதன் நாரணன் தலை கொடுத்தான். 273

தெளிவுரை:

திருமால் தன் விருப்பப்படியே திருவுருக்கொள்ள வல்லான் ஆயின், தக்கன் வேள்வியில் வேள்விக் கடவுள் ஆகி, அவி உண்ண

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இருந்தபோது (அவி – தேவர் உணவு), வீரபத்திர தேவர், யாவரும் அஞ்சும்படி, திருமாலின் தலையை அறுத்தார்; தலையை இழந்த அந்த நேரத்தில், தன் தலையை உண்டாக்கிக் கொள்ள மாட்டாதவனாய் இருந்தான். உன் கடவுள். பின்புதேவர்கள் விண்ணப்பிக்கப் பரமேசுவரன் அவனுக்குத் தலையை மீண்டும் கொடுத்தான்.

நூலினை உரைத்து வேத நூலினை நுவலும் வண்ணம்
மால் அருள் செய்தான் என்றாய்; மறைநீதி உலகு இயற்கை
சாலவே தெரியாதாகிக் கிடந்தநாள், சகத்து யார்க்கும்
ஆலின்கீழ் இருந்து வேதம் அருளினான், அறைந்தான்
நூலே. 274

தெளிவுரை:

திருமால் வேதத்தை அருளிச் செய்து, அந்த வேத நூலில் ஆராயும் பொருளையும் அருளிச் செய்தான் என்று கூறினாய். வேத நியதியும், உலகில் இயல்பாக வாழும் நெறியும் யாவை என்பது அறியாமல், உலகில் உள்ளோர் மயங்கிக் கிடந்த பொழுது யாவரும் அவற்றை அறிந்து கொள்ளும் வகையில் வட ஆலின் கீழ் அமர்ந்து வேத நூலை அருளிச் செய்து, அதன் பொருளை உணர்த்தும் ஆகம நூலையும் அருளிச் செய்தான் பரமேசுவரன். எனவே உன் கடவுள் வேதம் செய்தவனல்லன்.

அயன்தனைப் பயந்தான் என்றாய்; அரி, அயன்சிரம் சேதிப்பப்
பயந்திடான்; தலை மால் தானும் படைத்திடான்; சிரத்தைக் கிள்ளும்
சயம்தரும் அரனைத் தந்தான் அயன் என்கை தப்பே அன்றோ?
தியங்கிடாது உணராய் ''எல்லாம் சிவன் செயல்'' என்று தேர்ந்தே. 275

தெளிவுரை:

அயனைத் திருமால் படைத்தான் என்று கூறினாய். அவ்வாறாயின், அயனின் நடுத்தலையைப் பரமேசுவரன் அறுத்தபோது, அவனுக்கு திருமால் தலையை உண்டாக்கிக் கொடுக்கவில்லையே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அது ஏன்? இஃது இப்படி இருக்கும் பொழுது, அயனின் தலையை அறுத்த வெற்றி வீரன் ஆகிய பரமேசுவரனை, அயன் படைத்தான் என்று நீ கூறுவது தவறு அல்லவா? எனவே, ''எல்லாம் சிவன் செயல்'' என்று தெளிவாயாக.

சீவன்கள் சனனம் போலச் சிலர் வயிற்று உதித்த மாலைத்
தேவு என்றே உலகம் காக்கச் சுவேச்சையால் சனித்தான்
என்பீர்;
பூவன்பின் படைக்க மாட்டாது அரன்அடி போற்ற, வேதக்
கோ, வந்து முகத்தில் தோன்றிச் சிருட்டியைக் கொடுத்தல்
கூறும். 276

தெளிவுரை:

உயிர்களது பிறப்புப் போல, சிலருடைய யோனியில் தோன்றிய, திருமாலைத் தெய்வம் என்று சொல்லி, உலகத்தைக் காக்கும் பொருட்டுத் தன் விருப்பப்படித் தானே உருக்கொண்டான் என்று கூறுவீர்; அது பொருந்தாது. உலகத்தைப் படைக்க அறியாமல் அயன் பரமேசுவரனைப் போற்றி வேண்டியபோது, வேதமுதல்வன் ஆகிய சிவபெருமான், பஞ்சக்கிருத்தியம் நடப்பிப்பது காரணமாக, அயனது நெற்றியில் தோன்றி, அவனுக்குப் படைப்புத் தொழிலை அறிவுறுத்தினான் என்று எல்லாப் புராணங்களும் சொல்கின்றன. எனவே, பரமேசுவரன் அயனால் தோற்றுவிக்கப்பட்டவன் என்று கூறுவது பெருந்தவறு.

நாரணன் அயனை ஈன்றும், அயனும் நாரணனை ஈன்றும்,
காரணம் ஒருவருக்கு அங்கு ஒருவர்தாம்; இருவருக்கும்
வாரணம் உரித்த வள்ளல் காரணன் என்று மன்ற
ஆரணம் உரைக்கும் பக்கத்து அவர்களும் அடைந்தார்
அன்றே. 277

தெளிவுரை:

அரி அயனை உண்டாக்கியும், அயன் அரியை உண்டாக்கியும், ஒருவருக்கு ஒருவர் காரணமாய்க் காரியப்பட்டு வருவர். அப்படி அவர்கள் இருவரும் காரியப்பட்டு வருவதற்கு, முதற்காரணம் ஆவான், யானையை உரித்துப் போர்த்த பரமேசுவரன் என்றே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவாக வேதம் சொல்லும். அந்நிலையில், அரி வலப்பாகமும் அயன் இடப்பாகமும் அடங்குவர் என்று புராணம் கூறும்.

அழிப்பு அரி ஏவல் என்றாய்; அரிதனை அழிக்கம் அன்று,
அங்கு
அழிப்பது தவிர்க்க மாட்டான்; அங்கமும் அழித்தே பூண்டான்;
அழிப்பு அரி ஏவல் என்று அங்கு அறைந்ததும் அழிந்தது
அன்றோ
அழித்திடும் அரனே ஆக்கம் நோக்கமும் ஆக்குவானே. 278

தெளிவுரை:

அரியின் ஏவலால் அரன் அழிப்பான் என்றாய்; அவ்வா றாயின், சர்வ சங்காரத்தில், அரன் ஒடுங்கி விடுவர்; அந்நிலையில் தனக்கு அழிவு வருவதை அரியால் தவிர்க்க முடியாது. எனவே, அழித்தல் தொழில் அரியின் ஏவலால் நடைபெறுவதன்று என்பது தெளிவு.

அரியின் அவதாரத்தில் ஏற்பட்ட மீனின்கண், பன்றிக்கோடு முதலியனவற்றை அணிந்த அரன் ஒருவனே அழித்தலைச் செய்பவன் ஆவன்.

வானம்கீழ்; மண்ணும் எல்லாம் மாயனே காப்பான்
என்றாய்;
தான் அஞ்சும் சலந்தரன்தன் உடல் கீண்ட சக்கரத்தை
ஆன் அஞ்சும் ஆடுவான்பால் பெற்று, உலகு அளித்த
வார்த்தை
தான் எங்கும் ஆகும் எல்லாம் சங்கரன் காப்பே ஆகும். 279

தெளிவுரை:

ஆகாயம் முதல் கீழ்ப் பிருதிவி ஈறாக உள்ள பிரபஞ்சம் அனைத்தையும் புருடோத்தமன் ஆகிய திருமாலே காப்பவன் என்று கூறுகிறாய். அப்படியானால், சலந்தரனுக்கு அஞ்சி உன் திருமால் தவம் செய்து, சிவபெருமானிடமிருந்து சக்கரத்தைப் பெற்ற வரலாற் றையும் சிவபூசனையின்போது, திருமால் தன் கண்ணை இடந்து மலராக அர்ச்சித்த வரலாற்றையும் புராணங்களில் பிரமா கூறியிருப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பதை உலகமுழுவதும் அறியும். எனவே, பரமேசுவரனே காத்தல் தொழிற்கும் முதல்வன் என்பதை அறிவாயாக.

மாலினார் சேலினாராய் வாரிகள் அடக்கிக் கொண்டு அன்று
ஆலியா உலகம் எல்லாம் அழிப்பவன் நானே என்னச்
சேலினார் தமைப் பிடித்துச் செலுவினை இடந்து கண்ணைச்
சூலினார் மேல் அணிந்தான் சூலிதான் ஆகும் அன்றே. 280

தெளிவுரை:

பிரளய காலத்திலே, உலகத்தைக் காக்கும் பொருட்டு, திருமால் மீன் வடிவம் கொண்டு, ஏழு கடலையும் தனது செதிளினுள் அடக்கிய பொழுது, தானே அனைத்தையும் ஒடுக்கும் முதல்வன் என்று செருக்குக் கொண்டான். அந்தச் செருக்கை அடக்கும் பொருட்டுச் சிவபெருமான் அந்த மீனைப் பிடித்து, அதன் செதிளினையும் கண்ணையும் பிடுங்கித் தனது கூரிய திரிசூலத்தின்மேலே சுத்திவைத்தான் என்று புராணம் கூறுகிறது.

ஆமையாய் மேருத்தாங்கி அடைகலாய்க் கிடந்தபோது
நாம் எனா உலகு ஆதார நாதன் என்று அகந்தை பண்ண
ஆம் எனார் அன்றும் என்னார் அமரரும் ஆனார் பார்த்துத்
தாம்அந்நாள் ஆமையாரைத் தகர்த்து ஓடு தரித்தார் அன்றே. 281

தெளிவுரை:

பிரளயம் வந்தபோது, உலகத்துக்கு ஆதாரம் ஆகிய மேரு மலையைத் திருமால் அடை கல்லாகத் தாங்கினான்; அந்நிலையில் இந்த உலகத்திற்கு ஆதாரம் தான் எனக் கருதி, ''நாமே உலகுக்குக் கடவுள்'' என்று செருக்குற்றான். அவன் கர்வத்தைப் பார்த்து என்றுமே அவன் முதல்வன் என்று சொல்லாதபடி அந்த ஆமையைத் தகர்த்து, அதன் ஓட்டை என்பு மாலையாக அணிந்தான், பரமேசுவரன்.

எழுதலம் இடந்து பன்றியாய் இருங் கொம்பில் ஏற்றுத்
தொழுது உலகு இறைஞ்ச நின்ற சோதி நான் என்றபோது, அன்று
அழுது அலமந்து வீழ அருங்கோடு பறித்து, அணிந்தான்
கழுது அலமந்த காட்டில் ஆடிடும் கடவுள் அன்றே. 282

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மற்றொரு சமயம் பிரளயம் ஏற்பட்டபோது, திருமால் வராக மூர்த்தி ஆகி, அதல, விதல, சுதல, தராதல, இரசாதல, மகாதல, பாதாளம் எனப்பட்ட ஏழு உலகங்களையும் எடுத்து தனது பெரிய கொம்பில் ஏற்றி நின்றான். அவனது வீரத்தைக் கண்டு, உலகில் உள்ளோர் அவனை வணங்கினார்கள். அப்போது, ''உலகுக்கு நான் அல்லாமல் வேறு கடவுள் இல்லை'' என்று திருமால் கர்வம் கொண்டான். அந்நிலையில் அவன் அழுது அலறிக் கொண்டு, பூமியில் விழும்படி, அந்தப் பன்றியின் (வராகம் – பன்றி) கொம்பைப் பறித்து, ஓர் அணிகலனாக அணிந்துகொண்டான் ஆடும் கடவுள் ஆகிய பரமேசுவரன்.

இங்கு அடா உளனோ மால் என்று இரணியன் தூணை எற்ற
உங்கள் தாமோதரன் தான் உரு நரசிங்கம் ஆகி
எங்கடா போவது என்னா உடல் பிளந்து 'இறையான்' என்ன
அங்கடா சிம்புள் ஆகி எடுத்து அடர்ந்தான் அரன்தான். 283

தெளிவுரை:

இரணியன் என்னும் அசுரன், 'உன் திருமால் இங்கு இருக்கிறானா?' என்று தூணைத் தட்டிக் கேட்டான். அப்போது உங்கள் தாமோதரன் ஆகிய திருமால், நரசிங்க உருவம் கொண்டு, அந்தத் தூணிலிருந்து தோன்றி இரணியனை, 'எட இனி எங்கே போவாய்' என்று பிடித்து உடலைப் பிளந்தான். அப்போது திருமாலுக்கு கர்வம் ஏற்பட்டு, ''நானே கடவுள்'' என்று கர்ச்சித்தான். அந்த கர்வத்தை அழிக்கும் பொருட்டுச் சிவபெருமான், எட்டுக்கால்பட்சி (சிம்புள்) வடிவம் கொண்டு, அந்த நரசிங்கத்தை அழித்து, அதன் தோலை ஆசனமாகக் கொண்டான்.

தானம் என்று இரந்து செல்லத் தனக்கு மூவடி கொடுப்ப
வானமும் அளந்து கொண்டு மாவலி தன்னைப் பின்னை
ஈனமாம் சிறையில் இட்டான் இறை அன்று ஒன்று ஈந்தோர் தங்கட்கு
ஊனம் செய்திடுவோர் தாங்கள் உத்தமர் அல்லர் ஆகும். 284

தெளிவுரை:

உன் திருமால், ஒரு சமயம் வாமன வடிவு கொண்டு, மாபலி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்னும் மன்னனிடம் தானம் கேட்டு இரந்து சென்றான். அம்மன்னன் அவனுக்குக் கேட்டபடி மூன்று அடி மண் கொடுத்தான். தானத்தைப் பெற்ற வாமனன், பூமி, அந்தர சுவர்க்கங்களை ஓரடியால் அளந்து கொண்டு, மற்றை அடிக்கு இடம் இல்லாததால், மாபலியின்மீது குற்றம் சாட்டிச்சிறையில் இட்டான். தானம் கொடுத்த ஒன்றை ஏற்றுக் கொண்ட ஒருவன், தானம் செய்தவருக்கு நன்மை செய்யாமல், தீமை செய்வான் ஆகில், அவன் எப்படி உத்தமன் ஆவான்?

மாயமான் தன்னைப் பொய்மான் என அறியாது, அரக்கன்
மாயையில் அகப்பட்டுத் தன் மனைவியைக் கொடுத்தான்
தன்னை,
'மாயைக்குக் கர்த்தா' என்பை மதி கெட்டு அங்கு அவனைக்
கொன்று
நாயனார்தமைப் பூசித்தான் கொலைப் பாவம் நணுகிடாதே.
285

தெளிவுரை:

தன் மனைவி சீதையுடன், இராமன் வனத்தில் இருந்தபோது, இராவணன் சீதையை அபகரிக்கும் பொருட்டு இராமனை அப்புறப் படுத்த எண்ணி, ஒரு பொய்மானை ஏவினான். அந்த மான், இராக்கத மாயை என்பதை அறியாமல், அந்த மானின் பின்னே சென்று, தன் மனைவியைப் பறி கொடுத்தவனை, 'மாயைக்குக் கர்த்தா' என்கிறாய்!

தன் மனைவியை இராவணனிடமிருந்து மீட்பதற்காக இலங் கைக்குச் சென்று, இராவணனைக் கொன்று, அவ்வாறு கொன்ற பாவம் தீரும் பொருட்டு இராமேச்சுரம் என்னும் தீவில் பரமேசுவரனை அர்ச்சித்து வழிபட்ட உன் திருமால் எப்படிக் கடவுள் ஆவன்?

பரசுடன் பிறந்தான் தானும் பத்தனாய்ப் பரசினாலே,
அரசு அறுத்து அரனை நோக்கி அருந்தவம் புரிந்தான் அன்று
பரசிய பரசு ராமன் பலதேவன் உலகம் எல்லாம்
உரைசெயும் உமையாள் கோனை உள்நினைந்து யோகில்
நின்றான். 286

தெளிவுரை:

திருமால் மழுவுடன் பிறந்து, பரசுராமன் என்னும் பெயர் உடையவனாகவும் சிவபத்தனாகவும் இருந்தான். தன் மழுவைக் கொண்டு, அரசர்களை அறுத்து, அந்த இரத்தித்திலே முழுக்குச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செய்தான். அந்தப் பாவம் தீரும் பொருட்டுப் பரமேசுவரனை நோக்கி அரும் தவம் புரிந்தான். உயர்ந்தோர் பலராலும் போற்றப்படும் மாதொரு பாகன் ஆகிய சிவபெருமானை உள்ளத்தில் நினைந்து யோகத்தில் இருந்தான்.

ஓதிய வாசுதேவர் தமை உபமன்யு தேவர்
தீதிலா நோக்கம் செய்து சிவகரம் சிரத்தில் சேர்த்து
ஆதிபால் அடிமை ஆக்க அரிஉடல் பிராணன் அத்தம்
ஈதெலாம் கொள்நீ என்று அங்கு இறைஞ்சினார்
அறிந்திடாயே. 287

தெளிவுரை:

திருமால் வாசுதேவராய்த் (கண்ணன்) துவாரகாபுரியில் இருக்கும்போது, உபமன்யு முனிவர் கயிலாயத்திற்கு எழுந்தருளினார். அவரை வாசுதேவர் அருள் செய்யும்படி வேண்டி நின்றார். அந் நிலையில் உபமன்யு முனிவர் தம் ஞானக்கண்ணினாலே வாசுதேவ ருக்குத் தீட்சை செய்வித்து, தம் திருக்கரத்தை அவரது சிரசில் வைத்து, வாசுதேவரைச் சிவபத்தர் ஆக்கினார். அப்போது வாசுதேவர் தம் உடல் பொருள் ஆவி ஆகியனவற்றை உபமன்யு முனிவரிடம் சமர்ப்பித்து வணங்கி நின்றார் என்பதை நீ அறியாயோ?

பின்வரும் பரிதான் ஆகி அரி என்றாய்; பின்பு வந்தால்
என்வரும் ஈசனால் என்று அறிகிலோம் இவுளியார்க்கு
முன்வரும் அவதாரங்கள் முடிந்தமை அறிந்தாய் அன்றே,
பொன்வரும் சடையினான்தன் புகழ் எங்கும் புக்கது
அன்றே. 288

தெளிவுரை:

அடுத்து வரும் பிறப்பில், திருமால் குதிரையாக வருவன் என்றாய். அப்படி வந்தால், பரமேசுவரனால் அந்தக் குதிரைக்கு யாது வருமோ, அறிகிலோம். முன்புள்ள அவதரங்களில் ஏற்பட்டதை நீ கேட்டறிந்தாய். இதுவரை சொன்னது போன்று, கொன்றை மலர் அணிந்த சடையினை உடைய சிவபெருமானின் பெருமையே எங்கும் விளங்குகின்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கைவரை மூலமேயோ எனக் கரிக்கு உதவும் காட்டின்
மொய்வரை எடுத்தான் மூலம் ஆயிட வேண்டுமோதான்
ஐயனே, முறையோ என்றால் அரசனோ அங்குச் செல்வான்
வையகம் காப்பான் செல்கை வழக்கு அன்றோ, ஊர்
காப்பான்போல். 289

தெளிவுரை:

ஒரு யானை முதலைவாயில் அகப்பட்டு 'ஆதி மூலமே' என்று கூப்பிட்டதும், ஓடிச்சென்று அந்த யானையின் துயரைப் போக்கியதால், காட்டில் மலையை எடுத்து, பசுக்களைக் காத்த திருமால், கடவுள் ஆயிட வேண்டுமா? அவன் கடவுள் அல்லன்.

அரசனை நோக்கி ஒருவன், 'முறையோ' என்று கூப்பிட்டால், அம்முறை கேட்கச் செல்வோன் அரசன் ஆவானா? அரசனது ஆணை பெற்று ஊர்காப்போன், முறையிடும் ஒருவனது துயரைத் துடைப்பதே உலக வழக்கு. அதுபோல, திருமால் ஓர் உயிர்க்கு வரும் துன்பத்தைப் போக்கும் முறை, சிவபெருமானின் ஆணையைப் பெற்றுச் செய்யும் ஊர்காப்போன் செயலைப் போன்றதே ஆகும்.

அன்றியும் யானை மாலுக்கு அடிமையாய் மூலமேயோ
என்றிடும் அதனால் மால்தான் இறைவன் என்று
இயம்பவேண்டா;
உன்தனக்கு அடிமை ஆனார் உன்னை எம்பெருமான்
என்றால்,
இன்று நீ வணங்கும் உன்தன் எம்பெருமானோ நீயே, 290

தெளிவுரை:

மேலும் அந்த யானை, திருமாலுக்கு அடிமை ஆனதால், தன் தலைவனை மூலமே என்று கூப்பிட்டது; எனவே, திருமால் முழுமுதற் பொருளாகிய கடவுள் என்று சொல்வது பொருந்தாது.

உனக்கு அடிமையாய் உள்ள ஒருவன், உன்னை ஆண்டவனே என்று அழைத்தால் உன்னால் வணங்கப்படுகின்ற திருமாலாக நீ ஆகிவிடுவாயா? அதுபோல, யாவர்க்கும் மூலம் என்பது பரமேசுவரனே ஆவன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஞாலம் உண்டவனால் உண்டார் நல்லமுது அமரர் என்றாய்;
வேலை நஞ்சு எழ, மால் ஆதி விண்ணவர் வெந்து சென்ற
காலம் இன்று எமக்குக் காவாய் கடவுளே என்ன நாதன்
ஆலம் உண்டிலனேல், தேவர் அமுதம் உண்டிடுவது எங்கே? 291

தெளிவுரை:

பூமியை விழுங்கிய திறத்தை உடைய திருமாலின் கருணையினாலேயே, தேவர்கள் நல்ல அமுதத்தைப் புசித்தார்கள் என்றாய். கடலைக் கடைந்த பொழுது எழுந்த நஞ்சைக் கண்டு, திருமால் முதலிய தேவர்கள் அனைவரும் வெப்பம் தாங்க மாட்டாமல் பரமேசுவரனிடம் சென்று, "எங்களுக்கு அகால மரணம் ஏற்பட இருக்கிறது; எங்களைக் காத்தருளவேண்டும்" என்று விண்ணப்பித்தனர். சிவபெருமானும் கருணை கூர்ந்து அந்த நஞ்சை உண்டு அமுதாக்காமல் இருந்தானாகில், திருமால் முதலிய தேவர்கள் எல்லாம் பிழைத்துப் பின்பு எப்படி அமுதை உண்டிருக்க முடியும்? சொல்.

அஞ்சி அன்று அரிதான் ஓட, அசுரனைக் குமரனாலே
துஞ்சுவித்து, ஒரு பெண்ணாலே தாரகன் உடல் துணிப் பித்து,
அஞ்சிடப் புரம் தீ ஊட்டிச் சலந்தரன் உடல் கீண்டு, ஓத
நஞ்சினை உண்டும் அன்றோ நாயகன் உலகம் காத்தான். 292

தெளிவுரை:

சூரபத்மனுக்கு அஞ்சி திருமால் திருப்பாற்கடலை விட்டு ஓடிப், பரமேசுவரனிடத்து முறையிட, முருகப்பெருமானைத் தோற்றுவித்து, அப்பெருமானைக் கொண்டு சூரபத்மனைச் சிவபெருமான் அழித்தார்.

தாரகன் என்னும் அசுரனுக்கு அஞ்சி, விட்டுணு முதலாகிய தேவர்கள் பரமேசுவரனிடம் முறையிட, அப்போது காளி எனும் தேவியைக் கொண்டு தாரகன் உடலைச் சிவபெருமான் அழித்தார்.

திரிபுரத்து அசுரர்களுக்கு அஞ்சி, விட்டுணு உள்ளிட்ட தேவர்கள் முறையிடத் திரிபுரத்தைச் சுட்டான் பரமேசுவரன்; சலந்தரன் என்னும் அசுரன், திருமாலைத் திருப்பாற்கடலில் பள்ளிகொள்ள ஒட்டாமல் ஓட்டினான்; அதனால் அங்கும் இங்கும் திரிந்து, திருமால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பரமேசுவரனிடம் முறையிட்டான். அப்போது சிவபெருமான் சக்கரத்தாலே சலந்தரன் உடலைப் பிளந்தான். கடலில் தோன்றிய விடம் பதினாலு உலகத்தையும் சுட்டது. அந்த நஞ்சினை அமுது செய்து உலகம் முழுவதையும் காத்தருளியவன், சிவபெருமானே அன்றோ?

பார்த்தனார் இரதம் ஏறிப்படைதனைப் பார்த்துச் சார்பைக்
கூர்த்த அம்பாலே எய்து கொன்று அரசு ஆளேன் என்னத்
தேர்த்தனில் இருந்து மாயை செய்து மால் கொல்லச் செப்பும்
வார்த்தை, நூல் ஆக்கிக் கொண்டாய்; புரம் கொல் நூல்
மதித்திடாயே. 293

தெளிவுரை:

அருச்சுனன் யுத்தம் செய்யும் பொருட்டுத் தேரில் ஏறி நின்று, சத்துருக்களைப் பார்த்தபோது, அவர்கள் தன் மித்துருக்களாக இருப்பதைக் கண்டான்; கண்டு, அவர்களை தனது கூரிய அம்பினால் கொன்று நாடு ஆளமாட்டேன் என்று சொன்னான். அவனுக்குத் தேர்ப்பாகனாக இருந்த கண்ணன், அவனது மனத்தைத் தேற்றி, ''கொல்வது நீ அன்று; சர்வமும் நாமே கொல்வோம்'' என்று தன்னைக் கடவுளாகக் கருதி, அர்ச்சுனன் மயங்கும்படி சில சொன்னான். கண்ணன் அவ்வாறு சொன்ன சொற்களைக்கொண்டு, அதை ஒரு நூல் ஆக்கிக் கொண்டாய்.

அவ்வாறாயின், திரிபுரத்தில் இருந்தவர்கள் சிவலிங்கத்தைக் கைவிடும் பொருட்டுத் திருமால், புத்த முனியாக இருந்து, தெய்வம் ஒன்று இல்லை என்று மயக்குவித்துச் சொன்னதையும் நூலாக்கிக் கொள்வாயாக.

மாயைதான் உயிர்கள் ஆகாது; உயிர்கள்தாம் மாயை ஆகா;
மாயவன் இவைதான் ஆகான்; இவைதானும் மாயன் ஆகா;
ஏயுமாம் அநாதியாக இறை பசு பாசம் என்றே
தூயவன் கலப்பினாலே எல்லாமாய்த் தோன்றுவன்; காண்.294

தெளிவுரை:

மாயை சடம் ஆகலின், ஆன்மாக்கள் ஆகாது; ஆன்மாக்கள் இச்சா ஞானக் கிரியைகளை உடையன ஆகலின், சடம் ஆகிய மாயை ஆகா, திருமால் ஞான சொருபி என்று நீ கூறுகிறாய்; அவ்வாறாயின்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சடம் ஆகிய மாயையும் ஆகான்; சுத்தா சுத்தம் ஆகிய ஆன்மாவும் அல்லன். மாயையும் ஆன்மாவும் கூடித் திருமால் ஆகமாட்டா.

மாயை ஆகிய பாசமும், ஆன்மா ஆகிய பசுவும், இவற்றை நடத்துபவன் ஆகிய பதியும் அநாதியே உள்ளன ஆகலின், நின்மலன் ஆகிய சிவபெருமான் முழுநிறைவு உடையவன். எனவே, அவன் எல்லாம் தான் ஆகித் தோன்றுவனே அன்றி, சடமும் ஆன்மாவுமாய்ப் பிரிந்து நில்லான்.

பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி;
ஆசற்ற ஆகமங்கள் அறைந்திட, அறிவு இன்று இங்கே
மாசற்ற மால், மாசு ஆகி மாயையும் உறுவன் என்னில்
கூசிப் பின் கொள்ளார் நல்லோர் உனக்காம் இக் குழப்பு
நூலே. 295

தெளிவுரை:

பாசம் ஆகிய அஞ்ஞானத்தைப் பசுக்கள் ஆகிய உயிர்கள், கைவிட்டுப் பதி ஆகிய சிவபெருமானைக் கூடுதலே முத்தி என்று குற்றமற்ற ஆகமங்கள் கூறுகின்றன. ஆயினும், இங்கே மால் ஆகிய விட்டுணு அஞ்ஞானமுமாய், அஞ்ஞானத்தோடு கூடிய உயிருமாய் நிற்பன் என்று நீ அறிவின்றிக் கூறுகிறாய். எனவே, வேதாகமங் களுக்குப் புறம்பான மயக்க நூல் உனக்கு மட்டுமே பொருந்தும். உயர்ந்தோர் இதனை நூல் என்று சொல்வதற்கு நாணுவர்; அதற்குப் பொருளும் கொள்ளார். அஃதாவது உயர்ந்தவர்கள் உன் நூலைப் பொருட்படுத்தமாட்டார்கள்.

பிரமம் நான் என்றபோது பிரமனோடு அரியும் கூடி
பரமனால் இகலிடாமல் பார்த்து இடர் பண்ணி நின்ற
உரமனார் அழல் உருபம் தன்னையும் உணரமாட்டான்
கரம்மன் ஆள்திகிரி ஏற்றான் கடவுள் என்று அறைவது
என்னே. 296

தெளிவுரை:

ஒரு காலத்தில் அயனும் மாலும் கூடித் தங்களுக்குள் மாறு பட்டுப் படைப்புத் தொழிலைச் செய்வதால் 'நானே கடவுள்' என்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அயனும், காத்தல் தொழிலைச் செய்வதால் 'நானே கடவுள்' என்று மாலும் சொன்னார்கள். அப்பொழுது, இவர்களது அகந்தையை ஒழிப் பதற்குத் திருவுளம் கொண்டு, பரமேசுவரன், 'உங்களில் நம்முடைய அடி முடி அறிந்தவன் கர்த்தா' என்று அருளித் தழற்பிழம்பாய் நின்றான்.

அயன் திருமுடியைக் கண்டு வருவேன் என்று அன்னமாய்ப் பறந்து தேடினான்; மால் திருவடியைக் காண்பேன் என்று பன்றி யாய்ப் பாதாளத்தைத் தோண்டினான். அவ்விருவரும் காணமாட்டா மையால், அவுர்க்கு வருத்தம் ஏற்பட்டது. அத்தகைய உரத்தை உடைய பரமேசுவரனது திருவடி இன்ன தன்மையது என்பதைத் திருமாலும் அறியமாட்டான். தன் ஆட்சி நிலைபெறும் பொருட்டுச் சக்கரத்தைக் கையில் ஏந்தி நிற்கும் திருமாலைக் கடவுள் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

தேர்அரி இறை அன்று என்றே சிவமுனி ததீசி யோடே
போர் புரிந்து இகல, மாலைப் புக்கவன் பிடித்து அடித்து
மார்பினில் உதைத்து மால்தன் சக்கரம் வயிற்றில் வைத்திட்டு
ஏர்மலி படை படைத்திட்டு அரிபட எறிந்தான் அன்றே. 297

தெளிவுரை:

சைவ முனிவர் ஆகிய ததீசியாரோடு விட்டுணு போர் புரிந்து அவரிடமிருந்து மாறுபட்டான். அப்போது ததீசிமா முனிவர் உள்ளே புகுந்து, விட்டுணுவைப் பிடித்து அடித்து அவனது மார்பிலே உதைத்துச் சக்கரத்தைப் பறித்து முறித்து அவன் வயிற்றில் வைத்தார். அந்நிலையில், அழகு பொருந்தியதோர் ஆயுதத்தைத் தாமே தருப் பையால் உண்டாக்கித் திருமால் மீது எறிந்து, அவன் மயங்கி விழுமாறு செய்தார். எனவே திருமால் கடவுள் அல்லன் என்பதைத் தெளி வாயாக.

சூலிகாண் இறை, மால் அல்லன்; சூலியைத் தொழும் துர்வாசன்
மாலினார் மார் மிதிப்பத் திருமறு மார்பன் ஆகி
நூலினார் மார்பன் நோன்தாள் பட்டு இடம் சுத்தம் என்று
பாலினார் கடலான் ஆங்கே பரிவொடும் திருவை வைத்தான். 298

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சூலபாணி ஆகிய சிவபெருமான் ஒருவனே கடவுள். விட்டுணு கடவுளல்லன். சிவபெருமானை வழிபடும் துருவாச மாமுனிவர், திருமாலைக் கோபித்து, அவனது மார்பில் மிதித்தார். அம்மாமுனிவர் பாதம்பட்ட தழும்பு கொண்டதனால், திருமறு மார்பன் என்னும் பெயரைத் திருமால் பெற்றான். திருப்பாற்கடலிலே பள்ளி கொள்ளும் அவன், மாமுனிவரின் புனித பாதம்பட்ட இடம் தூய்மை உடைத்து என்று பேரார்வத்துடன், தன் தேவி ஆகிய திருமகளை அந்த மார்பில் வைத்தான். எனவே திருமால் பாசத் தொடக்கு உள்ளவன் என்பதை அறிவாயாக.

தவ குணனாய் மால் சென்று தீவியைச் சக்கரத்தால்
அவகுணம் செய்து, அன்று ஓடப் பிருகுவந்து, அவளைப் பார்த்துச்
சிவன் அலது அறியேன் ஆகில் இது செய்தோன் செறிக பத்துப்
பவம் எனமொழிய, மாலும் பயப்பட்டுப் பதறி வீழ்ந்தான். 299

தெளிவுரை:

சிவபத்தர் ஆகிய பிருகு மாமுனிவருடைய பத்தினி, ''தீவி'' எனப்படுவாள். அந்த மாமுனிவர் இல்லாத சமயத்தில் அவர் இல் சென்று திருமால், தீவியைப் புணரும்படி கேட்டான். தீவி அதற்கு உடன்படாததால், அவள் உடம்பில் சக்கரத்தைக் கொண்டு, திருமால் துர்க்குறிகளை இட்டான். பிருகுமாமுனிவர் அவளது உடம்பைக் கண்டு, ''யான் சிவபெருமானை அன்றி வேறு ஒரு கடவுள் இல்லை என்றும் கருத்துடைய சிவபத்தன் என்பது உண்மையானால், இது செய்தவன் பத்துப் பிறப்புப் பிறக்கக் கடவன்'' என்று சாபம் இட்டார். அதனைக் கேள்வியுற்றுத் திருமால் அஞ்சி நடுங்கிக் கீழே வீழ்ந்தான்.

பயப்பட்டுப் பரனை நோக்கித் தவம் பண்ணப் பரனும் தோன்றி,
நயந்து 'அஞ்சல்' என்று, வேண்டிற்று என்ன என, நாரணன் தான்
பெயத்து அருள் பிருகு சாபம் என, அன்பன் பிருகு என்ன,
உயக்கொள் நீ பவம்தோறு என்ன 'ஓம்' என்றான் உலகநாதன். 300

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

பிருகு மாமுனிவரின் சாபத்தினாலே அஞ்சிச் சிவபெருமானை நோக்கித் திருமால் தவசு பண்ணினான். பரமேசுவரனும் அவனுக்கு அருளி, ''அஞ்சாதே; உனக்கு வேண்டியது யாது?'' என்று கேட்டான். பிருகு மாமுனிவரின் சாபத்தைத் தீர்த்து அருளவேண்டும் என்று திருமால் விண்ணப்பித்தான். ''பிருகு மாமுனிவன் என் பக்தன்; எனவே சாபத்தைத் தீர்க்க வழியில்லை'' என்றான் சிவபெருமான். அந்நிலையில், அந்தச் சாபத்தினால், தான் எடுக்க இருக்கும் பத்துப் பிறவியிலும் தன்னைக் காத்தருளுமாறு திருமால் இறைஞ்சினான். சிவபெருமானும் அப்படியே ஆகட்டும் என்றருளிச் செய்தான்.

இப்படிப் பிருகு சாபத்து ஈரைந்து பிறப்பில் வீழ்ந்து,
மெய்ப்படு துயரம் உற்று, வருபவன் விமலன் அல்லன்;
எப்படி ஆயினும் சொன்னேன், இறை, அரி அல்லன் என்றே
மைப்படி கண்டன் அண்டன் மலரடி வணங்கிடாயே. 301

தெளிவுரை:

இவ்வாறு பிருகு மாமுனிவர் சாபத்தாலே, ஒன்பது பிறப்புப் பிறந்து, உடல் துன்பம் உற்று, அடுத்துக் குதிரையாகப் பிறந்து, பிறவித் துன்பப்படுபவன், ஆணவமலப் பற்று உடையவன் ஆகலின், அவன் கடவுள் அல்லன். வேதாகமங்களில் உள்ளவாறு உனக்குச் சொன்னேன்; உனக்கு வீட்டின்பம் தரவல்லவன் விட்டுணு அல்லன். ஆகவே வீட்டின்பம் தரவல்லான் யாவன் என்று அறிய விரும்புவாய் ஆயின், அவன் நீலகண்டன் ஆகிய அப்பாலுக்கு அப்பாலாய் இருக்கும் பரமேசுவரன் ஒருவனே என்பதை அறிவாயாக. அறிந்து, அவனது, திருவடி மலர்களைச் சரியா கிரியா யோக ஞானத்தாலே வழிபட்டு, உனது பிறப்பை, இந்தப் பிறவியிலேயே நீக்கிக் கொள்வாயாக.

சிவஞான சித்தியார்
பரபக்கத் தெளிவுரை முற்றும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

இருபா இருபஃது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

இருபா இருபஃது

குரு வணக்கம்

கண்நுதலும் கண்டக் கறையும் கரந்துஅருளி
மண்இடையின் மாக்கள் மலம்அகற்றும் – வெண்ணெய்
நல்லூர்
மெய்கண்டான் என்றுஒரு கால் மேவுவரால், வேறுஇன்மை
கைகண்டார் உள்ளத்துக் கண். 1

தெளிவுரை:

சிவபெருமான், குருவடிவாய் எழுந்தருளிப் பக்குவமுடைய ஆன்மாக்களை ஆட்கொள்கிறான் என்பது சித்தாந்த சைவத்தின் கொள்கை. 'இருபா இருபஃது' என்னும் இந்நூலின் ஆசிரியர் அருணந்தி சிவனார். தம் குருநாதர் ஆகிய மெய்கண்ட சிவனாரைச் சிவமாகவே போற்றி இவ்வெண்பா வாயிலாக, இக்கொள்கையை நமக்கு உணர்த்துகிறார்.

திருக்கயிலையில் வீற்றிருக்கும் சிவபெருமான், தன் நெற்றிக் கண்ணையும், கண்டத்தில் உள்ள நஞ்சினையும் மறைத்தருளித் திருவெண்ணெய் நல்லூரில் 'மெய்கண்டசிவம்' என்னும் திருப் பெயரும் திருவுருவும் கொண்டு எழுந்தருளியுள்ளான்.

உலகில் உள்ள அனைத்து மக்களின் ஆணவமலப் பிணியைப் போக்கி அருளுதற்பொருட்டே, அவன் அவ்வாறு எழுந்தருளி யுள்ளான். எனவே, அவனிடம் ஒரு தடவை சென்று, அவனருளை நினைந்து வழிபடுபவர்கள், உயிர்க்கு உயிராய் நிற்கும் சிவபெரு மானை, அத்துவிதமாகத் தம் உள்ளத்தில் தெளிவாகக் கண்டு அறியும் பெரும்பேற்றினைப் பெற்றவர் ஆவர்.

"வேறின்மை கை கண்டார்" என்பது, சிவபெருமானின் ஞான சத்தியின் துணை இன்றித் தமக்கு அறிவு விளங்காது என்றும், அவனது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கிரியா சத்தியின் துணை இன்றித் தமக்குச் செயல் நிகழாது என்றும் தெளிவுறக் காண்பவரைக் குறிக்கும்.

பதி இயல்பு

கண்அகல் ஞாலத்துக் கதிரவன் தான்என
வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ,
காரா கிருகக் கலிஆழ் வேனை, நின்
பேரா இன்பத்து இருத்திய பெரும,
வினவல் ஆனாது உடையேன், எனது உளம்
நீங்கா நிலைமை ஊங்கும் உளையால்;
அறிவின்மை, மலம் பிறிவின்மை எனின்,
ஓராலினை உணர்த்தும்; விராய் நின்றனையேல்,
திப்பியம் அந்தோ, பொய்ப்பகை ஆகாய்;
சுத்தன், அமலன், அசாதி நாயகன்
முத்தன், பரம்பரன் எனும்பெயர் முடியா;
வேறுநின்று உணர்த்தின் வியாபகம் இன்றாய்ப்
பேறும் இன்றாம் எமக்கு, எம் பெரும
இரு நிலம், தீ, நீர், இயமானன், கால் எனும்
பெரு நிலைத் தாண்டவம் பெருமாற்கு இல் ஆதலின்,
வேறோ உடனோ விளம்பல் வேண்டும்.
சீறி அருளல், சிறுமை உடைத்தால்;
அறியாது கூறினை அபக்குவ பக்குவக்
குறிபார்த்து அருளினம், குருமுதல் ஆய் எனின்,
அபக்குவம் அருளினும் அறியேன்; மிகத் தகும்
பக்குவம் வேண்டில், பயன் இலை நின்னால்;
பக்குவம் அதனால் பயன் நீ வரினே,
நின்னைப் பருவம் நிகழ்த்தாது அன்னோ,
தன்ஒப்பார் இலி என்பதும் தகுமே
மும்மலம் சடம்; அணு மூப்பு இளமையின், நீ
நின்மலன்; பருவம் நிகழ்த்தியது ஆர்க்கோ?
உணர்வு எழு நீக்கத்தை ஓதியது எனினே,
இணை இலி ஆயினை என்பதை அறியேன்.
யானே நீக்கினும் தானே நீங்கினும்
கோனே வேண்டா, கூறல் வேண்டும்
காண்பார் யார்கொல் காட்டாக்கால் எனும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாண்புரை உணர்ந்திலை; மன்ற பாண்டியன்
கேட்பக் கிளக்கும் மெய்ஞ் ஞானத்தின்
ஆட்பாலவர்க்கு அருள் என்பதை அறியேன். 2

தெளிவுரை:

சூரியன் இந்த உலகத்தில் உள்ள புற இருளைப் போக்குகிறான். அவனைப் போன்று, திருவெண்ணெய் நல்லூரில் அவதரித்து அருளிய மெய்கண்ட தேவர் பெருமானே, உயிர்களுக்கு ஏற்பட்டுள்ள அறியாமை என்னும் அக இருளை நீக்கி அருள் நின்ற ஞான சூரியன் ஆவாய் நீ.

அஞ்ஞானம் என்னும் அறியாமைச் சிறையிலே அகப்பட்டுத் துக்கம் உற்று அழுந்தும் என்னை, நிலைபேறுடைய உனது பேரின் பத்தில் இருத்தி வைத்து அருளிய என் தலைவனே,

அடியேன் உன்னிடத்துச் சில ஐயவினாக்களுக்கு விளக்கம் பெற விரும்புகிறேன்.

தொடக்கமில் காலந்தொட்டு என்னை விட்டு நீ என்றுமே நீங்கி நின்றது இல்லை என்பது உண்மை. அவ்வாறாயின், அடியேனுக்கு அறியாமை எப்படி ஏற்பட்டது?

ஆணவமலத்தை விட்டு நான் நீங்காமல் இருப்பதால் அறி யாமை எனக்கு ஏற்பட்டது என்று நீ கூறுவாய். அவ்வாறாயின், ஆணவமலம் என்னை மறைத்து எனக்கு அறியாமையை விளைவித்த போது, நீ என்னை விட்டு ஓரிடத்தில் ஒதுங்கி நின்றாய் என்று கூறவேண்டி வருமே.

என்னை விட்டு என்றும் ஒதுங்கி நிற்கவில்லை என்றும் என்னோடு எக்காலத்தும் கூடியே நிற்கிறேன் என்றும் நீ சொல்கிறாய். அவ்வாறு நீ சொல்வது, எனக்கு வியப்பாய் உள்ளது. தெய்வீக மானதோர் ஆச்சரியமாயிருக்கிறது.

ஆணவ மலம் ஆகிய இருள் என்னை மறைத்து நிற்கும்போது, நீயும் என்னோடு கூடி நின்றாய் என்பது, எனக்கு வியப்பாய் இருப்ப தற்குக் காரணம், வேதங்கள் எல்லாம் உன்னைப் ''பொய்க்குப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பகைவன்'' என்று முழங்குவதாலேயே ஆகும். இன்னும் நீ இயல் பாகவே தூய தன்மை உடையவன், இயல்பாகவே பாசங்களின் நீங்கி யவன், பேரொளிப் பிழம்பு, எல்லாத் தலைமையும் உடையவன், பிறப்பு இறப்பு அற்றவன், பரத்துக்கும் பரமாய் நிற்கும் பரம்பொருள் என்னும் பெரும் பெயர்களை உடையவன். இத்தகைய நீ, நான் மல மறைப்புக்கு உட்பட்டு இருந்தபோது, என்னோடு கூடி நின்றாய் என்பது எப்படி?

அந்நிலையில், நீ என் அறிவுக்கு வேறாய் நின்று எனக்கு அறிவித்துக் கொண்டு நின்றாய் என்கிறாய். அவ்வாறு என்னை விட்டு நீ ''வேறாய்'' நின்றாய் என்றால், எல்லாப் பொருள்களிலும் கலந்து ''ஒன்றாய்'' வியாபித்து நின்றாய் என்பது பொருத்தம் இல்லாததாகி விடுமே? இதுமட்டுமன்றி, நீ என்னைவிட்டு வேறாய் நின்றால், பரமுத்தி நிலையில் நீ என்னுடன் கலந்துநின்று, நான் இரண்டறக் கலத்தல் என்பது எனக்கு இயலாமற்போய்விடுமே? என் தலைவனே, இன்னும் நீ இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு பொருளிலும், அந்தந்தப் பொருளுக்கு அந்தந்தப் பொருளாய் – அதுவதுவாய் – கலந்து வியாபித்து நின்றாய் என்று.

''இருநிலன் ஆய், தீ ஆகி, நீரும் ஆகி
இயமானனாய் எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய், ஞாயிறு ஆகி,
ஆகாசம் ஆய், அட்டமூர்த்தி ஆகி,
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறர் உருவும் தம் உருவும் தாமே ஆகி,
நெருநலையாய், இன்று ஆகி, நாளை ஆகி,
நிமிர்புன் சடை அடிகள் நின்றவாறே'' (6.94.1)

நின்ற திருத்தாண்டகத்தில், தாண்டகவேந்தர் ஆகிய அப்பரடிகள் அருளிச் செய்தபடி, நீ முழுநிறைவு உடையவன் என்பதை எப்படி ஏற்பது?

எனவே; பெருமானே! எனக்கு நீ அறிவிக்கும்போது, எனக்கு வேறாய் நின்று அறிவிப்பாயா, அல்லது என்னோடு கூடி உடனாய் நின்று அறிவிப்பாயா என்பதை எளியேனுக்கு விளக்கி அருளல் வேண்டும். அடியேனது அறியாமையைக் கண்டு, நீ கோபம் கொள்ளாமல், அருளிச் செய்து அருளும்படி வேண்டுகிறேன். அப்போது மெய்கண்டதேவன், ''பக்குவம் இல்லாமையால்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வாறு அறியாமல்கேட்கிறாய்! சூரிய ஒளியும், கண்ணும், இருளும் ஒரே இடத்தில் இருப்பதை அறியாமல் நீ கேட்கிறாய்'' என்று கூறியருளினான்.

அப்போது அருணந்தி சிவம் மெய்கண்ட தேவனைப் பார்த்து, ''எனக்கு பக்குவம் இல்லாத நிலையில் நீ அறிவித்தாய் ஆயின், நான் எதனையும் அறிய இயலாது; நீ குருவாய் வந்து அறிவிப்புதற்கு எனக்குப் பக்குவம் வேண்டும் என்று அருளிச் செய்வாய் ஆயின், பக்குவம் உடைய எனக்கு நீ அறிவிக்கவேண்டிய அவசியம் இல்லையே'' என்று கூறினார்.

''உனக்குப் பக்குவம் வரும்போது, நான் எழுந்தருளி வந்து உனக்கு அறிவிப்பேன்'' என்று நீ கூறுவாய் ஆயின், அது பொருந்து மாறு இல்லை. பக்குவம் என்பது ஒருவகைச் சடநிலை. அஃது உன்னை என்னிடத்து வருவிக்க முடியாது; அவ்வாறு கூறினால் பக்குவம் உன்னை ஏவுகின்ற தலைமைப்பாடு உடையது ஆகிவிடும்; மேலும் வேதாகமங்கள் உன்னை, ஒப்புயர்வு அற்றவன், தனக் குவமை இல்லாதவன் என்று கூறுவன எல்லாம் வெற்றுரை ஆகிவிடுமே?

இன்னும் மும்மலங்கள் ஆகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியன அனைத்தும் சடம். எனவே இவற்றிற்குப் பக்குவம் தேவை இல்லை.

உயிர், பிறப்புட்படுந்தோறும் முப்பு, இளமை முதலிய பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டு வருவதால், அதற்குப் பக்குவம் ஏற்பட இடமில்லை.

நீயோ, இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன் ஆகலின், உனக்கும் பக்குவம் வேண்டுவது இல்லை. எனவே, 'பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களுள் பக்குவம் என்பது யாருக்கு உரியது?

உயிர்கள் அறியாமை நீங்கப்பெறும் நிலையில், இருவினை ஒப்பும், சத்திநிபாதமும் உண்டாகும். அப்போது ஞானம் பிரகாசிக்கும். அந்நிலையில் ஆணவமல மறைப்பு நீங்கும்போது, பக்குவம் ஏற்படும் என்று நீ கூறுவாய் ஆயின், நீ ஓர் ஒப்பற்ற தலைவன் என்பதை நான் எப்படி அறிவது?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆணவமல நீக்கமே பக்குவம் என்று நீ கூறுவாய் ஆயின், அம்மலம் என்னைவிட்டுத் தானே நீங்குகிறதா? அல்லது நானே அதனைவிட்டு நீங்குகிறேனா? இந்த இரண்டு நிலைகளில் எது நிகழ்ந்தாலும், உன்னுடைய உதவி எனக்குத் தேவை இல்லாமற் போய் விடுமே?

உன்னுடைய உதவி இன்றி, என்னால் எதுவுமே இயலாது என்று நான் நன்கு உணர்ந்து இருக்கிறேன். இவ்வாறு இருக்கும்போது "பக்குவம்", "பக்குவம்" என்று நீ கூறுவது என்ன என்றே எனக்குப் புரியவில்லை. அதைத் தயை கூர்ந்து எனக்குத் தெளிவாகக் கூறி அருள வேண்டும்.

இவ்வாறு அருணந்தி சிவம் வேண்டியதும், அதற்கு மெய்கண்டதேவன் கூறியருளிய விளக்கம் வருமாறு;

"ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே?
அடக்கு வித்தால் ஆர் ஒருவர் அடங்காதாரே?
ஓட்டுவித்தால் ஆர் ஒருவர் ஓடாதாரே?
உருகுவித்தால் ஆர் ஒருவர் உருகாதாரே?
பாட்டுவித்தால் ஆர் ஒருவர் பாடாதாரே?
பணிவித்தால் ஆர் ஒருவர் பணியாதாரே?
காட்டுவித்தால் ஆர் ஒருவர் காணாதாரே?
காண்பார் ஆர், கண்ணுதலாய்க் காட்டாக்காலே"

(6–95 –)

என்னும் அப்பரடிகள் அருளிச் செய்த திருத்தேவாரத்தில், "காண்பார் யார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே" என்று கூறியருளியதைச் சிந்தித்துப் பார்த்தால், சிவபெருமான் காட்டினால் அன்றி உயிர் எதையும் காணமுடியாது என்பது உனக்குத் தெளிவாகப் புரியும்.

இவ்வாறு சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் ஒரே மாதிரி நின்று உணர்த்தியருளினாலும், உயிர்கள் தத்தமக்குள்ள இயல்பு வேறுபாடு காரணமாக, உணர்த்தியதை உணர்த்தியவாறு உணர்த்திய போதே உணரும் திறன் அற்றனவாக உள்ளன. எனவே, அந்தந்த உயிரின் இயல்புக்கு ஏற்ப, அந்தந்த உயிர்க்கு உணர்த்த வேண்டுவது இன்றியமையாதது ஆகின்றது. இவ்வுண்மையை,

"ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில், அளவு இல்லை; கிளக்க வேண்டா;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கோள்பாலனவும் வினையும் குறுகாமை, எந்தை
தாள்பால் வணங்கித் தலை நின்று இவை கேட்கத், தக்கார்''
(3–54–4)

என்று, மதுரையில் பாண்டிய மன்னன் கேட்டு உய்யும் பொருட்டு, ஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த திருப்பாசுரத்தால் தெளிவாக உணரலாம்.

எனவே, ஆணவமலம் தானாகவும் உயிரைவிட்டு நீங்காது; உயிரும் அதனைத் தானே நீக்கிக் கொள்ளவும் முடியாது. மல நீக்கம் ஏற்படும் பொருட்டு, அந்தந்த உயிர்களின் இயல்புக்கு ஏற்ப, உயிர் களுக்கு மாயா கருவிகளையும் வினைப்பயன்களையும் ஊட்டி ஊட்டி, உயிர்களின் தன்மை அறிந்து, உயிர்களுக்கு அறிவித்து, உதவி புரிபவன் சிவபெருமானே என்பதை நாம் தெளிவாக உணர வேண்டும். அவ்வாறு உணர உணர, சிவபெருமானின் பேருதவி களைப் பெறத்தக்க பக்குவம் நமக்கு ஏற்படுகிறது.

பசு இயல்பு

அறிவு அறியாமை இரண்டும் அடியேன்
செறிதலான், மெய்கண்ட தேவே – அறிவோ
அறியேனோ யாதுஎன்று கூறுகேன்? ஆய்ந்து
குறிமாறு கொள்ளாமல் கூறு. 3

தெளிவுரை:

கண், இருளிலே கூடினபோது, இருளைக் காண்கிறது; ஒளி யோடு கூடினபோது ஒளியைக் காண்கிறது. அதுபோல், உயிர் சில சமயங்களில் அறிவு உடையதாயும், பலநேரங்களில் அறிவற்றதாயும் உள்ளது.

இவ்வாறு அறிவும் அறியாமையும் ஆகிய இரண்டுமே என்னிடம் விரவி நிற்பதைக் காண்கிறேன். மெய்கண்டதேவ பெருமானே, உண்மையிலேயே நான் அறிவை உடையவனா? அல்லது அறியாமையை உடையவனா? இவ்விரண்டில் எனக்குள்ள இயல்பான குணம் யாது? இவ்வுண்மையை அருள் கூர்ந்து ஆய்ந்து விளக்கி எனக்கு அறிவுறுத்தி அருளுதல் வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதற்கு விளக்கம் வருமாறு:

உயிர், இறைவனைப் போன்று என்றும் ஒருபடித்தாய் இருக்கும் அறிவினை உடையதும் அன்று; சடப்பொருள் ஆகிய பாசத்தைப் போன்று அறியாமையை உடையதும் அன்று. உயிர் தானே எதையும் அறியும் தன்மை உடையதன்று; எனவே, அறிவித்தால் அறியும் இயல்பினை உடையது. ஆக உயிர் இறைவனும் அன்று; உலகமும் அன்று; எதைப் பற்றி நிற்கின்றதோ, அதன் இயல்பையே தன் இயல்பாகக் கொள்ளும் இயல்பினை உடையது.

பாச இயல்பு

கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
வேறு கிளக்கின், விகற்பம், கற்பம்,
குரோதம், மோகம், கொலை, யஞர், மத, நகை
விராய் எண் குணனும் ஆணவம் என விளம்பினை;
அஞ்ஞானம், பொய், அயர்வே, மோகம்,
பைசாசுனியம், மாற்சரியம், பயம்
ஆய ஏழ் குணனும் மாயைக்கு அருளினை;
இருத்தலும், கிடத்தலும், இருவினை இயற்றலும்,
விடுத்தலும், பரநிந்தை மேவல் என்று எடுத்த
அறுவகைக் குணனும் கருமத்து அருளினை;
ஆங்கு அவை தானும் நீங்காது நின்று
தன்வழிச் செலுத்தித் தானே தானாய்
என்வழி என்பது ஒன்று இன்றாம்; மன்ன!
ஊரும் பேரும் உருவும் கொண்டு என்
ஊரும் பேரும் உருவும் கெடுத்த
பெண்ணை சூழ்ந்த வெண்ணெயம் பதியில்
சைவ சிகாமணி, மெய்யர் மெய்ய!
மும்மலம் சடம் என மொழிந்தனை; அம்ம!
மாறுகோள் கூறல் போலும் தேறும்
சடஞ்செயல் அதனைச் சார்ந்திடும் எனினே;
கடம் படம் அதனுள் கண்டிலம்; விடம்படும்
ஊன் திரள் போன்றதாயின், தோன்றி
அணைந்து ஆங்கு அகறல் வேண்டும்; குணங்களும்
பன்மை இன்று ஆகும்; எம்மை வந்து அணைதரத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தானோ மாட்டாது; யானோ செய்கிலன்;
நீயோ செய்யாய், நின்மலன் ஆயிட்டு;
இயல்பு எனின் போகாது என்றும் மயல்கெடப்
பந்தம் வந்தவாறு இங்கு
அந்தம் ஆதி இல்லாய், அருளே. 4

தெளிவுரை:

பெருமானே, ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலங்களின் இயல்பை, எனக்கு முன்னமேயே உபதேசித்து அருளிச் செய்தாய்.

அவற்றுள் ஆணவமலம், கீழ்க்காணும் எட்டுக் குணங்களை உடையது:—

1. விகற்பம் – பிறரிடமிருந்து தன்னை வேறுபடுத்தி நிற்றல்.
2. கற்பம் – தானே தன்னிடத்தில் இல்லாத தன்மைகளைக் கற்பனை செய்துகொள்ளுதல்.
3. குரோதம் – உட்பகை கொள்ளுதல்.
4. மோகம் – எதிலும் அவாவுறுதல்.
5. கொலை – பிற உயிர்களை வதைத்தல்.
6. அஞர் – எப்போதும் ஏதாவது ஒன்றுக்குக் கவலைப்பட்டுக் கொண்டு இருத்தல்.
7. மதம் – மனத்தாலும் வாக்காலும் செயலாலும் செருக்குற்று நிற்றல்.
8. நகை – பிறரையும் அவர்களது உடைமைகளையும் இகழ்ந்து தன்னை மெச்சுதல்.

மாயாமலம், கீழ்க்காணும் ஏழு குணங்களை உடையது:—

1. அஞ்ஞானம் – நிலையான பொருள் எது, நிலையற்ற பொருள்எது என்பது பற்றியஅறிவு இல்லாமை.
2. பொய் – உண்மை அற்றவற்றைக் கூறுதல்.
3. அயர்வு – அறிந்த ஒன்றை மறந்து மயங்கி வருந்துதல்.
4. மோகம் – இழிவான பொருட்களில் விருப்பம் கொள்ளுதல்.
5. பைசாசூனியம் – வளமாய் இருந்தும் கருமியாய் இருத்தல்.
6. மாற்சரியம் – பிறரிடத்துப் பொறாமை கொள்ளுதல்.
7. பயம் – அஞ்ச வேண்டாதவற்றிற்கு அஞ்சுதல்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கன்மமலம், கீழ்க்காணும் ஆறு குணங்களை உடையது:—

1. இருத்தல் – எந்த இடத்திலாவது சோம்பி (மடிவந்து) இருப்பது.
2. கிடத்தல் – நோய்வாய்ப்பட்டு கிடத்தல்.
3. இருவினை இயற்றல் – நல்வினை தீவினைகளைச் செய்தல்.
4. விடுத்தல் – உலகப்பற்றை விடுத்தல்.
5. பரநிந்தை – பிறரை இகழ்ந்து பேசுதல்.
6. மேவல் – இழிவானவற்றை விரும்பிச் செய்தல்.

இந்த மூன்று மலங்களும் என்னைவிட்டு நீங்காமல், தம் வழியில் என்னை இழுத்துச் சென்று, தம் வயம் ஆக்கி, அடிமைப் படுத்திப் பல வகைகளிலும் என்னை அலைக்கழித்து வருகின்றன.

இந்த மும்மலங்களின் பிடியிலிருந்து என்னை விடுவித்து அருளும் பொருட்டுப் பெண்ணை ஆறு சூழ்ந்து ஓடுகிற திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியுள்ள மெய்கண்டதேவே, சைவ சிகாமணியே, மெய்ஞ்ஞானிகளுள் மெய்ஞ்ஞானியே,

வியாபகப் பொருளாய் விளங்கும் நீ, ஊரும் பேரும் உருவும் கொண்டு, எனக்குள்ள ஊரும் பேரும் உருவமும் நீங்குமாறு செய்தருளி, மீண்டும், நான் பிறப்புட்படாதவாறு என்னைக் காத்தருள்கின்றனை.

முன்பு நீ எனக்கு உபதேசித்து அருளியபோது, இந்த மூன்று மலங்களும் சடப்பொருள்கள் என்று கூறியருளினாய். நீ அவ்வாறு கூறியது பொருத்தம் அற்றதாக என் புல்லறிவுக்குத் தோன்றுகிறது. அவை சடப்பொருள்களாக இருக்கையில், அறிவில்லாத அம்மலங்கள் என்னைத் துன்புறுத்துவதற்கு என்ன காரணம்?

சடப்பொருள்கள் தாமே செயல்படு திறம் அற்றவை என்பதைக் குடம், துணி முதலிய சடப்பொருள்களிலிருந்து அறிய முடிகிறது. குடம், துணி முதலிய சடப்பொருள்களால் எனக்கு எந்தத் துன்பமும் நேரவில்லை. இவை தாமே செயல்படவும் இல்லை. எனவே மும்மலங்களால் எனக்குத் துன்பங்கள் எப்படி ஏற்படுகின்றன?

அப்படி இல்லை; சடப்பொருளுக்கும் செயல் உண்டு. நஞ்சு சடப்பொருள் ஆயினும், அஃது ஓர் உயிரின் உடலோடு கலந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்வுயிரைக் கொல்கிறதல்லவா? எனவே, சடப்பொருளுக்கும் செயல் உண்டு என்று நீ கூறுவாய் ஆயின், உடலில் கலந்து உயிரை வருத்தும் நஞ்சு, சிறிது நேரம் சென்றதும், தன் ஆற்றல் குறைந்து போய், அவ்வுடலை விட்டு நீங்கிவிடுகிறது. அவ்வாறே, இந்த மலங்களும் சில, காலப் பொழுது எனக்குத் துன்பத்தை ஏற்படுத்தி விட்டு, பின்பு தாமே நீங்கிடவேண்டும் அல்லவா? அப்படி இல்லையே?

மேலும், நஞ்சு உயிரைக் கொல்வது ஆகிய ஒரே ஒருசெயலை மட்டுமே செய்கிறது. ஆனால் இந்த மலங்களோ, எண்ணில்லாத இயல்புகளை உடையனவாக உள்ளன. எனவே, இவற்றிற்கு உவமையாக நஞ்சினைக் கொள்வது பொருத்தமாகப் படவில்லை.

ஆக, மும்மலங்களும் சடப்பொருள்கள் ஆதலின், அவை தாமே வந்து என்னைச் சாரமாட்டா; எனக்குத் தீங்கினை விளைவிக்கும் அவற்றை நானும் விரும்பி, அவற்றோடு சேரமாட்டேன்; நீயோ மலங்களுக்கு அப்பாற்பட்ட தூயவன்; நன்மையையே செய்பவன். எனவே நீயும் அவற்றை என்னோடு சேரும்படி செய்யமாட்டாய்.

மும்மலங்களும் உயிர்களோடு சேர்ந்து இருப்பது இயற்கை என்று கூறுவாய் ஆயின், இயற்கைப் பண்புகள் ஒரு காலத்திலும் பொருள்களை விட்டு நீங்குவது இல்லை என்பது உண்மை; ஆகலின், முத்தி நிலையிலும் இவை என்னைவிட்டு நீங்காமலே இருக்கும் என்று சொல்லவேண்டி வருகிறது. எனவே பெருமானே, இந்தப் பந்த பாசங்கள் எனக்கு எப்படி ஏற்பட்டன என்பதை நான், மயங்காதவாறு, எனக்குத் தெளிவித்து விளக்கியருளுதல் வேண்டும்.

இதற்கு விடை வருமாறு:

நஞ்சு நித்தியப் பொருள் அன்று. ஆனால் மலங்கள் நித்தியப் பொருள்கள் ஆகும்; அவை நஞ்சு போன்று அழியமாட்டா. இறைவனின் திருவருள் துணையால்தான் அவற்றினின்று விடுபட வேண்டும். அவற்றின் வலிமை அப்படியேதான் இருக்கும். இறைவனின் திருவருட் சார்பால் அவை நம்மைப் பாதிப்பதில்லை.

ஆணவமலம் அநாதியே உள்ள ஒன்றாகும். அது மயக்கும் இயற்கையை உடையது. உயிர் அதனால் மயங்கி, அநாதியே அதன் வயப்படுகிறது. இதனையே 'அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினை' என்று சிவஞான சுவாமிகள் எழுதியருளியுள்ளார்கள். மலத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தின்வழி நின்று, செயலாற்றினால்தான் உயிர்க்கு அனுபவம் உண்டாகும். உயிர் அனுபவம் பெறுவதற்காகத்தான், உயிர், ஆணவ மல வயப்படுவதை இறைவன் தடுக்கவில்லை.

உயிர்க்கு ஆணவமலம் அறியாமையை விளைவிக்கிறது. அந்த அறியாமையை நீக்கிக் கொள்வதன் மூலந்தான் உயிர் அனுபவம் பெறுகிறது. உயிரின் அறியாமையைப்போக்கும் பொருட்டு, இறைவன் மாயையிலிருந்து, தனு கரண புவன போகங்களைப் படைத்து, உயிர்களைப் பிறப்புட்படுத்துகிறான். இந்த மாயா கருவிகளைக் கொண்டே உயிர்கள் கன்மங்களை இயற்றுகின்றன.

உண்மையில் ஆணவம் ஒன்றே மலம் எனப்படும். மாயையும் கன்மமும் உயிர்க்குள்ள ஆணவமலச் சார்பினாலேயே மலம் என்று உபசாரமாகக் கூறப்படுகின்றன. உயிரின் அறியாமையைப் போக்குவதால், உண்மையில் மாயை ஒளிப் பொருளாகும். ஆணவ மலச் சார்பு இன்றி உயிர்கள் செய்யும் கன்மங்கள் அனைத்தும் சிவ புண்ணியங்கள் ஆகும்,.

சிவபுண்ணியமாக இருப்பினும், இருவினை ஒப்பு ஏற்பட்டதும், விருப்பு வெறுப்புக்கள் நீங்கிவிடுகின்றன. இந்நிலையில் இறைவன் ஞானாசிரியனாகத் தோன்றி, ஞானத்தை வழங்குகிறான். அப்போது மும்மலமும் வலி இழந்து போகின்றன.

பாச தரிசனம்

அருள் முன்பு நில்லாது அடியேற்குக் கண் இன்று
இருள் கண்டவாறு என்கொல்? எந்தாய் – மருள்கொண்ட
மாலையா, வெண்ணெய் வாழ் மன்னவா, என்னுடைய
மாலையா மாற்ற மதி. 5

தெளிவுரை:

மேலே சொல்லப்பட்ட மலங்கள் யாவும், ஞானமே வடிவாகிய உன் முன்னிலையில் நிற்கமாட்டா. அடியேனுக்கு அஞ்ஞானம் உள்ளமையால், எதையும் சுவதந்திரமாகக் காணும் அறிவு இல்லை. இந்நிலையில், இவை எனக்குப் பந்த பாசங்களைச் செய்யும் மலங்களே என்பதை நான் எப்படி அறிய முடிந்தது?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எளியேனின் ஞானத் தந்தையே, மணம் பொருந்திய மாலையை அணிந்திருப்பவனே, திருவெண்ணெய் நல்லூரில் எழுந் தருளியுள்ள அருட்பேரரசே, ஐயா என்னுடைய ஐயத்தைப் போக்கி எனக்கு அருள் செய்தல் வேண்டும்.

மூன்றாவது அடியில் உள்ள மாலை, மணம் பொருந்திய மாலையைக் குறிக்கும்.

நான்காவது அடியில் உள்ள ''மாலையோ'' என்ற சொல், ''மால் ஐயா'' என்று பகுக்கப்பட்டு, 'ஐயா, மால் மாற்ற மதி' என வரும். மால் – மயக்கம் – ஐயம்; ஐயா – தலைவனே; அஃதாவது, ஐயா என் ஐயத்தைப் போக்கி அருள் செய்தல் வேண்டும் என்றவாறு.

இதற்கு விடை வருமாறு:–

அடியேன் நீ அறிவிக்க அறியும் தன்மை உடையவன், மாறி மாறித் துன்பங்களை அனுபவிக்கும்போது, இத்துன்பங்கள் ஏன் வருகின்றன என்னும் சிந்தனையை, நீ உணர்த்த, நான் சிந்திக்கிறேன். அப்போது அடியேனது அறிவை ஏதோ ஒருபொருள் மறைத் திருக்கிறது என்றும், அந்தப் பொருள்தான் ஆணவமலம் என்றும் அடியேனது துன்பங்களுக்கு எல்லாம் காரணம் அஃதே என்றும் அடியேன் கருதுகிறேன்.

இறைவன் முன்னிலையில் மலம் நில்லாவிட்டாலும், உயிர்கள், அனுபவம் பெறும் பொருட்டு, இறைவன் மலத்துக்குள் மலமாகவே நின்று, உயிர்களை மலத்தோடு பொருந்தும்படி செய்கிறான், எனவே, உயிர்களுக்குப் பந்தபாசங்களைச் செய்வது மலமே என்பதை உயிர் அறியும்படி இறைவன் செய்கிறான்.

பசு தரிசனம்

மதி நுதல் பாகன் ஆகிக் கதிதர
வெண்ணெய்த் தோன்றி, நண்ணி, உள்புகுந்து, என்
உளம் வெளிசெய்து, உன் அளவில் காட்சி
காட்டி எற்காட்டினை எனினும், நாட்டி என்
உண்மையும் பெருமையும் நுவலில், அண்ணல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாதாள சத்தி பரியந்த மாக
ஓதி உணர்ந்த நானே, ஏக
முழுவதும் நின்றனனே, முதல்வ! முழுதும்
புலன்கடைப் பூழை நுழைந்தனன்; கலங்கி
ஆங்கு ஐந்து அவத்தையும் அடைந்தனன்; நீங்கிப்
போக்கு வரவு புரிந்தனன்; தூக்கி
எவ்விடத்து உண்மையும், இவ்விடத்து ஆர்தலும்,
செல் இடத்து எய்தலும் தெரிந்த மூன்றினுள்
ஒன்று எனக்கு அருளல் வேண்டும் என்றும்
இல்லது இலதாய், உள்ளது உளது எனும்
சொல்லே சொல்லாய்ச் சொல்லும் காலைச்
சிறுத்தலும் பெருத்தலும் இலவே நிறுத்தி
யானை எறும்பின் ஆனது போல் எனின்
ஞானம் அன்று அவை காய வாழ்க்கை
மற்று அவை அடைந்தன உள எனின், அற்றுஅன்று,
விட்ட குறையின் அறிந்து, தொன்று
தொட்டு வந்தன என வேண்டும்; நட்ட
பெரியதில் பெருமையும் சிறியதில் சிறுமையும்
உரியது நினக்கே உண்மை; பெரியோய்!
எனக்கு இன்று ஆகும், என்றும்
மனக்கு இனியாய்! இனி மற்றது மொழியே. 6

தெளிவுரை:

பிறைச் சந்திரனைப் போன்ற திருநெற்றியை உடைய அம்மையை ஒரு பாகத்து உடையவனே, எனக்கு முத்திப் பேற்றினைத் தந்தருளும் பொருட்டுத் திருவெண்ணெய் நல்லூரில் அவதரித்து அருளிய பெருமானே, நீயே என்னை வந்து அடைந்து, என் உள்ளத்தே புகுந்து, இருள் அடைந்த என் உள்ளத்தே புகுந்து, இருள் அடைந்த என் உள்ளத்தில் திருவருள் ஒளியைப் பெருகச் செய்தருளிய பெருந்தகையே.

அளவிட்டுக் கூறுமுடியாத அதியற்புதமான பரம்பொருளின் இயல்பினை எளியேனுக்குக் காட்டியருளி, அதன் வாயிலாக என் இயல்பினையும் நான் காணுமாறு அருளிச் செய்தனை.

நூல்களைக் கற்றதனால் நான் பெற்ற அறிவைக் கொண்டு,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாதாள சத்தியின் எல்லைவரை சென்றேன். அந்நிலையில் நான் அறிந்த பொருள்கள் அனைத்திலும் கலந்து நிறைந்து நின்றேன். பெருமானே! அவ்வாறு நான் கலந்து நிற்கையில், ஏதேனும் ஒன்றை அறியும்போது, ஐம்புலன்கள் ஆகிய சிறிய துவாரங்களில் நுழைந்தே அறிந்தேன். அங்ஙனம் அறியும்போதும், நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்னும் ஐந்து நிலைகளில் நின்றே அறிந்தேன். அஃதும், இயலாதபோது, பல்வேறு பிறப்பு இறப்புகட்கு உட்பட்டு வந்தேன்.

எனவே, பெருமானே! இவற்றையெல்லாம் உன் திருவுள்ளத்தில் ஆய்ந்தருளி, (1) அடியேன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து நிற்றல், (2) தற்சமயம் இந்த உடலில் இருந்து கொண்டு, அஞ்சவத்தைப் படுதல், (3) இந்தப் பருவுடலை விட்டு நீங்கி, நல்வினை தீவினைகளுக்கு ஏற்பத் துறக்க நிரய உலகங்களுக்குச் சென்று, அவற்றின் பயன்களை அனுபவித்தல் ஆகிய இந்த மூன்று நிலைகளில், உயிர்க்கு உரிய உண்மையான இயல்பு யாது என்பதை எனக்கு விளக்கியருளுதல் வேண்டும்.

இம்மூன்று நிலைகளுமே உயிர்க்குரிய இயல்புகள்தாம் என்று நீ கூறுவாய் ஆயின், அது சற்காரிய வாதம் என்னும் சைவசித்தாந்தக் கொள்கைக்குப் பொருந்துமாறு இல்லை. "சற்காரிய வாதம்" என்பது, சத்து – உள்ளதே; காரியம் – தோன்றும்; வாதம் – கொள்கை; அஃதாவது உள்ளதே தோன்றும்; இல்லது தோன்றாது என்பதாகும். ஆகவே உயிர் ஒரு சமயம் அணுவாகச் சிறுத்தும், மற்றொரு சமயம் மலையாகப் பெருத்தும், மாறி மாறி வருகிறதே? எனவே, மூன்றும் உயிர்க்குரிய இயல்பு என்பது பொருந்தாது.

அப்படி இல்லை என்றால், ஓர் இயல்புடன் கலந்து நிற்குமாயின், யானையின் உடலில் புகுந்து பெரியதாகவும், எறும்பின் உடலில் புகுந்து சிறியதாகவும் நிற்பது ஏன்? எனவே, அஃது உயிரின் உண்மையான இயல்பைக் காட்டாமல், உடம்போடு கூடி நிற்கும் வாழ்க்கை நிலையையே காட்டுகிறது.

அவ்வாறு இன்றி, வினைக்கு ஏற்ப ஓர் உடலைப் பெற்று, அந்த உடலின் இயல்புக்கு ஏற்பப் பெரியதாகவோ சிறியதாகவோ உயிரின் அறிவு விளங்கும் என்று கூறுவாய் ஆயின், உயிர், தான் எடுத்த பிறவிக்கும் உடலுக்கும் ஏற்பபடி அறிவுடையதாக இருக்கும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்று பொருள் கொள்ளவேண்டி வரும்; அதுவும் பொருந்தாது. ஏனெனில், முன்பு உயிர், தான் எடுத்த பிறவிகளையும், உடல் களையும் குறித்து, இந்தப் பிறப்பில் அறிந்திருக்க வேண்டும். அவ்வாறு அறியாததால், அது பொருந்தாது.

எனவே, உயிரின் உண்மை இயல்பு இஃது அன்று. நீ தன்வயம் உடையவன். எனவே, அணுவுக்கு அணுவாய் மகத்துக்கு மகத்தாய் இருப்பது என்பது உன்னால் மட்டுமே முடியும்; எனக்கு அஃது இயலாது. எனவே, எனக்கினிய பெருமானே, உண்மை இயல்பு யாது என்பதை எனக்குத் தயை கூர்ந்து விளக்கியருளுதல் வேண்டும். இதற்கு விளக்கம் வருமாறு:–

விழித்த கண், இருளோடு கூடியபோது இருளாயும், ஒளி யோடு கூடியபோது ஒளியாயும் நிற்கிறது. அதுபோல, உயிரும் எதனை எதனைச் சார்ந்து நிற்கிறதோ, அதன் அதன் தன்மையே தன் தன்மையாய் நிற்பது ஆகும். அருளிலும் மலத்திலும் அப்படியே நிற் கும்; ஆயினும் உயிர் அருளும் அன்று; மலமும் அன்று. இதனையே, ''சார்ந்ததன் வண்ணம் ஆம் தன்மை'' உடையது உயிர் என்று நூல்கள் கூறுகின்றன. இஃதே உயிர்க்குரிய உண்மை இயல்பு ஆகும்.

அவத்தைகளின் நிலை

மொழிந்த அவத்தை முதல், அடியேன் நின்றாங்கு
ஒழிந்தன நான்கும் உணர – இழிந்து அறிந்து
ஏறிற்று இங்கு இல்லை எழில்வெண்ணெய் மெய்த்தேவே
தேறிற்று என் கொண்டு தெரிந்து. 7

தெளிவுரை:

வண்ணம் மிகுந்த திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளி யுள்ள மெய்கண்ட தேவே,

நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்னும் உயிர்க்குரிய ஐந்து அவத்தைகளில், முதல் அவத்தை ஆகிய நனவு ஆகிய விழிப்பு நிலையில், அடியேன் இருக்கிறபோது, மற்றைய நான்கு அவத்தைகளையும் அறியமுடியவில்லை; இந்த விழிப்பு நிலையில் கருவி கரணங்கள் குறைவதும் கூடுவதும் நிகழ்தல் இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்வாறு நிகழ்வதையும் என்னால் உணரமுடியவில்லை. எனாவே, நனவு என்னும் இந்த விழிப்பு நிலையை அன்றிப் பிற நான்கு அவத்தைகள் எனக்கு உள்ளன என்பதை நான் எப்படி அறிவது? இவ்வினாவுக்கு விளக்கம் அளித்து அருளல் வேண்டும்.

நனவு நிலையில் ஆன்மா, முப்பத்தைந்து கருவிகளோடு கூடி நிற்பதாலும், அவற்றுள் ஏறி இறங்கும் நிலை கருவிகளுக்கு இல்லை யாதலாலும், பிற நான்கு அவத்தைகளில் கருவிகள் ஏறுதலும் இறங் குதலும் உள்ளமையாலும்; அந்த நான்கு அவத்தைகளை ஆன்மா அறிவதில்லை.

நனவு நிலை என்பது புருவ நடுவில் தொழிற்படுகிறது. அப்போது தொழிற்படும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பிற அவத்தைகளில் தொழிற்படாமையால், பிற நான்கு அவத்தை களைப் பற்றிய அறிவு ஆன்மாவுக்கு நனவு நிலையில் இல்லை.

ஒவ்வொருஅவத்தையிலும் என்னென்ன கருவிகள் தொழிற் படுகின்றன என்னும் விளக்கத்தை இந்த மையத்தின் வெளியீடு ஆகிய "தடைகளும் விடைகளும்" என்னும் நூலில் காணலாம்.

பெத்த நிலையில் உள்ள ஆன்மா, நனவு நிலையை மட்டுந் தான் தெளிவாக அறியமுடிகிறது. மற்ற நான்கு நிலைகளையும், நாம் ஓரளவாவது அறியும் வண்ணம், நிகழ்ச்சிகள் நடைபெறுவதைக் காணலாம்.

உறங்கி விழித்ததும், 'உறங்கினோம்' என்ற உணர்வு நமக்குத் தோன்றுகிறது. அது சுழுத்தி நிலை ஆகும். உறக்கத்தில் கனவு காண்கிறோம். விழித்ததும் நனவு நிலையில் இருக்கும்போது, 'கனவு கண்டோம்' என்ற உணர்வுதோன்றுகிறது. இவ்வாறு, கனவு, சுழுத்தி என்னும் இரண்டு அவத்தைகளையும் உணர்கிறோம்.

உறங்கும்போது, சில சமயங்களில் கனவு இல்லாமல், ஒரே இருளில் தூங்கியதை, நாம் விழித்ததும் அறிகிறோம். அந்நிலையே பேருறக்கம் எனப்படும் துரியம் ஆகும்.

பலமுறை தட்டி எழுப்பியும் எழுந்திராமல், சில சமயங்களில் நாம் உறங்குகிறோம். அந்த நிலையில் சில மணித்துளிகள், 'உயிர்ப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

படக்கம்' ஏற்படுகிறது. அதை அப்போது நாம் உணராவிட்டாலும், தட்டி எழுப்பியும் எழுந்திருக்காமல் நாம் இருக்கின்ற நிலையினால் உயிர்ப்படக்கம் நமக்கு உண்டு என்பது புலனாகும். இவ்வாறு ஐந்து அவத்தைகளையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

ஆன்ம இயல்பு

தெரித்தது என் கொண்டு எனை உருத்திர பசுபதி!
செடியனேனையும் அடிமை செய்யப்
படிவம் கொண்டு வடிவு காட்டில்லாப்
பெண்ணை ஆளும் வெண்ணெய் மெய்ய!
அவத்தையில் தெரித்தனன் ஆயின், அவத்தை
தெரித்தாங்கு இருத்தலும் இலனே; திருத்தும்
காலம் முதலிய கருவி ஆயின்,
மாலும் பிரமனும் வந்து எனை அடையார்
ஓதும் காலை ஒன்றை ஒன்று உணரா;
சேதனம் அன்று அவை; பேதைச் செயலும் இச்
சேதன வானால், செயல் கொள வேண்டும்; நல்
போதம் அவற்றைப் புணர்வதை அறியேன்;
கருவித் திறனினும் காண்பதோர் ஒன்றாம்
ஒருவுதல் அறியேன்; உணர்வு இலன்; ஆதலின்,
நின் கொடு கண்டனன் ஆயின், எற்குக்
கருவி ஆயினை; பெருமையும் இலவே;
யானே பிரமம்; கோனே வேண்டா;
இன்னும் கேண்மோ மன்ன, நின்னின்
முன்னம் என்தன் உணர்வு இலன்; ஆதலின்,
என்னைக் காண்பினும், காண்பு அல; காணாது
உன்னைக் காண்பினும், காண்பு அல; உன்னோடு
ஒருங்கு காண்பினும், காண்பு அல; அருந்துணை,
கண்டவாறு ஏது? எனது கண்ணே!
அண்டவாண! அருட்பெரும் கடலே. 8

தெளிவுரை:

சங்கார கர்த்தாவாகிய பசுபதியே, என்னை நான் அறியும் இடத்து, எதனைக் கொண்டு அறிந்தேன்? அஃதாவது ஆன்மா என்று ஒருபொருள் உண்டு என்பதை நான் எப்படி அறிந்தேன்?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அஞ்ஞானி ஆகிய என்னையும் அடிமை கொள்ளவேண்டி, மானுடச்சட்டை தாங்கித் திருமேனி கொண்டு எழுந்தருளித் திருவெண்ணெய்நல்லூரில் உறையும் மெய்கண்டதேவே,

நனவு, கனவு முதலிய ஐந்து அவத்தைகளை அடையும்போது அவற்றை இன்னது இன்னது என்று அறிந்து, அவற்றிலிருந்து என்னால் நீங்கமுடியவில்லை. எனவே, அவத்தையுறுவதை வைத்து ஆன்மா என ஒரு பொருள் உள்ளது என்பதை அறியமுடியாது.

காலம், நியதி முதலியன கொண்டு என்னை அறிந்தேன் என்று சொன்னால், படைத்தல் தொழிலைச் செய்யும் அயனும், காத்தல் தொழிலைச் செய்யும் மாலும், என்னைவந்துஅடைவதற்குக் காரணம் இல்லையாகும்; அஃதாவது அவர்கள் இறைவன் ஆணையின் வழி நின்று படைத்தல், காத்தல் தொழிலைச்செய்யும் சகலர் வகை ஆன்மாக்களே ஆகலின் அவர்களால் எனக்கு எந்தப் பயனும் இல்லை என்று ஆகிவிடும்.

அதுமட்டுமன்றி, அந்த கலாதிகளும் (காலம், நியதி, கலை முதலியன) சடப்பொருள்கள் ஆகலின், அவற்றுள் ஒரு கருவி மற்றொரு கருவியை அறியாது. மேலும் அறிவுடைப் பொருள் ஆகிய ஆன்மா, அறிவற்ற அந்தக் கருவிகளுடன் நின்றாலே தொழிற்படும் என்று கூறினால், அது பொருந்துமாறு இல்லை. ஆன்மாவின் துணைக் கொண்டு இயங்கும் அந்தக் கருவிகளுக்கு அறிவு இல்லை. ஆகலின், ஆன்ம அறிவு அக்கருவிகளால் விளங்குகிறது என்பது எப்படிப் பொருந்தும்?

எனது அறிவு, தானாக அந்தக் கருவிகளோடு கூடுவதில்லை. கருவிகள் அனைத்தும் கூடி நிற்கும் நனவு நிலையிலும் கூட, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன்கள் ஐந்தினையும் நான் ஒவ்வொன்றாகவே அறிகிறேன்; அக்கருவிகள் தொழிற்படும் நிலையிலிருந்து நீங்குவதையும் நான் அறிவதில்லை.

கருவிகளின் உதவிகளைக் கொண்டே எனது அறிவு விளங்கும் என்றும், கருவிகளின் உதவி இன்றி எனது அறிவு விளங்காது என்றும் கூறினால், அறிவித்தால் அறியும் தன்மை உடைய நான் உன்னால் எதையும் அறியவில்லை என்று ஆகிவிடுமே? அவ்வாறாயின் தலைவன் என்னும் பெருமை உனக்கு இல்லாது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போய்விடும். அந்நிலையில், நீயே கருவியாக அமைகிறாய்; அதனால் பயன்பெறும் நானே தலைவன் ஆகி விடுவேனே? அப்போது உன் தலைமையும் எனக்குத் தேவையற்றது ஆகிவிடுமே?

தலைவனே, இன்னும்கேள்! 'நீ அறிவிக்க நான் அறிகிறேன்' என்று கூறப்படும் உன் உதவியை என்னால்அறிய முடியாதபோது, நான் உன்னையும் அறியவில்லை; என்னையும் அறியவில்லை. உன்னோடு கூடி நின்று அறியும் தகுதியும் எனக்கு இல்லை. இந்நிலையில், நான் எப்படி அறிவது? என் தகுதிதான் யாது? ஆகிய இவற்றை எனக்கு விளக்கியருளுதல் வேண்டும். என் கண்ணே, உலகுக்கு ஒரு முழுமுதலே, அருட்பெருங்கடலே, கருணையோடு இவ் ஐயத்தைப் போக்கியருளல் வேண்டும்.

இதற்கு விளக்கம் வருமாறு:—

இறையருள் ஒன்றினாலேயே இவ்வுடலைப் பெற்ற உயிர், இறைவன் திருமேனி கொண்டு எழுந்தருளி வந்து அறிவித்தால் அன்றி, எதையும் அறிகின்ற சுவதந்தரம் உடையதன்று. எனவே, இறையருளில் அடங்கி, அருள்வழியில் நின்று ஒழுகும்போதே, ஆன்மா தன்னை அறியும். அஃதன்றி, தானே எதனையும் அறியும் திறன் உடையதன்று உயிர் என்பதே இதற்கு விளக்கம் ஆகும்.

துரியாதீத நிலை

கடல் அமுதே! வெண்ணெய்க் கரும்பே! என் கண்ணே!
உடலகத்து மூலத்து ஒடுங்கச் – சடலக்
கருவியாது? ஆங்கு உணர்த்தக் காண்பதுதான் என்னை
மருவியாது? என்று உரைக்க மன். 9

தெளிவுரை:

கடலில் தோன்றிய அமுதத்தை ஒப்பவனே, திருவெண்ணெய் நல்லூரில் தோன்றிய கரும்பை ஒத்த இனியவனே, என் கண்ணைப் போன்றவனே, இந்த உடலில் உள்ள மூலாதாரத்தில், துரியாதீத நிலையில் அடியேன் ஒடுங்கி நிற்கையில், அறிவிக்க அறியும் தன்மையன் ஆகிய நான், எந்தெந்தக் கருவிகளைக் கொண்டு அறிகிறேன்? அக் கருவிகளால் நான் என்னென்ன உணர்கிறேன்? என்பனவற்றை எனக்கு விளக்கியருளல் வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதற்கு விளக்கம் வருமாறு:—

துரியாதீத நிலையில் இறைவன் ஆன்மாவுக்கு உணர்த்தும் போது, பிரகிருதியோடு கூடி ஆன்மா நிற்கிறது. அந்நிலையில் காலம், நியதி ஆகிய இரு தத்தவங்கள் ஆன்மாவுக்குக் கருவிகளாக அமைகின்றன. துரிய நிலையில், கலை, வித்தை, அராகம் ஆகிய தத்துவங்கள் ஆன்மாவுக்குக் கருவிகளாக அமைகின்றன.

(இதற்குப் பிரமாணம் போற்றிப் பஃறொடை 27–35)

இதனை ஒரு நடைமுறை உவ்மையால் அறியலாம். நாம் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது, கால தத்துவத்தைப் பற்றி நின்றே நாம் எழுகிறோம். அஃதாவது எழுந்திருக்கும்போதே, 'மணி என்ன இருக்கும்?'' என்பதை அறிய அவாவுவதிலிருந்து இவ்வுண்மையை அறியலாம். ''ஆழ்ந்த நித்திரை'' என்பது, 'சுழுத்தி நிலை' எனக் கொள்ளாமல், 'பேருறக்க நிலை' எனக் கொள்வது நல்லது.

பாச நீக்கம்

மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை
அன்னியம் ஆக்கி அருள்வழி அதனால்
என்னுள் புகுந்தனை; எனினே, முன்னைத்
திரிமலம் தீர்த்த தேசிக, நின்னோடு
ஒருவதல் இன்றி உடந்தையே ஆகும்
பெருநிலை ஆகல் வேண்டும்; மருவிடும்
மும்மலம் அதனால் எம்முள் நின்றிலை எனின்,
அம்மலத் திரிவும் செம்மலர்த் தாள் நிழல்
சேர்தலும் இலவாய்ச் சார்பு அவை பற்றிப்
பெயர்விலன் ஆகும்; பெரும, தீர்வு இன்று
அமைந்த கருமத்து இயைந்தவை அல்லது
சமைந்தன இலஎனச் சாற்றின், அமைந்த
மாயேயம், கன்மம், மாமலம் மூன்றும்
மாயாது; ஆகவே, ஆகவே, ஆர்ச்ச நம் மாயையின்
உற்பவம் தீராது ஒழுகும் என்று ஒன்றின்
நிற்சமம் ஆயின் அல்லது, நின் பெறல்
இல் என மொழிந்த தொல் அறம் தனக்கும்
ஏயாது ஆகும்; நாயேன் உளத்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நின்றனை என்பனோ? நின்றிலை என்பனோ?
பொன்றிய பொன்றிற்றில மலம் என்பனோ?
ஒன்றினை உரைத்து அருள் மன்ற, குன்றாப்
பெண்ணைப் புனல் வயல் வெண்ணெய்க்கு அதிபதி
கை, கண், தலை, வாய், கால், செவி, மூக்கு உயர்
மெய் கொண்டு என்வினை வேர் அறப் பறித்த
மெய்கண்ட தேவ, வினை இலி,
மை கொண்ட கண்ட, வழு இல் என் மதியே,

தெளிவுரை:

திருவெண்ணெய் நல்லூர்த் தலைவனே, இருவினை ஒப்பு எய்தியபோது, என் அறிவை மறைத்துக் கொண்டு இருந்த ஆணவ மலத்தின் ஆற்றல், என்னிடம் செல்லுபடி ஆகாதவாறு செய்தருளி எனக்கு உள்ளே புகுந்து, உயிர்க்குயிராய் நின்று அருளியுள்ளாய். எனவே, பரம குருவே, உன்னை விட்டு நீங்காமல், நான் உன்னோடு ஒன்றுபட்டு நின்றிருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது.

ஆனால், அநாதியே ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும் மலங்கள் என்னைப் பந்தித்து நிற்கையில், நான் உன்னுடன் ஒன்றி நிற்கவில்லை என்று கூறுவாய் ஆயின்,

அந்த மலங்கள் என்னைவிட்டு என்றுமே நீங்காமல், என்னைப் பந்தித்தவாறே இருக்கும்; ஆகையினாலே, எளியேன் என்றுமே உன் திருவடியைச் சேர முடியாதவன் ஆகி, மலங்களின் செய்கைகளுக்கு உட்பட்டு, பிறப்பு இறப்புக்களில் பட்டு உழன்று கொண்டே இருக்கவேண்டியதாகும்.

அப்படி இல்லை, ஊழ்வினை காரணமாக ஏற்பட்ட நல்வினை தீவினைப் பயன்கள் ஆகிய இன்ப துன்பங்களை உயிர் அனுப விக்குமே அல்லாமல், இனி உடல் எடுப்பதற்குக் காரணம் ஆகிய ஆகாமிய கன்மம் ஆகிய வருவினை வளராது என்று நீ அருளிச் செய்வாய் ஆயின்,

பிராரத்த கன்மத்தினைப் புசிப்பதற்கு எடுத்த உடல் உள்ள வரை, அந்த உடலுக்குக் காரணம் ஆகிய மாயை நீங்காது; மாயை நீங்காததால், கன்மமும் நீங்காது; மாயையும் கன்மமும் நீங்காவாயின்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆணவமலமும் உயிர் அறிவை மறைத்துக்கொண்டு இருக்கும் என்று கூறவேண்டிவரும்.

இவ்வாறாக, மூன்று மலங்களும் தமக்குக்கேடு இல்லாமல் இருப்பதனால், ஆகாமிய கன்மங்கள் பெருகி, அதன் காரணமாக உயிர்க்கு பிறப்பும் இறப்பும் மீண்டும் மீண்டும் தொடர்ந்து வந்து சேரும். இந்த மும்மலங்களும் உன்னைப் போல் அநாதியே உள்ள மையால், அவற்றிற்கு என்றும் கேடு இல்லை. அப்படியானால், உனக்கு ஒப்பாக ஒருபொருளும் இல்லை என்னும் முன்னோர் வாக்கும் பொருந்தாததாகிவிடும்.

எனவே, அடியேனை விட்டு, அநாதியே நீ நீங்காது இருக் கிறாய் என்று கொள்வதா? அல்லது, அடியேனிடத்து அநாதியே நீ நிற்கவில்லை என்று கொள்வதா? ஆணவமலம் முத்தியில் கெட்டது என்று கொள்வதா? அல்லது கெடவில்லை என்று கொள்வதா? இதனை என்ன என்று சொல்வேன்?

இந்த வினாக்களில் ஏதேனும் ஒன்றை எனக்குத் தெளிவாகத் தெரியும்படி நிச்சயமாக அருளிச் செய்யவேண்டும். பெருமை குன்றாத பெண்ணை ஆற்று நீரால் சூழப்பெற்ற வயல்களை உடைய திருவெண்ணெய் நல்லூர்க்குத் தலைவனே, நீ கையும் கண்ணும் தலையும் வாயும் காலும் செவியும் மூக்கும் ஆகிய உறுப்புக்களை உடையதோர் ஒப்பற்ற திருமேனியைக் கொண்டு, எனது வல் வினையை வேர் அறப் பறித்த மெய்கண்ட தேவனே, நின்மலனே, நீல கண்டனே, பழுது இல்லாத என் அறிவாய் உள்ளவனே, எனக்கு இந்த ஐயங்களைத் தீர்த்து அருள்புரிய வேண்டுகிறேன்.

இவ்வினாக்களுக்கு விளக்கம் வருமாறு:—

இறைவன் அநாதியே உயிர்களோடு ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கிறான்; ஆயினும் உயிர்கள் ஆணவமலப்பற்றுக் காரண மாக, அம் மலத்தில் மறைப்புண்டு, இறைவன் அவ்வாறு அநாதியே நிற்பதை அறியாமலிருக்கின்றன.

இறைவன் எப்பொழுதும் ஆன்மாவோடு கலந்தே நிற்கிறான். ஆனால் அதே சமயம் வேறாகவும் உடனாகவும் நிற்கிறான். ஆன்மா பக்குவம் பெறும் வரைக்கும் இறைவன் உடனாக நிற்பதை ஆன்மா

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உணர்வதில்லை. அது பக்குவம் பெறவேண்டும் என்பதற்காகத்தான், இறைவன் தன் திரோதான சக்தி முலமாக மறைந்து நின்று ஆன்மாவுக்கு இன்ப துன்ப அனுபவங்கள் ஏறும்படி செய்கிறான்.

வீடுபேற்று நிலையில் ஆன்மா, இறைவனை உணர்கின்ற நிலையை எய்துகிறது. ஆணவமலம் இறைவன் முன்னிலையில், செயல்பட முடியாமல் வலி குன்றி நிற்கிறது. ஆணவ மலம் தன் அளவில் வலி குன்றவில்லை; ஆனால் இறைவன் திருவருளை நோக்க, அது வலி குன்றி நிற்பதாகச் சொல்கிறோம். எனவே, ஆணவமலம் தன் அளவில் கெடாமல், ஞாயிற்றின் முன் இருள்போல, இறைவன் திருவருள் முன் வலி குன்றிக் கிடக்கிறது.

ஆன்மாவின் அஞ்ஞான மயக்கம்

மதிநின் பால் இத்த மலத்தின்பால் நிற்க
விதி என்கொல் வெண்ணெய் வாழ் மெய்ய – பதிநின்பால்
வந்தால் இதின் வரத்தில் வந்து இரண்டும் பற்றுகிலேன்;
எந்தாய் இரண்டு ஆமாறு என்? 11

தெளிவுரை:

அடியேன் இன்று பெற்றுள்ள அறிவு, உன்னிடமிருந்து பெற்றது ஆகும். அஃதாவது நீ எனக்கு வழங்கிய கருவி கரணங்களின் முலம் விளங்கும் அறிவு ஆகும்; இந்நிலையில், என்னறிவு உன்னிட மிருந்து பெற்றது என்பதை உணராமல், நான் ஆணவமலச் சார்பு உடையவனாகவே இன்னமும் இருக்கிறேனே? இதற்கு என்ன காரணம்?

திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளி இருந்து, எளியேனை வாழ்வித்து அருளும் மெய்கண்ட தேவனே,

மாயா கருவிகளின் வாயிலாக ஆன்மாவின்கண் நிகழும், ஞானம் ஆகிய பாச ஞானத்தை விட்டுப், பாசங்களின் இயல்பை உணர்ந்து, தன்னை அவற்றின் வேறாகக் கண்டு அவற்றின் மேலாய பிரமம் நானே எனக் கொள்ளும் ஞானம் ஆகிய பசு ஞானத்தில் பற்று அற்றுப் பதி ஞானம் ஆகிய திருவருளில் கூடி நிற்கும் நிலையில்இந்தப் பாச பசு ஞானங்களைப் பற்றுகின்றேன் இல்லை. என்னை உடைய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெருமானே, என்னுடைய அறிவுஇவ்வாறு இரண்டு தன்மை உடையதாக இருப்பதற்கு என்ன காரணம்? இதனை எளியேனுக்கு விளக்கி அருள்புரிதல்வேண்டும்.

இதற்கு விளக்கம் வருமாறு:-

கருவி கரணங்களால் விளங்கும் அறிவு, சட அறிவு. சடப்பொருள் ஆகிய ஆணவ மலப்பற்றை நீக்கும் பொருட்டு, இறைவன் சடப் பொருளின் உதவியால் உயிரின் அறிவை முதலில் விளங்கச் செய்கிறான். எனவே சடப்பொருளின் தொடர்பு இருக்கும் வரை ஆணவமலப் பற்று உயிர்க்கு இருந்துகொண்டிருக்கிறது.

திருவருளின் பேருதவியை உணர்ந்து, திருவருளையே பற்றி நிற்கும்போது, ஆணவமலப்பற்று அறவே ஆன்மாவை விட்டு நீங்குகிறது. அந்நிலையில், பசு ஞானமும் பாச ஞானமும் சடஞான மாகலின், பதிஞானம் விளங்கும் ஆன்மாவினிடத்து விளங்கி நிற்ப தில்லை. இதற்குக் காரணம், சார்ந்ததன் வண்ணம் ஆம் தன்மையாகிய உயிர் இயல்பே ஆகும்; பற்றிய பொருளில் அழுந்தி, அப்பொருளின் தன்மையையே தன் தன்மையாகப் பெறும் சார்ந்ததன் வண்ணம் ஆகும் உயிரியல்பே, இதற்குக் காரணம்.

இறைவன் உயிரில் கலந்து நிற்கும் முறைமை

எண்திசை விளங்க இருட்படாம் போக்கி
முண்டகம் மலர்த்தி மூதறிவு அருளும்
மேதினி உதயம் மெய்கண்ட தேவ,
கோது இல் அமுத, குணம்பெரும் குன்ற,
என்னின் ஆர்தலும் அகறலும் என்னைகொல்?
உன்னில் உன்னி உனாவிடில் பெயர்குவம்
என்னும் அதுவே நின் இயல்பு எனினே,
வியங்கோள் ஆளனும் ஆகி இயங்கலும்
உண்டு எனப் படுவை; எண்தோள் முக்கண்
யாங்கணும் பிரியாது ஓங்கு நின் நிலையின்
யான் வந்து அணைந்து மீள்குவன் ஆயின்,
ஆற்றுத் துயர் உற்றோர் அணிநிழல் நசைஇ.
வீற்று வீற்று எழுதர வேண்டலும் வெறுத்தலும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இன்றிச் சாயைக்கு நன்றுமன் இயல்பே
அனையை ஆகுவை நினைவு அரும் காலை
இந்நிலை அதனின் ஏழையேற்கு இரங்கி
நின்னை வெளிப்படுதது ஒளிப்பை நீயேல்
அருளுமாறு ஆகும் பெரும, அஃது அன்றியும்
நிற்பெற்ற அவர்க்கும் உற்பவம் உண்டு எனும்
சொற் பெறும்; அஃது இத்தொல் உலகு இல்லை,
அவ்வவை அமைவும் சோர்வும் மயர்வு அறச்
சொல்லில் சொல் எதிர் சொல்லாச்
சொல்லே சொல்லுக, சொல் இறந் தோயே. 12

தெளிவுரை:

எட்டுத் திக்குகளும் விளங்கும்படி இருட்டை நீக்கித் தாமரையை மலரச் செய்யும் ஒளி உமிழும் சூரியனைப்போல, எளியேனின் அறியாமையை நீக்கி, எனது உள்ளத்தில் தெளிவை ஏற்படுத்திச் சிவஞானப் பேரொளியைப் பரப்பி வருகின்ற ஞானாதித்தன் ஆகிய மெய்கண்ட தேவனே, தூய அமுதனே, குணப்பெரு மலையே,

நீ ஒரு சமயம் என்னோடு கூடியும், பிறிதொரு சமயம் என்னை விட்டு நீங்கியும் நிற்பதற்கு என்ன காரணம்? (இதற்குள்ள விளக்கத்தைத் தெளிவுரையின் முடிவில் வரும் குறுந்தொகையிலும் காண்க).

உன்னை நினைந்து நான் இருக்கும்போது, நீ என்னோடு கூடியும், நான் உன்னை நினைந்து நிற்காதபோது, நீ என்னை விட்டு நீங்கியும் நிற்பதுதான் உன் இயல்பு என்று கூறுவாய் ஆயின், நீ எனது ஏவலின்படி இயங்குபவன் ஆகிவிடுவாய். அதனோடு அமையாமல், நீ எட்டுத் தோள்களும் மூன்று கண்களும் உடையன் ஆகி எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் உன்னுடைய முழு நிறைவில், நான் வந்து உன்னோடு கூடியும் உன்னை விட்டுப் பிரியவும் வேண்டுவதில்லை.

அவ்வாறாயின், கோடைக்காலத்து வெயிலில் நடந்து களைப்பு அடைந்தவர்கள், மரத்தின் நிழலைக் கண்டால், அந்த நிழலை அடைந்திருக்க விரும்புதலும், அதனை நீங்கிப் போகுதலும் செய்யும் போது, அந்த மரத்தின் நிழல், அவர்கள் தன்னிடத்து வந்ததைக் குறித்து மகிழ்தலும், தன்னைவிட்டு நீங்கிச் செல்வதைக் குறித்து வருந்துதலும் செய்வதில்லை. அதுபோல் நீயும் உன்னை வந்து அடைந்தவர்க்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அருளும் உன்னைவிட்டு நீங்கி நிற்பவர்க்கு அருளின்மையும் செய்வாய் ஆயின், அந்த நிழலைப்போல நீயும் சடப்பொருள் எனப் படுவாய்.

அப்படியல்ல; நான் நினைக்கும்போது வெளிப்பட்டும், நான் நினையாதபோது மறைந்தும், நிற்றல் உனக்கு இயல்பு என்று நீ கூறு வாய் ஆயின், ஏழையேன் பொருட்டு இரக்கப்பட்டு அநாதியே வெளிப்பட்டு அருளிச் செய்த நீயே மீண்டும் மறைந்து விடுவாய் ஆயின் அஃது உன் அருட்டன்மைக்கு மாறுபடுவது ஆகிவிடும். அல்லாமலும், உன் திருவடியை அடைந்தவர்க்கு மீண்டும் பிறப்பு உண்டு என்னும் அவசித்தாந்த இழுக்கு ஏற்பட்டுவிடும். எனவே, எனதுஅறியாமையைப் போக்கும் பொருட்டு, மேலும் நான் கேள்வி கேட்கமுடியாத பதிலைச் சொல்லி, விடையளித்து அருளுதல் வேண்டும்.

இத்தடைகளுக்கு விடைகள் வருமாறு:—

1. உடலும் உயிரும் போல இறைவன் உயிர்களோடு ஒன்றாய் நிற்கிறான்; கண்ணும் சூரியனும்போல, பொருட்டன்மையால் இறைவன் உயிர்களின் வேறாய் நிற்கிறான். உயிரறிவும் கண் ஒளியும் போல இறைவன் உயிர்களோடு உடனாய் நிற்கிறான். உயிர்கள் நிலைத்து இருக்கும் பொருட்டு, இறைவன் உயிர்களோடு ஒன்றாய் நிற்கிறான்; பொருள்களை உயிர்கள் அறியும்படி அறிவித்தற்கு, இறைவன் உயிர்களின் வேறாய் நிற்கிறான்; அறியினும் அறிந்தவாறே அனுபவிக்கும் சுவதந்திரம் உயிர்க்கு இல்லை ஆகலின், அவ்வாறு அறிந்தவாறு அனுபவிக்கும்படி உயிர்களைச் செலுத்தும் பொருட்டு, இறைவன் உயிர்களோடு உடனாய் நிற்கிறான்.

2. இவ்வாறு இறைவன் உயிர்களோடு எக்காலத்தும் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்கின்றான் ஆயினும், அநாதியே உயிர்களுக்கு மலப்பற்று உள்ளமையால், மலப்பற்றை விட்டு இறைப்பற்று உடைய உயிர்களுக்கு விளங்கியும், இறைப்பற்றை மறந்து மலப்பற்று உடைய உயிர்களுக்கு விளங்காமலும் இறைவன் நிற்கிறான். இவ்வாறு இறைவன் நிற்பதற்குக் காரணம், மலப்பற்று உடைய உயிர்களுக்கு இறைவன் தன்னைக் காட்டினாலும், உயிர்கள் அவனை விளங்கிக்கொள்ள மாட்டா. எனவேதான், அவனை விரும்பி நினைந்து உருகும் ஆன்மாக்களுக்கு மட்டுமே அவன் விளங்கி நிற்கிறான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

3. இறைவன் தன் நிலையில் என்றும் எவ்விடத்தும் நீக்கமற நிறைந்து நிற்கிறான்; இயல்பாகவே இறைவனுக்கு எந்த உயிரினிடத்தும் விருப்பு வெறுப்புக்கள் இல்லை. ஆயினும், நிழல் தரும் மரத்தை நாடிச் சென்று அந்நிழலில் இருப்பவருக்கே, அந்த மரம் நிழலைத் தருவது போல, இறைவனை, நினைந்து பிறவற்றை மறந்து நிற்பவர்க்கே, இறைவன் அருள் புரிகிறான். சார்ந்தாரைக் காப்பது தலைவனாகிய அவன் கடனாகும். நிழல் தரும் மரத்திற்கு ஒரவாரம் (பாரபட்சம்) இல்லாதது போல, இறைவனுக்கும் உயிர்களிடத்து ஒரவாரம் இல்லை. இவ்வுண்மையையே,

"நலம் இலன் நண்ணார்க்கு; நண்ணினர்க்கு நல்லன்;
சலம் இலன் பேர்சங் கரன்"

என்று திருவருட்பயன் பேசுகின்றது.

"சலமிலன் சங்கரன், சார்ந்தவர்க்கு அல்லால்
நலமிலன்; நாள்தொறும் நல்கு வான்நலன்"

என்னும் அப்பரடிகள் வாக்கும் இங்குச் சிந்திக்கத்தக்கது.

இந்த உடல் மெய்யா பொய்யா?

இறந்தோய் கரணங்கள் எல்லாம்; எனக்குச்
சிறந்தோய்; எனினும் மெய்த் தேவே – பிறந்து உடனாம்
காயம் கொளவும் கொளாமலும் கண்டது நீ
ஆயன்கொல் பாதவத்து அற்று. 13

தெளிவுரை:

கருவி கரணங்கள் அனைத்தையும் கடந்து நிற்கும், மெய் கண்ட தேவா எனக்கு அந்தக் கருவி கரணங்களைத் தந்தருளி அறிவு அறியச் செய்கின்றாய்; ஆயினும்; அடியேனின் உயிர்க்கு உயிராய் இருக்கும் நீ என்றும் மேலானவனே.

பிறப்புக்கு வந்த காலம் முதல் இன்றுவரை என்னோடு உடனாய் இருக்கின்ற இந்த உடலை ஒரு சமயம் நான் 'மெய்' என்று நினைக்கிறேன்; பிறிதொரு சமயம் இதனை நான் 'பொய்' என்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நினைக்கிறேன். உண்மையை அறிய அறிய, எனக்கு இவ்வாறு நினைக்கும்படியான அறிவை நீயே தந்து அருளியுள்ளாய்.

இஃது எதுபோல் இருக்கிறது என்றால், ஆடுகளுக்குத் தின்பதற்குத் தழை வெட்டும் ஆயர்கள் (இடையர்கள்), மரத்தின் கிளைகளை வெட்டி, அந்த மரத்திலேயே தொங்குமாறு செய்து வைப்பார்கள். அந்நிலையில் அக்கிளைகள் வாடுதலும் இன்றி, மரத்தோடு இருந்து வாழ்தலும் இன்றி, இடைநிலைப்பட்டு நிற்கும். இஃது ஓர் இரண்டுங்கெட்டான் நிலையைக் குறிக்கும். அந்த மரத்தின் கிளையைப் போல, இந்த உடம்பும் மெய்யா, பொய்யா என்பது எனக்கு விளங்கவில்லை. இதற்கு என்ன காரணம்?

இதற்கு விளக்கம் வருமாறு:

உயிர்கள், ஆணவமலப் பற்று காரணமாக, அறிவு இச்சை செயல்கள் தொழிற்படாமல் இருந்த நிலை கண்டு, இறைவன் இரக்கப்பட்டு இந்த உடலை உயிர்களுக்கு வழங்கினான். இறைவன் உடலை வழங்கிய பிறகே உயிர்களின்அறிவு இச்சை செயல்கள் விளங்கத் தொடங்கின.

இந்த உடலில் இருக்கும்போதே, அறிய வேண்டுவனவற்றை அறிந்து, இறையருளின் பெருமையை உணர வேண்டும். அப்போது உடல் பொய் என்றாலும், அதன்கண் உள்ள ஆன்மா நித்தியப் பொருள் என்பது புலனாகும். உலகியலிலேயே மூழ்கிக் கிடக்கும் உயிர்க்கு ஆன்மாவின் நித்தியத்தன்மை புலனாகாததால் உடல் மெய்யாகவே தோன்றும். இவ்வுண்மையை,

''தன்னை அறியாது உடலைமுன் தான் என்றான்;
தன்னைமுன் கண்டான் துரியம் தனைக்கண்டான்;
உன்னும் துரியமும் ஈசனோடு ஒன்றாக்கால்,
பின்னையும் வந்து பிறந்திடும் தானே'' *(2264)*

என்னும் திருமந்திரப் பாடலால் உணரலாம்.

வினையும், வினைப் பற்றும்

அற்றது என் பாசம் உற்றது என் கழலே
அருள் துறை உறையும் பொருட்சுவை நாத,
வேறு என்று இருந்த என்னை, யான் பெற

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேறு இன்மை கண்ட மெய்கண்ட தேவ,
இருவினை என்பது என்னைகொல்? அருளிய
மனமே காயம் வாக்கு எனும் மூன்றின்
இதமே அகிதம் என்னும் இவை ஆயில்,
கணத்திடை அழியும் தினைத்துணை ஆகா;
காரணம் சடம்; அதன் காரியம் அஃதால்
ஆர் அணங்கு ஆம் வழி அறியேற்கு என்னைகொல்?
செயல் எனது ஆயினும், செயலே வாராது;
இயமன் செய்தி இதற்கு எனில், அமைவும்.
பின்னை இன்று ஆகும் அன்னதும் இங்குச்
செய்திக்கு உள்ள செயல் அவை அருத்தின்,
மையல்தீர் இயமற்கு வழக்கு இல்லை மன்ன;
ஒருவரே அமையும் ஒருவா ஒருவற்கு
இருவரும் வேண்டா; இறைவனும் நின்றனை;
நின்னது கருணை சொல் அளவு இன்றே;
அமைத்தது துய்ப்பின் எமக்கு அணைவு இன்றாம்
உள்ளது போகாது; இல்லது வாராது;
உள்ளதே உள்ளது எனும் உரை அதனால்
கொள்ளும் வகையால் கொளுத்திடும் ஆயின்,
வள்ளன்மை எலாம் உள்ளிட அமையும்
ஈய வேண்டும் எனும் விதி இன்றாம்;
ஆயினும் என்னை அருந்துயர்ப் படுத்தல்
நாயினேற்கு நன்று மன் மாயக்
கருமமும் கரும பந்தமும்
தெருள அருளும் சிவபெரு மானே. 14

தெளிவுரை:

திருவருட்டுறை என்னும் திருவெண்ணெய்நல்லூரைத் திருப் படை வீடாகப் பெற்றுள்ள பேரின்ப வடிவினன் ஆகிய தலைவா, உன்னுடைய திருவடியைப் பற்றியதால், அடியேனின் அறியாமை திருத்தம் உள்ளது.

உன்னின் வேறாகக் கூறும்படி இருந்த என்னை, அடியேன் உனக்கு வேறாகாதபடி (அனன்னியம் ஆம் முறைமையை) இந்த அடிமைக்கு உணர்த்தியருளிய மெய்கண்ட தேவனே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நல்வினை தீவினைகள் ஆகிய புண்ணிய ப்ாவங்கள் என்னும் இருவினை உயிர்களுக்கு உண்டு என்பதை எப்படி அறிவது?

மனத்தில் ஏற்படும் நினைப்பாலும், நாவில் எழும் சொல்லாலும், உடலில் உறும் செயலாலும் நிகழ்கின்ற விருப்பு வெறுப்புக்களால் இருவினைகள் விளைகின்றன என்று கூறுவாய் ஆயின், அந்த எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் தோன்றியவுடனேயே அழிந்து போகின்றன; ஒரு கணநேரம் கூட அவற்றால் நிலைத்திருக்க முடிவதில்லை.

மன வாக்குக் காயங்களால் செய்யப்படும் வினைக்கு மூல காரணமாகிய ஆணவமலம் சடம்; எனவே, காரிய கன்மம் ஆகிய இருவினைகளும் சடமே ஆகும். இந்நிலையில், இந்த இருவினைகள் உயிர்களின் அடுத்தடுத்த பிறவிகளில் வந்து கூடும் என்பதை எப்படி ஏற்றுக் கொள்வது?

காரண கன்மம் ஆகிய ஆணவமலப் பற்றும், காரிய கன்மம் ஆகிய இருவினையும் சடமே ஆயினும், உயிர்கள் அறிவுடைப் பொருள்கள் ஆகலின், அவை உயிர்களுடன் கூடுதலால் செயல்படக் கூடும் என்பீர். அவ்வாறாயின், உயிர்களுக்கு என்று எந்த ஒரு செயலும் இல்லை என்று கருத வேண்டிவரும்., உயிர்களுக்கு என்று செயல் இல்லாதபோது, சடம் ஆகிய காரண கன்மமும் காரிய கன்மமும் உயிர்களை எவ்வாறு செயற்படுத்த முடியும்?

உயிர்களுக்குச் செயல் உண்டு என்று கூறுவாய் ஆயின், எல்லாச் செயல்களும் உயிர்களின் விருப்பத்திற்கு ஏற்ப நடப்பதில் லையே? மேலும் உயிர்கள் செயல்களைச் செய்யும்போது, அவற் றிற்கு இயம தண்டனை வரும் அளவில் செயல்களைச் செய்யுமா? செய்யமாட்டா அன்றோ? தமக்குரிய செயல்களை உயிர்களே செய்யும் திறன் உடையன என்று நீ கூறுவாய் ஆயின், உயிர்களுக் காக நீ ஏதும் செய்வதில்லை என்று எண்ணவேண்டி வரும்.

அப்படியல்ல, உயிர்கள் செய்யும் நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப வினைப்பயன்களை உயிர்கள் அனுபவிக்குமாறு நீ செய்கிறாய் என்று கூறுவாய் ஆயின், உயிர்களைத் தண்டிப்பதற்கு இயமன் தேவை இல்லையே? உயிர்கள் செய்த வினைக்கு ஏற்ற வினைப் பயனைத் துய்க்கும்படி நீயும் செய்வாய்; உன் ஏவல் வழி நின்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இயமனும் தண்டிப்பான் என்று கூறுவாய் எனில், என்னைத் தண்டிப்பதற்கு ஒருவர் போதாதா? இருவர் வேண்டுமா? என்னைத் தண்டிப்பதற்கு இயமனும் நீயும் ஆகிய இருவர் வேண்டும் என்பாயாயின் நீ எல்லா வல்லமையும் உடையவன் என்னும் வழக்குக்கு, இழுக்கு ஏற்படுமே? அஃது அன்று; உயிர்களுக்கு அருள் செய்வதற்கு நீயும், தண்டிப்பதற்கு இயமனும் தேவை என்று கூறுவாய். அவ்வாறாயின், இயமனைக் கொண்டு உயிர்கள் அனைத்தையும் தண்டிக்கச் செய்தல் என்பது உன்னுடைய அளப்பரிய பேரருளுக்குப் பொருத்தமாக அமையாதே.

உயிர்கள் செய்த வினைகளுக்கு ஏற்பவே இயமன் தண்டிக்கிறான் என்று நீ கூறுவாய் ஆயின், உன்னால் ஊட்டப்படும் வினைப் பயன்களைத் தாமே உயிர்கள் துய்க்கின்றன; வினைப்பயனை உயிர்களே அனுபவிப்பதால் உயிர்களுக்குப் புதிய வினைகள் (ஆகாமியம்) தோன்ற மாட்டாவே.

"உள்ளது போகாது; இல்லது வாராது, உள்ளதே உள்ளது"

என்னும் மொழிகள் சற்காரியவாதம் என்ன என்பதைக் கூறுகின்றன. எனவே, செய்த வினைக்குரிய பயன்களை அனுபவித்துத் தீர்த்து விட்டால், மேற்கொண்டு பிறப்பு ஏற்படுவதற்கான ஆகாமிய வினை நிகழ்வதற்கு இடம் இல்லையே. அவ்வாறாயின், அடுத்தடுத்து மறு பிறப்புக்கள் எப்படி ஏற்படுகின்றன?

வினைப்பயனை அனுபவிப்பதற்காக உயிர்கள் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் ஆகாமிய வினையாகின்றது என்று கூறுவாய் ஆயின், நல்வினைகள் ஆகிய தானங்கள் தவங்கள் செய்து புண்ணியப் பயனைப் பெறுதல் வேண்டும் என்று நூல்களில் கூறப்பட்டிருப்பதற்குப் பொருத்தமான பொருள் கூறமுடியாமற் போய்விடும். எனவே, எனக்குத் துன்பங்களையும், துயரங்களையும், தொல்லைகளையும் விளைவிக்கும், காரண காரிய கன்மங்கள் எனக்கு ஏற்பட்ட முறையினை விளக்கி அருளுதல் வேண்டும்.

இதற்கு விளக்கம் வருமாறு:

1. நல்வினைகளும், தீவினைகளும், மனம் வாக்குக் காயத்தினால் செய்யப்படுவன. தீவினைப் பயனை நல்வினைகள் செய்வ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

தாலும், நல்வினைப் பயனைத் தீவினைகள் செய்வதாலும் அழிக்க முடியாது; இருவினைப் பயன்களை அனுபவிப்பது தவிர்க்க முடியாதது. இவ்வுண்மையை,

"உற்றதொழில் நினைவு உரையில் இருவினையும்
உளவாம்; ஒன்று ஒன்றால் அழியாது;
உள்ளின், ஊண் ஒழியாது" (31)

என்னும் சிவப்பிரகாசப் பாடலின் பகுதியால் உணரலாம்.

2. கன்மம், காரணம், காரியம் என இருவகைப்படும். காரண கன்மம், மூலகன்மம் எனப்படும். காரிய கன்மம், ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என மூவகைப்படும். அநாதியே உயிர்க்குள்ள ஆணவ மலப்பற்றே மூலகன்மம் என்பதாகும். மலப்பற்றும் ஒரு செயலே ஆதலின் அநாதியே மலத்தைப் பற்றிய உயிரின் செயல், மூல கன்மம் எனப்படுகிறது. காரிய நிலையிலும் ஆணவமலப் பற்று உயிர்க்கு உள்ளதால், இவ்வுண்மை பெறப்படும்.

3. உயிர்களின் விருப்பத்திற்கு ஏற்பவே இறைவன் அவற்றைத் தன் மறைப்பாற்றலால் நடத்துகிறான்; உயிர் விரும்பியவாறே எதையும் செய்வதற்கு இறைவன் உதவுவதால், உயிர்க்குச் செயல் உண்டு என்பதைக் கூறவேண்டியிருக்கிறது. எல்லாச் செயல்களும் உயிரின் விருப்பப்படி நடக்காமல் போவதற்குக் காரணம், இறைவன் உயிர்களுக்கு உதவும்போது, உயிர்களின் தேவை என்ன என்பதை அறிந்து உதவுவதே ஆகும். உயிர்களுக்குத் தேவை இல்லாத செயல்களைச் செய்வதற்கு இறைவன் உதவானாதலால், எல்லாச் செயல்களும் உயிர்களின் விருப்பப்படி நடப்பதில்லை.

4. இயம தண்டனை வேறு; இறைத்தண்டனை வேறு. மிகப் பெரிய நல்வினைக்கு இன்ப உலகமும், மிகப்பெரிய தீவினைக்குத் துன்ப உலகமும் உண்டு. ஏனைய நல்வினை தீவினைகளுக்கு இவ்வுலகத்தில் இன்ப துன்ப அனுபவமும் உண்டு. துன்ப உலகத்திற்குச் செல்லும் உயிர்களுக்கே இயம தண்டனை வழங்கப்படுகிறது. இறைவன் வினைப்பயனை ஊட்டுபவன் என்பதால், இம்மூவகை உலகங்களுக்கும் உயிர்கள் செல்லுமாறு செய்விக்கிறான். எனவே இறைவனின் மறக்கருணையோடு இயம தண்டனையை ஒப்பிட்டுக் கூறக்கூடாது.

Digitization by eGangotri-South Center
CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உலகியல் தண்டனை நம்மைத் திருத்துவதோடு, பிறரையும் திருத்தும்; துன்ப உலகில் இயமனால் வழங்கப்படும் தண்டனையால் நமது அறிவை மட்டுமே திருத்த முடியும். எனவே, இரு தண்டனைகளும் வெவ்வேறானவை ஆகும்.

5. வினைப்பயனை அனுபவிக்கும் பொருட்டு நாம் மேற்கொள்ளும் முயற்சி ஆகாமிய கன்மம் ஆகிறது. முன்பிறவியிலே செய்த இருவினைகள் இப்பிறவியிலே அனுபவிக்கப்படும் இன்ப துன்பங்களுக்குக் காரணமாய் அமைகின்றன; இந்தப் பிறவியில் அனுபவிக்க இருக்கும் இன்ப துன்பங்களை நுகரும் பொருட்டுச் செய்யும் முயற்சிகளே. விருப்பு வெறுப்புக்களால் ஆகாமியம் ஆகி அடுத்த பிறவிக்குக் காரணமாய் அமைகின்றன. இவ் உண்மையை,

''முற்செயல் விதியை இந்த முயற்சியோடு அனுபவித்தால்
இச்செயல் பலிக்குமாறு என்? இதம் அகிதங்கள் முன்னர்
அச்செயல் ஆனால், இங்கும் அவை செய்யின் மேலைக்கு ஆகும்;
பிற்செயாது அனுபவிப்பது இன்று பின் தொடரும் செய்தி'' 101

என்னும் சிவஞான சித்தியார்ப் பாடலினால் உணரலாம்.

''சற்காரிய வாதம்'' என்பது, சத் + காரியம் + வாதம் என்றும் உள்ள பொருளே செயற்படும் என்னும் கொள்கையைக் குறிக்கும்.

சைவ சித்தாந்தம் கொள்ளும் ஐந்து பொருள்களும் எக்காலத்தும் உள்ளவையே ஆகும். அவற்றின் செயற்பாடுகளை, அவற்றின் காரண நிலையிலிருந்து விளக்கிக் கூறுவதே சைவ சித்தாந்தம் ஆகும். எனவே, எந்த ஒருகருத்தையும் சற்காரியவாத அடிப்படையிலேயே கொள்ளவேண்டும்.

வினைப்பயனை ஊட்டுவது இறைவனே!

மான் அமரும் செங்கை மதில் வெண்ணெய் வாழ்மன்ன
போனவினை தானே பொருந்துமோ? – யான் அதனில்
ஆவனோ? ஆக்காய் அமலனாம்நின் அருள்தான்
தேவனே யாதுக்கோ தேர். 15

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மான் ஏந்திய சிவந்த திருக்கரத்தை உடையவனே, மதில் சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூரில் வாழும் தலைவனே,

முற்பிறவியில் நான் செய்த வினையின் பயன் தானே வந்து என்னைக் கூடுமோ? அல்லது, அந்த வினைப்பயனை நான் சென்று கூடுவனோ? நீ நின்மலன்; எனவே, அவ்வினைப்பயன் என்னை வந்து கூடுமாறு செய்யாய்; அவ்வாறாயின், உன் அருள் என்பதுதான் எதன் பொருட்டு இருக்கிறது என்பதை எனக்கு ஆராய்ந்து அருளிச் செய்யவேண்டுகிறேன்.

இதற்கு விளக்கம் வருமாறு:

வினைகள் சடம்; வினைப்பயன்களும் சடம்; எனவே, அவை உயிர்களை வந்து அடைய மாட்டா. உயிர்கள், தமக்கு என சுவதந் திரம் இல்லாதன; எனவே, உயிர்களும் வினைப்பயன்களைச் சென்று அடையமாட்டா. ஒவ்வோர் உயிரும் செய்த வினைப்பயனை அந்தந்த உயிரே அனுபவிக்கும்படி, இறைவனின் திருவருள் வினைப் பயனை உயிர்க்கு ஊட்டுகிறது. சொருப நிலையில் நின்மலனாய் நிற்கும் இறைவன், உயிர்கள் முன்னேறும் பொருட்டுத் தன் திரோதான சக்தியைக் கொண்டு, உயிர்களின் இயல்புகளுக்கு ஏற்ப மும்மலங் களையும் இயக்குகிறான்.

இஃது எதுபோல எனின், காந்தம் இரும்பை இயக்கித் தொழிற் படுமாறு செய்வதைப்போன்றது ஆகும். இவ்வுண்மையைக்,

''காந்த பசாசம் போல், அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரான்''

என்னும் சிவஞான போத வெண்பாக் கருத்தைக் கொண்டு அறியலாம். பசாசம் – இரும்பு.

வினைப்பயனை ஊட்டி உயிரினைக் காக்கும் முறைமை

தேராது உரைப்பன்; தெருமரல் உளத்தொடு
பேராது அருளுதல் பெரியோர் கடனே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நின்னைக் கலப்பது என் உண்மை எனில்
நின்னது நேர்மை சொல்மனத்து இன்றே
எழுவகைத் தாதுவின் ஏழ்துளை இரண்டும்
பெருமுழைக் குரம்பையில் பெய்து அகத்து அடக்கி,
நீக்கி என்றனைப் போக்கு அற நிறுத்தி
இச்சை முதலிய எழுப்பி நடத்திடும்
விச்சை சாலவும் வியப்பது நிற்க
வாக்கும் மனமும் போக்கு உள தனுவும்
சொல்லும் நினைவும் செய்யும் செயலும்
நல்லவும் தீயவும் எல்லாம் அறிந்து,
முறை பிற ழாமல் குறைவு நிறைவு இன்றாய்க்
காலமும் தேசமும் மால் அற வகுத்து
நடுவு நின்று அருத்தலின் நடுவன் ஆகுதியே,
சான்றோர் செய்தி மான்று இருப்பு இன்றே;
சாலார் செயலே மால் ஆகுவதே,
அத்துவா மெத்தி அடங்கா வினைகளும்
சுத்திசெய் தனையே, ஒத்த கன்மத்திடை
நீங்கினது என்னை? ஊங்கு ஊழ் வினைகளும்
ஆங்கு அவை அருத்துவது ஆரைகொல்? அதனால்,
கருமம் அருத்தும் கடன்அது இன்றாம்;
தருமம் புரத்தல் பெருமையது அன்றே;
கண்ணினுள் மணிய, கருத்தினுள் கருத்த,
வெண்ணெய் வேந்த, மெய்கண்ட தேவ,
இடர்ப்படு குரம்பையுள் இருத்தித்
துடைப்பது இல்லா அருள்தோன்றிடச் சொல்லே. 16

தெளிவுரை:

பெரியோய், எனக்குத் தெளிவு ஏற்படாமையால் கலங்கிய அறிவோடு இன்னும் ஒரு விளக்கத்தை உன்னிடம் கேட்டு விண்ணப் பிக்கிறேன். என்னை நிந்தித்து விடாமல், அருள் கூர்ந்து அதற்கு விளக்கம் கூறியருள வேண்டும். யாவரினும் பெரியோன் ஆகிய உனக்கு அது கடமையும் ஆகும்.

உன்னுடைய பெருமை எனது வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத நிலையில் உள்ளது; இந்நிலையில் நான் உன்னோடுகூடி நின்று இவ்வுலகத்தை அறிந்து அனுபவிக்கிறேன் என்று கூறுவது உண்மை என்றால், அஃது எப்படிப் பொருந்தும்?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நரம்பு, எலும்பு, முளை, தசை, தோல், இரத்தம், சுக்கிலம், அல்லது சுரோணிதம் ஆகிய தாதுக்கள் ஏழும், கண் இரண்டு, நாக்கு, மூக்குத்துளை இரண்டு, செவி இரண்டு, எருவாய், கருவாய் ஆகிய துளைகள் ஒன்பதும் உடைய உடல் எனப்படும் இந்த சிறைச்சாலை யின் உள்ளே, என்னை அடக்கி வைத்தும், அதன்பிறகு, இந்தச்சிறைச் சாலையை விட்டு நான் எங்கும் தப்பி ஓடிவிடாமல் என்னை அதனுள் நிறுத்தி, என்னுடைய அறிவு இச்சை செயல்களை, நீயே எழுப்பி இயங்கும்படி செய்கிறாய். இவ்வாறு நீ செய்வது மிகவும் வியப்புடையதாய் உள்ளது. இஃது ஒருபுறம் இருக்க,

எனது மனத்தினால் நினைப்பதும், வாயினால் சொல்வதும், உடலினால் செய்வதும் ஆகிய அவற்றின் நல்வினை தீவினைகள் எனப்படும் புண்ணிய பாவங்கள் அனைத்தையும், உன் திருவுள் ளத்தில் கொண்டு, அவற்றின் பயன்களை நான் அனுபவிக்கத் தக்க காலத்தையும், இடத்தையும், மயக்கம் இன்றி முறைப்பட வகுத்து, நடுவு நிலை நின்று எனக்கு ஊட்டுகின்றாய். எனவே, நீ நேர்மை யுடைய ஒரு நீதிபதி ஆக இருக்கின்றாய்.

சான்றோர்கள், நேர்மை பிறழாதவர்கள் ஆகலின், அவர்களது செயல்கள் மயக்கம் தருவனவாக அமையமாட்டா. நேர்மையற்றவர் களது செயல்களே, ஒன்றற்கு ஒன்று முரண்பட்டு மயக்கம் தருவன வாக இருக்கும்.

சான்றோன் ஆகிய நீ, எனக்கு நிருவாண தீக்கை செய்து வைக்கும்போது, மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்னும் அத்துவாக்கள் ஆறிலும், தீராமல் இருந்த வினைகள் அனைத்தையும் சுத்தி செய்து, சஞ்சித கன்மத்தைப் பொசுக்கி அருளி னாய்; அந்நிலையில் என்னிடத்து இருவினை ஒப்பு நிகழ்ந்தபோது, என்னிடமிருந்து நீங்கின வினைகள் யாவை? நல்வினை தீவினைகள் அப்போது என்னைவிட்டு அகன்றுவிட்டன என்பாய் ஆயின், அவற்றின் எஞ்சிய பயன்களை யாருக்கு ஊட்டுவாய்?

இருவினைகளும் நீங்கிய பிறகு அவற்றின் பயன்களை ஊட்டு வது பொருந்தாது; அவ்வாறு இருக்க, என்னை மேலும் உட்சிறைக் குள் தள்ளி, வினைப்பயன்களை நுகருமாறு நீ செய்வாய் ஆயின், நீதி நெறி தவறாத உனக்கு அஃது அழகன்று. கண்ணில் பாவையைப் போன்றும், கருத்துள் அறிவைப் போன்றும் இலங்கும் மெய்கண்ட

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தேவனே, திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளி அருளாட்சி புரியும் அருட்பேரரசனே, உன் திருவருளின் திறத்தை எளியேனுக்கு எளிதில் புரியுமாறு விளக்கியருள வேண்டுகிறேன்.

இதற்கு விளக்கம் வருமாறு:—

1. உயிர்கள் பிறப்புக்குட்பட்டு இருக்கும் நிலையில் ஆணவ மல மறைப்புக்குட்பட்டு இருப்பதால், இறைவன் அந்நிலையிலும் உயிர்களோடு உடனாயும் நின்று அருள்வதை அறியமுடியாமல் இருக்கிறது.

2. உடற் சிறையில், இறைவன் உயிர்களை அடைத்து வைத்து இருப்பதன் நோக்கம், அவரவர் செய்த வினைப் பயன்களை அவரவரே அனுபவித்து, அறிவு விளக்கம் பெறும் பொருட்டே ஆகும். வினைப்பயனை இறைவன் உயிர்கட்கு ஊட்டும்போது தம் தவறு களுக்காக வருந்தித் திருந்திய உயிர்களுக்கு, ஊழ்வினை வலியைச் சிறிது சிறிதாக நீக்கியே அருள்கிறான். நம்மைப் போன்ற சாமானிய உயிர்களுக்கு இறைவன் இம்முறையையே கடைப்பிடித்து அருள் கிறான். இவ்வுண்மைக்கு,

> ''வாதியா வினை மறுமைக்கும் இம்மைக்கும்
> வருத்தம் வந்து அடையாவே'' *(2–106–11)*

என்னும் சம்பந்தப் பெருமான் திருவாக்கு பரம பிரமாணமாக உள்ளது.

3. இருவினை ஒப்பு நிகழ்கின்ற நிலையில் மலபரிபாகம் எய்து வதால் உடன் நிகழ்ச்சியாகச் சத்திநிபாதம் நிகழ்கிறது. அந்நிலையில் இறைவன் மானுடச் சட்டை தாங்கி, குருமூர்த்தமாக எழுந்தருளி வந்து, அத்துவசுத்தி செய்து, சஞ்சித வினையைச் சுட்டு எரிக்கிறான். அத்தகைய பேறு பெற்றவர்களுக்கு உள்ள பிராரத்த கன்மத்தை அவர்கள் இவ்வுலகில் வாழும் காலத்தில், அவர்களுக்கு நன்மை செய்ப வர்களுக்கு, அவர்களது நல்வினைப் பயனாகிய இன்பத்தையும், அவர் களுக்குத், தீமை செய்பவர்களுக்கு, அவர்களது தீவினைப் பயனாகிய துன்பத்தையும், இறைவன் உண்பிக்குமாறு செய்தருள்கிறான். இவர் களுக்குள்ள ஊழ்வினை இவ்வாறு நீங்குகிறது. குருநாதரால் அத்துவ சுத்தி செய்யப்பெற்றுச் சீவன் முத்தர்கள் ஆகி வருபவர்களுக்கு, இறை வன் இம்முறையைக் கடைப்பிடித்தருள்கிறான். இவ்வுண்மையை,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"இவன் உலகில் இதம் அகிதம் செய்த எல்லாம்
இதம் அகிதம் இவனுக்குச் செய்தார்பால் இசையும்" 301

என்னும் சிவஞான சித்தியார் வாக்கால் அறியலாம்.

சீவன் முத்தர்களுக்கு ஊழ்வினையை ஊட்டாமல், ஊழ்வினையின் வாசனையைத்தான் ஊட்டுவான். வாசனை என்றாலே, சீவன் முத்தர்களுடைய உடலையோ உள்ளத்தையோ பாதிக்காமல், மிக மென்மையாக நிகழும் என்பது புலனாகும். அவர்கள் உலக முகப்பட்டு, உபதேசம் செய்வதற்காகவே அவர்களுக்கு இறைவன் ஊழ்வினையின் வாசனையை ஊட்டுகிறான்.

நமக்கு ஊழ்வினையை ஊட்டி இன்ப துன்ப அனுபவங்களை, வன்மையாக அனுபவிக்கும்படி செய்கிறான். அப்படிச் செய்தால் தான், நாம் திருந்துவோம் என்பதைக் கூறவேண்டுவதில்லை.

இறைவன் நம்போன்ற சாமானியருக்கு ஊழ்வினையை ஊட்டும் முறை வேறு; அத்துவசுத்தி செய்யப்பெற்றுச் சீவன் முத்தர்க்குரிய தகுதி பெற்றுவருபவருக்கு ஊட்டும் முறைவேறு என்பது இதனால் பெறப்படும்.

திருவருள் பாலிக்கும் முறைமை

சொல் தொழும்பு கொள்ள நீ சூழ்ந்ததுவும், நிற்செயல்கள்
மற்றவர்கள் நின் நோக்கின் மாய்ந்த உயிர்க்கு – உற்று அங்கு
ஒளித்தியாங்கு ஐய, உயர் வெண்ணெய் நல்லூர்க்
குளித்த மதுக் கொன்றை எம் கோ. 17

தெளிவுரை:

மேம்பட்ட திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளி தேன் பிலிற்றும் கொன்றை மாலையை அணிந்துள்ள எங்கள் தலைவனே, மெய்கண்டதேவா,

அனைத்து ஆன்மாக்களும் உனக்கு அடிமைகளாகவே உள்ளனர். ஆயினும் சிலரே உன் திருவருளைப் பெறத்தக்க அடிமைத் திறத்தைப் பெறுமாறு செய்தருளி உள்ளாய்; மற்றவர்களும் உன்னால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆட் கொள்ளப்பட்டு வருபவர்கள் தாமே. அப்படியிருக்கும்போது உன்னை நினைந்து இருப்பவர்களுக்கு மட்டும் வெளிப்பட்டுத் தோன்றி அருள்கின்றாய்; உன்னை நினையாத உயிர்களுக்கு, அவர்களோடு நீ உடனாய் நின்றிருந்தும், அவர்களுக்கு மறைந்து நிற்கின்றாய். இவ்வேறுபாடு ஏன் சுவாமி?

இதற்கு விளக்கம் வருமாறு:—

இருவினை ஒப்பு, மலபரிபாகம் எய்திய ஞானிகளுக்கு, இறைவன், தயிரில் நெய்போல விளங்கித் தோன்றுகிறான். அவர்கள் அந்நிலையில் சிவபெருமான் ஒருவனே தலைவன் என்பதையும் தாம் அவனுக்கு அடிமைகள் என்பதையும் உணர்ந்து ஒழுகுவதால், இறைவன் அவர்களுக்கு அவ்வாறு தோன்றுகிறான்.

மற்றவர்கள் சிவபெருமானைப் பொது நீக்கித் தனித்து நினைந்து வழிபடும் பெற்றிமையைப் பெறவில்லை; இவர்கள் இவ்வாறு இருப்பதற்குக் காரணம், இவர்களுக்கு இன்னும் இருவினை ஒப்பு, மலபரிபாகம் வாய்க்கப் பெறாமையாலேயே ஆகும். எனவே, இறைவன் இவர்களுக்குப் பாலில் நெய் போலத் தோன்றாமல் மறைந்து நிற்கிறான்.

இவ்வுண்மையை,

"விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே" *(5–90–10)*

என்னும் அப்பர் மூர்த்திகளது அருள் வாக்கினால் உணரலாம்.

இறையுதவியை நினைந்து வியப்புறுதல்

கோலம் கொண்டவாறு உணராதே
ஞாலம் காவலன் யான் எனக் கொளீஇப்
பொய்யை மெய்யெனப் புகன்று, வையத்து
ஓடாப் பூட்கை நாடி நாடா
என்னுள் கரந்து என்பின் வந்து அருளி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்னையும் தன்னையும் அறிவின்று இயற்றும்
என்னது யான் எனும் அகந்தையும் கண்டு
யாவர் யாவையும் யாங்கணும் சென்று
புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்ந்து
மிக்க போகம் விதியால் விளைத்து இட்டு
என் பணியாளாய் எனைப் பிரியாதே
ஓடி மீள்க என ஆடல் பார்த்திட்டு
என் வழி நின்றனன் எந்தை அன்னோ;
அருள் மிக உடைமையின் அருள்துறை வந்து,
பொருள் மிக அருள்தலும், பொய்ப்பகை ஆதலும்,
கைகண்டு கொள் எனக் கடல் உலகு அறிய
மெய்கண்ட தேவன் எனப் பெயர் விரீஇத்
தன்னுள் கரந்து தான் முன் ஆகித்
தன்னதும் தானுமாய் என்னை இன்றாக்கித்
தன்னையும் என்னையும் தந்து, தனது
செய்யாமையும் எனது செயல் இன்மையும்
எம்மான் காட்டி எய்தல்
அம்மா! எனக்கு அதிசயம் தருமே. 18

தெளிவுரை:

என் குருநாதர் ஆகிய மெய்கண்டதேவப் பெருமானே, சிவபெருமானே அனுபட்சத் திருமேனி தாங்கி உன் வடிவில் வந்திருக்கிறான் என்னும் உண்மையை உணராமல், இந்த உலகத்துக்கு 'நானே கருத்தா' என்று எண்ணிக் கொண்டு, நிலையற்ற இந்த உடம்பை நிலையானது என்று கூறிக்கொண்டு, இந்த உலகத்தில் உள்ள போகங்கள் அசத்து என்று அறியாமல், அவற்றை நுகர்தற் பொருட்டு ஓடி ஓடி உழல்கின்றேன். (பூட்கை – தோல் – இந்த இடத்தில் போகப்பொருள்).

இவ்வளவு இன்பங்களும் எனக்கு உன் அருளாலேயே கிடைக்கப்பெற்றேன் என்பதை அடியேன் எண்ணிப் பார்க்காததால், என்னோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்கின்ற நீ, எனக்கு உன்னைக் காட்டாமல் மறைந்து நிற்கின்றாய்.

அடியேன் செய்கின்ற எல்லாச் செயல்களுக்கும் அடியேன் முன்னிலைப்படுத்தி, நீ என்னுடன் என்னை விடாமல் பின் தொடர்ந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வருகின்றாய். அந்நிலையில் எளியேன் உன்னையும் அறியவில்லை. என்னை யார் என்பதையும் அறியவில்லை; ஆயினும், 'யான்', 'எனது' என்னும் அகந்தை என்னிடத்தில் இருப்பதைக் கண்டும், நான் எந்த உலகத்தில் எந்த யோனிவழிப் பிறந்தாலும், நீயும் என்னோடு அங்கெல்லாம் வந்து உடனாய் நிற்கிறாய்; எந்தெந்த இடங்களி லிருந்து எந்தெந்த இடங்களுக்கெல்லாம் நான் பெயர்ந்து செல்கி றேனோ அங்கெல்லாம், நீயும் பெயர்ந்து, என்னோடு வருகிறாய். நான் எதை எதை எல்லாம் அனுபவிக்கிறோனோ அவற்றையெல்லாம் என்னோடு உடனாய் நின்று நீயும் அனுபவிக்கிறாய்.

உன்னுடைய முதன்மையையும் பெருமையையும் விட்டொ ழித்து, என்னோடு என் வசமாய் இருந்து, நான் உண்ணும்போது நீயும் உண்டு, நான் உறங்கும்போது நீயும் உறங்கி, எனக்குக் குற்றேவல் பல புரிந்து, நான் விரும்பியவாறெல்லாம் எல்லாவற்றையும் நீ நடத்தி வைக்கிறாய். எனக்குப் பணியாளாய் இருப்பதோடு அமையாமல், எனக்கு உற்ற காவலனாயும் துணைவனாயும் இருக்கிறாய். என்னை விட்டு எக்காலத்தும் நீங்காமல் நிற்கின்ற பெருமானே, இவ்வாறெல் லாம் எனது பிறப்பு நிலையில் நீ பேருதவி புரிந்து வருகிறாய்; (உன்னைப்போல் எனக்கு உதவிசெய்பவர் எவரையாவது எங்கே யாவது யாரும் காண முடியுமா?)

எம்பெருமானே, ஐயா, எத்துணை அரியை நீ! அய்யோ! அய்யோ! அருள் மலிந்த திருவெண்ணெய் நல்லூரில் திருமேனி கொண்டு எழுந்தருளிய என் முழுமுதலே, பிறப்புக்குட்பட்ட என் பெத்த நிலையில், என்வழி நின்று நீ எனக்குத் தோன்றாத் துணையாய் இருந்தனை, ஐயா.

இன்று, இந்த ஏழைக்கு இரங்கி, எளியேன்மாட்டுக் கொண் டுள்ள பேரருள் காரணமாக, கடல் சூழந்த உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் எனக்குக் காட்டியருளி, பொய்க்குப் பகையும், மெய்க்கு உறவுமாய் நின்று, மெய் காணாத ஆன்மாக்களுக்கு மெய்யைக் காண்பித்த தெய்வம் என்னும் பெயரை விரித்து நிறுத்தி, உனக்குள்ளே என்னை அடக்கி, இந்த வீடுபேற்று நிலையில், என் பின்னால் நீ வந்ததை விட்டு, உன் பின்னால் என்னை வரும்படி செய் தருள்கின்றாய். இந்நிலையில், என்னுடைய அறிவு இச்சை செயல் அனைத்தும் உன்னுடைய அருளும் நீயுமாய் நிறைந்து நின்று, என்னை அறியும்படி எனக்கு அறிவித்ததோடு அமையாமல், உன்னை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உணரும்படி எனக்குப் புலப்படுத்தினாய். பெருமானே, எல்லாவற்றையும் நீயே செயற்படுத்துகின்றாய் என்னும் பேருண்மையை எனக்குத் தெளிவுறக் காட்டியருளினாய்.

எதையும் சுட்டியறியும் அறிவை, என்னிடமிருந்து நீக்கி விட்டாய்; ஆகலின், என் செயல் என்பது எதுவும் இல்லை என்பதை எனக்கு அறிவித்து, ''எல்லாம் உன்செயலே'' என்னும் உயர்ந்த நன்மையை எனக்கு உணர்த்திவிட்டாய். இந்நிலையில் நான் எது செய்தாலும், அஃது என் செயல் என்னும் எண்ணம் எனக்கு ஏற்படுவதில்லை.

இவ்வாறு பெத்த நிலையில் மறைத்து நின்று, என்னைச் செயல் படுத்திய உனது அருஞ்செயலையும், முத்தி நிலையில் உன்னை முழுமையாகக் காட்டி நின்று, அருளிச் செய்கின்ற எனது பெருஞ் செயலையும், நினைந்து நினைந்து, உணரும்போது, உன் அருட்டிறத்தையும், என்மீது நீ கொண்டுள்ள அன்பின் எல்லையையும் அளவிட்டு அறியமுடியாத எனக்கு உன் செயலைக் கண்டு, அம்மம்ம, பெரும் வியப்பு ஏற்படுகிறது! இவ்வுண்மையை,

''பொத்தை ஊன்சுவர்; புழுப்பொதிந்து
உளுத்து, அசும்பு ஒழுகிய பொய்க்கூரை;
இத்தை மெய் எனக் கருதி நின்று, இடர்க்கடல்
சுழித்தலைப் படுவேனை
முத்து, மாமணி, மாணிக்க, வயிரத்த,
பவளத்தின் முழுச்சோதி,
அத்தன், ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே'' (432)

என்று உணர்த்தும் மணிவாசகம் இங்குச் சிந்திக்கத் தக்கது.

பிறப்பு நிலையில் இறைவன் நமக்குச் செய்து வருகின்ற பேருதவிகளை நாம் மறந்து திரிவதை இந்த இருபா இருபஃதுப் பாட்டில் முதல் பதின்மூன்று அடிகளில், அருணந்தி சிவம் அருமையாகக் கூறியருளியுள்ளார். பின்வரும் பத்து அடிகளில் பிறப்பு நீங்கப்பெற்று வீட்டைப் பெறும் நிலையில் இறைவன் நமக்குச் செய்யும் பேருதவிகளைக் குறித்துப் பேசுகிறார்.

இப்பிறப்பு நீங்கி இம்மையிலேயே வீடுபேறு பெறுதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்பதை,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''உலகினில் என்செயல் எல்லாம், உன் விதியே, நீயே
உள்நின்றும் செய்வித்தும் செய்கின்றாய் என்றும்,
நிலவுவதோர் செயல் எனக்கு, இன்று உன்செயலே என்றும்,
நினைவார்க்கு வினைகள் எல்லாம் நீங்குந் தானே''
(307)

என்னும் சிவஞான சித்தியாரில் உள்ள ஓர் விருத்தப்பாதியை, இந்த இடத்தில் சிந்தித்து, உள்ளார்ந்த உணர்வுடன், சிவபெருமானிடத்து அன்பு மீதூர்ந்து, சமய வாழ்வில் ஒழுகுதல் வேண்டும்.

பதினேழாவது பாடல்வரையில், அயராது வினாக்களை எழுப்பிய அருணந்திசிவம், இனி அவற்றை விடுத்து, இப்பாடலிலும் பின்வரும் இரு பாடல்களிலும் இறைவனின் அருட்புகழைச் சொல்லி வியந்து பாராட்டுகிறார்.

பாசம் நீக்கியருளியது

தருமா தருமத் தலை நின்று ஆழ்வேனைக்
கருமா கடல் விடம் உண் கண்டப் – பெருமான்
திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேத வனத்தான்
உரு என்ன வந்து எடுத்தான் உற்று. 19

தெளிவுரை:

தருமம்	–	புண்ணியம்	–	நல்வினை	–	அறம்
அதருமம்	–	பாவம்	–	தீவினை	–	மறம்

நல்வினை, தீவினைகளைச் செய்து, அவற்றின் பயன் ஆகிய துன்பக் கடலுள் வீழ்ந்து, நான் வருந்துகின்றேன். அவ்வாறு வருந்தும் என்னை, மானுடச் சட்டை தாங்கி, எழுந்தருளி வந்து, பிறவிப் பெருங் கடலில் நீந்த முடியாமல் தவிக்கும் என்னைக் காத்தருளி, உன் திருவடி நீழலின்கண் அமரும்படி செய்தருளினாய்.

கரிய நிறத்தை உடைய கடலில் தோன்றிய நஞ்சினை உண்டருளிய, திருநீலகண்டத்தைக் கொண்டருளிய பெருமானே, சுவேத வனப் பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமத்தை உடைய பெருமானே, திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளி என்னைக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காத்தருளிய பெருமானே, உன் திருவடியிலேயே கூடியிருக்கும்படி அருளிச் செய்யவேண்டுகிறேன்.

1. 'அதருமம்' ஆகிய தீவினைப் பயன், துன்பம் ஆகும்; 'தருமம்' ஆகிய நல்வினைப் பயன் எப்படித் துன்பம் ஆகும்?

நல்வினையைச் செய்யும்போதும், யான் – எனது என்னும் செருக்குடன் செய்வதால், ஆணவமலப் பற்று கொண்டே நல் வினையைச் செய்தாலும், அது 'பொன்விலங்கு' எனப்பட்டு, நம்மை பிறப்புட்படுத்துகிறது. எனவே, அத்தகைய நல்வினையையே இங்கு 'தருமம்' எனக் குறிப்பிட்டார் எனக் கொள்க.

சுவேதம் – வெண்மை; வனம் – காடு; சுவேதவனம் – வெண் காடு. திருவெண்காடன் என்பது இதற்குப் பொருள்.

மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல், சிவபெருமான் மானுடச் சட்டை தாங்கி, அனுபட்சத் திருமேனி கொண்டு, மெய் கண்ட தேவன் என்னும் பெயரில் குருநாதராக வந்துள்ளான். சமய குரவர்களையும், சந்தான குரவர்களையும் இவ்வாறே கொள்ள வேண்டும். இவ்வுண்மையைக்,

> "குருடரும் தம்மைப் பரவ, கொடுநரகக் குழி நின்று
> அருள்தரு கைகொடுத்து ஏற்றும்" (4–92–4)

என்னும் அப்பரடிகளின் திருவிருத்தக் கருத்து இங்குச் சிந்திக்கத்தக்கது.

திருவருள் வழங்கியருளியது

உற்றவர், பெற்றவர், அற்றவர், முற்றும்
அற்றவர்க்கு அற்றவன்; அல்லவர்க்கு அல்லன்;
அந்தம் ஆதி இல்லவன் வந்து,
சூரக்கு மனத்துக் கொடியேன் பரக்கும்
பரப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட்டு,
இருள் வெளி ஆகும் மருளினை அறுத்து,
வந்து புகுதலும், சென்று நீங்கலும்
இன்றி, ஒன்றாய் நின்ற அந்நிலையில்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒன்று ஆகாமல், இரண்டு ஆகாமல்,
ஒன்றும் இரண்டும் இன்று ஆகாமல்,
தன்னது பெருமை தாக்கான்; ஆயினும்,
என்னது பெருமை எல்லாம் எய்தித்
தன்னை எனக்குத் தருவதை அன்றியும்,
என்னையும் எனக்கே தந்து, தன்னது
பேரானந்தப் பெருங்கடல் அதனுள்
ஆரா இன்பம் அளித்துத் தீரா
உள்ளும் புறம்பும் ஒழிவு இன்றி நின்ற
வள்ளன்மை காட்டி, மலரடி அருளிய
மன்னன் எம் கோன், வார்புனல் பெண்ணை
வெண்ணெய் காவலன், மெய்கண்ட தேவன்,
அண்ணல் அருள் ஆலயத்தன், நண்ணிய
மலம் முதலாயின மாய்க்கும்
உலக உயிர்க்கு எல்லாம் ஒரு கண்ணே.

தெளிவுரை:

உறவினர்களையும் தாய் தந்தையரையும், உடைமைகள் ஆகிய வீடு, நிலம், பொன், பொருள், உடல் முதலானவைகள் அனைத்தையும் விட்டு நீங்கியவர்களுக்கு, தான் என்றும் அவன் என்றும் இரண்டு பொருள்கள் என்று எண்ணாதபடி பிரிவின்றி நிற்பவன் சிவ பெருமான்; அவ்வாறு அனைத்துப் பொருள்களையும் விட்டு நீங்காதவர்களுக்கு, அவன் வேறாகவே நிற்கிறான். அவன் தனக்குத் தோற்றமும் கேடும் இல்லாதவன்.

அவன் அனுபட்சத் திருமேனி கொண்டு தானாகவே எழுந்தருளி வந்து, குரங்குபோல ஓரிடத்தில் நிலையில்லாமல், அலைந்து திரிகின்ற மனத்தினை உடைய கொடிய வினையேன் ஆகிய நான், உலகில் உள்ள போகப் பொருள்களை நுகர்ந்து உழன்று வருந்தாதபடி என்னைத் தடுத்து நிறுத்தித் தனது திருவடி ஞானத்தில் அழுந்தி அவனுக்கு அடிமையாக இருக்கும்படி செய்தருளினான்.

ஆணவமலத்தில் அநாதியே அழுந்திக் கிடந்த எனது கேவல நிலையினையும், தனு கரண புவன போகங்களில் தோய்ந்து நின்ற எனது சகல நிலையினையும் போக்கி அருளினான். கண்ணில் உள்ள படலம் உரிக்கப்பட்டபோது, சூரிய ஒளி, கண்ணை வந்து கூடவும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இல்லை; கண்ணின் ஒளியும் சூரிய ஒளியைப் போய்க் கூடவில்லை. அதுபோல, இறைவனும் நானும் என்றும் ஒன்றாகக் கலந்தே இருக்கிறோம்; அவன் என்னைத் தேடி வந்து, என் உள்ளத்தில் புகவில்லை; நானும் அவனை விட்டு நீங்கி எங்கும் செல்லவில்லை. இவ்வாறு இறைவனும் நானும் அன்றும் இன்றும் என்றும் ஒன்றாகவே கலந்து இருக்கின்றோம்.

இஃது எவ்வாறு என்றால், தங்கமும், அதனால் செய்யப்பட்ட ஆபரணமும் ஒன்றே என்று எண்ணும்படி அல்லாமல், உடலும் உயிரும் ஒன்றாய் நிற்பதுபோல் இறைவனும் எளியேனும் ஒன்றாய் இருக்கிறோம்.

இருள் வேறு; வெளிச்சம் வேறு, என்பது போல இரண்டும் வெவ்வேறாக இருப்பதைப் போன்று, இறைவனும் எளியேனும் இரண்டு என்று எண்ணும்படி அல்லாமல், கண் வேறு, சூரியன் வேறு என்று இருப்பது போல் இறைவனும் எளியேனும் வேறாய் இருக்கிறோம்.

சொல்லும் பொருளும் முதலில் வேறாயிருந்து பின்பு ஒன்றாவாற்போல், முதலில் இறைவனிடமிருந்து எளியேன் வேறாய் இருந்து பின்பு ஒன்றாய் இணைந்தேன் என்று எண்ணும்படி அல்லாமல், உயிரின் அறிவும் கண்ணின் ஒளியும் வேறாக இருப்பினும் ஒன்றாக இருந்து, கண்ணின் ஒளி செயல்படுவதற்கு உயிரின் அறிவு உடனாய் நிற்பதுபோன்று, எனது அறிவு இச்சை செயல் தொழிற்படுவதற்கு இறைவன் என்னோடு உடனாய் இருக்கிறான்.

இவ்வுண்மையைச் சிவப்பிரகாசம் 7

"பொற்பணிபோல் அபேதப் பிறப்பு இலதாய், இருள் வெளி போல் பேதமும், சொற்பொருள் போல் பேதாபேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன அறத்தினால் விளைவதாய், உடல் உயிர்க்கண் அருக்கன், அறிவு ஒளி போல் பிறிவரும் அத்துவிதம்"

என்று விதந்து ஓதுகின்றது.

அத்துவிதம் என்பதை அருணந்திசிவம்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''ஒன்று ஆகாமல், இரண்டு ஆகாமல்
ஒன்றும் இரண்டும் இன்று ஆகாமல்''

என்று இந்நூலில் கூறுகிறார்.

ஒன்று ஆகாமல் என்றால் ஏகான்ம வாதிகள் கூறுவது போல், ஒரே உள் பொருளாக மட்டும் இறைவன் இருக்கவில்லை என்பதையும், ஆன்மாவும் அவனிடத்துக் கலந்தே இருக்கிறது என்பதையும் உணர்த்தவே ''ஒன்று ஆகாமல்'' என்றார். ஆனால் சிலர் முத்தியில் ஆன்மா வேறு இறைவன் வேறு என்று பேதவாதம் பேசுவர். இவ்வாறு பேசுவோர் மாத்துவர் எனக் கூறுப்படுவர். ஆனால், முத்தி நிலையில் ஆன்மா வேறாகவும் இறைவன் வேறாகவும் இருக்கவில்லை; இரண்டு அறக் கலந்தே இருப்பதால், ''இரண்டு ஆகாமல்'' என்று கூறினார்.

வேறு சில மதத்தவர், ஒன்றாகவும் இல்லாமல் இரண்டாகவும் இல்லாமல், சொல்லும் பொருளும் போல, இறைவனும் உயிரும் முத்தியில் இருப்பதாகக் கூறுவர். இதனை ''ஒன்று இரண்டு இன்று ஆகாமல்'' என்று கூறி மறுக்கிறார்.

இறைவன் பிறப்பு – இறப்பு அற்றவனாகி, உலகத்தில், உள்ள உயிர்கள் அனைத்திற்கும் பிறப்பு – இறப்புக்களை ஏற்படுத்தும் ஐந் தொழில்களை ஆற்றுகிறான். பிறப்பு இறப்பு அற்றவனுக்கே ஐந் தொழில் ஆற்றும் தகுதி உண்டு. அஃதே அவனுக்குள்ள பெருமைகளில் எல்லாம் உயர்ந்த பெருமையாகும்.

இறைவன் எனது தகுதி அறிந்து, என்னைத் தானாக்கும் நிலையிலும் – அஃதாவது வீடுபேற்று நிலையிலும், என்னுடைய அறிவு இச்சை செயல்கள் அனைத்தையும் அவனுடைய அறிவு இச்சை செயல்களினுள் அடக்கி வைத்திருக்கின்றான். ஆயினும், அவன் வழங்கும் பேரின்பத்தை நான் துய்க்கும் பெருமையை எனக்குத் தந்து உதவுகிறான். என்னைப் பிறவாப் பெரு நிலையில் வைத்திருக்கிறான்; ஆயினும், ஐந்தொழில் ஆற்றும் உரிமையை எனக்கு வழங்குவதில்லை. அதனால் எனக்கு எந்தக் குறைவும் இல்லை; என் பெருமையை அந்நிலையிலும் அவன் காத்தே வருகிறான். அவனிடம் உள்ள பேரின்பத்தை எனக்கு வழங்குவதால், அவனையே எனக்குத் தந்தது மட்டும் அன்றி, என் நிலையிலும் என்றும் நான் நிற்பதை அவன் தடுக்காமையால், என்னையும் எனக்கே ஆக்கித் தந்திருக்கிறான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவனது பேரானந்தத்தை நான் அனுபவிக்கும் போது எனது ஏகதேச அறிவை ஒழித்து, எல்லாப் பொருள்களின் உள்ளும் புறமும் ஒழிவு இன்றி நிற்கும் தன் பேரறிவை எனக்கு தெளிவுறப் புலப்படுத்திக் காட்டியருளினான்.

இவ்வாறு தன் திருவடியைத் தந்தருளிய இறைவன், ஞானப் பேரரசன் ஆவான்; அவனே என் தலைவன்; பெண்ணை ஆற்றினால் சூழப்பட்ட திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளிக் கோயில் கொண்டருளிய அவனே, என் நாயகன் ஆகிய மெய்கண்டதேவன் ஆவன்; அனைத்து ஆன்மாக்களுக்கும் கண்ணாய் இருக்கும் மெய்கண்ட தேவன், இலிங்க மூர்த்தமாய் வந்து, ஆணவமலத்தைக் கெடாமல் கெடுத்தும், குரு மூர்த்தமாய் வந்து மாயையினைக் கெடாமற் கெடுத்தும், சங்கம மூர்த்தமாய் வந்து, கன்மத்தைக் கெடாமற் கெடுத்தும் என்னைப் பேரின்பப் பெருநிலையில் இருத்தினன்.

இவ்வுண்மையைக்

''கேட்டாரும் அறியாதான்; கேடுஒன்று இல்லான்;
கிளைஇலான்; கேளாதே எல்லாம் கேட்பான்;
நாட்டார்கள் விழித்திருப்ப, ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசுஇட்டு, நாயினேற்கே
காட்டாதன எல்லாம் காட்டி, பின்னும்
கேளாதன எல்லாம் கேட்பித்து, என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்து, ஆட்கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சைதானே'' (32)

என்னும் மணிவாசகத்தால் உணரலாம்.

ஓர் அரிய குறுந்தொகைப் பாடல்

இருபா இருபஃது என்னும் இந்நூலின் 12-ஆவது செய்யுளில் 6-7 ஆம் அடிகளில் வரும்,

''உன்னில் உன்னி உனாவிடில் பெயர்குவை
என்னும் அதுவே நின் இயல்பு''

என்னும் செய்தியை, அருணந்திசிவம், அப்பரடிகளின் குறுந்தொகையிலிருந்து எடுத்து ஆண்டிருக்கிறார்; அந்தக் குறுந்தொகைப்பாட்டு வருமாறு:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"உன்னில் ஊறும் பழத்தினும் இன்சுவை
என்னில் ஊறி எனக்கே களிதரும்;
உன்னில் உன்னும்; ஒழிவிடில் விட்டிடும்;
என்னில் அயல்; இருந்த இயற்கையே"

இதற்குப் பொருள் வருமாறு:

இறைவா, உன்னைப் பற்றிச் சொல்லும் சொல்லில் எல்லாம் சுவை ஊறுகிறது; அச்சுவை பழத்தில் உள்ள இனிய சுவையினும் உயர்ந்தது. அச்சொல்லைச் சொல்ல, அஃது என் உள்ளத்தில் ஊறி ஊறி, எனக்குப் பேருவகையைத் தருகிறது.

உன்னைப் பற்றிச் சொல்லும் திருமுறை வாக்குகளில் வைத்து, உன்னையே நினைந்து இருந்தால், நீ என்னையே நினைந்து இருப்பதை உணர்கிறேன். உன்னை நாயேன் நினையாதபோது, என்னை விட்டு நீ நீங்கி இருப்பதாகத் தோன்றுகிறது. நீ என்னோடு ஒன்றாயும் உடனாயும் என்றும் நீங்காமல் நிற்கிறாய் என்கின்ற உன் இயல்பு இஃதே என்பதையும் உணர்கிறேன்.

இத்தகு சிறந்த செய்தியைத் தரும் திருக்குறுந்தொகைப் பாடலைத் திருவாவடுதுறை ஆதீனத்து அருட்டிரு நமச்சிவாயத் தம்பிரான் அவர்கள், தாம் இயற்றியுதவிய "இருபா இருபஃது உரை" யில் மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார்கள். அருணந்தி சிவாசாரியாரால் அருளப்பட்ட கொடை, இக்குறுந்தொகை. இதுவரை வெளிவந்துள்ள தேவாரப் பதிப்புக்களில் இது காணப்பெறவில்லை. தாயுமானவர் அருளிச் செய்த பாடல்களில் வரும் "எந்நாட்கண்ணி" என்னும் தலைப்பில் உள்ள "13–அறிஞர் உரை" என்னும் பகுதியில் வரும் ஆறாவது பாட்டில் இந்தத் தேவாரப்பாட்டைத் தாயுமானவர் குறிப்பிடுகிறார். அது வருமாறு:

"உன்னில் உன்னும் என்ற உறுமொழியால், என் இதயம்
தன்னில் உன்னி நன்னெறியைச் சாரும்நாள் எந்நாளே"

இப்பகுதியில், திருமுறை வாக்குகள் பலவற்றை மேற்கோள் காட்டித் தாயுமானவர் அருளிச் செய்திருப்பதிலிருந்து, "உன்னில் உன்னும் என்ற உறுமொழி" என்று அவர் குறிப்பிடுவது, அப்பரடிகளின் திருவாக்கே என்பது போதரும்.

இருபா இருபஃது தெளிவுரை முற்றும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவமயம்

சிவஞான சித்தியார் – பரபக்கம் பாடல் முதற் குறிப்பு அகர வரிசை

	பாட்டு எண்		பாட்டு எண்
அங்கியானது	52	அறிகின்ற பான்மை	200
அங்குரம் வித்தின்	108	அறிந்திடா வாயில்	78
அஞ்சியன்று	292	அறியான் புருடன்	263
அணுவானவை	178	அறிவதே பொருள்	137
அநாதி முத்தனாய்	134	அறிவாய் அகில	221
அநாதியேலமை	50	அறிவினோடு செயல்	259
அந்த வாய்மொழி	147	அறிவு உடற்குணம்	43
அயன்றனைப் பயந்தான்	275	அறிவு தானுடல்	53
அரிசனம் நூறு	141	அறிவு பூதம்	42
அரியினொடு	100	அனைத்தினையும்	95
அருஉணர்வு மாய்	125	அன்றியும் ஆனை	290
அருகனுக்கனந்த	151	ஆசையுற்றுழல்	60
அருஞ்செயலின்	205	ஆதிதானாகில்	272
அருந்தவனாம்	204	ஆதிநடு	2
அருமறை	5	ஆதியாய் அவரும்	264
அருவமே இறைவன்	23	ஆநந்தம் கதியென்ன	207
அருவம் உரை	213	ஆமையாய்மேரு	281
அருவெனில்	89	ஆயம் உடன்	214
அர்த்தம் தெளிதற்கு	219	ஆரணங்கள் தரு	252
அலகில் மணிகள்	229	ஆர்வ கோபம்	154
அலகிறந்த	99	ஆறுகாரியங்கள்	161
அலைகடல் கலைந்தும்	269	ஆறுதாதுக்களும்	227
அவயவம் பொருளாய்	138	ஆனஐம்பொறி	40
அழிகின்றதால்	202	ஆனகன்ம	232
அழித்திடும்	94	இங்கடாவுளனோ	283
அழிந்துணர்வை	113	இச்சையால் உருவம்	273
அழிப்பரியேவல்	278	இச்சைவெறுப்பு	126
அறத்தின் மன்னு	152	இடித்து மின்னி	34

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

	பாட்டு எண்		பாட்டு எண்
இந்திர புரோகிதன்	12	உருவமெலாம்	111
இந்திரிய வீதி	123	உருவாதி கந்தங்கள்	120
இந்நூலைச் சொன்னவன்	103	உருவின்கணே	196
இப்படிப் பிருகு	301	உருவொடு நின்றான்	88
இப்படியன்றி	17	உரைதந்திடான்	195
இயம்புகின்றது	255	உரைபோல் பொருளுக்கு	215
இயம்புநூல்	4	உரையானது	212
இயல்புகாண்	45	உரையானதுமை	208
இருபான்மையர்	176	உலகந்தானும்	224
இருளில் பழுதை	223	உலகினைப் படைத்தான்	84
இருள் பொதிந்ததொரு	249	உள்வழக்கு	73
இலகு சோதிமணி	239	உள்ளதாவது	33
இல்லது கருணை	86	உள்ளது கடாதி	85
இறந்திடும் அறிவே	54	உற்றிடுங்காமம்	182
இறைவனையும்	11	உற்றெழுமரங்கள்	91
இன்பபூமி	156	உந்தியில் அயனை	265
இன்பம் எய்தி	49	உன்னிய அங்கம்	185
இன்பொடு துன்பம்	21	உன்னின் நீயும்	251
ஈங்குவான் செயற்கு	76	உன்னுகின்ற	256
ஈசனருள்	3	ஊடுவது	31
ஈசனார் அயனார்	27	எங்கள் நூல்	90
ஈண்டுஅளவை	13	எங்குமாய் நின்றது	81
ஈறிலாதன	144	எங்கும் நின்றிடில்	248
உடல் நின்று	198	எப்பொருட்கும்	127
உடல் பூதமெனில்	109	எப்பொருளும்	107
உடல் வருந்தல்	162	எழுதலம் இடந்து	282
உணர்தரா அணுக்கள்	168	எனக்கு நீ கிழக்கு	83
உணர்வு காரணம்	117	என் உயிர்	165
உணர்வு சார்ந்துணர்வு	74	என்றுமிலாது	110
உண்டொரு கடவுள்	183	ஏகம் நானென	235
உயிரானவை	177	ஏணதொன்று	160
உயிரினை அருவது	80	ஏணும் ஒன்றுடைய	150
உருஇயல்	67	ஏழ்கடல் செலுவில்	267
உருவும் உணர்வும்	20	ஐந்து கந்தம்	133

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

	பாட்டு எண்
ஐந்து நான்கு	41
ஒத்து நின்றுடலின்	247
ஒத்துறு	15
ஒருகாலத்து உணர்வு	116
ஒருகாலத் தோரிடத்தில்	124
ஒருகோட்டன்	1
ஒருபொருளை	101
ஒருமரத்தின்	130
ஒருவனென்றோதப்	70
ஒன்றாம் இரவி	222
ஒன்றினை ஒருவி	171
ஓங்கிய உருவமோடும்	93
ஓதிய வாசு	287
ஓதியே உலகு	241
கடத்தினில்	139
கண்டநூல் தரும்	158
கண்ணினில் காண	170
கந்தம் வெம்மை	48
கரணம் வாயு	55
கருதிய கன்மம்	192
கருமங்கள் ஞானமது	203
கருவி கண்படு	145
கருவி தன்தொடக்கு	153
கருவியும் ஒளியும்	140
கருவியெல்லாம்	231
கழிந்த உணர்வே	122
காண ஒணா	51
காண்டலோ	35
காம்ஆதி	62
காயத்தின் குணம்	22
காயமுடன் இந்திரியம்	121
காரண காரியத்தின்	71
காரணம் அவை	46
காரியமாய்	128

	பாட்டு எண்
குடைநிழலும்	132
குரோதமே	61
குற்ற வீடு	69
கூடாஅணு	180
கூறு கூவல்	164
கூறு சேர்வை	39
கேடிலா	114
கைவ்ரை மூலமே	289
கெரண்டு முன்விரித்தல்	169
கொன்றிடல்	92
கோச உருவில்	228
சந்தான காரணமோ	115
சாற்றிய காலம்	82
சாற்றுப் பெயர்	14
சாற்றும் மறை	234
சித்தே உலகாய்ப்	254
சில பொருளை	96
சீவன்கள் சனனம்	276
சுத்தம் ஆனது	250
சுத்த வடிவு	9
சுத்தன் அறிவன்	261
சூடகம் கடகம்	258
சூலிகாண் இறை	298
செயல்தரு வினைகள்	180
செய்திடு கன்மம்	18
செய்தியும் நெறியும்	186
சொல்லதொன்று	155
சொல்வந்தெழலும்	211
சொன்ன நால்வகையும்	75
சோதிமாமணிகள்	246
ஞாலம் உண்டவனால்	291
ஞான ஞேயங்கள்	79
தப்பிலா வாகும்	187
தவகுணனாய் மால்	299

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

	பாட்டு எண்
தாங்கும் உலகுக்கு	225
தாதுவானது	272
தானமென்றிரந்து	284
தானே தானாய்	233
தின்னுமது குற்றமிலை	131
தேரரி இறை	297
தேவரும் முனிவர்	184
தையலார்	28
தோலிரத்தம்	59
தோற்றிய பொருள்கள்	72
நாரணன் அயனை	277
நானே பிரமம்	220
நித்தமாய் எங்கும்	189
நிறைந்து காய	157
நிறைவெங்குமாகில்	201
நிற்றலோடுதலை	148
நீடுபாவ	159
நீடுபுகழ்	8
நீடுவேதம்	236
நீதியால் நித்த	191
நீதியார் வேத	64
நீதியால் ஒலிகொள்	237
நீரின் வந்தெழு	38
நீர்போல நின்று	98
நூலினை உரைத்து	274
நூலுரைத்தான்	106
நெல்லில் பொரி	216
பசித்தல் தாகம்	146
பசுப்படுத் தியாகம்	193
படிக்கும் நூல்கள்	63
பண்டைமறை	6
பயன்பட்டுப் பரனை	300
பரசுடன் பிறந்தான்	286
பரந்து மீது	149

	பாட்டு எண்
பரிணாமம் விவர்த்தனம்	209
பழுதிலாமறை	36
பற்றதின்றி உடல்	245
பாசத்தைப் பசுக்கள்	295
பார்த்தனார் இரதம்	293
பார்புனல் பரக்கும்	167
பிரமம் நானென்ற	296
பின்வரும் பரிதான்	288
புண்ணிய பாவம்	174
புத்தனவன்	105
புருடன் பிரகிருதி	262
புற்றினேர் பழுதை	240
பூதத்தே அன்னம்	24
பூதம் அதில்	16
பூதமானவை	56
பூதமானவை	37
பூதமேவு	47
பூமாவெனவே	210
பூர்வகன்மம்	163
பெறுவதிங்கென்	87
பேயுநரகரும்	119
பேறிழவிடையூறு	173
பொய்கைவாய் முதலை	268
பொருளது புறம்	142
பொருள் இந்திரியம்	218
பொன்குலாவு	58
போகத்தை மன்னில்	25
போக்கொடு வரவு	188
போதமிகுத்தோர்	10
போதமுந்தவிர	136
போதமும் மெலிவு	44
போதமுண்டுயிர்கட்கு	77
போதமே பொருளாய்	135
போற்றும் செயலால்	230

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

	பாட்டு எண்
மண்புனல்	68
மதிநிலா	30
மரங்களுயிரல்ல	129
மருத்தெண்ணெய்	112
மருவிய அளவை	66
மறைநின்று	197
மன்னுமறையின்	253
மன்னும் பிரமம்	226
மாயநூலது	243
மாயமான்தன்னை	285
மாயைதான் உயிர்கள்	294
மாயையாய் உயிராப்	270
மாய்ந்து பின்	19
மாலயன்	7
மாலினார் சேலி	280
மிகையாம்	179
மீன் ஆமைகேழல்	266
முடிவின்றி	199
முத்திநிலம்	97
முழுதும் உணர்ந்து	65
முன்நூலும்	104
முன்கண்ட பொருள்	217
முன்னாகப் பல அறங்கள்	102
மூலம் புரியட்டகம்	260
வரம்பிலா அறிவன்	166
வாசமாமலர்	143
வாசமார்குழலி	29
வாராநெறி வீடான	175
வாழவேவல்லை	26
வானம் கீழ்மண்ணும்	279
வித்தெழுந்து	257
வினையுணர்வு	118
வீட்டினை	32
வெண்மை நன்பொன்மை	172
வேதஞ் சுயம்பு	194
வேதமே யோதி	181
வேதன் நாரணன்	57
வேறதாகியது	242
வேறதாகும் உரு	244
வேறுபலந்தருவது	206
வேறுவாயில்	238

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.